# குடும்பச் சிறையில்

செ. கணேசலிங்கன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
2003-7-26
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
2003-7-26
LIBRARY.

545985

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பச் சிறையில்

செ. கணேசலிங்கன்

545985

வெளியீடு & விற்பனை :

**குமரன் பப்பிளிஷர்ஸ்**

3, மெய்கை விநாயகர் தெரு,

வழி : குமரன் காலனி 7வது தெரு,

வடபழநி, சென்னை : 600 026

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற்பதிப்பு : ஆகஸ்டு 1999

©

விலை ரூபாய் : 55/-

| | | |
|---|---|---|
| Title | : | KUDUMBA SIRAIYIL |
| Subject | : | *Social Novel on Feminism* |
| Author | : | Se.Ganesalingan |
| No. of Pages | : | 214 |
| Size | : | 12.5 x 18 C.M. |
| Type | : | 10 point |
| Paper | : | 11.6 kg creamwove |
| Binding | : | Art Board |
| Price | : | 55/- |
| Publishers | : | Kumaran Publishers<br>3, Meigai Vinayagar Street<br>Vadpalani<br>Chennai - 600 026. |

Printed by :
MONARK GRAPHIKS
Chennai - 600 014. Ph : 858 88 15, 481 51 86

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவில் நிற்கும்

நண்பர்

# அழகரத்தினத்திற்கு

UNIVERSITY OF PERADENIYA
2003-7-26
LIBRARY.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரல்களை மடக்கி, கையால் மனைவியைக் குத்தி விடலாம். பின்னர் பரிசுகள், அன்பளிப்புகள் வழங்கலாம். இவை மூலம் அவளை ஆற்றிவிட முடியாது. தொழிலாளருக்குக் கூடிய கூலி, வேலைத் தளத்தில் சலுகைகள் தரலாம். இவை விடுதலை தந்து விடாது. பெண்களும் தொழிலாளரும் தம்மை ஒடுக்குபவரின் ஆதிக்கத்தை முறியடிக்க வேண்டும்; தம்மை அடக்குபவரின் இரும்புப் பிடியிலிருந்து விடுபட்டு புதிய வாழ்வைக் கட்டி எழுப்புதல் வேண்டும்.

**- மைக்கேல் டி. ஜேட்ஸ்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
2003-7-26
LIBRARY

# நாவல்பற்றிய சில குறிப்புகள்

மார்க்சியம் விஞ்ஞான ஆய்வு முறையைக் கொண்டது; சமூக அமைப்பை இறுதியாகத் தீர்மானிப்பது அதன் அடித்தளமாகிய பொருளாதாரம்; அதாவது சமுதாயத்தின் உற்பத்திச் சக்திகளும், உற்பத்தி உறவுகளுமாகும். இவையே சமூகத்தின் அடித்தளம் என்போம்.

இந்த அடித்தளம் மேல்மட்ட அமைப்பாக அரசியல், சட்டம் சார்ந்தவைகளையும் கருத்தியல்களையும் (Ideologies கருத்துநிலை கருத்துருவம் என்றும் பெயர்ப்பர்) தீர்க்கமாக ஏற்படுத்திக் கொள்கிறது.

அரசியல், சட்டங்கள், கருத்தியல்கள் அடித்தளமாகிய பொருளாதாரத்தின் மேல் தாக்கம் ஏற்படுத்துவதில்லை என்று கூறிவிட முடியாது. மார்க்சிய கோட்பாட்டின்படி அடித்தளத்திற்கும் மேல்மட்ட அமைப்புக்குமிடையில் தன்னியக்க உறவு உண்டு (Relative autonony). அல்லது அடித்தளத்தின் மேல் எதிரெதிர்தாக்கம் (Reciprocal action) ஏற்படுத்துகிறது என்றும் விரித்து விளக்கப்படுகிறது.

அரசியல், சட்டங்கள் வன்முறை வடிவங்கள் என்றும் கருத்தியல்கள் வன்முறையற்றவை என்றும் முற்றாகக் கூறி விடமுடியாது. கருத்தியல்களை மதம், கல்வி, சாதி, கலை இலக்கியம் ஆகியன என்றே கற்று வந்தோம். அல்தூஸர் (Louis Althusser 1918 - 90) என்ற பிரெஞ்சு மார்க்சிய அறிஞர் 'கருத்தியல் அரசுயந்திரம்' (Ideological State Apparatus) என்ற நூலில் கருத்தியல்களை அரசுயந்திரத்துடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைத்து புதிய விரிவான விளக்கம் தந்தார். கருத்தியல்கள் வன்முறையான அரசுயந்திரத்துடன் எவ்வாறு பின்னிப்பிணைந்துள்ளன என்பதே அவரது புதிய விளக்கமாகும்.

கருத்தியல்கள் பெரும்பாலும் விஞ்ஞான பூர்வமற்றவை, கருத்துகளாலானவை, கற்பனையானவை, அநாதியானவை. மக்களெல்லாம் கருத்தியலால் ஆளப்படுபவர் எனவும், அல்தூஸர் விளக்குவார்.

கருத்தியல்கள் பற்றி கூற வந்த போது அல்தூஸர் மதம், குடும்பம், இரண்டையும் ஒன்றிணைத்து அதிக முக்கியத்தவம் தந்தது எமக்கெல்லாம் புதுமையாயிருந்தது. பின்னர் ஆழ்ந்து சிந்திக்கும் போதே குடும்பம் என்ற அமைப்பின் ஆழத்தை எண்ணிப் பார்க்க முடிந்தது.

'சர்ச்சுடன் குடும்பம் என்ற கருத்தியல் அரசுயந்திரத்துடனும் இணைந்து முதலாளித்துவ சமூக அமைப்பில் ஒப்பிட்டுக் கூற முடியாத அளவு பங்கு வகிக்கிறது' என்றார்.

ஒவ்வொருவர் பெயரும் குடும்பத்தலைவனுடைய பெயருடன் இணைக்கப்பட்டே எழுதப்படுகின்றது. இங்கே தந்தை பெயருடன் எனில், மேல் நாட்டார் குடும்பப் பெயருடன் சேர்க்கப்பட்டே அழைக்கப் படுகின்றனர். நெருங்கிய நண்பர் தவிர மற்றவர் குடும்பப் பெயரைக் கூறியே எவரையும் அழைப்பர். பெண்களின் பெயர் இங்கே தந்தையுடனும் திருமணத்தின் பின்னர் கணவனது பெயருடனும் பிணைக்கப்படுகிறது. மனைவிபெற்ற பிள்ளைகள் குடும்பத் தலைவன் பெயரையே முதன்மையாகக் கொள்ளும். இவ்வாறு மனைவியை மட்டுமல்லாது குழந்தைகளையும் குடும்பத்தலைவன் ஆக்கிரமித்துக் கொள்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம், தந்தை சொல்மிக்க மந்திரமில்லை' என்பது மட்டுமின்றி தந்தையின் காலில் விழுந்து வணங்குவது, ஆசீர்வாதம் பெறுவது, குடும்பத்தலைவன் இறந்த போதும் உருவப் படத்தை வழிபடுவது ஆண்டுதோறும் சிராத்தம் செய்வது குடும்ப அமைப்பின் புனிதத் தலைமையைக் காப்பதாகும்.

மதம் என்ற கருத்தியலும் குடும்பத்தோடு ஒட்டித் தொடர்வதை மேலேயும் குறிப்பிட்டேன். பிறந்ததும் தந்தையின் மதப்படி சடங்குகள், ஞானஸ்நானம் ஆகியவை நடைபெறுகின்றன. குடும்பத் தலைவன் மதமே பிள்ளைகளுக்கும் முதன்மையாகிறது. சிறுவயதிலிருந்து மதக் கருத்துகள் கட்டுப்பாட்டுடன் திணிக்கப்படுகிறது. மதக் கல்வியும் போதிக்கப்படுகிறது.

தனிச் சொத்துரிமையுடனான உற்பத்தியுடனேயே குடும்பங்கள் அமையத் தொடங்கின. தனிச் சொத்துடைமையைப் பாதுகாத்தல், குடும்பத்துள்ளே கொண்டு செல்லல், அவற்றுக்கேற்றபடியான திருமண வழக்கங்களும் குடிப்பெருக்கும் உறவு முறைகளும் அமைகின்றன. (அத்தை மகளை முறைப் பெண்ணாக, முன்னர் வழங்கிய சொத்துடன் மீண்டும் குடும்பத்திலேயே கொள்ளப்படுகிறது)

அரசு ஒரு வன்முறை வடிவமாக அமையும் போது அதன் அலகு அல்லது கூறான குடும்பமும் அதே போன்று அமைவது இயல்பே. குடும்பத் தலைவனுக்குக் கீழ்ப்பட்டே மனைவி, பிள்ளைகள் அடங்கி நடப்பர். அங்கு ஜனநாயக உரிமை கிடையாது. குடும்பத்தலைவன் அங்குள்ள அனைவரையும் தண்டிக்க உரிமை பெற்றவனாகவே சமூகம் கொள்ளும். குடும்பத்துள் நடப்பவை மூடி மறைக்கப்படுகின்றன. குடும்பம் ஒரு பரிசுத்தமான அமைப்பாக மதத்தாலும் சமூகத்தாலும் கொள்ளப் படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வன்முறை வடிவமான குடும்ப அமைப்பில் மிகவும் பாதிக்கப்படுபவள் பெண்ணே. ஜனநாயக உரிமையோ, மனித உரிமையோ அற்றவளாகக் குடும்பச் சிறையில் அவள் தள்ளப்படுகிறாள்.

நமது சமூகத்தில் நேரடியாகவும் திரைப்படம், டி.வி, நாடகங்கள் ஆகிய கலை வடிவங்கள் மூலமும் மனைவியை எடுத்ததும் கணவன் கன்னத்தில் அடிப்பது, உதைப்பது, பிள்ளைகளைப் புடைப்பது ஆகிய வற்றைக் காணலாம். மனைவியை அடித்தல் மோசமான சமூகக் குற்றம் எனக் கவனிக்கப்படாததற்கு ஒரு காரணம் இவை குடும்பத்துள் மூடி மறைக்கப்படுவதே.

குடும்பம் என்பது புனிதமான அமைப்பு என்ற பொய்மையில் இனம், மதம், சாதி, கல்வியறிவு, பணம், சீர் சீதனம் ஆகிய சிறப்புகளாலும் பெண்கள் குடும்பத்துள் புடைக்கப்படுவதைத் தடுத்து விட முடியவில்லை.

கணவனின் குடி, சூது, சீர்சீதனப் பிரச்சினைகள், கணவன் சோரம் போதலை மனைவி எதிர்த்தல் ஆகியவையும் மனைவிமேல் காட்டும் வன்முறைக்குக் காரணமாகின்றன. இவ்வாறெல்லாம் பெண் குடும்பத்தில் உடல், மனம், உளவியல் ரீதியாகப் பாதிக்கப்படுகிறாள்.

பாலுறவிலும் கணவன் தன் வன்முறையைக் காட்டி, மனைவிக்குத் துன்பத்தில் இன்பம் காணும் 'சாடிஷப் போக்கில்' நிர்ப்பந்திக்கப் படுகிறாள்.

திருமணத்தின் போது கன்னித்தன்மை, பின்னர் கற்பொழுக்கம், குடும்பக் கடமைகள், உடை, பேச்சு உட்பட பிற சமூக ஒழுக்க வரம்புகள் பெண்ணைச் சுதந்திர மற்ற அடிமையாக்குகின்றன. மனைவி சோரம் போதலுக்குக் கணவன் மரண தண்டனை விதிப்பதையும் நிலப்பிரபுத்துவ சமூகம் ஏற்றுக் கொள்கிறது. இவ்வாறாக, குடும்ப அமைப்பில் சமத்துவம் ஜனநாயக உரிமை எதுவுமே இல்லா நிலை ஏற்படுகிறது.

குடும்பத்தலைவன், பெரியவர், தாத்தா அனைவரதும் ஆதிக்க உறவே (Power Relations) குடும்பத்தில் நிலவுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடல் வருந்த மனைவியை, பெண்களை அடிப்பது மட்டுமல்ல மற்றொரு வன்முறையாக நாவினால் சுடுவார்த்தைகள் வேறு அவர்கள் மேல், அவர்களது குடும்பத்தின் மேல் சீர், சீதனம் பற்றியும் வீசப்படுகிறது. அவை ஆறா நினைவாகப் பெண்ணின் மனதில் நிலைக்கிறது. வள்ளுவரே கூறினார்;

"தீயினாற்சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு"

இது பெண்களுக்காக எழுதப்பட்ட குறள் போல ஒலிக்கிறது. மாமியார், குடும்பத் தலைவனது சட்டவிதிகளைக் குடும்ப நலனுக்காக என நிறைவேற்று அதிகாரம் கொண்டவளே. மருமகளுக்கு சூடுபோடுவது, எரித்துவிடுவது இந்தியச் சமூகத்தில் நிகழும் வன்முறை வடிவங்களாகும். ஒரு கால கட்டத்தில் உடன் கட்டை ஏறுதல், சதி நீதியாகக் கொள்ளப்பட்டது. மனைவியின் உடல் கணவன் சொத்து.

போதிய உணவு, மருத்துவ வசதியின்றி வேலைப்பளுவாலும் குழந்தை வளர்ப்பாலும் விஞ்ஞான, தொழில் நுட்பக் கல்வி வாய்ப்புகள் பெண்களுக்குக் கிட்டாது போய்விடுகிறது. சிறுமியாகவே வெளியே விரும்பியபடி சுற்றுவது கட்டுப்படுத்தப்படுவது, பூப்படைந்த பின்னர் பலாத்காரத்துக்கஞ்சி மேலும் இறுக்கப்படுகிறது. இவற்றாலும் பாலியர் திருமணத்தைக் குடும்பமே தீர்மானித்து இளமையில் குழந்தைப்பேறு உடல் நலனையும் பாதிக்கிறது. மனைவி என்ற அந்தஸ்தில் இளம் வயதில் உடல், மனம், உணர்ச்சியாவும் கணவனால் துர்ப்பிரயோகம் செய்யப்படுகிறது.

திருமணத்தின் பின் உழைப்பற்று வீட்டில் இருக்கிறாள். தீனிபோட்டுக் காப்பாற்றவே சீர், சீதனம் என்றும் ஆணாதிக்கத்தால் விளக்கம் கூறப்படுகிறது. அடிமைகளின் வீட்டு உழைப்பு மதிக்கப்படுவதில்லை; கூலி தரப்படுவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்ப அமைப்பில் வேலைப் பிரிவினையுடன் பெண் அடிமைப்படுத்தப்பட்டாள். உலகின் முதல் அடிமைத்தளை இங்கேயே எழுந்தது என ஏங்கெல்ஸ் கூறியுள்ளார். தனிச் சொத்துரிமையைத் தொடர்ந்து கொண்டு செல்வதற்காக மனைவியையும் தனிச்சொத்தாக்கி அவளுக்குப் பிறக்கும் குழந்தைக்கே தன் சொத்துரிமை என குடும்பத்தலைவன் வகுத்தான். பெண்ணுக்கு மட்டும் கற்பொழுக்கம் திணிக்கப்பட்டது. அரசும் குடும்பத்தலைவனுக்கே சட்ட உரிமை வழங்குகிறது.

தனிச்சொத்துரிமையுடன் ஏற்பட்ட குடும்ப அமைப்பால் தன் குடும்பப் பாதுகாப்பு, குடும்ப நலன், மேலும் சொத்து, பணம் சேர்த்தல் ஆகிய சுய நலன்கள் குடும்பங்களையும் ஆக்கிரமித்துக் கொண்டன. இவை சமூக நீதியாகவும் கொள்ளப்படுகின்றன.

குடும்ப அமைப்பு ஏற்படுவதற்கு முன் புராதன கணக்குழு வாழ்வில் இருந்த பொது நலன் நோக்கு குடும்பம் தோன்றிய பின்னர் குறுக நேர்ந்தது. குடும்ப நலனுக்காகவே உழைப்பு, வாழ்வு என்பது நீதியானது.

உற்பத்தி உறவை ஒட்டியே குடும்ப அமைப்பும் ஏற்படுகிறது. நிலத்தைப் பிரிக்காதிருப்பதற்காகவே கூட்டுக் குடும்ப அமைப்பு நிலைத்தது.

ஒரு காலகட்டத்தில் கூட்டுக் குடும்ப அமைப்பு உற்பத்தியை உயர்த்த பல வகையில் பயன்பட்டதாகக் கொள்ளப்பட்டது. கூட்டு உழைப்பு, கூட்டு நுகர்வு, கூட்டாக ஒரே சமையல், தோயல், வீட்டைப் பேணல், உறவினர் விருந்தினரைக் கவனித்தல் ஆகியவற்றிலும் சிக்கனமும் வேலைப்பளு குறைந்தும் இருக்கும். குழந்தை வளர்த்தல், நோயாளரைக் கவனித்தல், முதியோரைப் பேணலிலும் கூட்டுக் குடும்பத்தவர் அனைவரும் உதவுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயினும் முதலாளித்துவ உற்பத்தி முறைகள் தோன்றியதும், கிராமங்களிலிருந்து நகரத்தில் யந்திர உற்பத்தியில் ஈடுபட வருவோர், நகரில் கல்வி கற்க, அரசுப் பணியில் சேர்ந்து இடம் பெயர கூட்டுக் குடும்பதை விட்டு வெளியேற நேரிடுகிறது. இவ்வாறு வெளியேறுவோர் தனிக்குடும்பம் அமைத்துக் கொள்கின்றனர். இது ஒரு தவிர்க்க முடியாத சமூக வளர்ச்சிப் போக்காகும்.

இத்தகைய மாற்றங்கள் பெண்களைக் கிராமச் சிறையிலிருந்து ஓரளவு இடம் மாறச் செய்து நகரங்கள், தொழிற் சாலைகளை ஒட்டி வாழச் செய்வதே அல்லாது விடுதலை தேடித்தரவில்லை.

சமூக வளர்ச்சி பெண்கள் கல்வி கற்று ஆங்காங்கே கூலிக்காக உழைக்கச் செய்யும் வாய்ப்பை ஏற்படுத்துகிறது. ஆயினும் வேலைப் பிரிவினையில் வீட்டு வேலைச்சுமை யாவும் அவளது தலையிலேயே சுமத்தப்படுகிறது. இங்கு மட்டுமல்ல. முன்னேறிய நாடுகள் எனக் கூறப்படும் ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளிலும் இதே நிலையே. அங்கு வெளியே உழைப்பை விற்போர் தொகை இங்குள்ளதிலும் அதிகமாகும். அங்கும் குடும்ப உழைப்பு மதிக்கப்படுவதில்லை. கார், சமையல், தோய்த்தல், வீடுபெருக்கல் ஆகியவை யந்திரமயமானபோதும் இவற்றுக்குமாகப் பெண்ணே மேலதிகமாக வெளியேயும் உழைக்க நேரிடுகிறது. இவற்றை இயக்க மின்சாரம், எண்ணெய், மாற்றுறுப் புகளுக்கும் பணம் தேவைப்படும். முதலாளித்துவத்தின் நுகர் பண்ட உற்பத்தி முறை ஒரு கையால் கூலி தந்து மறு கையால் பறித்தெடுப்பதாகும்.

குடும்ப உறவுக்கு, பெண்ணின் பாலுறவிற்குச் சமூக அனுமதி முக்கியம். மதச் சடங்குகளுடன் இவ்வுறவு ஆரம்பிக்கப்படுகிறது. வீடு, சமையல், கணவன் பணி, முதியோர், குழந்தைகள் என பெண்ணின் வேலைப்பளு அதிகரிக்கிறது. இவையாவும் கூலி மதிப்பற்ற உழைப்பாகக் கொள்ளப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பெண் தானாகவே முன் வந்து ஏன் இச்சிறையை ஏற்றுக் கொள்கிறாள்: குடும்பம் என்பது பரிசுத்த நிறுவனமாக இன்றைய சமூகம் கொள்கிறது. அங்கு பெண், மனைவி என்ற சமூக அந்தஸ்துப் பெற முனைகிறாள். தனித்து வாழ முடியாநிலையில் அதன் மூலம் பாதுகாப்புத் தேட எண்ணுகிறாள். மூன்றாவதாக, எதிர்பாலாரின் பாலுறவின்பம் பெற திருமணம் மூலமே சமூக அனுமதி பெறுகிறாள். குழந்தைகள் பெற்றும் சமூக அந்தஸ்தை உயர்த்திப் பிள்ளைகள் மூலமும் பாதுகாப்புத் தேட முயல்கிறாள்.

திருமணத்தின் முன்னர் அவள் பாலின்பம் அனுபவிக்கவில்லை என்று கூற முடியாது. அவை பற்றிப் பேசுவது, எழுதுவது, வெளியே சொல்வது அநாகரிகம் என்று கருதியிருந்த வேளை எதிர்பாராத இரு சம்பவங்களை நாமும் எதிர்கொள்ள நேரிட்டது.

ஒன்று எயிட்ஸ் என்ற பயங்கர நோய்; அதைத் தடுப்பதற்காக நாடெங்கும் பள்ளிக் கூடங்களிலும் தெருவோர விளம்பரப் பலகைகளிலும் பிரச்சாரம் செய்யப்பட்டு வருகிறது.

'ஓரினச் சேர்க்கையால் எயிட்ஸ் பரவுகிறது. பாலுறவின்போது ஆணுறை அணியுங்கள். இவ்விளம் பரங்களைப் பார்த்தால் நாட்டில் ஓரினச் சேர்க்கை இருப்பதை ஊகிக்கலாம். முற்றாக இல்லை எனின் ஏனிந்தப் பிரச்சாரம் ? மூன்றாம் உலக நாடுகளில் ஓரினச் சேர்க்கை பற்றி ஆய்வு நடத்திய சமூகவியலார் 76 சமூகங்களில் 49ல் சமூகரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பதாகக் கூறியுள்ளனர்.

அடுத்து ஃபயர் என்ற சினிமாப்படம். கணவரால் பாலுறவின்பம் தர முடியாத விடத்து பெண்களுக்கு மாற்றுவழி கூறுகிறது இத்திரைப்படம். பெண்களின் ஓரினப் பாலின்பம் பற்றி இந்தியாவில் மிகப்பெரிய விவாதத்துக்கு இப்படம் வழிவகுத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணாதிக்கச் சமூக அமைப்பைத் தொடர்ந்து காப்பாற்ற முனைந்தோர் இது அநாகரிகமானது, இந்து கலாசாரத்துக்கு முரணானது எனக் கூக்குரலிட்டனர். பெண்ணினம், ஆணாதிக்க குடும்ப அமைப்பை விட்டுப் போய் விடுவார்களோ என்ற அச்சமும் ஏற்பட்டது. இன்றைய சமூக அமைப்பில் அது அத்தனை எளிதல்ல என்பதை அவர்களால் எண்ணிப் பார்க்க முடியவில்லை.

புதிய உற்பத்தி உறவுகளே இத்தகைய போக்குகள், எண்ணங்கள், முன்னேறிய முதலாளித்துவ மேல் நாடுகள், ஏகாதிபத்திய நாடுகளில் வெளிப்படையாக சட்ட, சொத்துரிமை வேண்டி இயக்கங்கள் அமைக்க வழிவகுத்தது. விஞ்ஞான பூர்வமாக சமூக மாற்றங்களை ஆராய்ந்து பார்ப்பவர்கள். இவற்றை அறிவர். விவாகரத்து மறுமணம் விடிவல்ல என புதிய சமூக உறவு வடிவங்கள் தோன்றுகின்றன.

முதலாளித்துவம் மதம் என்னும் கருத்தியல் அரசுயந்திரத்துடன் இணைந்து குடும்ப அமைப்பைப் பேணுகிறது.

முதலாளித்துவம் பெண்களுடைய கூலியில்லாத உழைப்பைக் குடும்பம் என்ற பரிசுத்த அமைப்பின் மூலம் சுரண்ட முடிகிறது. அல்லது முதலாளித்துவமே உழைப்பாளருக்கு வேண்டிய வசதிகளை வீட்டில் பெண்களின் குடும்ப உழைப்புக்குக் கூலிதர வேண்டும். தொடர்ந்து அவர்களின் யந்திரங்களை இயக்க, மனித இன மறு உற்பத்திக்கும் ஈடு தர வேண்டும்.

மேல்நாடுகளிலிருந்து முன்னேறிய பண்டங்களை இறக்கிப் பயன்படுத்துவோர் அங்குள்ள வளர்ந்து வரும் சமூக அமைப்பை அநாகரிகம் என்றும் கூறுவர். அதேவேளை இங்கே ஜாதகம், சாதி, ஜோனிப் பொருத்தம் கற்பனையில் கணித்து, பெண் பார்த்து சீர், சீதனம் பேசி என்றும் காணாத 25–30 வயது ஆண் மகனை 15–18 வயதுப் பெண்ணுக்கு ஐயர் தீ வளர்த்து, மந்திரம் ஓதிய சடங்கு டன் தாரைவார்த்து தாலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிக் கொடுத்து பாலுறவிற்கு அனுமதி வழங்குவர். 60–70 கிலோ எடை ஆண்மகன் 40-50 கிலோ பெண்மேல் ஏறிப்படுக்க உரிமை பெறுகிறான். இது மட்டும் இந்து நாகரிகம் எனக் கூறப்படுகிறது. இதைப் பொருளியல் உற்பத்தியில் முன்னேறிய நாட்டவர் பார்த்து அநாகரிகம் என்று பழிக்கின்றனர்.

புராதன கணக்குழு சமூக அமைப்பிலோ, தொடர்ந்த ஆரம்பகால அடிமைச் சமூகத்திலோ தனிக் குடும்ப அமைப்பு நிலவவில்லை. தனிச் சொத்துடமை உற்பத்தி முறைமைக்கு ஏற்பவே குடும்ப அமைப்பு ஏற்பட்டது என்பதை முன்னரும் கூறினேன். நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறையின் தேவையை ஒட்டியே இத்தகைய அமைப்பு ஏற்பட்டது. ஏறக்குறைய 2000-2500 ஆண்டுகளாகவே நீடித்து நிலைத்து விட்டது.

தற்போது முதலாளித்துவ உற்பத்திமுறை குடும்ப அமைப்பைக் கிராமங்களிலிருந்து பெயர்த்து நகரங்களை ஒட்டியும் தொழிற் சாலைகளைச் சார்ந்தும் பெயர்த்து வருவது பற்றியும் மேலே கூறினேன். இரத்த உறவுமுறை, குடிப்பெருக்கம், குடும்ப அமைப்புக்கு முக்கிய இலக்கணமாகவும் கூறப்பட்டது. இவை கட்டுப்படுத்தப்படுவதோடும், புதிய உற்பத்தி முறைகளை ஒட்டியும் குடும்ப அமைப்புகள் உடையத் தொடங்குகின்றன. இது ஒரு தவிர்க்க முடியாத வரலாற்றுப் போக்காகும்.

குடும்பம் ஒரு விஞ்ஞான பூர்வ அமைப்பல்ல. சம நிலையில் ஆணும் பெண்ணும் அங்கில்லை. ஜனநாயகம் இல்லை. வேலைப்பிரிவினை வேறு. ஒரு சோஷலிச சமூக அமைப்பு ஏற்பட்ட பின்னரே பெண்ணினம் சமத்துவ நிலை நோக்கி முன்னேற முடியும்.

இந்தக் குடும்ப அமைப்பில் வேலைப்பிரிவினையுடன் அடிமைப்பட்டிருந்த பெண்கள் இயக்கம் சார்ந்து பொருளாதார, அரசியல், சமூக உரிமை, மனித உரிமை வேண்டி சமத்துவத்துக்காகப் போராடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகின்றனர். இந்தப் போராட்டம், அடுத்த நூற்றாண்டில் இன்றைய குடும்ப, சமூக அமைப்பை முற்றாக மாற்றி அமைக்கும் போராட்டமாக வலுப்பெறும் என்று நம்புகிறேன்.

**கு**டும்பம் என்பதை இரத்த உறவு முறையாக, ஒரு கூரையின் கீழ் வாழ்பவரையே நாம் குறிக்கிறோம். இங்கு கணவன், மனைவி, குழந்தைகள் முதன்மையாவர். பெண்ணுக்குப் பாலுறவு அனுமதியும், பாதுகாப்பும் கலியாணத்துடன் கிட்டுவதாகக் கொள்ளப்படும். பெண்கள் சமத்துவம், சுதந்திரம், மனித உரிமைகளற்றவராக வாழ்வதை விழிப்புணர்வுடன் பார்ப்பவர்கள் அறிவர்.

ஏங்கெல்ஸ் வர்க்க நோக்கில் குடும்பத்தை அணுகினார். பொருள் அடிப்படையில் பூர்ஷ்வா குடும்பத்தில் கணவனும், மனைவியும் சமனற்ற நிலையில், மனைவி தான் பெறும் உணவு, வசிப்பிடத்திற்கு மாற்றாக கணவனின் சொத்துரிமைகளைத் தொடர்ந்து பேண குழந்தைகள் பெற்றுத் தருகிறாள். இதைப் பாலியல் தொழிலாளர் போன்றது என விரிக்கிறார்.

பாட்டாளிகளின் குடும்ப அமைப்பை யதார்த்த பாலுறவு காதலில் கணவனும் மனைவியும் கூலி அடிமைகளாகச் சுரண்டப்படுவதாகக் கூறுகிறார்.

குடும்ப வீட்டுப் பணிகளைச் சமூகமயமாக்கி பெண்களை மதிப்பான உற்பத்தியில் ஈடுபடுத்த வேண்டும் என லெனின் கூறினார்.

அல்தூஸர் குடும்பத்திற்கு வரைவிலக்கணம் கூறும் போது குடும்பம் கருத்தியல் அரசுயந்திரத்துடன் இணைந்தது மட்டுமல்லாது மற்றைய பணிகளும் அதற்கு உள்ளன என்றார். உழைப்புச் சக்தியை மீள் உற்பத்தி செய்வதிலும் குடும்பம் ஈடுபடுகிறது. (குழந்தைகள் பெற்று மீண்டும் முதலாளித்துவ உற்பத்தி தொடர்ந்தியங்க உதவுதல்) பல்வேறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்பத்தி முறையில் குடும்பம் ஒரு உற்பத்திக் கூறு (Unit of Production) என்பதோடு நுகரும் அலகுமாகும்.

குடும்பம் பொருளுற்பத்தி என்ற அடிப்படை அமைப்பின் மேல் கட்டப்பட்ட கருத்தியல். விஞ்ஞான பூர்வமற்ற மதம் போல உலகைக் காட்டும் பலமான கருத்துருவம்.

இந்நாவலில் நிலப்பிரபுவுத்துவக் கூட்டுக் குடும்ப அமைப்பு முதலாளித்துவ உற்பத்தி முறை வளர்ச்சியில் எத்தகைய மாற்றமடைகிறது என்பதையும் கோடிட்டுக் காட்ட முனைந்தேன். உற்பத்தி உறவின் மாற்றங் களே சமூக உறவிலும் மாற்றங்களை ஏற்படுத்துகிறது என்பதே மார்க்சிய கோட்பாடாகும். வரலாற்றுப் பொருள் முதல்வாதம் என்பது மார்க்சிய விஞ்ஞான அணுகுமுறை; இயங்கியல் பொருள் முதல் வாதம் மார்க்சின் சித்தாந்தம் என அல்தூஸர் கூறுவார். சமூக அமைப்பு என்றும் தேங்கி நிற்பதில்லை. தொட ர்ந்து மாறிக் கொண்டே இருக்கும். அந்த மாற்றங்களையே நாவல் மாந்தர் மூலம் காண முயன்றேன்.

நாவலைப் படித்து சில திருத்தங்களுக்கு ஆலோசனை கூறிய நண்பர் டாக்டர். ந. தெய்வசுந்தரம் அவர்கட்கு நன்றி. ஆயினும் கருத்துகள் யாவுக்கும் நானே பொறுப்பு. அட்டையை பொருளமைதியுடன் அழகுபடுத்த உதவிய டிராட்ஸ்கி மருதுவுக்கு என் அன்பு. லேசர் அச்சில் உதவிய சுவிதா நண்பர்களுக்கும் என் நன்றி.

சென்னை
21.8.99

*செ. கணேசலிங்கன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பச் சிறையில்

## 1.1

"உன்னுடைய கல்யாணத்திற்கு வரமுடியாது போனதற்கு முதலில் மன்னிப்புக் கேட்க வேணுமடி"

வாசலில் வந்து வரவேற்ற சகுந்தலாவிடம் அவளது தோழி மைதிலி கையைப் பிடித்தபடி மன்னிப்போடு சொன்னாள். அச்சிட்ட சுரிதார், பின்னிய முடி, கையில் பை. சிறிது குதியுடனான சாண்டலை வாசலில் கழட்டி விட்டாள்.

"அதனாலென்னடி. அந்தக் கூட்டத்தில் நீ வந்திருந்தாலும் ஒரு வார்த்தை கூடப் பேசியிருக்க முடியாது."

"உன்னை அந்தத் திருமணக் கோலத்தில் ஒரு தடவை பார்த்திருப்பேனே. மாப்பிள்ளை மகாதேவனையும் பார்த்திருக்கலாமே"

"அதுதான் போட்டோ ஆல்பமிருக்கே. காட்டுகிறேனே..." சகுந்தலா தோழியின் கையைப் பிடித்து வீட்டுள்ளே அழைத்தபடி சொன்னாள்.

"ஏண்டி போட்டோ ஆல்பம் என்கிறாய், வீடியோ கேசட் எதுவும் எடுக்கவில்லையா ?" – மைதிலி சந்தேகம் தொனிக்கக் கேட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒரு பிரிண்ட் தான் இங்கே இருந்தது. அவர்களது உறவினர் எவருக்கோ பார்க்கக் கொடுத்து விட்டார்கள். இன்னும் திரும்பி வரவில்லை."

சகுந்தலா தன் தோழியை உள்ளே அழைத்துச் சென்று வீட்டின் நடுப்பகுதியில், ஹோலில் அங்கு மடித்தபடி ஓரத்திலிருந்த ஜமக்காளத்தை எடுத்து விரித்து உட்காரச் செய்தாள்.

மைதிலி அந்த வீட்டு அமைப்பை மேலும் கீழுமாக ஒரு தடவை கண்ணோட்டமிட்டாள்.

பழைய மாடி வீடு. போதிய வெளிச்சமே இல்லை. சீமெந்தாலான ஹோல்.

"என்னடி வீட்டைப் பார்த்து ஆச்சரியப்படுகிறாயா ? அவர்களது தாத்தா கட்டிய வீடு. அது அப்படியே பேணிக் காப்பாற்றி வைப்பதில் பெருமைப்படுகிறார்கள்." – சகுந்தலா சுற்று முற்றும் பார்த்துவிட்டு மெல்லிய குரலிலேயே சொன்னாள்.

"படித்தவர்கள் சிலர் அன்றிக் வால்யு எனவும் பாதுகாப்பார்கள்" – மைதிலி, தோழி குற்றமாகக் கூற முனைவதைச் சமரப்படுத்துகின்றாள்.

"போடிபோ, அன்றிக் ... மண்ணாங்கட்டி, பழமையை இறுக்கிப் பிடிக்கும் போக்கு, மாற்றத்திற்கே தயாரில்லாதவர்கள்."

"சிக்கனமும், காரணமாயிருக்கலாம்"

"இது சிக்கனமெல்லடி, கஞ்சத்தனமும்..." – சகுந்தலா அடிக் குரலில் கூறியபடி தோழியின் துடையில் கிள்ளி விட்டுச் சிரித்தாள்.

"என்னடி மாப்பிளை பயணம் போய் ஒரு மாதமாகவில்லை. மாமியார் வீட்டைப் பற்றி குறைவாகப் பேசத் தொடங்கி விட்டாய்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வேறு ஆருக்கடி சொல்லுவேன். உனக்கு மட்டுந்தானே சொல்லுகிறேன். எங்க வீட்டுக்குக் கூடச் சொல்ல மாட்டேனே". தன் நெஞ்சில் புகைந்து கொண்டிருந்ததை முதன்முதலாகச் சொல்லி ஆற ஒரு தோழி கிடைத்ததுபோல் பேச்சிருந்தது.

"உன்னுடைய நிலைமையை ஓரளவு புரிய முடிகிறது. எங்கே உன் அத்தை, நாத்தனார்.... ?"

"அத்தை மூத்தக்காவுடனும், குழந்தைகளுடனும் கோவிலுக்குப் போ ய் விட்டாள். இனி வந்து விடுவார்கள்!"

"மற்றப் பெண்ணு"

"சமையல் கட்டு வேலை. நானும் அவளுக்கு உதவிக் கொண்டிருந்தேன். பையன் வந்து சொன்னதுமே பத்மாவைப் பார்க்கும்படி விட்டுவிட்டு வந்தேன். சின்ன நாத்தனார், நல்லஉதவியான பெண். என்னைவிட வயது கம்மி. கொஞ்சம் பொறு. உனக்குக் காப்பி கொண்டு வருகிறேனே."

"அதெல்லாம் எதுக்கடி. உன் அத்தை பரிவாரம் வரமுன்னர் பேசவேண்டியதெல்லாம் பேசிவிடுவோம்." – மைதிலி தோழியைத் தடுக்க முயன்றாள்.

"கலியாணத்துக்குப் பிறகு முதல் தடவை வந்திருக்கிறாய். ஏதாவது சாப்பிட்டுத்தானே போக வேணும்." – சகுந்தலா கூறியபடியே சமையல் கட்டுப் பக்கம் சென்றாள்.

சகுந்தலாவோடு சென்று சமையற் கட்டுப் பக்கத்தையும், தோழி அழைக்காத போதும் மைதிலி பார்வையிட விரும்பினாள். அங்கே அவளது நாத்தனார் வேறு இருக்கலாம் என எண்ணி ஏன் வீண் தொல்லை என்று விட்டு விட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைதிலி சிறிதும் எதிர்பாராததாகவே சகுந்தலா புகுந்த வீடும் அவளது பேச்சுக்களும் இருப்பதைக் கண்டு ஏமாற்றமடைந்தாள். சிந்தனையோடு வீட்டின் மாடிப் பகுதியையும் உட்கார்ந்தபடியே தலையைத் திருப்பி நோட்டமிட்டாள். நடுவே வானம் தெரிந்தது. மாடியில் சுற்றிவர அறைகள் போலஇருந்தது.

"நீ வந்திருப்பதைப் பார்த்து பத்மா பாலைக் காய்ச்சி வைத்திருந்தாள். காப்பியை உடனேயே கலக்க முடிந்தது." சகுந்தலா சொல்லியபடியே காப்பியுடன் ஒரு தட்டில் வெங்காய பஜ்ஜி இரண்டையும் வைத்தாள்.

"மாப்பிளையின் அண்ணன் வீட்டுக்காரி, ஓரகத்தி... பத்மாவாடி"

"அது நல்ல வேடிக்கையடி, நான் பத்மா என்று கூப்பிடுவேன். அந்தப் பெண்ணு அக்கா என்பாள். என்னிலும் இரண்டு வயது குறைவு. இந்தப் பெண் நல்ல மதிப்பும் மரியாதையும் காட்டுவாள். மூத்த ஓரகத்தியை அக்கா என்று அழைப்பேன். வீட்டுக்கு மூத்த மருமகள் என்று கொஞ்சம் அதிகாரம் காட்டுவாள்."

"மாமி, பிறகு மூத்த மருமகள் அதிகாரம் காட்டுகிறாள் என்று சொல்லுகிறாயே. இந்தக் குடும்ப அமைப்பிலே படிமுறையாக அதிகாரம் இருப்பதைப் பார்த்திருக்கிறேன்." ஒரு பஜ்ஜியை எடுத்துக் கடித்தபடியே மைதிலி சொன்னாள். ஒரு தடவை விழுங்கி விட்டு மேலும் தொடர்ந்தாள்:

"இதனால்தான் கலியாண மென்றாலே பயமாயிருக்கிறதெடி..."

"எனக்கும் பயமிருக்கவில்லையா ? என்றாலும் இந்தச் சிறையில் விழத்தானே நேர்ந்தது. முன் எண்ணியதிலும் இத்தனை மோசமாயிருக்கும் என நானே எண்ணியிருக்கவில்லையடி"

"ஏன்டி, சிறை என்று அவசரப்பட்டுச் சொல்லுகிறாய். உனக்கு விசா கிடைத்ததும் கட்டிய காதலனிடம் அமெரிக்கா என்ற சொர்க்க பூமிக்குப் போய் விடுவாயே..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அது என்ன சொர்க்க பூமி என்று போய்தான் பார்க்க வேண்டும். விசா கிடைக்க எத்தனை மாதமாகிறதோ, அதுவரை இந்தச் சிறையில் சமாளிப்பது தான் எப்படி என்று தெரியவில்லை." – சகுந்தலாவின் சோர்ந்த குரல்.

"என்னடி வீணாய் அலட்டிக்கிறாய். அடிமனதில் காதலனைப் பிரிந்த கவலை இருக்கத்தானே செய்யும்." மைதிலி தோழியின் கன்னத்தைக் கிள்ளிவிட்டு கிண்டலாகச் சொன்னாள்.

"போடிபோ. அதெல்லாம் பெரிய பிரச்சினையில்லை. நீ வேறு கிண்டல் பண்ணாதே. உனக்குத் தெரியாத வழிகளா? இத்தனைகாலம் தனியாக வாழவில்லையாடி. இந்த வீட்டுலே ஒரு நாளைச் சமாளிப்பதே எனக்குக் கஷ்டமாயிருக்கடி..."

"இது உன் புகுந்த வீடடி. சீதைக்கு அயோத்திதான் சொர்க்கம்."

"மீண்டும் கிண்டலா. இங்கே எத்தனை பிரச்சினைகள். எங்க வீட்டுக்கு நீ வந்தால் எப்படியெல்லாம் உபசரிக்கமுடியும். வற்புறுத்தி என்றாலும் வீட்டில் தங்க வைப்பேனே. தெரியாதா? இங்கே முடியுமாடீ"

"ஆமாம். இது புதிய வீடு, புகுந்தவீடு. புதிய குடித்தனத்தில் நுழைந்து விட்டாய். நானும் முன்னைய உபசரிப்பை எதிர்பார்த்து வரவில்லையே."

"புதிய வீடல்லடி. அந்நிய வீடாகத் தெரியேல்லை. எனக்கென்று ஒரு தனி அறையே கிடையாது. அக்காவின் பிள்ளைகளும் என் அறையில்தான். என் அறை என்று உன்னை அழைத்துச் சென்று காட்ட முடியாத நிலையில் இருக்கிறேன். புரியுதா?" – சகுந்தலாவின் சோகக் குரல்.

"புரியுதடி புரியுது. நானே எதிர்பார்க்கவில்லை. இது புதிய வாழ்க்கையடி. என்றோ நீ தனிக்குடித்தனம் போகத் தானே போகிறாய். அப்போது நீ தானே குடும்பத் தலைவி. புதிய பதவியில் உரிமையுடன் உன்னை வந்து பார்ப்பேனே."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதுவும் இந்தக் குடும்பத்தில் நடக்காது. அமெரிக்காவிற்குப் போகும் ஆர்வமும் எனக்கில்லை."

"அந்தச் சொர்க்க பூமிக்குப் போகத்தானே எல்லாரும் தவங்கிடக்கிறார்கள். விசா எடுக்க நாள்தோறும் மவுண்ட்ரோட்டில் வெய்யில், வெப்பத்திலே நிற்கும் கியூவை நீ பார்க்க வில்லையா?"

"இங்கே தானே அம்மா, அப்பா, அண்ணா உறவினர்கள் எல்லாரும் இருக்கிறார்கள். எல்லோரையும் பிரிந்து அங்கேபோய் அந்நிய பூமியில் தனிய இருக்கிறதை நினைத்தாலே பயமாயிருக்கிறது."

"இது அந்நிய வீடு. அது அந்நிய பூமி. நல்ல வேடிக்கைதாண்டீ. அங்கே சமைச்சுப் போட்டுக் கொண்டா இருக்கப் போகிறாய். எங்காவது நீயும் உழைக்கத்தானே போகிறாய்."

"அங்கே உழைத்தாலும் இங்கே பணம் அனுப்பிக் கொண்டே இருக்க வேணும்"

"கூட்டுக் குடும்பமென்றால் உழைப்பில்லாதவரையும் சமாளிக்கத்தானே வேணும். அது சரி, அவரசப்பட்டு ஏனடி கையிலிருந்த வேலையையும் ராஜினாமாச் செய்து போட்டாய்..."

"இங்கே மாமா, அத்தைக்கும் கலியாணத்தின் பின் வேலைக்குப் போவது விருப்பமில்லை. அவரிடம் சொன்னால் உன் மாதக்கூலி அங்கே நான் டாலரில் உழைக்கும் ஒரு நாட் சம்பளம். ஏன் வீணாகக் கஷ்டப்பட்டு அலையவேண்டும் என்றார்"

"நீ என்ன சொன்னாய்?" – தோழி வேலையை விட்டது விரும்பவில்லை என்பது மைதிலியின் குரலில் தொனித்தது.

"அங்கு வரும்வரை என் செலவுக்கும் பயன்படும் என்றேன்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதற்குத்தானே அம்மாவிடம் கேட்டு வாங்கலாமே என்றார். நானும் அவ்வேளை எதற்கு வீணாக அலைந்து உழைத்து மீண்டும் அவங்களிடமே தரவேண்டும் என்று அவ்வேளை எண்ணி ராஜினாமாகச் செய்து விட்டேன். அது தவறு என்பதை இப்போது தான் உணர்கின்றேன்."

"இரண்டு வகையில் நீ வேலையை விட்டுவிட்டதால் தோல்வியடைந்து விட்டாய். ஒன்று சிறை என்றாயே. வெளியே சென்று வரும் சுதந்திரத்தை, மொபிலிட்டியை இழந்து விட்டாய். உன் செலவிற்கு உரிமையுடன் பணம் பெறும் வாய்ப்பையும் விட்டுவிட்டாய்."

"ஆமெடி, தற்போது தயக்கத்தோடு அத்தையிடம் பணம் கேட்டு வாங்க வேண்டும். அம்மா, அப்பாவிடமோ எவரிடமோ கேட்க முடிவதில்லை. அப்படி வாங்கியதை அறிந்தால் தங்களுக்கு மரியாதைக் குறைவு என இவர்கள் சொல்லுவார்கள். என் சேவிங் பாங்கில் உள்ள பணத்திலும் எடுக்க முடியாதுள்ளது. எதற்கு, ஏன் என அத்தை கேட்கலாம்."

"காலேஜில் புரௌபெஷர் சொல்லுவது நினைவிருக்காடி" – மைதிலி காலேஜ் நாட்களை நினைவலையில் கொணர முயன்றாள்.

"எதைச் சொல்லுகிறாய்?"

இருதோழியரும் ஒரே விடுதி றூமிலிருந்து கற்ற நாட்கள் நினைவில் வர வினவினாள்.

"பெண்கள் வெளியே உழைக்கும்வரையே, தேசிய வருமானத்தையும் உயர்த்த உதவுகிறார்கள். வீட்டில் எத்தனை கஷ்டப்பட்டு வீட்டுப் பணி செய்தாலும் மதிப்பற்ற உழைப்பாகவே கொள்ளப்படுகிறது."

"ஆமாடி. எல்லாம் புத்தகப்படிப்போடு போய் விடுகிறது. இந்தச் சமூகத்தில் நாமும் மாட்டப்பட்டு சிறைக் கைதியாகி விடுகிறோம்." – சகுந்தலாவின் சோகக் குரல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சிறைக்கைதிகளும் அங்கே சுதந்திரமில்லா விடினும் தேசிய வருமானத்திற்காக உழைக்கச் செய்கிறார்கள். சிறையை விட்டு வெளியேறும் போது உழைத்த கூலியில் ஒரு பங்கு தந்து விடுகிறார்களே"

"அதுவும் உண்மை தான். அதிலும் மோசமான நிலைக்குப் பெண்கள் குடும்பங்களில் தள்ளப்படுகிறார்கள், நானும் தெரிந்து கொண்டே விழுந்தேனே, பார்த்தாயா ?"

"அவர்களுக்குத் தெரியாமல் என்னிடம் தானும் பணம் பெற்றால் நீ திருட்டுச் செய்கிறாய் என்றும் சொல்லாம்." – மைதிலி தன் ஊகத்தைத் தெரிவித்தாள்.

"ஆனால் ஒரு விஷயத்தை இப்போதுதான் நன்கு ஊகிக்க முடிகிறது. நான் போராடியும் வெற்றி பெற முடியாது. அவரைப் பொறுத்தவரை அப்பா, அம்மாவின் வார்த்தையே, முடிவே வேதவாக்கு..."

'அதுவும் அப்படியா'

"ஆமெடி. நான் என்ன விஷயம் பற்றி அவரது முடிவைக் கேட்டாலும் 'அம்மா, அப்பாவைக் கேட்டுச் செய் அல்லது கேட்டுக் கொள்' என்பார். 'அப்போது பிரச்சனை இருக்காது' என்றும் சொல்லுவார்."

"இவற்றையெல்லாம் கேட்கவே கலியாணம் என்பதே கலக்கமாயிருக்கடி..."

"இப்படிக் கூட்டுக் குடும்பமில்லாத இடமாகப் பாரடி..."

"குடும்பம் என்றால் எல்லாமே பெரும்பாலும் இப்படித் தானிருக்கும்..."

"அப்படியென்றால் பெற்றாரில்லாத அனாதைப் பையனாகப் பார்..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்போதும் ஆணாதிக்கம், ஆண் தலையெடுத்த குடும்ப அமைப்பு..."

மைதிலி திடீரென அடிப்படைப் பிரச்சினைக்குரிய வார்த்தையைச் சொன்னாள்.

மைதிலி கடைசி முடறாக ஆறிவிட்ட மீதிக் காப்பியை எடுத்து உதட்டில் பதித்தாள்.

"மறந்திட்டேன்டி, ஆல்பம்..." சகுந்தலா கூறியபடியே மாடியிலிருந்த அறைக்குள் சென்று ஆல்பத்தை எடுத்து வந்தாள்.

ஆல்பத்தை வாங்கித் தன் மடியில் வைத்துவிட்டு மைதிலி சொன்னாள்.

"உனக்கு ஒரு திருமணப் பரிசு கொண்டு வந்திருக்கிறேன். கண்ணை மூடிக் கொண்டு கையை விரித்தபடி நீட்டு"

"ஏனடி பரி செல்லம் ..." என்று கூறிய படியே கண்களை மூடினாள்.

"தாங்யு சொல்லடி " என்று கூறிய படியே காதணி ஜதை கொண்ட சிறு பெட்டியைச் சகுந்தலாவின் கையில்வைத்தாள்.

"தாங்யு" வியப்பின் அடக்கமாகச் சொன்னாள். காதணியைத் திறந்து பார்த்து விட்டுத் தொடர்ந்தாள் :

"ஏனடி. இத்தனை செலவெல்லாம், இங்கே இருக்கிறது போதாதா ? அத்தைவேறு வந்ததும் உன் வெடிங் பிரசென்ட் என்று சொல்லிக் காட்ட வேண்டும். வாங்கி அயன்சேவ்வில் பூட்டி வைத்து விடுவா..."

"ஓ அதுவும் அப்படியா ?"

545985

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்தச் சிறையில் எத்தனை கட்டுப்பாடுகள் தெரியுமா ? வீட்டிலே சேலைதான் கட்டவேணும். தாலி, ஒரு சங்கிலி, இரண்டுகாப்பு, இந்த ஈயறிங் ..." சகுந்தலா ஒவ்வொன்றையும் விரலால் சுட்டிக்காட்டியபடி சொன்னாள்.

சாதாரண பிரின்டெட் நைலெக்ஸ் மிக்ஸ் சேலையே கட்டியிருந்தாள்.

"உன் சேலை அணிகளைப் பார்த்தாலே அசல் குடும்பப் பெண்ணாகவே தெரிகிறது."

"அத்தை அப்படித்தான் மாட்டுப்பெண் இருக்க வேண்டுமாம்."

"அப்ப ஒன்று செய்யடி. அத்தை வரமுன்னர் இதை ஒருக்கால் போட்டுக் காட்டடி. கண்ணாடியில் நீயும் பார்த்து பிடித்தது என்று சொல்லு. அதுவே எனக்குப் போதும்டி."

"அது சரியடி" என்று சகுந்தலா கூறியபடியே தன் காதணிகளைக் க ழட்டி மைதிலியிடம் தந்து விட்டுப் புதியவற்றைப் போட்டுக் கொண்டாள். எதிர் சுவரிலிருந்த சிறு கண்ணாடியில் பார்த்துவிட்டு வந்து "நல்லாயிருக்கு, ரொம்ப தாங்ஸ்" என்று கூறியபடி மைதிலியின் கன்னத்தில் முத்தமிட்டாள்.

சகுந்தலா புதியவற்றைக் கழட்டி முன் அணிந்ததை மாட்டத் தொடங்கினாள். மைதிலி ஆல்பத்தைப் புரட்டத் தொடங்கினாள். சில படங்களைப் பார்த்ததும் சொன்னாள் :

"மாப்பிள்ளை, மேட்இன் யு.எஸ்.ஏ. நல்ல சிமாட்டாயிருக்கிறார். கலியாணமெல்லாம் முடிவான பிறகு தான் மாப்பிள்ளை இங்கே வந்ததாகச் சொன்னார்கள். போட்டாவிலே பார்த்துத்தான் மயங்கி விழுந்தாயோடி"– மைதிலி சிரித்தபடியே கேலி செய்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கம்பியூட்டர் எஞ்சினியர், அமெரிக்க டாலர் உழைப்பு, பெரிய குடும்பம் பற்றி எல்லாம் சொல்லித்தான் வீட்டில் போட்டோ காட்டினார்கள். எப்படியும் பெண் பார்க்க வருவார்கள்தானே நானும் பார்த்து முடிவு சொல்லலாம் என்று தான் 'சரி பார்க்கலாம்' என்று வீட்டில் சொல்லிக் கொண்டிருந்தேன். ஆனால் நான் எதிர்பாராது எல்லாம் நடந்ததடி. சொன்னால் நீயே நம்பமாட்டாய்."

"என்னடி, சொல்லேன்.."

"அவரின் தாயும் தகப்பனும் மூத்த மகனும் மனைவியுமாகப் பெண் பார்க்க வந்தார்கள். நான் எதுவுமே பேசமுடியவில்லை. ஒரே ஏமாற்றம். எதிர்ப்பும் சொல்ல முடியவில்லை. என்னை உட்கார வைத்துக் கொண்டே சீர், சீதனம், தங்கள்குடும்பப் பரம்பரை பற்றியெல்லாம் பேசிக் கொண்டிருந்தார்கள்."

"மாப்பிள்ளை வந்து பார்க்காமலே எல்லா முடிவும் செய்தார்களா?" – மைதிலியின் குரலிலும் வியப்புத் தொனித்தது.

"மூன்று மாதத்திற்கு முன்னரே போட்டோ எல்லாம் வீட்டில் வாங்கி அனுப்பியிருந்தார்களாம். அவரது சம்மதம் பெற்றுத்தான் முறைப்படி பெண் பார்க்க வந்தார்களாம்."

"மாப்பிள்ளை வந்து பின்னர் பிரச்சனை ஏதாவது ஏற்படாதா என்று உன் அப்பா அண்ணா விசாரிக்கவில்லையா?" – மைதிலி கேட்டாள்.

"நானே அண்ணாவிடம் 'என்ன வேடிக்கை மாப்பிள்ளை வராமல்' என்று கேட்டேன். 'மூத்தவர்கள் சொல்லைத்தட்டாத பிள்ளை. அப்படித்தான் வளர்த்தோம்' என்று தாயார் சொன்னார்களாம்.' அண்ணா அவரது நண்பர்களையும் விசாரித்துவிட்டுத்தான் முடிவு செய்திருந்தார்.' எங்க குடும்பத்தவரைப் பொறுத்தளவில் 'நான் அதிர்ஷ்டக்காரி, நல்ல கலியாணம்.' ஆனால் என் சிறைச்சாலைபற்றி அவர்களுக்கு என்ன தெரியும்?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உன் சிறை பற்றி சொல்லிப் பார்க்கவில்லையாடி."

"கூட்டுக் குடும்பமென்றால் அப்படித்தானிருக்கும். விசாகிடைக் குமட்டும்தானே, பிறகு நீ சுதந்திரப்பறவையாக விமானத்தில் ஏறிவிடலாம். என்றார்கள்."

"விசா கிடைக்க எவ்வளவு காலமாகுமாம். அவரும் அண்ணாவும் தான் பாரங்கள் நிரப்பி அந்த வேலையைச் செய்கிறார்கள். அண்ணா மூன்று, நாலுமாதம் என்றார். அவர் கூடியது ஆறுமாதம் என்றார். சிலருக்கு ஒன்பது மாதம் ஒரு வருஷமாக இழுக்கும் என்றும் அறிந்தேன்... அப்படி இழுபட்டால்..."

"நீ அவரோடு போனில் பேசுவதில்லையா?"

"நானாக பேசமுடியாது. அவர் போன் செய்தால் சரி."

"ஏன்டி பேசமுடியாது?"

"வீண் செலவு என்பது அத்தையின் அடிமனம். போன் பேசுவதைத் தடுக்க என்ன வழி செய்தா தெரியுமா? பத்து ஏரோகிராமை ஒரே தடவையில் வாங்கித்தந்து வாரத்துக்குஇரண்டு கடிதமாவது எழுதலாமே தம்பியும் எதிர்பார்ப்பான் என்று சிபாரிசு செய்தா. எப்படி இருக்கு பார்த்தாயா?"

"நல்ல வேடிக்கைதான். நீ உங்க வீட்டுப் பக்கம் போனால் போன் பண்ணாலாமே."

"அதெல்லாம் வேண்டாத பிரச்சனை. வீட்டில போனிருக்கு,ஏன் வெளியே போய் பேச வேணும் என்றும் அத்தை சொல்லலாம். கடிதங்களில் கூட என் சிறை அனுபவங்களை எழுத முடியாது. என்ன பிற விஷயமானாலும் வீட்டார் சொல்லுவது பற்றி நட, கேட்டு நட என்றே எழுதுவார்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உன் நிலைமைகள் இப்போதுதான் நல்லாய் புரியுது. நீ நல்ல பொறுமைசாலிதான். மாமியார் தேர்ந்தெடுத்த, மெச்சும் மருமகள்தான். கடிதம் எல்லாம் ஒழுங்காய் எழுதுவாரா.."

"இரண்டு மூன்று கடிதம் எழுதிய பிறகு சுருக்கமாகப் பதில் ஒன்று வரும். அல்லது போனில் கடிதம் கிடைத்து பற்றிச் சொல்லுவார்."

"அமெரிக்க மாப்பிள்ளைகள் பற்றி ஹிண்டு பத்திரிகையில் ஒரு கட்டுரை படித்த நினைவு வருகிறது. பெற்றோருக்காக இங்கே வந்து கலியாணம் செய்து கொண்டு போவார்களாம். அங்கே போன பிறகுதான் மாப்பிள்ளைக்கு அங்கு மற்றொரு காதலியும் இருப்பதை அறிவார்களாம்."

"ஆமெடி, நானும் இப்படிக் கதைகள் கேள்விப்பட்டிருந்தன். சிலபெண்கள் திரும்பி வந்து டைவோஸ் செய்ததாகவும் பத்திரிகையில்படித்தாகவும்சொன்னார்கள். அண்ணாவும் இப்படிப்பட்ட கதைகள் அறிந்திருந்தார். 'கண்டிப்பாக வளர்க்கப்பட்டவர் பெற்றோர் சொல்லைக்கேட்டு மீறாது கலியாணத்திற்கு ஒப்புக் கொண்டவர்.கூட்டுக் குடும்பம், சொத்து வேறு அப்படி எதுவும் இருக்காது' என்று உறுதியாகச் சொன்னதே நம்பிக்கை தந்தது."

"கலியாணம் கட்டி இரண்டு வாரம். நெருங்கிப் பழகி காதல் மொழி பேசி மயக்கியிருப்பாரே. ஓரளவாது அவரைப் பற்றி நல்லாய் அறிந்திருப்பாயே." – மைதிலி நாசுக்காகத் தோழியின் அனுபவங்கள் பற்றி அறிய முயன்றாள்.

"அவர் செக்ஸில எல்லாம் அனுபவப்பட்டவர் என்று என்னால் ஓரளவு ஊகிக்க முடிந்தது. தற்போது குழந்தை வேண்டாம் என்பதில் கவனமாக இருந்தார்."

"நீ அவரைப் பற்றிப் பயப்படுவதற்கு எதுவுமில்லையடி. ஆக எனக்கு ஒரே விஷயத்தில்தான் கொஞ்சம் யோசனை. உன் . போட்டோ படம் அனுப்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் தீர்மானம் எடுக்க மூன்று மாதம் ஏன் தாமதமானது என்றுதான் தெரியவில்லை."– மைதிலி தன் சந்தேகத்தைச் சாவதானமாகத் தோழியிடம் சொன்னாள்.

"ஆமாடி. எனக்கும் அது புதிராகத்தான் இருந்தது."

"நானே அவரிடம் விளையாட்டாகக் கேட்டேன். என்னுடைய போட்டோ பிடிக்கவில்லைப்போலும்.மூன்றுமாதம் பார்த்துக் கொண்டிருந்தீர்களா ? என்று"

"என்ன பதில் சொன்னார் ?"

"உடனேயே படத்தைப் பார்த்ததும் காதல் வலையில் விழுந்து விட்டேன். அம்மாவிற்குத் தெரியப் படுத்தினால் உடனே இரண்டு மாதலீவில் வா, பெண்ணைப் பார்த்து கலியாணத்தை முடித்துவிடலாம் என்று சொல்லுவா. அப்படியானால் தற்போதைய வேலையை ராஜினாமாச் செய்துவிட்டு வருவதா, மூன்று வார லீவில் புறப்படுவதா என்ற பிரச்சனை. ராஜினாமா செய்வதானால் இரண்டு , மூன்று மாதமும் தங்கிவிட்டு பின்னர் போய் புதிய வேலை தேடவேண்டும். அதனால்தான் தாமதம், மூன்று வாரத்திற்கு மேல் லீவு எடுக்க முடியாது. 'நான் பெண்ணைப் பார்க்க வேண்டியதில்லை. நீங்களே பெண்ணைப் பார்த்து பிடித்துக் கொண்டால் முடிவு செய்யுங்கள்' என்று போனில் சொல்லிவிட்டேன் என்றார்."

"அவர் கூறிய காரணத்திலும் ஒருவித லொஜிக் இருக்கிறது. நீ கவலைப்படவேண்டியதில்லை"– மைதிலி ஆறுதல் கூறினாள்.

சமையற் கட்டுப் பகுதியிலிருந்து வெளியே வந்த பத்மாவை அழைத்து சகுந்தலா மைதிலியை அறிமுகப்படுத்தினாள். இளமை பத்மா உடலில் தெரிந்தது. சமையல் கட்டு வெப்பம் முகத்தில் வியர்வையை அரும்பச் செய்திருந்தது. முந்தானை சேலையால் முகத்தைத் துடைத்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வெங்காயப் பஜ்ஜி நல்லாயிருந்தது" – பத்மாவிடம் சொன்னாள்.

"அக்காவும் சேர்ந்துதான் செய்தார்கள். எண்ணெயில் போட்டு எடுத்தது தான் என்வேலை.."

"அது தான் கஷ்டமான வேலையும்." –மைதிலி சிரித்தபடி சொன்னாள்.

வாசல் பக்கத்திலிருந்து மணி ஓசை கேட்டது. பத்மாவே வேக நடையில் சென்று வாயிற் கதவைத்திறந்து விட்டாள்.

அத்தை அணி, பிள்ளைகள்; சகுந்தலா எழுந்து நின்று மரியாதை செலுத்தினாள். மைதிலியும் எழுந்தாள். காஞ்சிப்பட்டுடன் கோவிலிலிருந்து திரும்பியிருந்தனர். நெற்றியில், விபூதி மேல் குங்குமப்பொட்டு.

கலியாணத்திற்கு வரமுடியாது நேர்ந்ததாகக் கூறி சகுந்தலா தன் தோழியை யாவருக்கும் அறிமுகப்படுத்தினாள்.

அத்தை குங்குமம் வழங்கினாள்.

"கலியாணப் பரிசாக இதைத் தந்தாள்." – காதணிப் பெட்டியை அத்தையிடம் தந்தாள். அண்ணியும் வாங்கிப் பார்த்தாள்.

"நல்லாயிருக்கு. பரவாயில்லை. சகுவுக்குள்ள பத்தோடு பதினொன்றாக இருக்கட்டும்." – அத்தையின் பொடி வைத்த பேச்சை மைதிலியாலும் புரிய முடிந்தது.

அண்ணி எதுவும் பேசவில்லை. மௌன மொழியை சகுந்தலாவாலும் பத்மாவாலும்தான் புரியமுடியும்.

"நானே பெட்டியில் வைத்து விடுகிறேனே" – அத்தை கூறியபடி சென்றாள். சகுந்தலா முன்னர் ஆருடம் கூறியது அப்படியே நடந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் மனம் விட்டு எதுவும் பேசமுடியாது என்பதை உணர்ந்து மைதிலி யாவரிடமும் சொல்லிவிட்டு விடைபெற்றாள்.

வாசல் வரை வழியனுப்பவந்த மைதிலியிடம் சகுந்தலா வாஞ்சையோடு சொன்னாள் :

"உன்னோடு தான் மனம் விட்டு என்னால் பேசி ஆறமுடியும். சில நாளில் வருவாயா ?"

"கட்டாயம் வருவேன்."

"போன் செய்துவிட்டு வரவேணும். வசதியான நேரம், காலம் நான் சொல்லுவேன்."

சகுந்தலா தயக்கத்துடன் கூறியதை மைதிலி புரிந்து கொண்டாள்.

## 1.2

**மை**திலியை வழியனுப்பிவிட்டு சகுந்தலா வீட்டு வேலைகளில் ஈடுபட்டாள். பத்மா மட்டுமே அவளுக்கு உதவியாயிருப்பாள். அங்குள்ள நடைமுறைகள் உணவுமுறைப் பழக்கங்கள் யாவையும் பத்மா மூலமே அறிந்து கொண்டாள். வீட்டு வேலைப் பிரிவினைகள் அத்தையின் அதிகாரத்திலேயே நடைபெறும். மேலோட்டமாக வேலைகளின் நடைமுறைகளைக் கண்காணிப்பதோடு வீட்டுச் சமையலுக்குரிய அளவு முறைகள், பால், காய், கீரை உட்படட மளிகைச் சாமான் வாங்குதல் யாவையும் அத்தையே தீர்மானித்து வாங்கிக் கொள்வாள்.

சில தொட்டாட்டு வேலைகளைக் கவனிக்க காலையில் வள்ளி வெளியே இருந்து வருவாள். நடைபாதை வெளிப்புறங்களைப் பெருக்குவது, தண்ணீர் தெளிப்பது, கழிவறையைச் சுத்தம் செய்வது, குப்பைகளை அகற்றுவதை அவள் கவனிப்பாள்.அறைகளில் நுழைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளுக்கு அனுமதியில்லை. அவற்றை அவரவரே பெருக்கிக் கொள்ளவேண்டும். காலையில் கோலம் போடுவதை மாற்றுமுறையில் மருமகள்மாரே கவனிப்பர். எவருக்காவது உடம்பு சரியில்லை என்றால் அத்தையே தன் கைவண்ணத்தைக் காட்டுவாள்.

மறுநாள் காலை உணவுக்காக மாவு அரைக்கும் வேலையை சகுந்தலாவே கவனித்துக் கொண்டிருந்தாள். அத்தை கூறியபடி அரிசி, உளுந்தின் அளவுகளை எடுத்து ஏற்கனவே நீரில் ஊறப்போட்டிருந்தாள். மகனுக்கு நல்ல சமையல்காரியைப் பயிற்றுவிப்பதாக அத்தை எண்ணிக் கொள்வாள் போலும். வெட்கிரைண்டரில் இட்டு சுவிச்சைப் போட்டு அரையலை ஆரம்பித்தாள். ஆனாலும் சிந்தனை மைதிலி கூறிச் சென்ற சில விஷயங்கள் பற்றியே மனதில் போட்டு அரைத்துக் கொண்டிருந்தது.

தன் கணவர் மகாதேவன் பற்றிய மேலும் சில செய்திகளைச் சகுந்தலா மறைத்திருந்தாள். அவற்றையும் சொல்லி மனம் ஆறியிருக்கலாமா என்ற நினைவலைகளும் எழுந்து அடிமனதில் அடித்துக் கொண்டிருந்தன. பரவாயில்லை, மறுதடவை வரும்போது சொல்லிவிடலாம் என மனதைத் தேற்ற முயன்றாள்.

போட்டோ அனுப்பி மூன்று மாத காலம் தீர்மானமெடுக்கத் தாமதமானது ஏன் என்பதற்கு மகாதேவன் கூறிய காரணம் அவ்வேளை அவளுக்குத் திருப்தியாக இருக்கவில்லை. பின்னரும், திருமணம் முடிந்த குறுகிய இனிய காதல் காலத்தில் அவள் அப்பிரச்சனையைக் கிண்ட விரும்பவில்லை. அப்படியான ஒரு வினாவைச் சகுந்தலா எழுப்புவாள் என மகாதேவனும் எதிர்பார்க்கவில்லை என்பதையும் பதில் கூறிச் சமாளிக்கும் விதத்தில் அவள் ஊகித்திருந்தாள்.

மைதிலிக்குத் தன் கணவர் கூறிய காரணத்தை அவ்வேளை அழுத்திக் கூறியபோதும் ஓரளவு சந்தேகம் இருக்கவே செய்தது. மைதிலி சொன்ன மற்றொரு கருத்தையும் தன் சந்தேகத்தோடு இணைத்துப் பார்த்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பெரும்பாலும் காதலில் தோற்றவர்கள் தான் வீட்டார் பேசிமுடிவு செய்யும் எந்தக் கலியாணத்தையும் ஏற்றுக் கொண்டுவிடுவர். என் அண்ணாகூட அப்படித்தான் நடந்து கொண்டார். அவரது காதலில் இழுபறி நடந்து தோல்வியடைந்ததை நான் அறிவேன். வீட்டார் பேசியது அந்தப் பெண்ணை விட படிப்பாலும் சீராலும் உயர்ந்திருந்தது. போட்டாவையும் பார்த்த திருப்தியோடு பொம்மைபோல அண்ணாவும் பெண் பார்க்கச் சென்றார். ஆடம்பரமாக சேஷ்மகாலில் கலியாணம் நடந்தது. தன் வெற்றியைக் காட்டுவதாக அழைப்பிதழும் அனுப்பினார். அந்தப் பெண்ணைக் கலியாண மண்டபத்தில் தேடினேன் வரவில்லை. வீட்டுக்கு ஒரு வாழ்த்து மடல் மட்டும் வந்திருந்ததை நான் பார்த்தேன்டி. அண்ணி கண்ணில் படாமல் அதை அண்ணா பார்த்தபிறகு எடுத்துவிட்டேன்."

"ஏனடி அதை மறைத்தாய்?"– சகுந்தலா கேட்டாள்.

"இந்த கார்ட் அனுப்பிய பெண் யார் என்று விபரம் கேட்டால் அண்ணா வீணாகப் பொய் சொல்ல வேண்டும். பிறகு எங்காவது அண்ணாவின் காதல் விஷயமறிந்தால் ஓ அந்தப் பெண்ணா என்ற வீண் சந்தேகம் ஏற்படலாம். இருவருமே நேரில் காண நேரிட்டாலும் அறிமுகப்படுத்த நேர்ந்தால் தேவையில்லாத பிரச்சனை.."

"நீ கெட்டிக்காரிதான்டி"

"காதல் தோல்வியில் ஆணை விடப் பெண்ணுக்குத்தான் பின்னர் கலியாணம் செய்தபின் அதிக பிரச்சனை ஏற்படலாம்"– ச குந்தலா தன் கணிப்பைச் சொன்னாள்.

"ஆமாடி, இதிலென்ன சந்தேகம். இது ஆணாதிக்க சமூகந்தானே."

"அரைத்தமாவு வெளியே தள்ளப் பார்க்கிறது உள்ளே தள்ளிவிடு"– மரகதத்தின் குரல் கேட்டு சிந்தனை அறுபட சகுந்தலா கிரைண்டர் முன்னால் சென்று உட்கார்ந்து சொன்னாள்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சரி அக்கா..." – வீட்டின் மூத்த மருமகளுக்குக் கட்டுப்படும் குரல்.

"நீ அதிட்டக்காரி, வெட் கிரைண்டர் வாங்கிய காலத்தில் மாட்டுப் பெண்ணாய் வந்தாய். நான் வந்த காலத்தில் அந்தப் பெரிய ஆட்டுக் கல்லில அத்தை அரைக்கப் பண்ணினா. தெரிஞ்சுக்கோ..."

மரகதம் பழைய கதைகளைச் சொல்லி பத்மாவிடம் வேலை வாங்குவாள். தற்போது அவளுக்குப் புதிய மாட்டுப் பெண் வந்ததும் வாய்ப்பாகிவிட்டது. வீட்டு வேலையில் மட்டுமல்ல தன் பிள்ளைகளைக் கவனிப்பது, பாடம் சொல்லித் தருவதிலும் உதவி கிடைத்துவிட்டதாக எண்ணிக் கொண்டாள்.

மூத்த பெண்ணுக்குத் தலைவாரிப் பின்னிவிடுவது, சின்னப் பெண்ணைக் குளிப்பாட்டுவதிலும் உதவி பெற்றுக் கொள்வாள்.

"சகுந்தலா கொஞ்சம் உதவி பண்ணிவிடு. மூத்தவள் பள்ளிக்குப் போக நேரமாச்சு... தலையைப் பின்னிவிடு."

சிலவேளை நயமாகப் பேசியும் வேலை வாங்குவாள். பொதுவான வீட்டுவேலைகளில் அதிகாரம் காட்டுவாள்.

அரையலைப் பார்த்து முடித்ததும் ஒரு மணிநேரம் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லித்தருவாள்.

மாலை ஆறுமணியாக ஒவ்வொருவராக மூத்தவர்கள், இளையவர் வீட்டுக்கு வரத் தொடங்கிவிடுவர். அவர்களுக்கு காபி,டிபன் தரவேண்டும்.

தன் கணவரை மட்டும் மரகதம் கவனித்துக் கொள்வாள். அவளும் வேலையாயிருந்தால் பத்மாவே பார்த்துக் கொள்வாள். அவ்வேளைகளில் வேறு வேலைகளில் பத்மா மாட்டிக் கொண்டால், சகுந்தலா உதவுவாள். காப்பியா, டீயா, பாலா என்பதையெல்லாம் பத்மா கற்பித்திருந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தை குடும்பத்தலைவரைக் கவனித்துக் கொள்ளுவாள். முடியாத வேளை 'மரகதம்' என்றே கூப்பிடுவாள். அவருக்கு நீரிழிவு நோயானபடியால் எல்லாமே தனி. காப்பி, டீக்கு சர்க்கரை போடக் கூடாது மட்டுமல்ல இரவு மற்றவருக்குச் சாதம் சமைப்பது போக தனியே இரண்டு சப்பாத்தி, தோசை, அல்லது ரொட்டி தரவேண்டும். மாத்திரைகள் சாப்பிட்ட அரைமணிநேரம் பின்னதாக உணவு வழங்க வேண்டும்.

"பத்மா எங்கேடி, டீ" என்று மட்டுமல்ல ரூமிலிருந்து கொண்டே "தண்ணீர் கொண்டாடி" என்ற பழநிவேலுவின் குரலும் அடிக்கடி கேட்கும். பழநி வேலு பார்மஸி கடை வைத்திருப்பவர். ஏழுமணிக்குக் கடையை விட்டு வந்து விடுவார்.

அந்த வீட்டில் தன் கணவர் மகாதேவன் இல்லாதது நல்லது போல சகுந்தலா எண்ணிக் கொண்டாள். அவரும் அங்கிருந்தால் அதே அதிகாரக் குரலில் ரூமிற்கு தண்ணீர் கொண்டு வரும்படியும் கேட்டிருக்கலாம் என நினைவு ஓடியது.

"பகலெல்லாம உனக்கென்னடி வேலை. நான் வீட்டுக்கு வந்தால்தானே ஏதோ பொக்சரிச்சுக் கொண்டு பண்ணுகிறாய்"– சகுந்தலாவின் வீட்டுக்கு அருகே இருந்த வீட்டுக்காரர் ஒருவர் சத்தமிடுவது அடிக்கடி காதில் விழும். சகுந்தலா அந்த வீட்டுக்கு வந்த பின்னர் அடிக்கடி அவ்வார்த்தைகளையும் எண்ணிப் பார்ப்பாள்.

எப்படியும் தங்கள் வீட்டு வழக்கங்கள் அத்தனை மோசமில்லை, இந்த வீட்டோடு ஒப்பிடும்போது என்றே சகுந்தலா மனதில் முடிவு செய்தாள்.

அந்த வீட்டுள் நுழைந்த இரண்டு மாதத்தில் நடைபெற்ற சண்டைகளைப் பார்த்தே ஆரம்பத்தில் பதட்டமடைந்தாள்.சிறுவர்களுக்கு பெற்றோரின் திட்டும் அடியும், வளர்ந்தவர்களில் பாதிக்கப்படுபவர் பெண்களே. திட்டு மட்டுமல்ல இடையிடையே அடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பக்கம் அடிபிடியும், ஏச்சுப் பேச்சும் நடைபெற, மறுபுறத்தில் அவற்றைப் பொருட்படுத்தாது வேலைகள் நடைபெற்றுக் கொண்டே இருக்கும்.

"என்ன பத்மா இந்தச் சண்டைகள்" – ஆற்றா நிலையில் சகுந்தலா ஒருதடவை இரகசியமாகக் கேட்டாள்.

"நீங்க பேசாது உங்க வேலையைப் பாருங்கள். எங்களுக்கெல்லாம் பழகிப் போச்சு" – பத்மா சாவதானமாகச் சொன்னாள்.

"அப்ப , அத்தையிட்டையும் அடிவாங்குவீர்களோ"

"அதெல்லாம் அந்தக்காலம். மாமியார் மருமகளுக்கு அடிப்பதில்லை, சூடுபோடுவார்கள் என்றுபேசிக்கொள்வார்கள்."

"இப்போது படித்த பெண்கள் என்று பயமா ?" – சகுந்தலா கேலிபோலவே சொன்னாள்.

"இப்போதெல்லாம் ஏச்சுத் தான். அதைக்கேட்டுப்பொறுமையோடு இருப்பதும் கஷ்டந்தான்.."

"வள்ளுவரும் நாவினால் சுட்டவடு ஆறாது என்றாரே, அதுவும் ஒரு வன்முறை வடிவம்" என வள்ளுவர் கருதினார் என காலேஜ் விரிவுரையாளர் சொன்னதும் நினைவில் வருகிறது."

"ஆமாம் சரியாகச் சொன்னார்.எங்க குடும்பத்தைச் சிலவேளை இழுத்துப் பேசுவா. நாங்க ஊமையாகக் கேட்டுக் கொண்டு இருப்பதுதான் கஷ்டமாக இருக்கும். அதை நினைக்கும்போது அத்தைமேல் இரக்கமே வராது." – மனத்துன்பத்தின் பிரதிபலிப்பு குரலில் ஒலித்தது.

"அத்தையும் மாமாகிட்டைத் திட்டு வாங்குவாரோ..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"திட்டென்ன, அடியே இடையிடை விழும். நானும் அக்காவும் நல்லாய் வாங்கட்டும் என்று சிரிப்போம்." – பத்மா சிரிப்போடு சொன்னாள்.

அவர்களால் அவ்வன்முறை பெண்ணினத்தின் பொதுமையான துன்பம் என்று சிந்திக்க முடியவில்லையே என்று சகுந்தலா ஒருகணம் கவலைப்பட்டாள்.

"ஏனடித்தார் மாமா"– தேவையற்ற கேள்வி என்றபோதும் ஏதோ அறிய வேண்டும் என்ற ஆவல் மேலிட சகுந்தலா கேட்டுவிட்டாள்.

"அன்று இந்துமதி காலேஜிலிருந்து லேட்டாக் வந்திருந்தாள். 'உனக்குப் பிள்ளையை வளர்க்கத்தெரியேல்லை, வாய் காட்டத்தான் தெரியும்' என்று சொல்லி கன்னத்தில் அறைந்து விட்டார். இப்படி ஏதாவது காரணமிருக்கும்"

"அத்தை எதுவும் பேசுவதில்லையா ?"

"அடிவாங்கிய பின்னர் எங்களைப் பார்க்க வெட்கப்பட்டு அறையில் போய் படுத்துவிட்டா. இரவுச்சாப்பாட்டை மரகதம் அக்காதான் இரகசியமாகக் கொடுத்தா."

"அத்தை இரவு சாப்பிடவில்லையா ?"

"அக்காதான் மாமாவிடம் நேரம் கழித்துப்போய் அத்தை சாப்பிடவில்லை என்று சொன்னா. 'நல்லாய் பட்டினி கிடந்தால்தான் பாடம் வரும்' என்று மாமா சொல்லி விட்டாராம்."

ஆண்கள் பட்டினி கிடக்கக்கூடாது. பெண்கள் கிடக்கலாம் என்ற பால் பேதப்பாகுபாடு என சகுந்தலா மனம் எண்ணிக் கொண்டது. அந்த வீட்டில் பிள்ளைகளே கவனமெடுக்காதது சகுந்தலாவிற்கு வியப்பாயிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகுந்தலா தங்கள் வீட்டில் நடைபெறும் சம்பவங்களுடன் அங்கு நடப்பதை ஒப்பிட்டுப் பார்த்தாள்.

"பிள்ளைகள் வளர்ந்து விட்டார்கள். வேணுமானால் திட்டுங்கள். அடிக்கவேண்டாம்" என்று ஒரு தடவை அம்மா அப்பாவிடம் அழுதபடி அரைகுறை வார்த்தையில் தளதளத்துச் சொன்னது சகுந்தலா நினைவில் வந்தது. அந்த வார்த்தையை அப்பா புரிந்து கொள்ள பல வருடங்கள் சென்றன. ஒரு தடவை அப்பா அம்மாவை அடிக்கச் சென்றபோது அண்ணன் நேரடியாகவே இடைமறித்துச்சொல்லிவிட்டான்.

"இனிமேலும் அம்மாமேல் கைவைத்தால், நானும் உங்கள் மேல் கைவைக்க நேரும்."

அதன் மேல் அப்பா அம்மாவை அடிப்பதெல்லாம் நின்றுவிட்டது. நாவடு மட்டும் நிற்கவில்லை. 'வளர்ந்த பிள்ளைகளை ஏவி விட்டு என்னை அடிக்கப்பார்க்கிறாள்' என்றும் ஒரு தடவை ஏசியதைக் கே ட்டிருந்தாள்.

ஏதோ அண்ணனாவது அண்ணியை அடிக்காமலிருப்பதைப் பொறுத்துத்தான் பார்க்க வேண்டும். வீட்டுக்குள் நடப்பது பெரும்பாலும் தெருவுக்கு வந்து விடுவதில்லை. அதுதான் குடும்பச் சிறையின் மகிமை போலும்.

இரவுச்சாப்பாட்டுக்கு அழைத்ததும் விரித்த ஜமுக்காளத்தில் நிரையாக யாவரும் வந்து உட்காருவர். மாமாவின் சப்பாத்தியை அத்தை தட்டிலே தண்ணீருடன் எடுத்துச்சென்று ரூமிலேயே கொடுத்துவிடுவார்.

நிரையாக இருந்தவர்களுக்கு மூத்த மருமகள் மரகதமே காய், கூட்டு, புப்படம், ஊறுகாய் எல்லாம் அவரவர் தட்டில் பரிமாறிவிடுவாள். பத்மா ஒவ்வொன்றாக பதார்த்தப் பாத்திரங்களை எடுத்து அக்காவிடம் வழங்குவாள். சாதம்சூடாக இருக்க வேண்டும்; கடைசியாக வடித்துவிட்டே குரல் கொடுக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னர் அத்தையே சாப்பாடு போட்டு வந்தாள். இப்போதெல்லாம் அடிக்கடி குனிய முடியாது என மூத்த மருமகளிடம் ஒப்படைத்துவிட்டாள்.

உணவு வழங்க, வீடு பெருக்க, அடுப்பூத, துணி துவைக்க, அரைக்க எல்லாம் குனிந்து குனிந்து வேலை செய்வதால் தான் பெண்கள் விரைவிலேயே கூனிப்போகிறார்கள் என்று எங்கோ படித்தது சகுந்தலாவின் நினைவில் அங்கு உணவு வழங்கும் போதும் வரும்.

பெரிய சாப்பாட்டுச் சபை நடக்கும்போது, அதைப்போடு, இதைக்கொண்டுவா, அது சரியில்லை, இதில் உப்பு அதிகம், கூட்டுக் காரமாய் போட்டுது, தண்ணி கொண்டுவா. இப்படியான குரல்களெல்லாம் எழும். சாதம் கூட வேகவில்லை. குழைந்து போய்விட்டது என்ற குறைகளும் வரும். எல்லோருக்கும் பிடிக்கத்தக்கதாக, எல்லோரையும் திருப்திப் படுத்தக் கூடியதாக சமையல் செய்வதிலுள்ள பிரச்சனைகளையும் சகுந்தலாவால் அங்கே பார்க்க முடிந்தது.

அத்தையும் மூத்த மருமகளும் இருந்து சாப்பிடும்போது பத்மா பரிமாறுவாள். மற்றவர் உணவு பற்றிக் கூறிய குறைகள் அப்போது ஆராயப்படும். சமையல் செய்தவை பற்றிய குறைகளைக் கூறுவதோடு எப்படித் திருத்திக் கொள்ள வேண்டும் என்ற அறிவுரைகளும் வரும்.

''குழம்பில் கொஞ்சம் உப்புக் கரிக்கிறது லைம் எடுத்துவா. கொஞ்சம் பிழிந்து விடு''– அத்தை சகுந்தலாவிடம் ஆணையிட்டாள்.

கடைசியாக பத்மாவும் சகுந்தலாவும் எஞ்சியிருப்பதைத் தாமே பரிமாறிச் சாப்பிடுவர். உப்புக் கரித்த இடத்தில் புளி அதிகமானதைப் பற்றிப் பேசிக் கொள்வர். காய், கூட்டு எஞ்சியிராவிட்டால் சாம்பார், ரசம், மோர் தான்; எப்போதும். ஊறுகாய் பானை வரண்டுவிடுவதில்லை.

வீட்டில் இரவில் டிபன் சாப்பிட்டுப் பழகியவள் அங்கு சாதம் சாப்பிடப் பழகிக் கொண்டாள். பர்த்தாவிற்கேற்றபடி பதார்த்தம் செய்து வழங்குவது மட்டுமல்ல சாப்பிடவும் பழகிக் கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைசிச் சமையற்கட்டு வேலையாகப் பாத்திரங்களைக் கழுவி அடுக்க வேண்டும். சகுந்தலாவும் பத்மாவிற்கு உதவினாள்.

"லையிட் எல்லாம் நான் அணைத்து விடுகிறேன். பத்மா நீ ரொம்ப களைச்சுப் போனாய். இனியாவது போய் தூங்கேன்."

"தூங்குவதா அக்கா, நீங்க புதுப் பெண் உங்களுக்குத் தெரியாது. அந்த மனுஷன் காத்துக் கொண்டு கிடக்கும். குழந்தையை தூங்க வைத்துவிட்டேன். இங்கு வாடி களைச்சுப் போய் வந்திருக்கிறேன். காலைப்பிடித்து என்னையும் தூங்கவை என்பார்." – பத்மா ஒளிவு மறைவின்றி தன் ஆற்றாநிலையை இதுவரை நாளும் சொல்லி ஆறமுடியா நிலையில் சகுந்தலாவிடம் சோர்வோடு சொன்னாள்.

"ஓ அதுவும் வேறு கட்டளையா? கடமையா!" சகுந்தலா வியப்போடு அன்று சொன்னாள்.

"அதுமட்டுமா, திடீரென அவருக்கு காதல் வெறிவந்துவிடும். கீழே கிடடி என்று மேலே ஏறிப்படுத்துவிட்டு மூச்சிழுப்பார். என்னுடைய மூச்சுத் திணறலைப் பற்றிக் கவலைப்படமாட்டார்."

சாவித்திரி தன் அறையில் சென்று பாயை விரித்துவிட்டுப் படுத்த போதும் தூக்கம் வரவில்லை. மரகதம் அக்காவின் பெண்ணின் குறட்டை ஒலி கேட்டுக் கொண்டிருந்தது. எதிர்காலத்தை அறியாத நிம்மதியான இளமைத் தூக்கம் என எண்ணிக் கொண்டாள்.

பாயில் தூக்கம் வேண்டிப் புரண்ட போதும் மைதிலியின் கூற்றுகள் நெஞ்சில் மோதிக் கொண்டிருந்தது. கணவர் பெயருக்கு பிந்திவந்த திருமண வாழ்த்தைப் பற்றி மைதிலியிடம் கூறாதுவிட்டது சரியா? மறுதடவை காட்டிவிடலாமா என்றும் மனம் அலட்டிக் கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மரகதம் அக்காவின் மாப்பிள்ளை நல்லவராய் தெரியுது" – சகுந்தலா பத்மாவிடம் சொன்னாள்.

"அவர் பூனை மாதிரிதான். அக்காவின் கன்னம் சிவக்க அறையிலே அடித்துவிடுவார். எங்களுக்குச் சண்டை சத்தமெல்லாம் கேட்கும். எதுவுமே நடக்காதபடி, நாடகம் முடிந்தும் இங்கே சிரித்தபடி வருவா. பார்க்கப் பாவமாயிருக்கும். சிலவேளை அந்த அடியை பிள்ளைகள் வாங்குவார்கள்." – பத்மா இரகசியமாகச் சொன்னதும் சகுந்தலா நினைவில் வந்தது. "கணவரிடம் அடி வாங்காத பெண்கள் இந்தியாவில் இல்லை என எங்கோ படித்தது நினைவில் வந்தது. இந்தியாவில் மட்டுமா உலகிலேயா?

சிறைச் சாலைக்குச் சென்று வார்டனிடம் அடி வாங்காதவரைப் பார்க்கமுடியாது என கல்லூரியில் விரிவுரையாளர் ஒருவர் கூறியதையும் ஒப்பிட்டுப் பார்த்தாள்.

நானும் அவரிடம் அடிவாங்க நேருமா? இரண்டு வார வாழ்வில் இடையிடை அவரிடம் ஏற்படும் ஆணாதிக்க பேச்சையும் செயலையும் அவள் அறியாமலில்லை. அவற்றையும் நினைவு கூர்ந்தாள்.

## 13

அன்று சகுந்தலாவுக்கு கணவர் மகாதேவனின் விமானக் கடிதம் வந்திருந்தது. சமையல் கட்டில் வேலையில் ஈடுபட்டிருந்தபோதே தபாற்காரன் ஒசைகேட்டது. சகுந்தலா எப்போதும் செவிகளைக் கூர்மைப் படுத்திக் கொள்வாள். சுறுசுறுப்பாக வாயிற் பக்கம் சென்று பத்மா பெற்றபோது வீட்டில் மற்றவருக்கு வந்திருந்த போஸ்ட் கார்ட்டுகளுடன் விமானக் கடிதமும் இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அக்கா, நீங்க ரூமில் போய் படித்து விட்டு வாருங்கள். நான் அதுவரை இங்குள்ள வேலைகளைப் பார்த்துக் கொள்வேன்." – பத்மாவின் ஆதரவான குரல்.

கடிதம் சுருக்கமாகவே இருந்தது. விசா விண்ணப்பங்களை யெல்லாம் உரிய இடத்திற்கு அனுப்பிவிட்டேன். நண்பர்களிடமும் சொல்லி துரிதப்படுத்தியுள்ளேன். எனக்குத் தானே தனிமை. உன்னைப் பொறுத்தவரை புதிய வீடு, எத்தனை புதிய உறவினர்கள். பொழுது போவதே தெரியாதே' என்றெல்லாம் எழுதியிருந்தார். சகுந்தலா எண்ணியிருப்பதற்கு எதிர்மறையான அவரது கற்பனை எழுத்துக்களுடன் 'முத்தங்கள் நூறு ' எனக் கடிதத்தை முடித்திருந்தார். இன்பக் கிளர்ச்சியே.

கடிதம் ஓரளவு அமைதியும் ஆறுதலும் தரவே செய்தது. ஆயினும் பின்குறிப்பாக எழுதியவை சகுந்தலாவின் மனதைக் குறுகுறுக்கச் செய்தது.

"நான் புறப்பட்டு வந்த பின்னர் இங்கிருந்து மேலும் வாழ்த்துக்கள் வந்திருப்பின் தவறாது அனுப்பி வைக்கவும். அனுப்பமுடியாவிட்டாலும் வாழ்த்து அனுப்பியவர் பெயர், முகவரியை எழுதவும். அவர்களுக்கு நன்றி தெரிவிக்க வேண்டும்."

பிந்திவந்தவற்றை யெல்லாம் சகுந்தலா ஏற்கனவே விமானத் தபாலில் அனுப்பி விட்டாள். அவை நிட்சயம் அவருக்குக் கிடைத்திருக்கும்! ஒரு வாழ்த்து மடலைமட்டும் அவள் அனுப்பவில்லை. அதைக் குறிப்பிட்டுத்தான் எழுதினாரோ என மனம் குற்ற உணர்வில் சிறுமையடைந்தது. அதே வேளை அவளது சந்தேகம் வலுக்கும் நிலையும் ஏற்பட்டது. அதை அனுப்புவோமா, விடுவோமா என்றெல்லாம் மனம் அங்கலாய்த்தது. எப்படியும் தோழி மைதிலிக்கும் காட்டிவிட்டுத் தீர்மானிப்போம் என மனதைச் சாந்தப்படுத்திக் கொண்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடிதத்தைத் தன் பெட்டியில் வைத்து விட்டு சமையற்கட்டுக்குத் திரும்பினாள். பத்மா கேலிச் சிரிப்போடு சொன்னாள்.

"என்னக்கா அவர்... மச்சினன் கடிதத்திலே காதல் மழை பொழிந்திருப்பாரே. என்ன சிரிப்பைக் காணோம். முகம் சோர்வாயிருக்கிறதே"

"இல்லை பத்மா, இந்த விசா பிரச்சனை எப்போது தீருமோ தெரியவில்லை" – முக்கிய விஷயத்தை மறைத்துச் சமாளிக்க முயன்றாள்.

"சும்மா கவலைப்படதே அக்கா. ஓரிருமாதத்திலே எப்படியோ விசா வரத்தானே போகிறது. நீங்க எங்களை விட்டுப் பறந்திடுவீங்க. நாங்கதான் இந்த வீடு, அடுப்பங்கரை, பிள்ளை வளர்ப்பு, அத்தையின் ஆட்சியின் கீழ் சாகும்வரை கிடக்க வேணும். எங்க தலைவிதி." – பத்மா தன் துன்பத்தைத் தலைவிதி எனப் பொதுமைப் படுத்தினாள். பெண்ணினத்தின் தலைவிதி எனப் பொதுமைப்படுத்த பத்மாவால் முடியவில்லை என சகுந்தலா எண்ணிக் கொண்டாள்.

மாலையில் சகுந்தலாவைப் பார்க்க அண்ணனும் அண்ணியும் வந்திருந்தனர். முன்புற ஒடுங்கிய வராந்தாவில் உட்காரச் செய்து தானும் ஒரு ஸ்டூலைக் கொண்டு வந்து போட்டு இருந்து உரையாடினாள். வீட்டில் அப்பா,அம்மா சுகமெல்லாம் விசாரித்தாள்.

"எப்படி சகு, பெரிய குடும்பம் எல்லோரோடும் பழகியிருப்பாய்..." – அண்ணன் தன் அனுமானத்தைச் சொன்னான்.

"ம் ம்..."

"புதுப்பெண் என்று எல்லோரும் அன்பு காட்டுவார்களே."

"அதற்குக் குறைவில்லை.."

"கூட்டுக் குடும்பம், ஒரே சமையற்கட்டு, வேலைகளெல்லாம் குறைவாயிருக்கும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆமாம்..." – கேலிக் குரல்.

"செலவெல்லாம் 'யுனிட் காஸ்ட்' குறைவாக இருக்கும்.."

"நீதானே அக்கவுண்டனாச்சே..."

"சிக்கனமான வாழ்க்கை..."

"கணக்கில்தானே நீ புலியாச்சே.."

"நோய் துன்பமென்றாலும் ஒருவருக்கு மற்றவர் உதவியாகப் பார்த்துக் கொள்வார்கள்"

"அவ்வளவு தானா. இன்னும் நீ படித்தவை இருக்கா..." – சகுந்தலா தன் வெறுப்பை முழுவதும் தெரிவிக்காதவளாகக் கேட்டாள்.

"ஏற்றத் தாழ்வில்லாது எல்லோரும் சமமாகக் கவனிக்கப் படுவார்கள்."

"சிறைச்சாலையில் கூட" என்று சொல்ல நினைத்தவள் நாவைத் தடுத்துக் கொண்டாள்.

"ஆமாம். எல்லோரும் வீட்டிலே சேலை கட்டிக் கொள்வோம். வெளியே கோவிலுக்குப் போகும்போது பட்டுச் சேலை உடுத்திக் கொண்டு பூவும் பொட்டும் வைத்துக் கொண்டுபோவோம்."

"சினிமாவுக்கு அழைத்துப் போவதில்லையா!"

"ஏனில்லை. அத்தைக்குப் பிடித்த சினிமாவுக்கு மாதம் ஒரு தடவையாவது போவோமே..."

சகுந்தலாவின் கூற்றின் அர்த்தத்தைப் புரியாதவனாகக் காட்டிக் கொண்டு மேலும் கீழுமாக வீட்டைப் பார்த்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்மா ஒரு தட்டில் வடை வாழைப் பழமும் காப்பியும் எடுத்து வந்தாள். அவளை அறிமுகப் படுத்தியதோடு தன் அண்ணா, அண்ணியையும் அறிமுகம் செய்து வைத்தாள். தட்டை பத்மாவிடம் வாங்கிய சகுந்தலா இருவரிடமும் பரிமாறினாள்.

"வீட்டில் போட்ட வடைதானே..." – வடையைக் கடித்தபடியே அண்ணன் சொன்னான்.

"ஆமாம். இங்கே வீட்டு அடுப்பு நாள் முழுதும் எரியும். மாலையில் டிபன் போடவேண்டும். ஓட்டலில் வாங்குவதே கிடையாது..."

"அதுதான் வடை கூட நல்லாயிருக்கிறது..."

"ஓட்டலுக்குப் போகாதது நல்ல பழக்கம். சிக்கனம் மட்டுமல்ல உடலுக்கும் நல்லதுதானே" – அண்ணனின் பாராட்டு.

"அதற்குத்தானே நாலு வேலையாட்கள் இருக்கிறோமே..."

"யார் நாலு, உன் அத்தையையும் சேர்த்துச் சொல்கிறாயா ?"

"ஹெட்குக் எங்கேயும் வேலைசெய்ய வேண்டியதில்லை. நாள் பூராவும் மேற்பார்வை செய்வார்."

"உனக்கு எல்லாம் கேலியாக இருக்கிறது போலிருக்கிறது. எதற்கும் நல்ல பக்கமும் இருக்கிறது என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும்."

"அனுபவத்தில்..."

"மகாதேவனுக்குச் சொல்லி இந்தப் பழைய வீட்டை இடித்து மார்டனாக, அமெரிக்கன் ஸ்டைலில் பிளான் போட்டு வீடொன்றை கட்டச்செய். என்ன பணமில்லையா ?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதுதானே என்றும் நடக்காதே..."

"ஏன் நடக்காது ?"– அண்ணன் கேட்டான்.

"தாத்தா கட்டிய பழைய வீடென்று பெருமைப் பட்டுக் கொண்டே இருக்கிறார்கள். ஏன் புதிதாகக் கட்டப் போகிறார்கள். ?"

"பழைய வீடென்றாலும் நீ வசதியாய் இருக்கிறாய் தானே."

"அதுக்கு என்ன குறை. உயிரோடு தான் இருக்கிறேனே தெரியவில்லையா ?"

"ஏதோ வெறுப்போடு பேசுகிறாய், ஏன் என்று தான் புரியவில்லை. இந்த விசா பிரச்சனை தானே சில மாதங்களில் தீர்ந்துவிடும். நீ எங்களையெல்லாம் விட்டு விட்டு அமெரிக்காவுக்கு பறந்துவிடப் போகிறாயே..."

"ஆமாம். அது சொர்க்க புரிதானே உங்கள் பார்வையில். பார்த்துத்தான் விடுவோமே.."

"நாங்கள் கிளம்பலாமா ?"

"கொஞ்சம் பொறுங்க. அத்தையை அழைத்து வருகிறேன். சொல்லிவிட்டுப் போங்க..."

"ஏதோ இந்த முறைதலையெல்லாம் தெரிந்து வைத்திருக்கிறாயே. அதுவே போதும்..."

சகுந்தலா உள்ளே சென்று அத்தையை அழைத்து வந்தாள். இடையில் குலுங்கும் சாவிக்கொத்துடன் நயமான சிரிப்பு.

"தங்கையைப் பார்த்துப் போக வந்தோம். "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவளுக்கு என்ன குறை. எங்க வீட்டுப் பிள்ளையாகிவிட்டாள். அடக்க ஒடுக்கமாக வீட்டு வேலைகளையெல்லாம் செய்கிறாள். தேவனின் போன் வருகிறது. இன்று கூட கடிதம் வந்ததே.."

"ஏதோ எங்கவீட்டுப் பிள்ளையை உங்களுக்குத் தந்துவிட்டோம். பார்த்துக் கொள்வது உங்க கடமைதானே.." – அண்ணனின் சிரித்த குரல்.

"தாரை வார்த்துத் தந்துவிட்டோம் என்றோ, ஆடுமாடு போல் விற்றுவிட்டோம் என்றோ கூறியிருக்கலாம்.." என சகுந்தலா மனதுள் முணுமுணுத்தாள்.

சகுந்தலா சமையற் கட்டுப் பக்கம் வந்தாள். பத்மாவே வரவேற்று மெல்லிய குரலில் சொன்னாள்.

"இந்தப் பழைய வீட்டில் தள்ளி விட்டோமோ என்று அண்ணா கவலைப் பட்டிருப்பாரே.."

"இல்லை பத்மா. சீரும் தந்து உங்களுக்கு விற்றுவிட்டோம். பார்த்துக் கொள்வது உங்கள் பொறுப்பு என்று அத்தையிடம் சொல்லிவிட்டுப் போய் விட்டார்."

"இப்படித்தானே எங்க அப்பாகூட கூட்டுக் குடும்பம், பெரிய குடும்பம். உனக்கு ஒரு கவலையும் வராது பார்ப்பார்கள்... "

"சோறு , சேலை தங்குமிடத்திற்கு என்றுமே பிரச்சனை இருக்காது..."

"சரியாய்ச் சொன்னீங்க..."

"அவற்றுக்குத்தான் வாழ்க்கை என்பதுதான் அவர்களின் கருத்து..."

"உற்றார் உறவினரையெல்லாம் மறந்து விடவேண்டும் என்றும் எதிர்பார்க்கிறார்கள். இங்கே மறக்கப் பண்ணியும் விடுவார்கள். கலியாணத்தின் பின் ஏன் வந்து தொல்லை தரவேண்டும் என்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைக்கிறார்கள். ஆண் பிள்ளைகளுக்குத்தான் பெற்றோர், உறவினர்கள், பெண்களுக்கல்ல என்பது இவர்களின் கருத்து..."

"சரியாய் சொன்னாய் பத்மா. இதெல்லாம் எப்படித்தான் கற்றாயோ..."

"எல்லாம் இங்கே வந்து தான் படித்தேன்..." – பத்மா தன் அனுபவத்தைக் கூட்டு மொத்தமாகத் தொகுத்துக்கூறுவதாக இருந்தது.

"பரவாயில்லையே. இவற்றையெல்லாம் பார்த்துப் பேசப் பழகிவிட்டாய்... நல்லது..."

"இந்த அக்கா, மகளை அழைத்துவர ஸ்கூலுக்குப் போய்விட்டா. அவங்க ஓரவஞ்சகத்தைப் பாரக்கா. அவங்க வீட்டிலே நாலு பெண்கள் கட்டிக் கொடுத்தாச்சு. பெரிய குடும்பந்தான். அவர்களெல்லோரும் இங்கே வந்து தங்கினால், சாப்பிட்டுச் சென்றால் அக்கா தாராளமாக செலவு செய்து பார்த்துக் கொள்வா. என்னிடம் வேலை வாங்குவா. ஆனால் எங்க வீட்டுக்காரர். உறவினர் எவராவது இங்கே தங்கக் கூடாது. ஒரு வேளை சாப்பிடுவதென்றாலும் மூஞ்சை நீட்டுவா!' உன் வீட்டு ஆட்கள். நீயே பார்த்துக் கொள். அத்தைக்குப் பிடிக்காது. என்றும் சொல்லிவிடுவா..."

"அத்தை அக்காவீட்டு ஆட்கள் வந்து தங்குவதற்கு எதுவும் சொல்லமாட்டாளா" சகுந்தலா கேட்டாள்.

"அதற்காகவெல்லாம் சேர்த்து அத்தையை வளைத்து வைத்திருக்கிறா. மூத்த மருமகள் என்ற உரிமை வேறு. அவங்க வீட்டுக்காரர் புடவைக்கடைக்காரர் என்ற பெருமையும் திமிரும்."

சகுந்தலாவால் வீட்டுள்ளே நிலவும் ஆதிக்க உறவுகள், வலுவிசைகளை நன்கு சிறிது சிறிதாக அளவிட முடிந்தது. இத்தனை இழுபறிக்குள் குடும்பம் உடையாது நிலைப்பதன் காரணங்களை அவளால் எண்ணிப் பார்க்கமுடியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உரிமையும் பெருமையும் வேறாக இருக்கா... "

"ஆமாம் அக்கா! உங்க வீட்டுக்காரர் அமெரிக்காவில் உழைக்கிறார் என்றெல்லாம் பெருமையே காட்டாது நீங்க இருக்கிறீங்க. ஆனால் அந்த அக்கா..."

"வீட்டுக்கு மூத்த மகன். அடுத்த குடும்பத் தலைவனாகப் போகிறவர். அதைத் தொட்டு அக்காவிற்கும் தலைமைப்பதவி, சாவிக் கொத்து கிடைக்கும் என்றெல்லாம் இந்தக் குடும்ப அமைப்பில் கொஞ்சம் திமிர் இருக்கத்தான் செய்யும்..." – சகுந்தலா சொன்னாள்.

"முதல் பெற்ற இரண்டும் பெண் பிள்ளைகள். மூன்றாவது தான் பையன். எனக்கு முதல் குழந்தையே பையன் என்றும் பொறாமை வேறு..."

"ஆமாம் அதுவும் இருக்கத்தான் செய்யும்..."

"மூத்த பெண்ணை டாக்டருக்குப் படிக்க வைக்கப் போகிறாளாம்..."

"அந்தப் பெண்ணுக்குப் படிப்பிலே ஆர்வம் இல்லை. சினிமா டிவியில்தான் முழுக் கவனமும். நான்தானே இப்போது டியூசன் சொல்லிக் கொடுக்கிறேனே. படிப்பே ஏறுவதாகத் தெரியவில்லை. பத்தாம் வகுப்பிலேயே போதிய மார்க்ஸ் எடுக்க வேணும். அத்தனை விவேகமான பிள்ளையாகத் தெரியவில்லையே..."

"எப்படியானாலுமக்கா, அவளின் படிப்பைப் பற்றிக் குறைவாய் சொல்லிவிடாதீங்கோ அது வேறு பிரச்சனையாகிவிடும்."

"எனக்குத் தெரியாதா. ஏதோ என்னால் முடிந்தவரை பள்ளியில் தரும் ஹோம் வேர்க்கை செய்து கொண்டு போக உதவுகிறேன். அதற்கு மேல் உதவி வேண்டுமென்றால் அந்தப் பிள்ளையல்லவா கேட்டுப் படிக்க வேணும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதுவும் சரிதான்."

தூக்கம் விட்டெழுந்து அழுத பையனை பத்மா ஓடிச் சென்று தூக்கிக் கொண்டு வந்தாள். சிறுநீர் கழிக்கச் செய்து அழைத்து வந்து சர்க்கரை போட்டு பாலை ஆற்றிக் கொடுத்தாள். தூக்கம் முற்றாக முறியாத நிலையில் தன்னைத் தூக்கி உலாவும் படி பையன் அடம்பிடித்து அழுதான்.

சகுந்தலா முன்வந்து 'சித்தியிடம் வாடா' என்று கூறி தன் மார்போடு அணைத்துத் தூக்கிக் கொண்டாள்.

"இந்தப் பையனை வளர்த்தெடுப்பது வேறு வேலை, உனக்குத் தான் மாதம் பூராவும் ஓயாத வேலை..."

"ஏனக்கா அப்படிச் சொல்லுகிறாய். மாத மொருக்கால் மூன்று நாள் ஓய்வு கிடைக்கிறதே..."

"போயும் போயும் மாதவிலக்கைச் சொல்லுகிறாயா.."

"ஆமக்கா! அது வந்துவிட்டால் ஒரே சந்தோசம். குடும்பக் கட்டுப்பாடு பற்றிக் கவலைப்படாமல் அந்த மனுஷனின் தொல்லையிலிருந்து தப்பிவிட்டேன் என்ற மகிழ்ச்சியும் ஒருபுறம். மூன்று நாளுக்கு வீட்டு வேலையிலிருந்து தப்பிவிட அத்தை கட்டுப்பாடாகத் தரும் லீவு. மறுபுறம் அப்பாடா என்று இரவும் பகலுமாகத் தூங்கலாம்..."

பத்மாவின் குதூகலக் கதையைக் கேட்டு சகுந்தலாவுக்கு அழுவதா சிரிப்பதா என்று தெரியாமல் சிறிது நேரம் மௌனமாயிருந்தாள். குழந்தையோடு ஹாலில் உலாவிக் கொண்டிருந்தாள். பெண்ணினத்தின் துன்பத்தை ஒரு பெண்ணின் வார்த்தைகளில் கேட்டு உணர முடிந்தததையிட்டும் நினைத்துப் பார்த்தாள்.

துன்பங்களைச் சந்தோசமாகக் கொள்ளும் 'சாடிஷத்'திற்குப் பெண்ணினம் தள்ளப் பட்டிருப்பதாகச் சகுந்தலா எண்ணிக் கொண்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதல் என்ற பொய்மையையும் பெண்ணினத்திற்குக் காட்டி பாலுறவின் போதும் துன்பம் ஏற்படுத்தி இன்பம் என ஆணினம் கற்பிக்கிறது. முதலிரவு வன்முறையில் இரத்தம் சிந்தும் துன்ப மேற்படுத்தி ஆணினம் பெருமிதமும் பூரிப்பும் பேசுகிறது. பின்னரும் வன்முறையில் தொடர்ந்து மகிழ்கிறது.

மாதவிலக்கு , வன்முறை இரத்தம் சிந்தும் மற்றொரு மூன்று நாள் துன்பம். அத்துன்பத்தை எளிது படுத்துவதாக டிவியில் வரும் விஷ்பர், ஸ்ரேபிறீ, கெயர் பிறீ விளம்பரங்களைப் பார்க்கலாம். அவையே மறைமுகமாக எல்லோருக்கும் அத்துன்பத்தைக் கூறி ஓரளவு ஆற்றக் கூடிய வழிவகைகளை விலைபேசவில்லையா ?

அந்த வீட்டுக்கு மாட்டுப் பெண்ணாக வந்த பின்னர் வீட்டுச் சிறையில் இருந்து மற்றொரு சிறையில் இரு தடவை இருக்க நேரிட்டது. அந்தச் சிறிய ஒதுக்குப் புறத்தோடு ஒட்டி ஒரு தனிக் கழிவறை. தண்ணீர், சாப்பாடு யாவும் அங்கே தனித்தட்டில் வழங்கப்படும். சிறைக் கூடங்களிலும் ஆபத்தான குற்றவாளிகளுக்குத் தனிச்சிறை உள்ளதாம். அதே போலவே அங்கேயும் சகுந்தலாவும் தள்ளப்பட்டிருந்தாள். அதுவே அந்தக் கூட்டுக் குடும்பத்தின் தனிச் சிறப்பு.

கல்லூரியில் படிக்கும் காலத்திலும் வெளியே வேலைசெய்த வேளையிலும் என்றுமே மாதவிலக்கிற்காக அவள் வீட்டில் நின்றதில்லை. விளம்பரப்படுத்தப்பட்ட ஸ்ரேபிறீ, விஷ்பர் அணிகள் ஓரளவு உதவவே செய்தன.

மூன்று நாட்களும் அங்கிருந்தபோது குமுதம், ஆனந்தவிகடன், கல்கி, ஆகியவற்றின் பழைய பிரதிகளே பொழுது போக்கப் பயன்பட்டன. மற்றும் அங்கிருந்த பழைய நூல்களையெல்லாம் படித்துப் பார்த்தாள். பின்னர் இரண்டாவது தடவைக்காக வீட்டிலிருந்து முன்னர் வாங்கிய நூல்களையெல்லாம் ஒரு தடவை சென்று எடுத்து வந்தாள். அவ்வேளைகளில் தான் பதில் எழுதவேண்டிய கடிதங்களையும் எழுதி முடித்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹாலில் குழந்தையுடன் உலாவிய பின்னர் சமையற் கட்டுப் பக்கம் வந்தபோது பத்மா தன் மனதில் குடைந்திருந்த வினாவை எழுப்பினாள்.

"என் சந்தோசமான ஓய்வான நாட்கள் பற்றிச் சொன்னபோது உங்கள் முகம் சுருங்கியதைப் பார்த்தேன் அக்கா. நான் சொன்னதில் ஏதாவது தவறு"

"இல்லை பத்மா, உன் கஷ்டத்தைத்தான் உன் பேச்சில் காண முடிந்தது. ஆண்களைப் போலவே பெண்களும் மூன்று நாள் விடுமுறை என சுற்றித் திரியலாமே. அதை தடை செய்வதும் பெண்களை அடிமைப்படுத்துகிறதல்லவா? எங்க வீட்டிலே எனக்கு மென்ஸஸ் எப்போது வந்தது என்று எவருக்கும் தெரியாது கல்லூரிக்கோ, வேலைக்கோ சென்று விடுவேனே."

"எங்க வீட்டிலேயும் இத்தனை மோசமில்லை. இங்கே இந்த வேலைத் தொல்லையிலிருந்து அவ்வேளைதான் ஓரளவு தப்ப முடிகிறது என்பதாலேயே சொன்னேன்."

"உன் பிரச்சனையை என்னால் பார்க்கமுடிகிறது. மற்றது உன் வீட்டுக்காரர் குடும்பக் கட்டுப்பாடு பற்றி எதுவும் அறியாதிருக்கிறாரே என்று கவலையாயிருக்கிறது."

"உனக்கென்னடி கவலை. நீ எத்தனை பெற்றாலும் வயல் வேறு இருக்கிறது. சோறுபோடுவார்கள். எங்கம்மா ஆறுபெத்தா. பாட்டி எட்டுப் பெத்தா. நீ இரண்டு மூன்றாவது பெற்றால் தான் பெருமையடி என்கிறார்..."

"இதெல்லாம் கூட்டுக் குடும்பம், நிலப் பிரபுத்துவ எண்ணங்கள். அது போக, செக்ஸிலேயும் உன் விருப்பமே அறியாமல். தன் ஆசைக்காக கொடுமைப் படுத்துகிறாரே என்றும் கவலைப்பட்டேன்."

"ஜாதகப் பொருத்தம், ஜாதிகுலம் எல்லாம் பார்த்து சீ தனத்துடன் ஆடம்பரமாகத்தான் பெரிய சொத்துள்ள பரம்பரைக் குடும்பம் என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிவைத்தார்கள். இனி இந்தச் சமையல், குழந்தை பெறுவதிலிருந்து தப்பமுடியாது. குழந்தைகளை வளர்த்துத்தான் அத்தைபோல ஆறுதல் பெற முடியும் என நினைக்கிறேன்."

"ஆமாம். அது ஓரளவு உண்மைதான். அதே வேளை அத்தையும் மாமாவிற்கு அடிமைதானே. அவர் எண்ணுவது போல குடும்ப மதிப்பைக் காப்பாற்ற வேண்டிய கட்டுப்பாடு. தவறினால் தண்டனை கிடைக்கும். அத்தையும் அடிவாங்குவது பற்றிச் சொன்னாயே.."

"அதுவும் உண்மைதான். இது ஒரு தொடர்கதை போலப் போகிறது. முதுமையிலும் அடியும் ஏச்சும் வாங்க வேண்டியிருக்கிறது. என்று தான் இதெல்லாம் முடியப்போகிறதோ..."

"அதைப் பற்றித்தான் எல்லாப் பெண்களும் அறிஞர்களும் சிந்தித்து வருகிறார்கள்."

"அக்கா. அவங்களெல்லாம் என்ன சொல்லுகிறார்கள்." அப்பாவியாக ஆசிரியரிடமும் தன் அறியாமையைச் சொல்லுவது போல பத்மா கேட்டாள்.

"பெண்களுக்குமட்டும் என ஒதுக்கும் சமையல், வீட்டைப் பார்த்தல் போன்ற வேலைகள் மட்டுமல்ல கணவனுக்கென குழந்தைபெற்று வளர்க்கும் பொறுப்பும் நீங்க வேண்டும்..." – முன்னர் படித்தது நினைவில் வந்ததும் சொன்னாள்.

"அப்பாடா அப்போது குடும்பம்..."

"அது நிலைக்கும் வரை எப்படி இந்த வேலைகளிலிருந்தும் குடும்ப வன்முறையிலிருந்தும் பெண்ணினம் தப்ப முடியும். ?"

"அப்பாடா. நம்ம இந்து சமயம், பரம்பரை கலாச்சாரம் எல்லாம் ஒருபோதும் குடும்பத்தை உடைப்பதற்கு இடம் தரமாட்டாதே" – பத்மாவின் உறுதியான குரல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பம் என்பது ஒரு பரிசுத்த சமூக நிறுவனம் என்று ஏற்றுக்கொள்ளும் வரை வீட்டுக்குள்ளே வன்முறையும் தொடர்ந்து கொண்டே இருக்கும். பெண்ணினம் விடுதலை பெற முடியாது. குடும்பம் ஒரு விஞ்ஞான பூர்வ அமைப்பல்ல என ஒரு கட்டுரையில் படித்தது சகுந்தலாவின் நினைவில் வந்தது. துன்பத்துள் அழுந்திக் கொண்டிருக்கும் பத்மாவின் பேச்சிலும் அக்குடும்பம் ஒரு பரிசுத்தமான சமூக நிறுவனம் என ஏற்றுக் கொண்டிருப்பது தெற்றெனத் தெளிவாக சகுந்தலா உணர்ந்து கொண்டாள்.

## 1.4

அன்று காலை எவரும் எதிர்ப்பார்க்காதபடி மூத்த மகள் சாந்தி தன்னுடைய மகளுடன் தஞ்சாவூரிலிருந்து வந்திருந்தாள். வாசல் மணி கேட்டு பத்மாவே சென்று கதவைத் திறந்து வரவேற்றாள்.

"வாங்க மச்சி, சுமதி வா. வீட்டிலே மாமா எல்லோரும் சவுக்கியமா?"

வழக்கமான வார்த்தைகளைச் சிறிது தயக்கத்தோடு கூறி வரவேற்று விட்டு பத்மா அத்தையிடம் சென்று அறிவித்தாள்.

"தேவனின் கலியாணத்துக்கு வராதவளை இங்கே ஆர் வரச்சொன்னது"– அத்தை பத்மாவிடம் முணுமுணுத்தபடியே மூத்த மகளை வரவேற்க வந்தாள்.

நிட்சயமாக தாய்க்கும் மகளுக்குமிடையில் வாக்குவாதம் நடைபெறும் என்பதை உணர்ந்த பத்மா பின்புறமாகப் போய்விட்டாள். எதிர்பாராத வரவுபற்றி மரகதத்திடமும் சகுந்தலாவிடம் குசுகுசுப்பாகச் சொன்னாள் : "யுத்த காண்டம் ஒன்று நடக்கப் போகிறது."

"வாடி வா, இப்ப தான் தேவனின் கலியாணம் பற்றி நினைவு வந்து கலியாணச் சாப்பாட்டுக்கு வந்தியாடி."

UNIVERSITY OF PERADENIYA
2003-7-26

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நானும் இரண்டு குமருகளை வீட்டிலே வளர்த்து வைத்திருக்கிறேன் என்று தெரிந்து கொண்டும் ஊர்விட்டு, சாதி, குலம், விட்டு பெண் எடுக்க துணிச்சல் வந்திட்டது. ஊரா வீட்டில் பெண் எடுக்க நாங்களும் பிள்ளைகளும் வந்து வாழ்த்த வேணுமாம். பட்டணமானபடியால் கலியாணமண்டபத்தில் எல்லாம் நடத்தினாய். கிராமத்திலென்றால் பஞ்சாயத்தைக் கூட்டியே நியாயம் கேட்டு கலியாணத்தை நிறுத்தியிருப்பனே." – சாந்தி சாந்தம் எதுவுமின்றி ஆவேசமாகவே தாயிடம் பேசினாள்."

"ஏதோ நீ வந்து என் மகனைக் கேட்ட மாதிரிப் பேசுகிறாய்."

"இப்ப இப்படித்தான் பேசுவாய். அப்பா எங்கே, அவரையும் ஒருக்கா கேட்க வேண்டும் என்றுதான் வந்தேன்."

"அவர் வேலைக்குப் போய் விட்டார். அவரோடு என்னதான் பேசப் போகிறாய்."

"ஜாதகப் பொருத்தம் இல்லை என்றாராம். எங்காவது முறைப் பெண்ணுக்கும் ஜாதகப் பொருத்தம் பார்ப்பார்களா என்று கேட்க வேண்டும்."

"வேறு என்ன தான்டி கேட்கப் போகிறாய் ?"

"மகன் அமெரிக்காவில் கம்பியூட்டர் என்ஜினியராய் வேலை பார்க்கிறான். நல்ல இங்கிலீஸ் படிச்ச பெண் வேணும், பட்டிக்காட்டுப் பெண்ணை எப்படிக் கட்டிக் கொடுக்கலாம் என்றும் சொன்னாராம்."

"போடி போ. உன் பேச்சை விட்டு. அவன் பத்து வயசு வித்தியாசத்திலே பெண் பார்க்க வேண்டாம். அங்கே சிரிப்பார்கள் என்று கண்டிப்பாக அப்பாவிடம் சொல்லிவிட்டான். அதுதான்டி உண்மை.."

"நா சுத்தமில்லாத பொய் பேச்சுகள். பட்டணம் வந்து ஊராவீட்டிலே நிற்கிறது எங்க குடும்பத்திற்கே அவமானம். பிள்ளை ஒரு இன்ரவியூக்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகவேணும். அதுதான் கூட்டி வந்தேன். இந்தவீடே என் அப்பனுடையதல்ல. பாட்டன் சொத்து. எனக்கும் வந்து தங்க உரிமை இருக்கிறது என்றுதான் இங்கே நுழைந்தேன்."

"சரி சரி பேசினது போதும். போய் குளிச்சிட்டு சாப்பிடு. பிறகு பேசலாம். சுமதி நீயும் போ" என்று சொல்லிவிட்டு 'பத்மா 'என்று குரல் கொடுத்தாள்.

"மச்சியையும் சுமதியையும் இப்போது உங்கள் ரூமுக்கு அழைத்துப்போ. குளிக்கச் செய்து சாப்பிடட்டும். அவர் வந்தபிறகு தகப்பனும் மகளும் சண்டையைத் தொடரட்டும்."

பத்மா இருவரையும் தன்னுடைய ரூமுக்கு அழைத்துச் சென்று ஏற்பாடுகளைச் செய்தாள். தூங்கியிருந்த குழந்தையைக் காட்டினாள். தம்பிமார் இருவரும் கூட வேலைக்குச் சென்று விட்ட செய்தியைச் சொன்னாள்.

காலைச் சாப்பாடுகள் முடிந்த வேளை. மீண்டும் டிபன் செய்யும் வேலையில் பத்மா ஈடுபட்டாள். அங்கு உதவ வந்த சகுந்தலாவிடம் சொன்னாள்: "முறைப் பெண்ணை விட்டு மகன் உங்களைக் கட்டியதால் ஏற்பட்ட வாய்ச் சண்டையைக் கேட்டீர்களா ?"

"இந்தக் கதை பற்றி ஓரளவு அறிந்திருந்தேன். தற்போது தான் நேரில் பார்த்தேனே. எனக்கே உங்க மச்சியைப் பார்க்க வெட்கமாயிருக்கிறது."

சகுந்தலா தலைகுனிந்து சோர்வோடு சொன்னாள்.

"உங்களுக்கும் மச்சிதானே. மச்சியையும் சுமதியையும் பார்த்துப் பேசுவது கொஞ்சம் முதலில் கஷ்டமாகத்தான் இருக்கும். கொஞ்சம் பேசிப் பழகிய பின் எல்லாம் சரியாகிவிடும்" – பத்மா சமாதானம் பேசினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அது எப்படிச் சொல்ல முடியும். அடி மனதில் என்னை எதிரியாகத்தான் இருவருமே பார்ப்பார்கள்."

"சுமதி நல்ல பெண்ணு. துடிப்பான பெண்ணு, மச்சிதான் அவளது மனதையும் ஆசைகாட்டி பழுதாக்கி விட்டிருப்பா."

"பத்மா உனக்குத் தெரியாது. மச்சி இப்போது கோபத்தை விட்டு சமாதானம் பேசி வந்ததற்கும் காரணம் இல்லாமலிருக்குமா ?–" மரகதம் இடையிட்டுச் சொன்னாள்.

"என்னக்கா சொல்லுறீங்க"

"மகாதேவன்தான் போனாலும் பரவாயில்லை இந்திரன் இருக்கிறான்தானே. ஒரு கை பார்ப்போம் என்ற திட்டத்தோடு தான் வந்திருக்கிறா."

"சரியாய் சொன்னீங்க. மச்சி இத்தனை சீக்கிரம் தன் கோபத்தை விட்டு சும்மா வந்திருக்க மாட்டா."

"சோழியன் குடுமி சும்மா ஆடாது என்பார்கள். பொறுத்திருந்து பார். இந்திரன் படிப்பும் இந்த வருஷம் முடியப் போகிறதல்லவா. பரீட்சை முடிந்ததும் பெங்களூரிலிருந்து வந்து விடுவான்."– மரகதம் சபதம் செய்வது போலச் சொன்னாள்.

" அத்தைக்கும் இது புரியாமலிருக்குமா ?"

"புரியும் புரியும். பெரிய யுத்தம் ஒன்றுக்கு இடமிருக்கு."– மரகதம் சிரித்தபடி சொன்னாள்.

இந்திரன் சம்மதித்து விட்டால் பிரச்சனை இருக்காது.

பட்டணத்தில் காலேஜில் படிக்கிற பையன்கள், சினிமா டிவி பார்த்து எங்காவது மார்டன் கேளாகப் பார்ப்பாங்க. எங்காவது காதலிச்சும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கலாம். சுமதிபோல கிராமப் புறத்திலிருந்து வரும் பெண் அவங்க கண்ணுக்கு எங்கே அழகாகத் தெரியப் போகுது..."

"அத்தை சிபாரிசு செய்து மாமாவும் சம்மதித்தால் இந்திரனைச் சம்மதிக்க வைக்கலாம். முன்னர் மச்சினிக்கு கொடுத்த சீர், சீதனத்திலும் ஒரு பங்கு திரும்பிவிடும். எங்களுக்கும் துணையாக சுமதியை வைத்திருக்கலாம்.."

"ஆமாம் மறந்து விட்டேன் சொத்துக்காக அத்தை சம்மதித்து விடலாம். பேரமும் பேசலாம்."– பத்மா திடீரென நினைவு வந்தவளாகச் சொன்னாள்.

சகுந்தலாவிற்கு அவர்களது பேச்சுகள் சுவையாகவும் சிந்திக்க வைப்பதாகவும் இருந்தது. கூட்டுக் குடும்பத்தை நிலைக்க வைக்கவே இத்தகைய திருமண முறைகளும் சொத்துரிமையும் பரம்பரை பரம்பரையாக வழக்கமாகின என எண்ணிக் கொண்டாள்.

வீட்டில் ஒரு சிறு அறையில் நெல்லு மூட்டைகள் அடுக்கப் பட்டிருந்ததைச் சகுந்தலா கண்டதும் வியப்படைந்தாள். பத்மாவிடமே கேட்டாள்.

"ஏனித்தனை மூட்டைகளை வாங்கி அடுக்கி வைத்திருக்கிறார்கள். அரிசிப் பஞ்சம் வந்து விடலாம் என்று பயந்தா."

பத்மாவின் சிரிப்பைப் பார்த்துச் சகுந்தலாவே வெட்கப்பட்டாள். சிரிப்பு அடங்கியதும் சொன்னாள் :

"அது அக்கா, மாமாவின் அப்பா வியாபாரம் செய்ய என சொத்திலும் விற்று பட்டினத்திலும் வந்து குடியேறிவிட்டார். அவர் தான் இந்த வீட்டைக் கட்டினாராம். தற்போது கிராமத்தில் இருக்கும் சொத்தை முறைப் பெண்ணாகக் கட்டிக் கொடுத்த மச்சியும் மாப்பிள்ளையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்துக் கொள்ளுறாங்க. விளையும் நெல்லில் இவங்க பங்கை நெல்லுமூட்டையாகவே அனுப்பி விடுவார்கள். இந்த அரிசியைத் தான் சாப்பிடுகிறோமே தெரியாதா?"

"அப்படியா. இது வருஷம் பூராவுக்கும் போதுமா?"

"ஆறேழு மாதம் தாக்குப் பிடிக்கும். எல்லாம் விளைச்சலைப் பொறுத்துத்தான். பிறகு தான் மளிகைக் கடையில் வாங்குவோம்."

"பரவாயில்லையே, சிக்கனமான வாழ்க்கைதான். இவங்க ஒருத்தரும் கிராமப்பக்கம் போவதில்லையா."

"மாமா இடையிடை நிலம், அறுவடை பார்க்கவும் நெருங்கிய உறவினர்கள் சாவீடு, கலியாணத்துக்குப் போய் வருவார். கோவில் திருவிழா வேளை ஒழுங்காகப் போவாராம். இப்போது உடல் தளர்ந்து, நோயாளியாயும் ஆகிவிட்டார். மூத்தவர் அல்லது எங்க வீட்டுக்காரர் போய் வருவார்கள்."

பத்மா மூலம் குடும்பத்தின் பழைய பரம்பரைக் கதைகளை ஆர்வமாகக் கேட்டறிந்தாள். பிள்ளையைப் பெத்துவிடு, சோத்துக்கும் பஞ்சமில்லை என்று பத்மா கணவர் கூறியதைக் கேட்ட போதும் சகுந்தலாவுக்கு நெல்லு மூட்டைகளின் நினைவுதான் வந்தது. அமெரிக்காவில் வாழுபவருக்கு குடும்பக்கட்டுப்பாடு பற்றி தெரியாதிருக்குமா. அமெரிக்க சமூகத்தின் தாக்கம் இருக்கத்தானே செய்யும். எனக்குப் பத்மா போல இப்படிப் பிரச்சனை ஏற்படாது எனவும் எண்ணிக் கொண்டாள்.

அவருடன் சேர்ந்திருந்த இரண்டு வார காலமும் மாதவிலக்கு வந்த நாட்களையெல்லாம் விசாரித்து எத்தனை கவனமாக இருந்தார். இந்த நிலப் பிரபுத்துவக் கொடுமைகளிலிருந்து தான் தப்பி விடலாம் என மன அலைகள் எழுந்து மோதின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலியாணப் பேச்சுகள் நடந்து கொண்டிருந்த வேளை வீட்டுக்கு வந்திருந்த பெரியவரோடு அப்பா பேசிக் கொண்டிருந்த போது அப்பெரியவர் கூறிய கதை ஒன்று சுவையாக இருந்தது. அக்கதை அடிக்கடி நினைவுக்கு வரும் போது உள்ளூரச் சிரித்துக் கொள்வாள்.

நகரங்கள் எப்படி வளர்ந்து வந்தன என்பதற்கு அவர் கதையாகவே விளக்கம் கூறியிருந்தார்.

கிராமத்தில் மிராசுதாராக, நிலக்கிழாராக, நிலப் பிரபுக்களாக வாழ்ந்தவர்கள் கூட்டுக் குடும்பமாகவே வாழ்ந்து அத்தை மகள், மாமன் மகள் என முறை, வழக்கம் எனத் திருமணம் சொத்தைப் பிரியாது, குலம் கோத்திரத்தைக் காப்பாற்றி, வாழ்ந்தவர்கள் தங்கள் கீப்புகளை, 'சின்ன வீடாக' இல்லாமல் பெரிய வீடாக நகரத்தில் கட்டி வசதியாக வாழ வைத்து அடிக்கடி போய் தங்கி வருவார்கள். கிராமத்தில் கீப் என்றால் அம்பலமாகி மரியாதைக் குறைவாகி விடும், சொத்துப் பிரச்சனையும் வரலாம் என்றே நகரங்களைத் தேர்ந்தார்கள். இப்படியாகத்தான் பிற்போக்காகக் கிராமங்கள் வாழ்க்கை அப்படியே இருக்க, சின்ன வீட்டுப் பிள்ளைகள் எல்லாம் படித்து பதவிகள் பெற்று நகரங்கள் உருவாகின என்று சிரித்தபடியே கதை சொல்லி குலங்கோத்திரம் எல்லாம் நகரங்களில் போய் விட்டன என்றும் தன் விளக்கத்தைக் கூறியிருந்தார்.

அந்தக் கதையின் அடிப்படை உண்மை ஒன்றை அந்தப் பெரியவரால் காண முடியவில்லை என்று சகுந்தலா எண்ணிக் கொண்டாள். இந்த மிராசுதாரரும் நிலப் பிரபுக்களும் தமது மேலாதிக்க மூலதனங்களை நகரத்துக்குக் கொண்டுவந்ததாலேயே கைத்தொழில், யந்திர உற்பத்தி மேம்பட்டு, வணிகம் நிலை பெற்று , நகரங்கள் வளர்ந்தன என்பதை அவரால் ஆழமாகப் பார்க்க முடியவில்லை எனவும் அவளது சிந்தனை ஓடியது.

சாந்தி மகளையும் அழைத்துக் கொண்டு கீழே வந்ததும் பூஜை அறைக்குச் சென்றாள். வணக்கம் செய்து விபூதியின் மேல் குங்குமப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொட்டு வைத்து வந்தாள். சுமதியின் நெற்றியில் சிறிய கரும் பொட்டு மட்டுமே . வீட்டின் மூத்த பெண்ணாக வாழ்ந்த சாந்தியும் மகளும் காலை உணவிற்காகச் சமையற் கட்டுப் பக்கம் வந்தனர். அப்பக்கத்தைப் பார்வையிட்டனர். விறகு அடுப்புக்குப் பதிலாக 'காஸ்' அடுப்பும் ஆட்டுக் கல்லுக்கு மாற்றாக அரைக்கும் 'வெட்கிரைண்டரும்' இருப்பதைக் கண்டு சாந்தி சிரித்தபடி சொன்னாள் :

"பரவாயில்லை, புதுப் பெண்களோடு அம்மா கொஞ்சம் மாற்றமும் செய்தாவே பாராட்டத்தான் வேணும். உங்களுக்கெல்லாம் அடுப்பூதும் வேலையும் மா அரைக்கும் தொல்லையும் குறைந்திருக்குமே..."

"தோசையா, சப்பாத்தியா சாப்பிடுவீங்க.." – மரகதம் கேட்டாள்.

"சப்பாத்தியே போடு..."

இருவரும் உட்கார ஜமக்காளம் விரித்துத் தட்டுகளை எடுத்து பத்மா வைத்தாள். இருவரும் உட்கார்ந்ததும் ஓரமாக மறைந்து நின்ற சகுந்தலாவை அழைத்து வந்து, வீட்டுக்கு வந்த 'புதுப் பொண்ணு' என்று பத்மாவே அறிமுகப்படுத்தினாள்.

"சகுந்தாலா தானே பேரு, வாம்மா உட்காரு.."

"பரவாயில்லிங்க"

"தம்பிக்கு நல்ல பெண்ணாய்தான் பார்த்திருக்கிறாங்க. இனியும் நீ என்ன எங்க வீட்டுப் பெண் தானே..."

எவ்வித வெறுப்பும் காட்டாத விதமாகவே சாந்தி பேசி, குடும்பம் பற்றி விசாரித்துக் கொண்டாள். சுமதி சகுந்தலாவைப் பார்த்துச் சிரித்தாள்.

"பாட்டி நல்ல மாட்டுப் பெண்ணாகத்தான் பிடித்திருக்கிறா" – சுமதியின் குறும்புப் பேச்சு. சகுந்தலா வெட்கத்தில் தலை குனிந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றாஸ் மகளிர் கிறிஸ்தவக் கல்லூரியில் எம்.ஏ. படித்தது என்பது குடும்பத்திற்கு உயர்வாகவும் சகுந்தலாவின் அந்தஸ்தை உயர்த்துவதாகவும் இருந்தது.

“கூட்டுப் பரவாயில்லை யார் செய்தது. சாப்பாத்திக்கு மாவு குழைத்தது மரகதமா” என்ற விசாரணைகளுடன் உணவுப் பிரச்சனை முடிந்தது.

சாந்தி தன் மகளின் படிப்புப் பற்றிய விபரத்தையும் சகுந்தலாவிடம் வாஞ்சையுடன் சொன்னாள்.

“தஞ்சாவூர் அரசினர் கல்லூரியிலே பி.எஸ்ஸி சயன்ஸ் முடித்துவிட்டு வேலைக்கு அப்பிளிக்கேசன் அனுப்பிக் கொண்டிருந்தாள். பப்ளிக் சர்வீஸ் கமிஷன் பரீட்சை எழுதி இப்போது தான் இன்ரவியூவுக்கு அழைப்பு வந்தது” என்று விபரமெல்லாம் சொல்லி விட்டு மேலும் தொடர்ந்தாள் :

“நாளைக்கு இந்துமதியோடு தான் இன்ரவியூவுக்கு அனுப்பலாம் என எண்ணி வந்தேன். இப்போது தான் அதற்கு சரியான உதவி நீதான் என்று நினைக்கிறேன். அம்மாவிடம் சொல்லி விடுகிறேன். ஆட்டோவில் ராஜாஜி ஹாலோடு இருக்கும் அரசினர் எஸ்டேட் . அங்கே அழைத்துப் போய் கூட்டி வா பிள்ளை. நல்ல உதவியாயிருக்கும். சுமதி ஓடிப் போய் உன் பைலை எடுத்து வந்து இந்தப் புது மாமிக்குக் காட்டுடி . தெரியாததெல்லாம் கேட்டுக் கொள்.”

சாந்தியே தாயாரைப் போல் எல்லாத் தீர்மானமும் எடுப்பவளாகத் தோன்றினாள்.

மூத்த மகள் அப்படியே அத்தையின் அச்சு. பரம்பரையாகப் பழகி ய உரமான பேச்சு. முடி அத்தனை நரைக்கவில்லை. அத்தையின் இ டத்துக்கு விட்டாலும் வீட்டை ஆட்டிப் படைத்து விடுவாள் போலிருப்பதாகச் சகுந்தலா மனதுள் எண்ணிக் கொண்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஃபைலோடு வந்த சுமதியைத் தன் அறைக்கு சகுந்தலா அழைத்துச் சென்றாள். நேர்முகப் பரீட்சை அழைப்புக் கடிதத்தையும் பிற விபரங்களையும் சகுந்தலா படித்துப் பார்த்தாள். கல்லூரியில் கற்ற பாடங்கள், பெற்ற புள்ளி விபரங்கள் எல்லாம் இருந்தன.

"நீ எம்.எஸ்ஸி செய்திருக்கலாமே. மார்க்குகள் நல்லாயிருக்கே.."

"அம்மாதான் தடுத்துவிட்டா. வீட்டிலே பெரிய சண்டை. அத்தை அதெல்லாம் பெரிய கதை. படித்தது போதும் உனக்கு அடுத்து கலியாணம் தான். வேணுமென்றால் வேலைதேடு, அதுவும் ஊரிலே வேண்டாம் என்றா, ,நல்லவேளை இந்தப் பரீட்சையில் நல்லாய் எழுதினேன். அம்மாவோடு சண்டை போட்டுத்தான் இங்கேயும் அழைத்து வந்தேன்."

"ஏன் சண்டை ?" – சகுந்தலா விபரம் அறியும் ஆவலில் கேட்டாள்.

"உங்களுக்கும் தெரிய வேணுமே காலையில் நடந்த சண்டை.. நான் தனியாய் போவேன் என்று அடம் பிடித்த பிறகு தான் அழைத்து வந்தா. ஏதோ புதிய சட்டப்படி தனக்கும் இந்த வீட்டில் உரிமை இருக்கிறது என்று சொல்லிக்கொண்டே வந்தா. எங்க விருப்பம் ஏதாவது கேட்கிறாங்களா. ஏதோ உறவு முறை பேசிக் கலியாணம் கட்டி வைக்கப் பார்க்கிறார்கள்."

"ஏன் உனக்கு விருப்பமில்லையா ?"

"எனக்குக் கொஞ்சமும் விருப்பமில்லை."

சுமதியின் குரலில் உறுதியோடு ஏதோ வஞ்சினமும் ஒலித்தது.

"ஏன் சுமதி அப்படிச் சொல்லுகிறாய் ?"

"நீங்க படிச்சவங்க, மற்றவருக்குச் சொல்லமாட்டீங்க். ஊரிலேயே ஒருவரை விரும்பி பிராமிஸ் பண்ணிவிட்டேன். அதைத் தெரிந்துதான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா உறவு முறைபேசி இது பெரிய இடம் என அதை முறியடிக்கப்பார்க்கிறா. மேலே படிக்கவும் விடாது தடுத்து விட்டா."

"இந்தக் குடும்பத்தில் இது பெரிய பிரச்சனையே. என்ன செய்யப் போகிறாய் ?"

"அதற்கு இப்போது ஒரு வழிதான் இருக்கிறது. நாளைக்கு இன்ரவியூவிலே வெற்றி பெற்றால் அரசாங்க வேலை அங்கோ, வேறு எங்கோ தருவார்கள். அந்த வீட்டைவிட்டு வெளியேறிவிட்டால் பிறகு அம்மாவால் ஒன்றும் செய்ய முடியாது."

"பயங்கரத் திட்டமெல்லாம் வைத்திருக்கிறாய் போலிருக்கு..." – சகுந்தலா சொன்னாள்.

"அம்மா கூட தன் புதிய திட்டம் தீட்டிக் கொண்டே வந்திருக்கிறா. இந்திரன் மாமாவின் படிப்பு அடுத்த வருஷம் முடிந்ததும் அத்தையோடு சண்டை போட்டு கட்டி வைக்க. இந்த இருண்ட வீட்டுக்கு வந்து சமைச்சுப் போடவா நான் பிறந்து, வளர்ந்து இத்தனை படித்தேன். அதற்கு வேறு பெண்ணைப் பார் என்று மாமா சம்மதித்து வந்தாலும் சொல்லிவிடுவேன்."

காலையில் மரகதம் அனுமானித்துக் கூறியது சரியாகவே தெரிந்தது. இந்தப் பெண்ணின் துணிச்சலையும் பேச்சையும் பார்த்தால் அத்தையையும் தன் அம்மாவையும் ஒடுக்கிவிடுவாள் போலத் தெரிந்தது.

"வரும் போது சேலை கட்டி வந்தாய். இப்போது சுரிதார் போட்டிருக்கிறாய். அத்தை கண்டால் சத்தம் போடலாம்..."

"என்னோடு எப்படிச் சத்தம் போட முடியும் 'அது என் விருப்பம்' என்று பாட்டியிடமே சொல்லி விடுவேன்".

"இந்த உடை உரிமைப் பேச்செல்லாம் உன் காதலருக்குப் பிடிக்குமா.."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவர் மிகவும் முற்போக்கானவர். எல்லா சுதந்திரமும் தருவார்..."

"வாத்தியார் என்றாயே"

"ஆமாம் வாத்தியார் தான். அவர் ஒரு கம்யூனிஸ்ட்..."

"கம்யூனிஸ்ட் கட்சி அங்கே பலமாயிருக்குமா"

"ஆமாம். கூலி விவசாயிகள் எல்லோரும் கம்யூனிஸ்டு கட்சிச் சங்கங்களிலேயே இருக்கிறார்கள்."

"இப்போதுதான் உன்னுடைய துணிச்சலுக்கும் காரணம் தெரிகிறது. சரி, சரி.. மீதியைப் பிறகு பேசுவோம். நாளைக்கு இன்ரவியூவிலே என்ன கேட்பார்கள் என்று எவரிடமாவது கேட்டுப் பார்த்தாயா ?" – சகுந்தலா கேட்டாள்.

"தமிழ்நாடு பற்றிய பொது அறிவுக் கேள்விகளே இருக்கும். அத்தோடு மத்திய அரசுத் தொடர்புகள் பற்றியும் கேட்பார்கள். சமாளித்து விடுவேன் என்ற நம்பிக்கை இருக்கிறது."

"நம்பிக்கை தான் வேண்டும். வெற்றி பெற்று விடலாம். நானே காலையில் அழைத்துப் போகிறேனே."

சகுந்தலா தனக்கும் ஓய்வும் வெளியே செல்ல வாய்ப்பும் கிடைத்திருப்பதாக எண்ணிக் கொண்டாள்.

இருவரும் கீழே சென்றபோது சமையற் கட்டின் முன்புறமாக அத்தை நின்றிருந்தாள். சுமதியை ஏற இறங்கப் பார்த்தாள்.

"என்ன பாட்டி! ஏற இறங்க ஒரு மாதிரிப் பார்க்கிறீங்க"

"உடுப்பெல்லாம் மார்டனாயிருக்கு. அதுதான் பார்த்தேன்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சேலை கட்ட வேணுமென்றால் உங்க பட்டுச் சேலையிலே ஏதாவது தாருங்களேன். நீங்க வீட்டிலேயே பட்டு கட்டியிருக்கிறீங்க. பணக்காரி."

"இதெல்லாம் பழைய காஞ்சிபுரம். தோய்ச்சுக் கட்டுகிறேன். அம்மாவைப் போல நீயும் துடுக்காப் பேசப் பழகியிருக்கிறாய் போலிருக்கு.."

"பாட்டியைப் போல என்று சொல்லுங்கோ..."

"வெளியே வேலை தேடுவதாக ஒத்தக் காலிலே நிற்கிறியாம்."

"இரண்டு காலில் தான் நிற்கிறேன். நிற்கப் போகிறேன்."

"அது எல்லாம் படித்தது சரி. சமையலெல்லாம் செய்யப் பழகியிருக்கிறியாடி."

"ஏன் பாட்டி, இங்கே இன்னொரு சமையல்காரி தேவைப்படுகிறதோ."

சுமதியின் துடுக்கான பேச்சைக் கேட்டு சிரிப்பை அடக்க முடியாது முந்தானைச் சேலையில் வாயைப் பொத்தியபடி சகுந்தலாவும் பத்மாவும் உள்ளே போய் விட்டனர்.

"தாயும் மகளுமாக தஞ்சாவூரிலேயிருந்து என்னோடு சண்டை போடத்தான் வந்திருப்பது போலிருக்கு. தாய் பேசுறதுக்கும் மகளது பேச்சுக்கும் ஒரே முரண்பாடாயிருக்கே" – பாட்டி சொன்னாள்.

"சண்டை போட வரேல்லை பாட்டி. நான் வேலை தேடி இன்ரவியூவுக்கு வந்திருக்கிறேன். சமையல் வேலைக்கல்ல என்று தான் சொல்ல வந்தேன்."

"அதெல்லாம் சரி. உனக்கு வயது வந்துவிட்டது. நாளைக்குக் கலியாணம் என்றால் சமைக்கவும் தெரியத் தானே வேணும். அதைக் கேட்டால் ஏதோ விதண்டாவாதமெல்லாம் பேசுகிறாய்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கலியாணத்திற்கும் சமையலுக்கும் என்ன தொடர்பு பாட்டி. சமைக்கத் தெரிந்திருந்தால் புருஷன் சமைக்கலாம் அல்லது சமையலுக்கு என ஒரு பயிற்சி பெற்ற ஒருத்தன்ரக் கூலிக்கு வைத்து எங்க சம்பளத்திலே கொடுத்துவிடலாம். பாட்டி வீட்டு வேலைக்குக் கூலிதராத சமையற்காரிகளைத் தேடுவா என்பது தெரியுமே..." – சுமதி நக்கலாகவே சொன்னாள்.

"சரி சரி உன்னோடு பேச முடியாது. இந்துவும் காலேஜாலை இருந்து வந்துவிடுவாள். அவளோடு பேசிக்கொள்."

பாட்டி தன் ஆற்றாமையைக் கூறிக் கொண்டு திரும்பும் போது மூத்த மகள் சாந்தி அங்கு வந்தாள்.

"என்னம்மா. இவளோடு ஏதேன் சண்டையா."

"நீ வளர்த்த மகள் எப்படியெல்லாம் தூக்கியெறிந்து பேசுகிறாள் தெரியுமா ? அதற்குள் நீ வேறு மனக் கோட்டை கட்டுகிறாய்."

"பொறுப்பில்லாத இந்த வயசிலே அப்படித்தான் பேசுவாங்க. ஒரு கால்கட்டுப் போட்டுவிட்டால் எல்லாம் அடங்கி விடும்."

"அப்பப்பா உன்னுடைய பெண்ணாடி . என்னவெல்லாம் பேசுகிறாள். வீட்டிலே சமைப்பதென்றாலும் கூலி கேட்பாள் போலிருக்கு ." தாயார் மகளிடம் தன் ஆற்றாமையைச் சொன்னாள்.

"அவளா பேசுகிறாள். உங்க மாப்பிள்ளை கொடுத்த இடமும். காலேஜ் படிப்பும் தான் இப்படிப் பேசவைக்கிறது..." சாந்தியும் தன் ஆற்றாமையைப் புருஷன் மேல் போட்டாள்.

சாந்தி சிரத்தையோடு கிராமத்திலிருந்து தயாரித்து வந்த லட்டு, மைசூர் பாகுப் பார்சலை எடுத்து வந்து மரகதத்திடம் தந்தாள். அத்தோடு இரண்டு ஊறுகாய் பாட்டில்கள். ஒன்றில் எலுமிச்சை. மற்றதில் ஆவக்காய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாவிற்காகத் தயாரித்துக் கொண்டு வந்த முறுக்கையும் மிக்ஸரையும் தாயாரிடம் தந்தாள்.

அன்று நண்பகல் உணவு, விருந்து போல் இருந்தது. பருப்புப்பாயாசம் தயாரிப்பதில் தன் கைவண்ணத்தைக் காட்டினாள் மரகதம்.

மாலையில் ஒவ்வொருவராக வீடு வந்து சேர்ந்தனர். சாந்தியையும் சுமதியையும் பார்த்துச் சுகம் விசாரிப்பதிலும் குடும்பம் ஒன்று சேர்ந்ததிலும் எல்லோரும் குதூகலமடைந்தனர்.

சாந்தி தன் கோபத்தை மறந்து தந்தையாரோடு சுமுகமாகப் பேசினாள்.

"ஏனப்பா இந்த வயசிலும் அந்தக் இரும்புக் கடையோடு மாரடிக்கிறீர்கள். யாருக்காவது கொடுத்துவிட்டு அல்லது விற்றுவிட்டு வீட்டில் அமைதியாக இருப்பதுதானே. இல்லாவிட்டால் கிராமத்திலே எங்க வீட்டுக்கு வந்துவிடலாமே.." – சாந்தி தன் பாசத்தையும் கொட்டினாள்.

சங்கரன் அன் சன்ஸ் என்று தாத்தா அந்தக் காலத்திலேயே ஆரம்பித்தார். மார்க்கெட்டில் இரும்பு ரக வியாபாரத்தில் இன்னும் நல்ல பெயர் நிலைக்கிறது. விற்றுவிட சிவசங்கரனுக்கு மனம் வரவில்லை. இந்திரனாவது உதவியாகச் சேர்ந்து கம்பனியை நடத்துவான் என்றால் அவனும் கம்பியூட்டர் சயன்ஸ் படிக்கப் போகிறேன் என்று பங்களூர் போய் விட்டான். படித்த பிறகு வேலையில்லாமல் தெருவில் நிற்கும் நிலை ஏற்பட்டால் சிலவேளை அவன் இரும்புக்கடையைப் பொறுப்பேற்கலாம்.

"படித்துவிட்டால் எங்காவது மாதச் சம்பளத்திற்கு வேலை செய்யத்தான் திரிவார்கள். பரம்பரையாகச் செய்யும் விவசாயமோ, வியாபாரமோ செய்யப் போகமாட்டார்கள்."– சாந்தி தந்தையிடம் சொன்னாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதுவும் உண்மைதாண்டி."

"இங்கே பாருங்கள் சுமதியை. இப்ப கலியாணமே வேண்டாம் . வேலைதான் வேணுமென்று பிடிவாதமாக நிற்கிறாள்."

"எங்கே அவளைக் கூப்பிடேன் பார்ப்போம். அங்கே ஒரு தடவை திருவிழாவிற்கு வந்தபோது 'என்னடி வேணும்' 'என்றதும் 'சின்ன சைக்கிள் வாங்கித்தா தாத்தா' என்றாள் வாங்கிக் கொடுத்தேன். இன்னும் வைத்திருக்கிறாளா?"

"பெரிய சைக்கிள் வாங்கித்தான் காலேஜுக்கு போய்க் கொண்டிருந்தாள். அங்கே இந்துமதி வந்துவிட்டாள். அவளோடு அரட்டை அடிக்கிறாள்." என்று கூறிவிட்டு மாடிப் புறமாகப் பார்த்து 'சுமதி' என்று குரல் கொடுத்தாள். சுமதி வருவதைக் கண்டு சாந்தி எழுந்து சென்றாள். அப்பாவிற்கு அவளைப் பிடித்துவிட்டால் பிரச்சனையில்லை என எண்ணிக் கொண்டாள்.

அங்கு ஓடிவந்த சுமதி 'தாத்தா வணக்கம்' என்று சொல்லிவிட்டு "சௌக்கியமாய் இருக்கிறீங்களா. இப்பெல்லாம் கிராமத்துத் திரு விழாவிற்கே வருவதில்லையே." என்று குறை பட்டுச் சொன்னாள். தாத்தா அவளை ஏற இறங்கப் பார்த்தார். பரம்பரையைப் பிரதிபலிக்கும் முகவெட்டு. கருமையும் வெள்ளையும் இல்லாத நிறம். கிராமத்து உடற்கட்டு.

"நீதானே வீட்டிலேயே இருக்கிறதில்லையாம். சைக்கிளில் ஊர் சுற்றுகிறாயாம். சாந்தி சொன்னாள்."

"அம்மாதானே படிப்பையும் நிறுத்திப் போட்டா. அதுதான் வேலை தேடுகிறேன்."

"வேலையென்றால் சும்மா போட்டுக்கிடக்கா. படித்த பட்டதாரிகளே லட்சக்கணக்கில் தெருச்சுற்றுகிறார்கள்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாளைக்கு இண்டர்வியூக்குப் போய்ப் பார்ப்பேன். ஓரிரு மாதத்திலே முடிவு தெரிந்து விடும்."

"அதுவும் கிடைக்காவிட்டால் என்ன செய்யப் போகிறாய்."

"இங்கே தான் வருவேன். உங்க இரும்புக் கடையிலே வேலை போட்டுத் தாருங்கோ."

"அந்த நெருக்கடியான செம்புதாஸ் ரோட்டுக்கு, நீ எப்படிப் போய் வருவாய்."

"ஒரு மொபெட் வாங்கித் தாருங்கோ தாத்தா, உஷ் என்று போய் வருவேன்."

"எண்ணத்தப் பார். நல்லவேளை மாருதி வாங்கித் தரும்படி கேட்கவில்லை."

"அத்தனை ஆசை எனக்கில்லை தாத்தா. நான் எப்படியும் வேலை தேடிப் பிழைத்துக் கொள்வேன். எனக்கு ஒன்று மட்டும் பிடிக்காது தாத்தா."

"அது என்னடி."

"சமையல், இந்து கூப்பிடுகிறாள். பிறகு வாரேன் தாத்தா."– சுமதி அவரைத் தட்டிக் கழித்துவிட்டு சுறுசுறுப்பாக ஓடினாள். மறைமுகமாகத் தாத்தாவிற்கும் தன் கருத்தைச் சொல்லிவிட்டதில் திருப்தி.

இந்துமதியோடு அரட்டை அடிப்பதில் சுமதி சுகங்கண்டாள். கல்லூரிப் படிப்பு , பெண்கள், பசங்கள் பற்றியெல்லாம் பட்டணத்திற்கும் தஞ்சாவூருக்கும் உள்ள வேறுபாடுகள் பற்றிப் பேசிப் பகிர்ந்தனர்.

'சித்தி, சித்தி' என்றெல்லாம் உன்னைக் கூப்பிடமாட்டேன்'. இந்து' என்று தான் அழைப்பேன் என சுமதி முதலிலேயே கூறிவிட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இங்கே காலேஜ் பசங்களெல்லாம் ஈவ் டீசிங் என்று தொல்லை கொடுக்கிறாங்களாம். பேப்பரிலே படித்தேன். நீ ஒருநாளும் மாட்டவில்லையா" – சுமதி கேட்டாள்.

"தனிய அகப்பட்டால் தான் சில வேளை இந்தப் பசங்கள் வம்புக்கு இழுப்பாங்கள். நான் பேசாமல் போய்விடுவேன். நாங்க இரண்டு மூன்றுபேரென்றால் நல்லாய் திருப்பிக் கொடுத்துவிடுவோம். "– இந்துமதி சிரித்தபடி சொன்னாள்.

"என்ன, வாடீ போடீ என்று வம்புக்கிழுப்பார்களா" – சுமதி கேட்டாள்.

"வாடி போடீ யென்றால் கிராமத்தில் 'உன் அத்தை பெண்ணைப் பார்த்துக் கலியாணம் கட்டு' என்று என் தோழி சொல்லிவிடுவாள். என் குரூப் மேட்ஸ் இரண்டு பேர் இருக்கிறார்கள். அதில் தாரா என்றவள் நல்ல வாயாடி. எதற்கும் திருப்பி மூஞ்சியில் அறைந்த மாதிரி கொடுத்து விடுவாள்."

"பசங்க பிறகு தொல்லை கொடுக்க மாட்டாங்களா ?"

"அதற்கெல்லாம் அவள் பயப்படமாட்டாள். ஒரு தடவை சரியாய் கொடுத்தால் பிறகு வாய் காட்டமாட்டாங்கள் என்பாள். ஒரு நாள் 'இங்கே வர்றியா' என்றவனுக்கு 'உனக்கு எய்ட்ஸ் என் று கேள்விப்பட்டேனே' என்று சொல்லிவிட்டாள். அதன் பிறகு அவன் எதுவும் வாய் காட்டுவதில்லை."

"உன் தோழி தாரா துணிச்சல்காரி தான்."

"ஒரு நாள் தாரா என் தோளில் கை போட்டபடி நடந்து வந்தாள். மூன்று பேர் குழுவாக நின்றவரில் ஒருத்தன் 'என்ன லெஸ்பியனா' என்றான். 'ஆமாம் அதுக்கு உனக்கு என்ன ? பொறாமையா ?' என்றாள். 'ஓரினப் பால் சேர்க்கை எய்ட்ஸ்க்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிவகுக்கும் என்று தெருவிலே விளம்பரபோர்ட் பார்க்கேல்லையா' என்றான். 'அது உங்களுக்காகத்தான் போட்டிருக்கு கவனமாக இருங்கோ' என்று பதிலடி கொடுத்து விட்டாள்.''– இந்து சிரித்தபடியே சொன்னாள்.

''அங்கேயெல்லாம் இப்படியான வார்த்தைகள் பேசமாட்டாங்கள்.'' அன்னநடை பின்னலிடை.... போறாளே பொன்னுரங்கம்.... இப்படியான சினிமாப் பாட்டு வர்ணனைகள் செய்வாங்கள். 'நல்ல சரக்கடா கொஞ்சம் ஒல்லியாயிருக்கிறாள்.' என்பது போன்ற ஆணாதிக்கக் குரல்களைக் கேட்கலாம். பெரும்பாலும் வாய்காட்டாமல் முறைச்சுப் பார்த்து விட்டுப் போய்விடுவோம்'' – சுமதி தங்கள் கல்லூரிப் பிரச்சனைகள் பற்றிச் சொன்னாள்.

இந்துமதி நேரத்தைப் பார்த்துவிட்டு 'டிவியில் தொடர் நாடகம் ஒன்றிருக்கு பார்த்துவிட்டு வருவோம்' என அழைத்தபடி எழுந்தாள். சுமதியும் தொடர்ந்தாள். ஹாலில் சிமெந்து நிலத்தில் இருவரும் உட்கார்ந்தனர்.

''பாட்டி இன்னும் பிளாக் அன் வைட்டில் தான் நிற்கிறாவா''– சுமதி கேலியாகச் சொன்னாள்.

''அண்ணா கலியாணத்துக்கு வந்தபோது சொன்னேன். நேரடியாகப் பணம் அனுப்பினால் எதுவும் நடக்காது. நண்பர் ஒருவருக்கு எழுதிப் பணம் அனுப்பி விடுவேன். அவர் 51 செ.மீ. கலர் சோனி கொண்டு வந்து மாட்டி விடுவார் என்றார். எப்படியும் ஓரிரு வாரத்தில் வந்து விடும். சகுந்தலா அண்ணி வேறு இருக்கிறாங்களே. கட்டாயம் இதுவரை நண்பருக்கு எழுதியிருப்பார்..'' – இந்துமதி சமாதானம் கூறினாள்.

''சகுந்தலா அண்ணி எப்படி இந்த வீட்டில சமாளிக்கிறா ?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பாவம்தான் என்ன செய்யிறது. கூட்டுக் குடும்பத்தில் வந்து மாட்டுப்பட்டிட்டா. எப்படியானாலும் விசா வருமட்டும் தானே. நீயும் கவனமாயிரு. அக்கா எங்காவது கொண்டு போய் மாட்டிவிடுவா."

"அதெல்லாம் என்னிடம் நடக்காது. அதற்காகத்தான் வேலைதேடுகிறேன். நீதான் கவனமாயிரு. பாட்டி எங்காவது ஜாதகம் , ஜாதி பார்த்து தள்ளிவிடலாம்."

"நான் அம்மாவையில்லை, மகா அண்ணாவைத்தான் நம்பியிருக்கிறேன்."

"அவர் அமெரிக்காவிலடி. ஆபத்துக்கு வரமாட்டார். நீ படிப்பை முடித்து வேலைதேடி உன் காலில் நிற்கப்பார். அப்போதுதான் கலியாணத்திலோ, காதலிலோ சுதந்திரம் கிடைக்கும்."

"ஆமா. நீ சொல்லுவதும் உண்மைதான்."

விளம்பரங்கள் முடிந்து தொடர் நாடகம் ஆரம்பித்து விட்டது. குசுகுசுபேச்சை இருவரும் நிறுத்திக் கொண்டனர்.

## 1.5

**ம**றுநாள் காலை இன்டர்வியூவுக்குப் போக சுமதியுடன் சகுந்தலா புறப்பட்டாள். சகுந்தலாவைக் காஞ்சிப் பட்டு உடுத்திச் செல்லும்படி அத்தை ஆணையிட்டாள். மஞ்சள் வண்ணத்தில் நீல பார்டர் என்றும் சொல்லி குறிப்பிட்ட சேலையைச் சுட்டி நினைவூட்டினாள். ஒரு ஜதை வளையலும் எடுத்துக் கொடுத்தாள். மாமியார் மெச்சும் மருமகளாக எதிர்ப்பு எதுவும் கூறாது குங்குமப் பொட்டும் பின்னிய முடியில் சரமும் வைத்துக் கொண்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீ என்னடி கட்டப் போகிறாய். அல்லது சுரிதாரா ?"

"சேலைதான் கட்டப் போகிறேன். அங்கே இன்டர்வியூ போர்டில் தமிழ்ப் பண்பாடு, இந்தியன் என்று பேசும் எவனாவது இருப்பான்."

"பட்டுச் சேலை ஏதாவது தரட்டா" – பாட்டி கேட்டாள்.

"தந்தால் நல்லது பாட்டி. அம்மா வாங்கித்தரமாட்டா. ஒன்றிரண்டு பழைசுதான் இருக்கு. நல்ல காஞ்சிப் பட்டா தாங்க."

"இப்ப கட்டுவாயாடி"

"இன்டர்வியூவுக்கு காட்டன் தான் கட்டுவேன் பாட்டி. ஒன்றை எடுத்து வந்திருக்கிறேன். பிறகு உன் பட்டைத் தாயேன்."

சுமதி சிம்பிளாக காலேஜுக்குப் போகும் பெண்ணைப் போலப் புறப்பட்டாள். வாரிமுடிந்த குட்டை முடியைப் பின்னிவிட்டாள். நெற்றியில் சிறிய கரும் பொட்டு, இளம் பச்சை நிறத்து காட்டன் சேலையைக் கட்டி தோள் மேல் அள்ளி வீசியிருந்தாள்.

இருவரும் ஆட்டோவில் புறப்பட்டனர்.

"ஏன் சுமதி , இன்னும் எடுப்பாக உடுத்தி, முடியில் சரமும் வைத்திருக்கலாமே."

"இல்லங்க, இன்டர்வியூவில் இருப்பவங்களுக்குப் பிடிக்காது போகலாம். சயன்ஸ் படித்துவிட்டு ஏன் அரசு சேவைக்கு வர விரும்புகிறாய் என்றும் கேட்பாங்க."

"நீ என்ன பதில் சொல்லுவாய் ?" – சகுந்தலா கேட்டாள்.

"ஆடம்பரத்துக்காக அல்ல. மக்களுக்குச் சேவை செய்வதற்கு விரும்பியே விண்ணப்பித்தேன் என்பேன்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்தச் சேலை உனக்குப் பிடித்தால் தந்துவிடுகிறேனே." – சகுந்தலா சொன்னாள், தன்சேலையைக் காட்டி.

சுமதி சிரித்தாள்.

"ஏன் சிரிக்கிறாய் ?"

"உங்களுக்குப் பிடிச்ச சேலை கட்டவே இங்கே சுதந்திரமில்லையே. எப்படி இதைத் தர முடியும் ? பாட்டி பர்மிஷன் தரமாட்டாளே.."

தோல்வியடைந்த சகுந்தலா சிறிதுநேரம் பேசாதிருந்தாள்.

"பெட்டியில் வேறு சேலை இருக்கிறது. உனக்குப் பிடித்ததாய் தருவேனே.."

" அது பாட்டி அறியாத திருட்டு. ரொம்ப நன்றி. வேண்டாம். பாட்டி அறிந்தாலே வீண்பிரச்சனை. பாட்டிதானே ஏதோ ஒன்று தருவதாகச் சொன்னாளே. அதை வாங்கிக் கொண்டு போவேன். உங்க கலியாணத்திற்கு வந்திருந்தாலும் ஒரு பட்டுச் சேலை கிடைத்திருக்கும். எனக்கும் பட்டும் ஆடம்பரமும் பிடிக்காது. எங்காவது விழாவிற்கு, கோவிலுக்குப் போவதென்றால் பட்டென்றால் தோய்த்துத் தேய்க்க வேண்டியதில்லை. உடனே உடுத்திக் கொண்டு போகலாம்."

ஆட்டோ எம்.ஜி.ஆர். சிலை, அண்ணா சிலை கடந்து அரசு எஸ்டேட்டினுள் நுழைந்தது. ஆட்டோவை அனுப்பிவிட்டு இன்டர்வியூ நடக்கும் கட்டிடத்திற்கு வந்தபோது ஆண்களும் பெண்களுமாக பல்வேறு வண்ண உடைகளுடன் இருபது பேர் வரையில் இருந்தனர். மணி பத்துபத்தரைக்கே இன்டர்வியூ என அறிவிப்பு இருந்தது. சுமதி சென்று தன் வருகையை உதவியாளரிடம் அறிவித்து விட்டு வந்தாள்.

இருவருமாக ஒரு மூலைப் புறமாகச் சென்று உட்கார்ந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உன்னுடைய கம்யூனிஸ்ட் காதலருக்கும் ஆடம்பரமெல்லாம் பிடிக்காது. அப்படித்தானே. அதுவும் நீ சிம்பிளாக உடுக்க விரும்புகிறதற்கும் ஒரு காரணமாயிருக்கலாம்." – சகுந்தலா அவளது காதல் பற்றி மேலும் அறியும் ஆவலுடன் கேட்டாள்.

"ஆமாம் அதுவும் ஒரு காரணமாக இருக்கலாம். ஆரம்பத்தில் நான் காந்தீயத்தை விரும்பியே ஆடம்பரத்தை வெறுத்தேன். பின்னர் கம்யூனிசத்தைக் கல்லூரி மாஸ்டர் சிலரிடம் படித்தே மாறினேன். அவர்களும் ஆடம்பரத்தை விரும்பாதவரே."

"அவர் உன் உடை, உணவு பற்றி எதுவும் கட்டுப்படுத்தமாட்டாரா ?"

"அவர் ரொம்ப முற்போக்கு வாதியாக இருப்பார் என்றேனே. நான் சேலை கட்டினாலும் சுரிதார் மட்டுமல்ல பான்ட் போட்டால் கூட ஒன்றும் சொல்ல மாட்டார். அது உன் விருப்பம் உன் உரிமை என்பார்."

"கிராமப்புறத்தில் பான்ட் போட்டாலுமா"

"ஆமா, ஆனால் என்னிடம் தற்போது எதுவுமில்லை. வீட்டிலும் பணம் தரமாட்டார்கள். எதற்கும் முதலில் வேலை கிடைக்க வேண்டும்."

"அவருக்கு மீன், கறி பிடிக்காதா ?"

"பிடிக்கும். ஆனால் என்னைச் சாப்பிடும்படியோ சமைத்துத் தரும்படியோ ஒரு போதும் வற்புறுத்த மாட்டார். அவருக்குப் பிடிக்காதது பற்றி நீங்க கேட்கவில்லையே." – சுமதி சிரித்தபடி கேட்டாள்.

"அதையும் சொல்லிவிடேன்."

"அது பூராவும் உங்களுக்கு முற்று முழுதாகப் புரியாது போகலாம். அமெரிக்க ஏகாதிபத்தியம், முதலாளித்துவம், நிலப்பிரபுத்துவம், மதவெறி, சாதிபேதம், நிற இன, மொழி வேறுபாடுகள், பெண்ணடிமைத்தனம்... இவையெல்லாம் அவருக்குப் பிடிக்காதவை."– எனச் சொல்லிவிட்டு சிரித்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஆமாம் இவற்றையெல்லாம் முற்று முழுதாகப் புரிந்து கொள்ள நானும் கம்யூனிசம் பற்றிப் கற்க வேண்டும் போலிருக்கு”

“ஆமாம் அதை முற்றாகப் புரிந்து கொள்ள பொருளியல், வரலாறு மார்க்சிய சித்தாந்தமெல்லாம் படிக்க வேண்டும். நானும் கொஞ்சம் கொஞ்சம் படித்து வருகிறேன்.”

முதல் நாள் காலையில் அத்தையுடன் தாயார் சாந்தி ஆரம்பித்த சண்டையும் திருமணத்திற்கு வராது விட்டதும் அர்த்தமற்றது என்பதை அவ்வேளை சகுந்தலா நன்கு புரிந்து கொண்டாள். அத்தோடு சுமதிமேல் அவளது மதிப்பு உயர்ந்து வந்தது. கிராமத்துப் பட்டிக்காட்டுப் பெண் எனத் தவறாக எண்ணியதற்காகக் கவலைப்பட்டாள். அந்த வீட்டிலுள்ள பெண்கள் எல்லோரையும் விட சுமதி உயர்ந்து நிற்பதாக எண்ணிக் கொண்டாள். இந்த இன்டர்வியூ கூட அவளிடம் எவ்வித பதட்டத்தையோ, பயத்தையோ ஏற்படுத்தவில்லை என்பதையும் அவற்றை மறந்து வேறு விஷயங்கள் பற்றிப் பேசிக் கொண்டிருப்பதில் இருந்தே ஊகித்துக் கொண்டாள்.

இன்டர்வியூ ஆரம்பித்து விட்டதைக் காண முடிந்தது. ஒவ்வொருவராக உள்ளே சென்று சில நிமிடங்களில் வெளியேறுவதிலிருந்து பார்க்க முடிந்தது. வந்தவர்களை நிரைப் படுத்திய உதவியாளர் மூன்று , நாலு பேர்களை அழைத்து தயார் நிலையில் வைத்துக் கொண்டார். ஒருவர் வெளியேறியதும் மற்றவர் உடனே உள்ளே நுழைய முடிந்தது. சுமதியும் அழைக்கப்பட்டு உசார் நிலையில் நிறுத்தப்பட்டாள்.

ஆடம்பர உடையுடன் ஓரமாக நின்ற சகுந்தலாவிடம் அறிந்தவர் ஒருவர் வந்து ‘நீங்களும் இன்டர்வியூவுக்கா, அமெரிக்கா போவதாக அறிந்தேனே’ என்று பேச்சுக் கொடுத்தார். சகுந்தலாவும் விபரம் கூறினாள்.

சுமதியின் பெயர் அழைக்கப்பட்டதும் சகுந்தலாவே பதட்டமடைந்தாள். வெளியே வந்த பெண் ஒருத்தியை என்ன கேள்விகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்கிறார்கள் என்று விசாரித்தாள். எல்லாம் பொது அறிவுக் கேள்விகள் என்றாள்.

இன்டர்வியூக் குழுவில் ஒரு பெண்ணும் இருந்தாள். சுமதிக்கு ஓரளவு தெம்பு வந்தது.

"பி.எஸ்ஸி முடித்துவிட்டு இரண்டு வருஷமாக என்ன செய்து கொண்டிருந்தாய்"– ஒருவர் கேட்டார்.

"என் உழைப்பு நேரத்தை கூலிக்கு விற்க இடம் தேடி அலைந்தேன். கடைசியில் அரசுக்கே வழங்கிவிடுவது நல்லது எனப் பரீட்சை எழுதினேன்."–சுமதியின் பதில் இருவரது உதட்டில் புன்னகையை ஏற்படுத்தியிருப்பதைக் கவனித்தாள்.

"அரசும் உழைப்பு நேரத்திற்கு கூலி வழங்குகிறது தானே. உழைப்பு நேரத்தை இங்கேயும் விற்க வந்தீர் என ஏன் சொல்லக்கூடாது ?"– அதே நபரே வினாவை எழுப்பினார்.

"அது ஓரளவு உண்மையானாலும் அரசு முதலாளிகளைப் போல லாபத்துக்கு இயங்குவதில்லையே. மக்கள் சேவைதானே முதற்குறிக்கோள்.அதனால் மக்கள் சேவைக்காக உழைப்பு நேரத்தை வழங்க வருகிறேன் என்றும் சொல்வதில் தவறில்லை என்று நினைக்கிறேன்."

"லொஜிக்கல் ஆன்ஸர்."– மற்றொருவர் பாராட்டினார்.

"பெண்ணியம் பற்றி இப்போதெல்லாம் பேசப்படுகிறதே. அதைப்பற்றி என்ன கருதுகிறீர் ?"

"அரசியல், பொருளாதார, சமூக ரீதியாக ஆண்களைப் போன்று உரிமைகளைப் பெறுவதற்காகப் பெண்களும் போராடும் இயக்கம். மனித

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமைகள் என்றால் எல்லோருக்கும் சமமாகக் கிட்டவேண்டும். இதில் தவறென்ன.''

''பெண்களுக்கு 33 சதவீத இடங்கள் நாடாளுமன்றத்தில் ஒதுக்க வேண்டும் என்ற கோரிக்கை பற்றி என்ன கூறுவீர் ?''

''சமூகத்தில் பாதிப்பங்கினரான பெண்களுக்கு 33 சதவீதமென்ன 50 சதவீதம் கிடைக்க வேண்டும். ஆணாதிக்க சமூக அமைப்பில் அரசு ஆதிக்க நலன் பெறும் பெரும்பாலான ஆண் அங்கத்தவர்கள் தமது சுயநலத்தை விட்டுவிடாது பெண்ணினத்தை ஏமாற்றிக் காலந் தாழ்த்தவே பார்ப்பார்கள். பெண்கள் தொடர்ந்த போராட்டத்தில் தற்போது ஒப்புக்கொண்ட 33 சதவீத சலுகையைப் பெற முயலவேண்டும். அடுத்த கட்டமாக 50 சதவீத இடங்களுக்காகப் போராடலாம். அடுத்த நுற்றாண்டில் இந்தப் போராட்டம் வலுப்பெறுவது உறுதி.''

''ஈவ் டீசிங் பற்றி என்ன சொல்லுவீர் ?''– பெண்மணி கேட்டார்.

''ஆணாதிக்கம் நிலைக்கும் வரை அதை முற்றாகச் சட்டங்கள் மூலமும் ஒழித்து விட முடியாது. பெண்களுக்குக் குடும்பத்திலும் வீடுகளிலேயும் வெளியேயும் இழைக்கப்படும் எத்தனையோ கொடுமைகள், வன்முறைகள், பலாத்காரம், திட்டுகளோடு ஒப்பிடும் போது இது அத்தனை பெரிய விஷயமல்ல. பெண்களும் கூடிய வரை எதிர்த்துச் சமாளிக்கப் பழகிக் கொள்ள வேண்டும்.''

''வெரிகுட்– நெக்ஸ்ட்''– தலைமை வகித்தவரின் குரல்.

புன்னகையோடு நன்றி சொல்லிவிட்டு சுமதி வெளியே சிரித்தபடி வந்தாள்.

சகுந்தலா ஆர்வத்தோடு இரு கைகளையும் பிடித்தபடி 'எப்படி ?' என்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஐந்து கேள்விகள். நாலு நிமிடத்தில் முடிந்து விட்டது. ஒருவர். 'லொஜிக்கல் ஆன்ஸர்.' என்றார். கடைசியாகத் தலைவர் 'வெரிகுட்' என்றார்.

"நீ கெட்டிக்காரி. வெற்றி நிச்சயம்."

ஒரு ஆட்டோவில் இருவரும் ஏறிப் புறப்பட்டனர். சுமதி கேள்விகளையும் பதில்களையும் மீட்டுச் சொன்னாள். உழைப்பு நேரத்தைக் கூலிக்கு விற்பது பற்றிய விடையைச் சகுந்தலாவால் முற்றாகப் புரிந்து கொள்ள முடியவில்லை. "லொஜிக்கல் ஆன்சர் " என்ற கூற்று சரியான பதில் என ஏற்றுக் கொண்டதாகத் திருப்தியடைந்தாள்.

சுமதி கூட்டு மொத்தமாகக் கூறியதும் சகுந்தலாவிற்கு இண்டர்வியூவின் வெற்றியைச் சுட்டிக் காட்டியது.

"என் பதில்கள் அவர்களுக்கு வியப்பூட்டிய காரணத்தால் எல்லோரது முகங்களும் என்னை நோக்கியே இருந்தன."

மறுநாள் மாலையில் புறப்படும் இராமேஸ்வரம் எக்ஸ்பிரசில் சுமதியும் தாயாரும் புறப்படுவதற்கு ஏற்கனவே டிக்கெட் வாங்கி வந்திருந்தார்கள். கடைசியில் சுமதியோடு பேசி மேலும் விஷயங்களை அறிந்து கொள்ள சகுந்தலா ஆர்வம் கொண்டாள்.

இண்டர்வியூ முடிந்து வந்ததும் சாப்பாட்டுக்கு நேரமாகியிருந்தது. அழைப்பு விடுத்ததும் தன் பட்டுச் சேலையைக் களைந்துவிட்டு பிரிண்டெட் நைலெக்ஸ் சேலையைக் கட்டிக்கொண்டு சகுந்தலா கீழே வந்தாள். சுமதி ஒரு முழுநீளச் சட்டையைப் போட்டுக் கொண்டு பத்மாவின் குழந்தையைத் தூக்கிக் கொண்டு வந்தாள். அவளது உடையைப் பார்த்து யாவரும் வியப்பில் அவளையே உற்றுப் பார்த்தனர்.

"அத்தை வந்து பார்த்து திட்டப் போகிறா."– பத்மாவே எச்சரித்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்த உடை எனக்கு வசதியாயிருக்கு. பாட்டி என்ன சொல்லுறது. அவங்க காலமெல்லாம் போய்விட்டது. சேலை விலையெல்லாம் ஏறிவிட்டது. இது மலிவானது, வசதியானது, என்றும் பாட்டியிடம் சொல்லுவேன்."

"ஏன் சுமதி பாட்டியோடு வீண் சண்டை. நேற்றையைப் போல சுரிதாராவது போட்டுக் கொண்டு வாயேன்."– மரகதமும் ஆலோசனை கூறினாள்.

சுமதியின் முடிவையும் செயலையும் மாற்ற முடியாது என எண்ணிச் சகுந்தலா பேசாமல் இருந்தாள்.

"எல்லோருமாக உட்கார்ந்து சாப்பிடுவோமே. சாதத்தையும் பதார்த்தங்களையும் இங்கே வைத்துவிடுங்கள்."– என்று கூறியபடியே ஜமக்காளத்தை விரித்துவிட்டு சுமதி உட்கார்ந்து கொண்டு தன் அருகே சகுந்தலாவையும் இருக்கும்படி அழைத்தாள். இந்து இருக்கிறாளா என்று கேட்டுவிட்டு. 'இந்து சித்தீ வா சாப்பிடுவதற்கு'. குரல் கொடுத்தாள்.

மரகதமும் உட்கார, பத்மாவே பரிமாறினாள். கலகலப்பாகப் பேசியபடி சாப்பிட்டனர். பாட்டி அங்கே வந்து நோட்டம் போட்டாள். சுமதியின் உடையைப் பற்றி எதுவும் சொல்லவில்லை. வாய் கொடுத்தாலும் மாற்ற முடியாது. வாங்கிக் கட்ட வேண்டும் எனவும் மௌனம் காத்தாள். அடுத்த வீடுகளிலே அப்படிப்பட்ட உடையோடு பெண்கள் நடமாடுவதைப் பாட்டி பார்த்திருந்தாள். "புது நாகரிகமும் வந்து தமிழ் பண்பாடு, கலாசாரம் எல்லாம் அழிகிறது" என்று தன் மனதில் மட்டும் முணுமுணுத்தாள்.

"ஏன் பாட்டி நிற்கிறீங்க. ஒரு தட்டை எடுத்துவந்து உட்காருங்கள். சாதம் போடட்டும். "– சுமதி சாவதானமாகச் சொன்னாள்.

மார்பில் தூக்கி வைத்து நிலாச் சோறு ஊட்டிய பெண் இப்படியெல்லாம் பேசுகிறாளே எனப் பாட்டி மனதில் எண்ணிக் கொண்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமதியின் பிரசவம் கூட அங்கேயே நடந்தது. பாலுக்குக் கத்தி அழுவது, சிறுநீர் , கழிவுகள் எல்லாம் எடுத்தது யாவும் பாட்டியின் நினைவில் ஓடியது.

"நான் பத்மாவோடு சாப்பிடுவேன். நீங்க சாப்பிட்டு முடியுங்கோ."

"எங்க வீட்டில் அம்மா ஒரு கூட்டு அல்லது காய் தான் போடுவாங்க. இங்கே பாட்டியின் ஆர்டரில் கூட்டு, பொரியல், கீரை, பருப்பு.. என்ன சமையல். பாட்டிக்கு எத்தனை சமையற்காரர் இருக்கிறார்கள். வேலை வாங்க முடிகிறது. எங்க வீட்டிலை அம்மா தானே எல்லாம்.."

இவள் நோயும் சொல்லி மருந்தும் சொல்லுவதோடு பொடி வைத்தும் பேசுகிறாள் என எண்ணிக் கொண்டே பாட்டி சமாளிக்க முயன்றாள்.

"சரிசரி மூத்த மகளும் பேத்தியும் வந்திருக்கிறாங்க, விருந்து போடவேணும் என்று தான் இத்தனை சமையல்" – என்று கூறியபடியே "சாந்தீ வாடி சாப்பிடலாம்" – என்று பாட்டி குரல் கொடுத்தாள்.

"பிள்ளை வளர்க்கத் தெரியாத மூத்த மகளைப் பெத்தன் பாரு" என்று பாட்டி முணுமுணுத்துக் கொண்டாள்.

"பாட்டீ பாட்டீ சாயந்தரம் நான் மரீனா பீச் பார்க்கப் போகிறேன். ஆட்டோவிலையில்லை. 45B பஸ்ஸிலே"

"தனியாகவாடீ.."

"சகுந்தலா அத்தையோடு, அவங்களுக்கு பர்மிஷன் குடுங்கோ. இல்லாட்டி தனியாவே போய் வருவேன். அம்மா வரமாட்டா. உங்களோடு அரட்டைப் பாக்கி இருக்கும். இந்து சித்திக்கு டியூசன் இருக்காம்.."

"சரி சரி போய் விட்டு வா. இன்னும் ஒருநாள் ஆட்டம் தானே இருக்கிறது.".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆமாம் பாட்டி அதற்கிடையில் மியூசியமும் சினிமாவும் பார்க்க வேணும்."

"என்னவும் செய். என்ன நான் தடுத்தால் போல நிற்கப் போகிறாயா?" என்று கூறிவிட்டு பாட்டி 'பிள்ளை வளர்க்கத் தெரியாத முண்டத்தை நான் முதலில் பெத்து விட்டேனே. என் தலையைத்தான் செருப்பாலை அடிக்க வேணும்.'– முணுமுணுத்தாள்.

## 1.6

**எ**திர் மறையாகவே சகுந்தலாவுக்கும் பர்மிஷன் கிடைத்துவிட்டது. இருவருமாக மாலையில் புறப்பட்டனர். சுமதி சுரிதாருடனேயே வந்தாள். மணலில் இருக்க நேருமென சகுந்தலா அச்சிட்ட போலிஸ்டர் மிக்ஸான நீலக்கலர் புடவை ஒன்றைக் கட்டி வந்தாள்.

அண்ணா சதுக்கத்தில் பஸ்ஸிலிருந்து இறங்கி அண்ணா சமாதி, திருத்திய எம்.ஜி.ஆர் சமாதியைப் பார்த்துவிட்டு கடற்கரை வழியாக கண்ணகி சிலையின் கிழக்குப் புறக்கரைவரை நடந்து வந்தனர். சுமதி சிறு பிள்ளைகள் போல செருப்பைக் கையில் எடுத்துக் கொண்டு அலைவீசும் கடற்கரையில் நீர் பட்ட மணலில் கால் பதித்து நடந்து வந்தாள்.

சகுந்தலா கால் கொலுசையோ செருப்பையோ சேலையின் அடிப்புறத்தையோ கடல் நீர் பட விடத் தயாராயில்லை. குமரிப்பெண் நிலையிலிருந்து திருமணப் பெண் நிலைக்கு மாறிய மாற்றம் அவளது செயலிலும் பேச்சிலும் இருந்தது.

"ஏன் சுமதி, காலில் கொலுசு கூடப் போடுவதில்லையா?"

"இல்லையே. எனக்கு எதுவுமே அணிய விருப்பமில்லை. காதில் மட்டும் சின்ன வயதில் அம்மா குத்தி சிமிக்கியை மாட்டிவிட்டா. கழுத்தில் எதுவுமே போட மாட்டேன்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பாட்டி ஒன்றும் சொல்லவில்லையா ?''

''ஒன்று கழுத்தில் ஒரு செயினாதால் போடப்படாதோ என்று கேட்டா. நான் சொன்னேன். ஒரு செயின் தா பாட்டி போடுகிறேன். ஆபத்துக்குப் பணம் தேவையென்றால் அடகு வைக்கலாம் அல்லது வித்துப் பணமாக்கலாம். என்று.''

''தந்தாவா''

''நல்ல பாட்டியல்லே. உன் அம்மாவுக்குத் தானே பரம்பரைச் சொத்துப் பங்கெல்லாம் பவுனாகவே கொடுத்து விட்டோமே. அவளிடமே வாங்கிக்க என்றா''

''நீ எதுவுமே சொல்லவில்லையா ?'' – சகுந்தலா கேட்டாள்.

''விடுவேனா. அதெல்லாம் சரிவராது பாட்டி. அம்மா சொல்லுற மாப்பிள்ளைக்குத் தலையை நீட்ட வேண்டும். சமைச்சுப் போட வேணும். பிள்ளை பெத்து வளர்க்க வேண்டும் என்றேன். அப்போ நீயே பார்த்து வைத்திருக்கிறாய் போலிருக்கு' என்றா. 'அப்போது சொத்து எதுவும் கிடைக்காது என்பதையும் சொல்லிவிடன் பாட்டி' என்றேன். எதுவும் எதிர்த்துப் பேசவில்லை. ஏதோ வாயில் முணுமுணுத்துக் கொண்டு போனா.''

''சரி சுமதி காலும் வலிக்கிறது. மணலிலே இருந்து பேசுவோமே.''

தனிமையான இடத்தில் மணல் மேல் உட்கார்ந்தனர்.கிழமை நாட்களான படியால் அத்தனை கூட்டமில்லை. சூரியனின் சூடுகுறைந்த செங்கதிர்கள் வீசிக் கொண்டிருந்தன. கடல் அலைகள் மென்மையான அலை ஓசை எழுப்பிக் கொண்டிருந்தது. கடலைப் பார்த்தபடி உட்கார்ந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சுமதி சொல்லு. அம்மாவின் கட்டுப் பாடுகளை மீறி உன் காதலரை எங்கே பார்க்கிறாய்? இத்தனை விஷயமெல்லாம் எங்கே கற்றுக் கொண்டாய்?"

"அது அத்தை அம்மாவிற்கு டீப் அடித்துவிட்டு 'அந்த ஸ்பெஷல் கிளாஸ், இந்த டியூசன்.' என்று சொல்லி விட்டு சனி ஞாயிற்றுக் கிழமையிலும் சைக்கிளில் காலேஜூக்குப் போய்விடுவேன். அங்கேயே மார்க்ஸிய கிளாஸ் எல்லாம் நடக்கும். அதிலே ரவியும் ஒரு பாடமெடுப்பார்...."

"ரவியா அவரது பெயர்."

"ரவீந்தரன், ரவி என்றே எல்லோரும் அழைப்பார்கள். அதனால் அவரிடம் கற்பது மட்டுமல்ல, வேறு விஷயங்களும் பேசிப் பழக முடிந்தது."

"அவரா, நீயா காதல், கலியாணக் கதையை ஆரம்பித்தது.."

"எனக்கு அவரது கொள்கைகள், கோட்பாடுகள் எல்லாம் பிடித்துக் கொண்டது. இந்த பியூடல் கட்டுப்பாடுகள் கலாச்சாரங்களையெல்லாம் உடைத்துக் கொண்டு வருவது கஷ்டம் என்றெல்லாம் சொல்லி ஒதுங்கப் பார்த்தார். நான்தான் விட்டு விடாது இழுத்துப் பிடித்தேன்." – சுமதி சிரித்தபடியே கையில் கடற்கரை மணலுடன் விளையாடியபடி சொன்னாள்.

"பாதியிலை விட்டுவிட்டுப்போனால் என்ன செய்வாய்?"

"இப்போது அவரது இயக்கத்தவருக்கெல்லாம் தெரிந்தும்விட்டது. கொள்கைப்பிடிப்புள்ளவர்கள் ஒரு போதும் ஏமாற்றமாட்டார்கள். அப்படியானால் நானாகத்தான் விட்டு ஒதுங்க வேண்டும். அது என் உயிருள்ளவரை நடக்காது."

"நீயாகவே இந்தக் கூட்டுக் குடும்பம் எல்லாவற்றையும் விட்டுவிட்டு அவருடன் ஓடப் போகிறாய், அப்படித்தானே" – சகுந்தலா கேலிபோலவே சொன்னாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்படித்தான் நடக்கும் என்று அவருக்கே தெரியும். எப்போதும் நீ என் வீட்டுக்கு துணைவியாக வாழ வந்துவிடலாம். அதுவரை காத்திருப்பேன் என்று ஏற்கனவே சொல்லிவிட்டார். நான்தான் சமத்துவ நிலையில் ஒரு வேலை தேடிக் கொண்டு வந்து விடுவேன் என சொல்லி வைத்திருக்கிறேன். என் காலில் என்றும் நிற்க வேண்டும் அதுவே பலமுமாகும்."

"சடங்கு முறை எதுவுமில்லாமல், அப்படியே அவர் வீட்டில் போய் தங்கி விடுவாயா ?"

"அவருக்கும் சடங்கு முறையில் நம்பிக்கையில்லை. கட்சித் தோழர்களை அழைத்து ஏதாவது டிபன், சாப்பாடு போட்டு 'என் வாழ்க்கைத் துணைவி' என என்னை அறிமுகப் படுத்தலாம். அது அவரது வேலை. நான் என்பக்கத்தைப் பார்த்துக் கொள்வேன்.."

"சடங்கு முறை எதையும் இந்து கலாசாரமாக அவர் ஏற்றுக் கொள்ள மாட்டாரா ?"

"இது என்ன வெட்கப் படவேண்டிய பியூடல் கலாச்சாரம். புரோக்கர் மூலம், ஜாதி, ஜாதகம், யோனிப் பொருத்தமெல்லாம் பார்த்து, ஊர் கூட்டி, ஐயர் புரியாத பாஷையில் மந்திரம் ஒதி, கண்கலங்க ஒமகுண்டப் புகை எழுப்பி, தாலி கட்டி விருந்து போட்டு பணத்தை விரயமாக்கி இரண்டு பேரைப் பாலுறவு கொள்ள அனுமதிப்பதா இந்து நாகரீகம்."

"அன்றிரவு பெண்ணின் விருப்பத்தை அறியாமலே பதினாறு வயசுப் பெண்ணுக்கு மேல் இருபத்தாறு வயசு வாலிபன் ஏறிப்படுத்து விடுவான். இதற்குப் பேரா இந்துக்கலாச்சாரம், காதல் என்று கேலி பேசுவார்."– சுமதி சிரித்தபடியே மேலும் தொடர்ந்து சொன்னாள்.

"உன் ரவியின் கருத்தில் தவறில்லை."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய கருத்தில் தர்க்கீகம் இருப்பதைச் சகுந்தலாவால் காண முடிந்தது.

"அதே வேளை, முன்னேறிய முதலாளித்துவ சமூகத்தில் ஆணும் பெண்ணும் கண்டு பேசி கலியாணம் செய்து பின்னர். விருப்பமில்லாவிட்டால் விவாகரத்து செய்து விடுகிறார்கள். இந்தக் கலியாணங்களை அநாகரீகமென்று சொல்லுகிறார்கள் எனவும் சொல்லிச் சிரிப்பார்."

"அங்கே வளர்ந்து வரும் லெஸ்பியன், ஒரினப் பாலின்பம் எல்லாம் அநாகரீகமானது என்று சொல்ல மாட்டாரா."

"அவையெல்லாம் இங்கேயும் அம்பலப்படாமல் நடைபெறுகிறது. அதனால்தான் எயிட்ஸ் விளம்பரத்தில் இவற்றைத் தவிர்க்கும்படி ரேடியோ, பத்திரிகை, தெருவெல்லாம் விளம்பரம் செய்கிறார்கள். குடும்ப அமைப்புகள் உடைந்து வரும் மேல்நாடுகளில் இவற்றை வெளிப்படையாகப்பேசுகிறார்கள். அவ்வளவே என்பார்."– சுமதி சொன்னாள்.

"டிவி. சினிமா மூலம் இங்கே ஏற்படும் கலாசாரச் சீரழிவு பற்றிப் பலர் பேசுகிறார்களே, அவர் எதுவும் சொல்லுவதில்லையா."

"முன்னேறிய விஞ்ஞான, தொழில் நுட்பப் பண்டங்களை அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்கிறோம். அத்தகைய உற்பத்தியோடு ஒட்டிய கம்பியூட்டர், சினிமா, டி.வி. நிகழ்ச்சிகள், உடைகள், கார்கள், கொக்கோகோலா, பெப்ஸி எல்லாம் வந்து இறங்கவே செய்யும். கம்பியூட்டரை, எலக்ரோனிக் கருவிகளை ஏற்றுக் கொண்டு, கலாசாரம் வேண்டாம் என்று தடுத்து விட முடியுமா ?என்பார்."

"எல்லா சந்தேகத்திற்கும் அவர் லொஜிக்கல் விடை வைத்திருப்பார் போலிருக்கு." – சகுந்தலா அவள் கூறிய கருத்துகளைப் பாராட்டினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆமாம் விவாதத்தில் அவரை வென்று விட முடியாது.."– சுமதியின் பெருமையான கூற்று.

"நீ அதிர்ஷ்டக்காரிதான்..."

"அப்படிச் சொல்ல வேண்டாம்."

"துணிச்சல்காரி சரி. அடுத்து என்ன செய்யப் போகிறாய்..?"

"இராத்திரிதான் ஒரு திட்டம் போட்டிருக்கிறேன்."– சுமதி மெல்லிய சிரிப்புடன் சொன்னாள்.

"எனக்கு இரண்டு மூன்று மாதத்திலே அரசு வேலை கிடைத்துவிடும். ஆரம்பத்தில் இங்கேயே பயிற்சி, டிரெயினிங் என்று அப்போயின்ட்மென்ட் தருவார்கள்."

"எங்கே தங்கி வேலைக்குப் போவாய்?.."

"நம்ம வீட்டிலேயிருந்துதான்"

"போயும் போயும் இந்த வீடா"

"1974 திருத்தச் சட்டபடி அம்மாவிற்கு அந்த வீட்டில் சட்டப்படி உரிமையும் இருக்கிறது."– சுமதி சொன்னாள்

"அங்கே எங்கே தங்கப்போகிறாய்.? பாட்டியோடு சண்டைபோடப் போகிறாயா.."

"அல்ல, பாட்டியை ஒரு வழி பண்ணி அந்த அதிகாரச் சிறையிலிருந்து அத்தைமாருக்கு எல்லாம் விடுதலை தேடித் தரப் போகிறேன்."

"எனககுமா?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆமாம் . இந்த வீட்டில் இருக்கும் வரை சிறைதானே."

"நிரந்தரமாகத் தங்க அங்கே தனிரூம் இல்லையே. நான் வெளியேறினால் தான் கிடைக்கும்."

"முதலில் அந்த தூரம் இருக்கும் தனிப் பகுதியை ஆக்கிரமித்து திருத்தி பெயின்ட் அடித்து அங்கே தங்கி விடுவேன்."

"அப்பாடா, பாட்டியோடு நேரடி யுத்தம் செய்யப்போகிறாய் போலிருக்கிறது, உன்னால் முடியுமா ? "– சகுந்தலா குரலில் வியப்பு.

"அதை ஆக்கிரமிப்பதன் மூலம் தான் பாட்டியின் பழைய பரம்பரைக் கோட்டையை இடிக்க முடியும். பெண்களுக்கு இயற்கையாக ஏற்படும் இரத்தக் கசிவை முன்வைத்து தீண்டத்தகாதவர் என ஒதுக்கி, அவர்கள் சுதந்திரமாக வெளியேற விடாமல் சிறையில் தள்ளுவது போலில்லையா. இது மொபிலிட்டியை, இடப்பெயர்வை கட்டுப்படுத்தி பெண்களை அடிமைப்படுத்தக் கண்டுபிடித்த மற்ற ஒரு வழி. இதை முதலில் உடைத்துக் காட்டுவேன்"– சுமதியின் குரலில் ஒரு உறுதி.

"பாவம் பத்மா, அந்த மூன்று நாளும் தான் தனக்கு ஓய்வு என்று சொல்லுகிறாளே, அதையும் நிறுத்தப் போகிறாயா ?"– பத்மாவிற்கான பரிவான சகுந்தலாவின் குரல்.

"அதற்கு வேறு வழி வைத்திருக்கிறேன். சமையற்காரர் ஒருவரை ஏற்பாடு செய்து கூலி கொடுக்கச் செய்வேன். தற்போது கூலியில்லாமல் நாள் முழுவதும் அடுப்பங்கரையில் கழிப்பதைத் தடைச் செய்ய வேண்டும். அப்போதுதான் எல்லோருக்கும் போதிய ஓய்வு கிடைக்கும்."

"நல்ல யோசனை தான். ஆனால் நடைமுறைப் படுத்துவது அத்தனை சுலபமென்று தோன்றவில்லை.."– சகுந்தலா வார்த்தைகளைச் சிந்தனையோடு இழுத்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சமையற்காரருக்குத் தர பணமில்லையா? தாத்தா, மாமா எல்லோரும் உழைக்கிறார்கள். தாங்கள் நிர்வகிக்கும் இடங்களிலெல்லாம் வேலை செய்பவர்களுக்குக் கூலி தருகிறார்கள். வீட்டில் வேலை செய்பவருக்குக் கூலி இல்லை, ஓய்வில்லை. பிராவிடன்ட் பண்ட் இல்லை. பாதுகாப்பில்லை..."

"எல்லாம் லொஜிக்கலாய் சரியாகத் தான் பேசுகிறாய். நடைமுறைப் படுத்துவதல்லவா பிரச்சனை..."

"பழம் பெருமை பேசி அந்த இருண்ட வீட்டை அப்படியே வைத்திருக்கிறார்கள். அதை உடைத்தெறிந்து புதிதாகக் கட்ட வேண்டும். அல்லது விற்று விட்டு வேறு வீடு கட்ட வேணும்."

"ஒரு போதும் விற்கமாட்டார்கள். சிலவேளை இடித்து திருத்தங்கள் செய்யலாம்."– சகுந்தலா நடைமுறையைச் சொன்னாள்.

"பாகம் பிரிக்க வேணுமென்றால் எத்தனை பங்கு? விற்றுத்தான் பகிர நேரும்..."

"அதைக் கேட்டாலே பாட்டி தூக்குப் போட்டுச் செத்துப் போவாவே..."

"அப்படியெல்லாம் நடக்காது. இந்த சர்வாதிகார ஆட்சியை நாங்கதான் அடித்து விழுத்த வேண்டும். அதன் தலைவர் தாத்தா. பாட்டி தாத்தாவின் கொள்கைகளை நிர்வகிப்பவர்."

"ஏன் சர்வாதிகாரம் என்கிறாய்."

"அன்று பாட்டியே சொன்னா. 'ஒருவரே எல்லாத் தீர்மானமும் எடுப்பது நல்லது'– என்று. 'மற்றவர்களுடன் கலந்து பேசாமலா' என்றேன். 'ஆமாம்' எல்லோரையும் கேட்டால் ஒன்றும் நடக்காது' என்றா, 'பெரும்பான்மையினர் என்ன சொல்லுகிறார்கள் என்றாவது கேட்கக்கூடாதா?' என்றேன். 'நான் கேட்க மாட்டேன்.' என்று இறுதியாகச் சொல்லிவிட்டா"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீ சொல்லுவதெல்லாம் கஷ்டமான வேலை. ஏதோ முடியுமென்றால் முயன்று பார். நான் இங்கே இருக்கும் போது நடந்தால் எனக்கும் கொஞ்சம் சுதந்திரம் கிடைக்கும். அம்மா, அப்பா, தோழியரைப் பார்த்து வரலாம். நான் விரும்பியபடி உடுக்கலாம்."

"இந்த வேலையை முடித்த பின்னர்தான் தஞ்சாவூர் பக்கமாக மாறுதல் பெற்று போய் ரவியோடு இருந்து விடுவேன்.."

"நல்லது பொறுத்துப் பார்ப்போமே. பொழுது கருகிறது. கிளம்பு. கண்ணகி சிலையில் பஸ் ஏறி மாறிப்போவோமே அல்லது எழிலகம் வரை நடந்து நேரடி பஸ் ஏறுவோமா" – சகுந்தலா கூறியபடி எழுந்தாள்.

"அதிக தூரமில்லை. கடற்கரை வழியே நடந்து எழிலகத்துக்குப் போய் விடுவோம்."

"நல்லது, நீ விரும்பியபடியே செய்யலாம்."

"நாளைக்கு நாங்கள் ஊருக்குப் புறப்படும்போது மறந்தாலும் சித்தி, ஒரு விஷயத்தை இப்பொழுதே உங்களுக்குச் சொல்லிவிடவேண்டும்."

"சொல்லிவிடேன். எதுவும் நினைவு வந்தவுடன் செய்ய வேண்டும். அல்லது மறந்து விடலாம். அல்லது பிந்தி விடலாம்."

"இந்து ஒரு காதலில் மாட்டுப்பட்டிருக்கிறாள். துணிச்சல் இல்லாத பெண். மகாதேவன் மாமாவைத்தான் நம்பியிருக்கிறாள்."

"அமெரிக்காவிலிருந்து வந்து அவர் என்ன செய்ய முடியும்."

"அப்படித்தான் நானும் சொன்னேன்."

"அவரைத் தெரியாதா. நான் என்ன சொன்னாலும் கேட்டாலும் 'அம்மாவைக் கேள் அதன்படி நட' என்றே எழுதிக்கொண்டிருப்பார்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் எண்ணியது சரியாய் போய்விட்டது... உங்களிடமும் உதவிக்கு வருவாள்."

"நானென்ன செய்யமுடியும். என்னிடம் உதவிகேட்டு வந்தால் முடிந்தவரை ஏதாவது உதவி செய்யலாம். அவ்வளவே" – சகுந்தலா தன் ஆற்றாமையைத் தெரிவித்தாள்.

## 1.7

மறுநாள் மாலை சுமதியும் அம்மாவும் புறப்பட்டு விட்டனர். அன்று நண்பகல் சினிமாவிற்குச் சகுந்தலா அண்மையிலிருந்த தியேட்டருக்கு அழைத்துச் சென்றாள். அத்தோடு அவளது கடமை முடிந்தது.எப்படியும் அவள் தங்கியிருந்த மூன்று நாளும் வீடு கலகலப்பாகவே இருந்தது. அது போக அவள் கூறிய கருத்துகள் சகுந்தலாவின் சிந்தனையைத் தூண்டி விட்டதும் தனிச்சிறப்பு. வேலை நிச்சயம் கிடைக்கும்' தன் திட்டங்களெல்லாம் நிறைவேறும் என்ற நம்பிக்கையுடன் சுமதி சென்றாள்.

சுமதியுடன் பேசிய பின்னர், அந்த வீட்டையும் மனிதர்களையும் புது விதமாகச் சகுந்தலாவால் பார்க்க முடிந்தது.

அங்கு டெலிபோன் மணி அடித்தால் சகுந்தலா ஓடிச்சென்று எடுப்பதில்லை. பத்மாவே எடுத்து அவரவரை அழைப்பாள். சகுந்தலாவிற்கு வீட்டிலிருந்து டெலிபோன் வரலாம். அல்லது அமெரிக்காவிலிருந்து மகாதேவன், அவ்வளவே.

இரண்டு இடத்திலுமிருந்து எப்படிச் சுகம், அத்தையோடோ, அக்காமாரோடோ பிரச்சனை எதுவும் இல்லைதானே என்பர். இரு இடத்திலிருந்தும் கேள்வியும் பதிலும் ஒரே விதமாகவே இருக்கும். சகுந்தலாவும் எத்தனை பிரச்சனையானாலும் வெளியே சொல்லிவிட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாத நிலை. போலி வார்த்தைகள். சிறையில் உள்ளவரும் உள்ளே வார்டன் பற்றி ஒரு குறையும் அடி வாங்கிய போதும் சொல்வதில்லையாம். அப்படிச் சொல்லி வார்டனுக்குத் தெரிந்தால் வதை இருமடங்காகும். சகுந்தலா குறை சொன்னால் அது அவள் மேலேயே திரும்பும் என்பதை அறிவாள். அந்தக் கூட்டுக் குடும்பச் சிறையில் இருக்கும் வரை புனிதமான குடும்பம், குடும்ப அமைப்பு தெய்வீகமானது என்று சொல்லிக் கொண்டே இருக்க வேண்டும். அது ஒரு சர்வாதிகார அமைப்பு என்பதை அவளும் அறிந்து கொண்டாள்.

அன்று வந்த டெலிபோன் அழைப்பு மைதிலியிடமிருந்து வந்தது. "வந்த வேலை முடிந்து, ஞாயிற்றுக் கிழமை மதுரை திரும்ப டிக்கெட் வாங்கிவிட்டேன், எப்போது உன்னை வந்து பார்க்கலாம்" என்று கேட்டிருந்தாள்.

"நாளைக்கு வெள்ளிக்கிழமை. நாலரை வரையில் வா. உன்னைத்தான் பார்த்துக் கொண்டிருந்தேன்"

மாமி பரிவாரம் கோவிலுக்குப் போய்விடுவார்கள். தன்னையும் அழைத்தால் தலைவலி அல்லது தோழி வருகிறாள் என்று சாட்டுச் சொல்லிவிடலாம் என சகுந்தலா எண்ணியே மறுநாள் மாலை என்று சொன்னாள்.

மதுரைத் தோழியின் வருகை பற்றி பத்மாவிடம் சொன்னதும் கேசரியும் வாழைக்காய் பஜ்ஜியும் மாலை டிபனுக்கு செய்யலாம் என்றாள். பத்மா மட்டுமே அங்கே அவளுக்கு ஒரே ஊன்று கோல். அவளைப் பலதடவை பாராட்டியபோதும் அவளது நிலைக்காக அடிமனதில் பரிதாபப்பட்டாள். சமையலை விட பத்மாவின் குழந்தையைப் பார்ப்பதில் அதிகம் உதவினாள்.

மைதிலி சரியான நேரத்திற்கு வந்து இறங்கினாள். அன்று கலியாண வீடு பற்றிய வர்ணனையை அத்தை வந்ததும் பாதியில் நிறுத்தி விட்டதை மைதிலி நினைவூட்டினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இரண்டு பகுதியிலிருந்தும் பெரிய கூட்டம். அமெரிக்க மாப்பிள்ளை என்று சேஷ்மகாலில் ஏற்பாடு. அப்பாவிற்குப் பெரிய துண்டு. கடன்பட்டு சமாளிக்க நேர்ந்தது. அமெரிக்க மாப்பிளையே எத்தனை பொறுமையாக சடங்குகளையெல்லாம் கவனித்தார் என்று பாராட்டு. ஓமப்புகை என் கண்களை நிரப்பி சிவக்கச் செய்தது. அந்த மாலைகளைச் சுமப்பதே பெரிய தொல்லையாய் போய்விட்டது."

"பரிசுகள் குவிந்திருக்குமே"

"பரிசுகள் எல்லாம் வந்து குவிந்தன. அவர் பயணம் போன பின்னரே எல்லாம் உடைத்துப் பார்க்க முடிந்தது. கலியாணத்தில் சகிக்க வேண்டிய தொல்லைகள் மூன்று. ஒன்று ஐயரின் தொல்லைகள். கையை அப்படிப்பிடி, இப்படிக் கொடு, அது செய், இதைப் பண்ணு என்று அறுத்துவிடுவார். மற்றது ஓமகுண்டப்புகை. எதற்குத்தான் இந்தக் கொடுமைகள் என்று தெரியவில்லை. அம்மா, அப்பா கால்களை வேறு கழுவச் சொல்லுகிறார் ஐயர். விழுந்து வேறு வணங்க வேண்டும் அவர்களை மட்டுமல்ல. மாமா, அத்தை"

"வேறு என்னடி தொல்லையானது. நானும் அறிந்திருக்க வேண்டும்."

"அவருடைய நண்பர்கள் உறவினர்களை அறிமுகப்படுத்தும் போதெல்லாம் பல்லைக் காட்டி நடித்துச் சமாளிப்பது. இது ஒரு தனித் தொல்லை. அலுத்துப் போகும்."

"கலியாணச் சாப்பாடெல்லாம் தடபுடலாயிருந்திருக்கும். அதெல்லாம் வேண்டாமடி. உன் ஹனிமூனைப் பற்றிச் சொல்லடி.."

"அது ஒரு பிட்டர் ஹனிமூன், கசகசப்பான ஹனிமூன் தான். கலியாணமென்றாலே கணவனைப் பற்றி எண்ணிக் கற்பனையில் திளைப்பது தான். கற்பனைதான் மகிழ்ச்சி தருவது. யதார்த்தம் சிலவேளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயங்கர ஏமாற்றமாகியும் விடும். கலியாணத்திற்கு முன்னர் அவரோடு ஒய்வாக எந்த ஏற்பாடு பற்றியும் பேசமுடியவில்லை. அவரும் ஏனோ தெரியவில்லை. எவ்வித ஆர்வமும் காட்டவில்லை. கலியாணத்தையும் முதலிரவையும் ஒரு பெண் எத்தனை ஆர்வத்தோடு எதிர்பார்த்திருப்பாள் என்பதை இவர்களால் புரிய முடிவதில்லைப் போலும்..." சகுந்தலாவின் ஏமாற்றமும் பேச்சில் தொனித்தது.

"நல்ல அனுபவம் தான். தொடர்ந்து சொல்லடி.." – மைதிலியின் ஆர்வக்குரல்.

"கலியாணத்துக்கு அழைத்தவரெல்லாம் வாழ்த்திவிட்டு ஏதோ கடமைபோல பணமும் பரிசும் தந்து விட்டுப்போய் விட்டார்கள். எங்களையும் சாப்பிடும்படி வற்புறுத்தினார்கள். கூல்டிரிங்ஸை குடிச்சு வயிறு நிரம்பிய எனக்கு சாப்பாடு ஒடவில்லை. அதன் பிறகு இந்த வீட்டுக்கு அழைத்து வந்து ஆராத்தி எடுத்தார்கள். ஏதோ சடங்கு முறை என எங்கள் வீட்டுக்கும் அழைத்துச் சென்றார்கள். கலியாணச் சேலையோடும் நகைகளோடும் மாலையோடும் அலைந்து களைத்துவிட்டேன். அமெரிக்காவிலிருந்து வந்தவர் 'அமெரிக்க நாகரீகம் தெரிந்தவர்' எங்காவது ஃபைவ் ஸ்டார் ஒட்டலுக்கு அழைத்துச் செல்வார் என்று காத்திருந்தேன். இந்த வீடு நிறையவும் உறவினர்கள். அவர்களோடும் பேசிக் கொண்டிருந்தார்."

"எத்தனை மணிவரை, இரவிரவாகவா"– மைதிலியின் வியப்புக்குரல்

"பதினொரு மணியாகிவிட்டது. அவர்களது பரம்பரை வழக்கப்படி ஹனிமூன் என வெளியே செல்வதில்லையாம். என் உடுப்புப் பெட்டியை நான் தற்போது தங்கியிருக்கும் இருண்ட அறையில் வைத்திருப்பதாக பத்மா சொன்னாள். பழக்கமே இல்லாத வீடு. எவரோடும் பேச கூச்சம். மாப்பிள்ளை அறைக்குள் சென்ற பின்னர், பத்மா வீட்டிலுள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளியலறையைக் காட்டினாள், பின்னர் ஒரு கப் பால் தந்து அறைக்குள் அனுப்பினாள். அங்கே பாயின் மேல் போட்ட மெத்தைமேல் அவர் வேஷ்டியுடன் படுத்திருந்தார். பாலை மேசைமேல் வைத்துவிட்டு அவர் முன்னே கலியாண உடைகளைக் களையவே வெட்கமாக இருந்தது. எப்படியும் முதலிரவுக்காகப் பிங்கலரில் தேடி, மெல்லிய துணியாக வாங்கி, ஸ்பெஷல் டெயிலரைக் கொண்டு தைப்பித்த நைட்டி ரெஸ்ஸுக்கு வெட்கம் மேலிட மாற்றுவதற்காகச் சேலையை மெதுவாகக் களையத் தொடங்கினேன். சேலையைக் களைந்து ஸ்கேர்ட் பிளொசுடன் பெட்டியைத் திறக்கக் குனிந்தேன். அதற்கிடையில் என்னைக் கட்டிப்பிடித்து மெத்தை மேல் போட்டு கட்டியணைத்தார்."

"அத்தனை அவசரப்பட்டாரா?" – மைதிலி தன் வியப்பைத் தெரிவித்தாள்.

"ஐ ஆம் சாரி" என்று கூறி விட்டு 'டையேட்' என்றும் குரல் வந்தது... படுத்துவிட்டார். மெல்லிய குறட்டை ஒலி.

"நீ என்னடி செய்தாய்?"

"உடைகளைக் களைந்து நைட்டியை மாட்டிக்கொண்டு உடற்சோர்வுடன் எவ்வித செக்ஸ் உணர்வோ ஏற்படாத நிலையில் வேறு இடமின்றி அவரருகே படுத்துக்கொண்டேன். எங்கே தூங்கிக் கொண்டிருந்தேன் என்றே தெரியவில்லை. அத்தனை அலைச்சல். அலுப்பு. ஏதோ கனவுகள். அதிகாலை ஐந்தரை மணிவரையில் என் மார்பில் விரல்கள் ஊருவதாகவும் உதடுகள் கடிக்கப்படுவதாகவும் உணர்வு பெற்றுக் கண்களை விழித்தேன். அவர் ஆணுறை அணிந்து கொண்டு நேக்கெட்டாய் என்மேல் படுக்க முயல்வதைப் பார்த்தேன். எதுவுமே செய்ய முடியவில்லை. வாழ்க்கையில் முதல்தரமாக ஆணின் நேக்கேட் உரு வும் விரல்களும் உதடும் என்னையும் உணர்ச்சி வசப்படுத்திவிட்டது. களைப்பு தீர்ந்து எழுந்து இருந்தேன்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் வேஷ்டியைக் கட்டிக்கொண்டு சொன்னார்:

"இரண்டு வாரமே இங்கே தங்க முடியும். அதற்குள் பாதுகாப்பாக இருப்பது நல்லது. பிறகு குழந்தை என்றால் உனக்குத்தான் பிரச்சனை. விசா பிரச்சனையிலும் சிக்கல் வரலாம்."

நான் 'ம்ம்' கூட்டினேன். பின்னர் எழுந்து நைட்டிக்கு மேலாக டிரெஸ்ஸிங்கவுன் ஒன்றைக் கட்டிக்கொண்டு சோப், பிரஷ் உடன் குளியலறைக்குச் சென்றேன். அங்கிருந்து நைட்டியையும் டவலையும் தோளில் போட்டுக் கொண்டு வெளியே வந்தபோது, பத்மா ஒரு தட்டில் இரண்டு காப்பியைத் தந்து விட்டுச் சொன்னாள் :

"அத்தைக்கு இந்த உடுப்பெல்லாம் பிடிக்காது, நீங்க வெளியே வரும்போது சேலைகட்டி வருவது தான் நல்லது .எனக்கு மற்றொரு ஏமாற்றம். பத்மாவிடம் தவறில்லை. அங்குள்ள நடைமுறையைச் சொன்னாள். அவ்வளவே. அவரிடம் காப்பியைக் கொடுத்துவிட்டு நானும் சாதாரண சேலை ஒன்றைக் கட்டிக் கொண்டேன். அவர் குளித்துவிட்டு வந்த பின்னர் தான் சிறிது நேரம் பேசமுடிந்தது. பயண ஏற்பாடுகள் பற்றியே அவரது பேச்சுகள் இருந்தன. நான் ஆற்றா நிலையில் சொன்னேன். 'என் தோழியர் எல்லாம் ஹனிமூனுக்கு எங்கே அழைத்துப் போனார் என்று கேட்பார்கள். இந்த வீட்டிலேதான் என்றால்..."

"உன்னுடைய பிரச்சனை எனக்குப் புரிகிறது. இரண்டு மூன்று நாள் இங்கே சமாளிப்போம். பிறகு பார்ப்போம்..."

"அவரது பேச்சில் என்மேல் பரிவு காட்டுவது தெரிந்தது. நானும் பொறுத்துச் சமாளித்தேன். அவரோடு என்னால் ஒய்வாகப் பேசமுடியாது, டெலிபோன், நண்பர்களது வரவும் உரையாடலும் இருந்தது."

"சரி சரி சொல்லடி"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பத்மாவே நல்ல உதவியாயிருந்தாள். காப்பி, டீ, கூல்டிரிங்ஸ் , பலகாரம் என வந்தவர்களை உபசரித்து வழங்குவதற்குத் தயாரித்து என்னிடம் தந்தாள். நான் வந்தவர்க்கெல்லாம் வழங்கும் போது ஆங்கிலத்திலும் , தமிழிலுமாக என்னை 'மிஸ்ஸிஸ், வைப்ப், பாட்னர், லவர்' என்றெல்லாம் அறிமுகப்படுத்தினார். அவர்களுக்கெல்லாம் பல்லைக்காட்டி, சிரித்து நடித்து, சமாளித்தேன். திருமண மண்டபத்துக்கு வரமுடியாமல் அங்கு பரிசு தந்தவர்க்கெல்லாம் 'தாங்யு' சொன்னேன். சிலர். மாமாவின், கொழுந்தரின் பிஸ்னெஸ் நண்பர்கள். அவர்களையும் அழைத்து உபசரிக்கும் பொறுப்பு என்னுடையதானது. எப்படியும் பத்மாவின் உதவியையும் ஆலோசனைகளையும் மறக்க முடியாது. அந்த இருண்ட சமையல்கட்டு எனக்கு பழக்கமில்லாதிருந்தது."

"ஹனிமூன் சேதி என்னடி ?"

"மூன்று நாட்கள் கழித்தே, 'வெளியூர் நண்பர்களுக்கு இருவருமாக நன்றி சொல்ல வேணும் போய்வருகிறோம்' என்று வீட்டில் பொய் சொல்லிவிட்டு என்னை மகாபலிபுரத்திலுள்ள ஒட்டல் ஒன்றுக்கு அழைத்துச் சென்றார்."

"பரவாயில்லை"

"அங்கு தங்கிய மூன்று நாட்களுமே என் ஹனிமூனும் மறக்க முடியாத நாட்களுமாகும். ஒய்வாகப் பல விஷயங்கள் பற்றியும் பேச முடிந்தது. பாலுறவின் போது தன் காதலையெல்லாம் வார்த்தைகளாகவும் சொரிந்தார். அவ்வேளைதான் பொறுமையாக அவரிடம் கேட்டேன். அங்கே உங்களுக்கு ரொம்ப பிரெண்ஸ் இருக்கிறாங்களா ?"

"ஒப்புக்கொண்டாரா ?"

"ஆமாம். அவர்களுக்கெல்லாம் கலியாணம் பற்றி போனிலேயே சொல்ல முடிந்தது. அவர்களுடைய வாழ்த்துகள், காட்டுகளைச் சேர்த்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னிடம் தந்து விடு. ஆண் பெண் என பிரிக்காமலே சொன்னார். பின்னர் தான் போன பின்னர் வருபவற்றையெல்லாம் தவறாமல் அனுப்ப வேண்டும். அவர்களுக்கெல்லாம் நன்றிகூற வேண்டியது அங்குள்ள முறை. கடமை என்றார்."

சகுந்தலாவின் தொடர்ந்த பேச்சை வியப்பாகவும் சுவையாகவும் கேட்டிருந்த மைதிலி இடையில் கேட்டாள் :

"அன்று நீ சொன்னாயே அவர் ஏற்கனவே பாலுறவில் அனுபவப்பட்டவர் என்று. அதைப்பற்றிக் கவலைப்படாதே. பதினாறுவயதுக்குமேல் எந்த ஆணைக் கட்டினாலும் அவன் செகன்ஹாண்டாகத்தான் இருப்பான் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். இது ஆணாதிக்க சமூகம். பெண்கள் தான், எங்கோ, எப்பவோ வரப்போகிற புருஷனுக்காகத் தங்கள் கற்பைக் காப்பாற்றி வைக்க முயலும் முட்டாள்கள்."

"ஏன்டி நீ அப்படிச் சொல்லுகிறாய்."

"நீ பிரென்ஸ் என்பதை விட்டு கேர்ள் பிரெண்ஸ் இருக்கிறார்களா என்று கேட்டிருந்தாலும் அதற்குத்தக்கபடி உன்னைத் திருப்திப்படுத்தக் கூடியதாகப் பதில் சொல்லியிருப்பாரே."

"ஆமாம், மறைத்துச் சொல்லுவார். நான் அவர்மேல் சந்தேகப் படாத விதமாகவே பிரெண்ஸ் என்று கேட்டேன்..." – மைதிலியைப் பார்த்து சிரித்தபடி சகுந்தலா சொன்னாள்.

"அவர் சொல்லுவார். அந்த சமூகத்தில் கேர்ள் பிரெண்சும் வைத்திருக்க வேண்டும். எங்காவது பார்டீக்கு அழைத்தால் ஒரு பெண்ணையும் கூட்டிக் கொண்டு போக வேணும். அதனால் அந்தப் பெண்ணுடன் உடலுறவு வைப்பதென்றில்லை. நீயே வந்து நேரில்பார். இனிமேல் அந்தப் பிரச்சனையே இல்லை. உன்னையே அழைத்துச் செல்வேனே என்பார்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“எல்லாவற்றிலும் எனக்கு அவர் மேல் ஆத்திரம் வருகிற விஷயம் எதைக் கேட்டாலும் ‘அத்தை சொல்லுறபடி செய் கேட்டுச் செய்’ என்பதுதான்.”

“இங்கிருந்து புறப்படும் வரை வீட்டாரோடு எவ்விதப் பிரச்சனையுமில்லாமல் சமாளிப்பதற்காகத்தான் அப்படிச் சொல்லியிருப்பார். எழுதுகிறார். நீ வீணாக மனதைப் போட்டு அலட்டாதே. ஏதோ சில மாதங்கள் தானே பல்லைக் கடித்துக் கொண்டு இங்கே சமாளித்து விடு.”

மைதிலிக்காக உடனே செய்யப்பட்ட கேசரியையும் வாழைக்காய் பஜ்ஜியையும் பத்மா எடுத்து வந்தாள்.

“இருவருமாகச் சாப்பிடலாம். காப்பி எடுத்து வருகிறேன்.” என்று சொல்லிக்கொண்டே சகுந்தலா உள்ளே போனாள்.

கோயிலுக்குப் போன கூட்டம் திடீரென திரும்பி வந்துவிடுமோ என்ற அச்சத்துடன் சகுந்தலா தன் மனதைக் குடைந்து கொண்டிருந்த விஷயத்தைக் காப்பி வந்ததும் எடுத்து விட்டாள்.

“மைதிலி சென்ற முறை வந்தபோது நான் ஒரு விஷயத்தை உன்னிடம் மறைத்து விட்டேன். இந்த வாழ்த்திதழைப்பார். இதை நான் அவருக்கு அனுப்பாமல் வைத்து விட்டேன். தற்போது மறைமுகமாக இந்த கார்டை அவர் கேட்டுக் கொண்டிருக்கிறார். என்ன செய்யலாம் என்று ஆலோசனை கேட்கவே உன்னை எதிர்பார்த்திருந்தேன்”– சகுந்தலாவின் மனதில் ஓரளவு பதட்டமும் இருந்தது.

மைதிலி அந்த வாழ்த்துக்கார்டை வாங்கிப் படித்துவிட்டு பேனாவினால் மூலையில் எழுதப்பட்ட வாசகங்களை இரண்டு மூன்று தடவை படித்துப் பார்த்தாள். சிறிது நேரம் அந்த எழுத்துகள் அவளையும் சிந்திக்க வைத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னடி பேசாமலிருக்கிறாய். இதற்கு என்ன அர்த்தம். நெருங்கிப் பழகிக் கைவிட்ட ஒரு பெண்ணாலதான் இப்படி எழுதமுடியும் என்று நினைக்கிறேன். மறைமுகமாக அவர் எதற்கு இந்தக் கார்டை கேட்கிறார்? அந்தப்பெண் 'என் வாழ்த்துக் காட்டில் எழுதியதைப் படித்தீர்களா' என்றும் கேட்டிருப்பாள் போலும்."

"சிந்திக்க வேண்டிய விஷயம் தான். எதற்கும் அங்கு போய் தான் உண்மை நிலையை அறிய முடியும். வீணாக மனதை அலட்டிக்காதே. சட்டரீதியான மனைவி நீதானே. பின்னர் ஏன் கவலைப்பட வேண்டும்?"

"ஏனோ என் மனதில் இதைப் படித்த பின்னர் அமைதியில்லையடி.." – சகுந்தலா தன் மனதைத் திறந்து சொன்னாள்.

"காதலில் தோல்வியடைந்து மற்றொருவரைக் கலியாணம் செய்து வாழ்வதெல்லாம் இங்கு சர்வசாதாரணம். அப்படி இருந்தாலும் உன் குடும்பத்தைக் காப்பாற்ற நீ ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான். இங்கே கூட சின்னவீடு என்பது ஆண்களுக்குக் கௌரவமாயிருக்கிறது. பணபலத்தைப் பொறுத்து நடைபெறுகிறதே. என்ன இருந்தாலும் நீ அங்கே போய்தான் இந்தப் பிரச்சனையை நன்கு அறிந்து தீர்க்க முடியும். அது வரை அமைதியாக இரு."

"இப்போது இந்தக் கார்டை அப்படியே அவருக்கு அனுப்பச் சொல்லுகிறாயா?"

"உள்புறத்துக்கு மட்டும் ஒரு ஜெராக்ஸ் காப்பி எடுத்து வைத்துக்கொண்டு அப்பாவி போல் அனுப்பி விடு. பிறகு பார்க்கலாம்." – மைதிலி ஆலோசனை கூறினாள்.

"நீ எப்போது அடுத்த தடவை வருவாய்.இங்கே உன்னைத் தவிர எவரோடு இவற்றையெல்லாம் பேசமுடியும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அடுத்த மாதம் வருவேன்"

"தவறாமல் இங்கே வந்துவிடு. ஏதாவது பிரச்சனையென்றால் உன்னிடம் தான் ஆலோசனை கேட்கவேண்டும். நெஞ்சிலே முள்ளாக இது குத்திக் கொண்டிருக்கிறது." – சகுந்தலா கெஞ்சலாக சொன்னாள்.

மைதிலியின் ஆலோசனை சகுந்தலாவிற்குச் சரியாகவே பட்டது. மறுநாள் பிரதி எடுத்துக் கொண்டு அனுப்பிவிடலாம் என்று தீர்மானித்தாள். பல தடவை அச்சிட்ட ஆங்கில வாழ்த்தின் கீழே 'வித் லவ்' ஒப்பத்துடன் எதிர்ப்புறக் கீழ்ப்பகுதியில் தமிழில் எழுதியிருந்த எழுத்துக்களைப் படித்து அதுவும் மனப்பாடமாகிவிட்டது.

> 'முன்னர் ஆப்பிரிக்காவிலிருந்துதான் அடிமைகளை இறக்குமதி செய்தார்கள். தற்போது இந்தியாவிலிருந்தும்...
> – குமுதினி.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.1

குமுதினி கோவையிலிருந்து கம்பியூட்டர் சயன்ஸில் பட்டம் பெற்று அங்குள்ள ஏஜென்ஸி வழியால் அமெரிக்கா சென்று, ஆறுமாத காண்டிராக்ட் முடிந்ததும் திரும்பியவள். அவளது திறமையையும் வேலைச்சிறப்பையும் மலிந்த கூலியையும் பார்த்து அதே கம்பெனி விஸா தந்து வரவழைத்தனர். இரண்டு ஆண்டுகளில் கிறீன் கார்டு பெற்று பொஸ்டன் நகருக்கு அருகே உள்ள கம்பியூட்டர் டிசைனிங் கம்பெனியில் நிரந்தர வேலை பெற்றாள்.

இந்தியப் பெண் என கறுப்பர் போலக் கணித்து வெள்ளை அமெரிக்கர்களுக்குத் தரும் கூலியிலும் குறைவாகவே அவளுக்குத் தந்தனர். ஆயினும் அந்தத் தொகை இந்திய ரூபாவில் மாற்றும் போது மாதச் சம்பளம் ஆறு எண்களை எட்டியதாக இருந்தது. பொஸ்டன் நகரில் வெள்ளை அமெரிக்கன் வீட்டு மாடி அறை இரண்டில் ஒன்றை வாடகைக்கு எடுத்திருந்தாள். பின்னர் அங்கு ஸ்காலஷிப்பில் படிக்க என வந்து படிப்போடு பாங்கில் வேலைதேடி, அது போதாது என சிறிய ஓட்டல் ஒன்றில் சனி ஞாயிற்றுக்கிழமைகளிலும் கசுவலாக வேலை செய்யும் சுகன்யா இடம் தேடி அலைந்தபோது குமுதினி தனது அடுத்த ரூமில் சேர்த்துக் கொண்டாள். இரண்டு ரூமுக்கும் நடுவிலே குளியலறை. அதனால் குமுதியை விட சுகன்யாவுக்கு வாடகைத் தொகை குறைவாகவே இருந்தது. சுகன்யா மதுரையிலிருந்து வந்தவள். திருச்சி கிறிஸ்தவ கல்லூரியில் கற்றவள்.

குமுதினியும், சுகன்யாவும் நெருங்கிய தோழிகளாயினர். சனி, ஞாயிறு வேலை செய்வதனால் ஓட்டலில் இருநாளும் சாப்பாட்டுடன் தக்க சம்பளமும் சுகன்யாவுக்குக் கிடைத்து வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்கு ஆண்டுகளாக இருவரும் இந்தியாவிற்குத் திரும்பவில்லை. குமுதினிக்குத் தனிப் பிரச்சனைகள் இருந்தன. சுகன்யாவுக்கு கிறீன் கார்ட் எடுப்பதற்கு வேண்டிய உதவிகளைக் குமுதினியே கவனித்து வந்தாள். ஊருக்குப் போனால் பிறகு திரும்பமாட்டாய் என குமுதினி அச்சமூட்டியும் வைத்திருந்தாள். கிரீன் கார்ட் பெற்று விட்டால் போய் வரலாம் என்பதைச் சுகன்யாவும் அறிவாள்.

இருவரது நிறமும் வெள்ளையாக இல்லாதபோதும் பொதுநிறம், கட்டுமஸ்தான உடலமைப்பு இருவருக்கும் இருந்தது.

இருவரும் பான்ட் போட்டுக் கொண்டே வேலைக்குச் செல்வர். சாப்பாடு, உடையளவில் இருவரும் பேதம் காட்டுவதில்லை. இருவருமாக ஷாப்பிங் சென்றால் ஒரே ரகமாகவே இரண்டு செட் உடை வாங்கி வருவர்.

குமுதினி கார் வைத்திருந்தாள். சுகன்யாவை வீணாக வண்டி வாங்க வேண்டாம், தேவைக்குத் தன் காரையே எடுத்துச் செல்லாம் என்று அனுமதி வழங்கினாள். குமுதினி தான் வேலைக்குப் போகும் போதே சுகன்யாவையும் அழைத்துச் சென்று அவளது பாங்கில் விட்டுச் செல்வாள். சனி, ஞாயிறு பணியாற்றும் சாதாரண ஒட்டல் நடந்து செல்லும் தூரத்திலே இருந்தது.

இருவருக்குமே ஓய்வு கிடைக்கும் நாளில் அப்பகுதியிலுள்ள சுற்றுலா மையங்களுக்குச் சென்று பொழுதைக் கழிப்பர். சினிமா, கலை நிகழ்ச்சிகளுக்குச் செல்வதாயினும் திட்டமிட்டு இருவருமாகச் செல்வர்.

கம்பியூட்டர் டிசைனிங் தனிமைதரும் அலுப்பான தொழில் என்பது குமுதினியின் கருத்து. எட்டுப் பத்து மணி நேரமம் ஒரு கம்பியூட்டர் ஸ்கீரினைப் பார்த்து வேலை செய்வதிலுள்ள சலிப்பை அவள் அறிவாள். தோள்வலி, முதுகு நோவு, இடையிடை மாறாத தலைவலி வேறு. பணத்திற்காக அந்தச் தொழிலைச் செய்ய நேருடுகிறதே என்றும் கவலைப்படுவாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்பியூட்டரை மறந்து பொழுதைக் கழிக்க அங்குள்ள கறுப்பர்களின் கிளப்புகளிலும் சேர்ந்து கொண்டாள்.

தன்னுடைய தாயாருக்குத் தவறாது மாதந்தோறும் நூறு டாலர்கள் அனுப்பிவிடுவாள். அதனால் அங்கு பணப் பிரச்சனை இல்லை. தாயார் அவளை ஒரு தடவை வந்து போகும்படி வேண்டிக்கொண்டிருந்தாள். ஒரு முறை ஊருக்குச் சென்று வர எண்ணியிருந்தாள். தனிமை வீட்டாஎர நினைவூட்டியது. சுகன்யா வந்து சேர்ந்த பின்னர் அந்த எண்ணத்தை விட்டு விட்டாள்.

கலியாணத்திற்கு ஏற்ற வயது வந்துவிட்டது. எத்தனை இடத்தில் பெண் கேட்கிறார்கள். கிறீன் கார்ட்டு இருப்பதனால் கலியாணம் செய்து கணவரையும் அழைத்து விடலாம் என்பதே தாயின் கோரிக்கை. அமெரிக்காவில் நுழைந்து டாலர் உழைப்பதற்கு எத்தனை இளைஞர்கள் தவம் கிடக்கிறார்கள். நீ ஏன் பேசாது இருக்கிறாய் எனத் தாயார் அடிக்கடி எழுதுவாள். அவற்றையெல்லம் அவள் இப்போது கவனிப்பதில்லை.

ஆற்றாநிலையில் தாய் எழுதினாள்:" அமெரிக்காவில் பத்துலட்சம் இந்தியர்கள் வேலை செய்கிறார்களாம். ஆண்களே அதிகமானவர். அங்கே உனக்குப் பிடித்த மாப்பிளையைப் பிடித்துக்கொள். வயது ஏறுகிறது. பிறகு உன்னை எவரும் திரும்பிப் பார்க்கமாட்டார்கள். பெரும்பாலான ஆண்களெல்லாம் இங்கே வந்து தமிழ்ப்பெண்களையே கட்டிக்கொண்டுபோகிறார்கள். அங்கே உன்னைக் காதலிக்க ஒரு தமிழன், ,இந்தியன் கிடையாதா ? உனக்கு அழகில்லையா ? படிப்பில்லையா ? தக்க வேலையும் உழைப்புமில்லையா ? நீ ஒரு பயந்தாங்கொள்ளி. ஆண்களோடு பழகுவதற்கு இங்கேயே கூச்சப்படுவாய். அங்குமா ? அந்த நாட்டில் ஆண்களும் பெண்களும் சமமாகப் பழகுவார்களாம். உன்னால் ஒரு ஆண்மகனைப் பிடிக்க முடியவில்லையா ? நீ கொஞ்சம் பழகி ருசிகாட்டு . நாய் போலப் பின்னே வருவார்கள். அவர்களில் எவனையாவது கலியாணம் கட்டிக்கொள். படத்தை முதலில் அனுப்பு. பின்னர் மாப்பிளையையும் ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடவை அழைத்து வந்து காட்டு. நான் சாகுமுன்னர் உன்னை சோடியாகப் பார்த்து விட்டுச் சாகவேண்டும்."—தாயின் துணிச்சலான எழுத்தும் குமுதினியின் பிடிவாதத்தைக் குலைக்கவில்லை.

தனக்கு வரும் கடிதங்கள், எழுதும் செய்திகள் யாவையும் சுகன்யாவுக்கும் காட்டிவிட்டே குமுதினி அனுப்புவாள். அவளின் தாயாரின் முற்போக்கான எழுத்துகள் சுகன்யாவையும் வியப்பில் ஆழ்த்தியது.

குமுதினி எதற்குமே சரியான பதில் எழுதாத நிலையில் தாயார் எழுதினாள் :

"கறுத்தவரையோ வெள்ளையரோ நீ கட்டுவதில் எனக்கு ஆட்சேபனையில்லை. நீ மலடி அல்ல என்பதைக் காட்ட ஒரு குழந்தையைப் பெற்று விடு. அங்கே குழந்தை வளர்ப்பது மிகக் கஷ்டமாம். நான் இங்கே அதிக வேலையில்லாமல் தானே இருக்கிறேன். குழந்தையை அனுப்பி விடு. நான் வளர்த்துத் தருகிறேன்."

இந்த நிலையிலேயே குமுதினி மகாதேவனைச் சந்திக்க நேர்ந்தது. பொஸ்டன் பகுதியிலுள்ள கம்பியூட்டர் தொழிலாளர் யூனியனின் ஆண்டுக் கூட்டமும் நண்பகல் விருந்தும் ஒரு ஞாயிறு நடந்தது. அதற்கு குமுதினியும் போயிருந்தாள். பெண்கள் குறைவு. இந்தியர்கள் பலர். பல்வேறு மாநிலம் சார்ந்தவர். ஒரே ரக உடை. இனங்காணமுடியாது.

குமுதினி காசுவல் உடையாக சுரிதார் அணிந்து சென்றிருந்தாள். காதணி தவிர நகை எதுவுமில்லை. நண்பகல் உணவின்போது மகாதேவனே வந்து பேச்சுக் கொடுத்தான்.

"யு ஆர் இண்டியன். மே ஐ நோ யுவர் குட் நேம்"

"குமுதினி"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தமிழர். நானும் தமிழனே. மற்றாஸ் மகாதேவன். நீங்க"

"கோயமுத்தூர்"

"ஓ வெரிகுட், தமிழில் பேசுபவர்களைக் கண்டாலே எனக்கு மகிழ்ச்சி. என்னதான் இருந்தாலும் தாய் மொழியில் பேசுவதைப் போல் வருமா"

"ஆமாம்"

இருவரும் அங்குள்ள இருப்பிடம், முகவரி, வேலைசெய்யும் இடம் பற்றியெல்லம் விசாரித்துக் கொண்டனர். விசிட்டிங் கார்டையும் பரிமாறிக் கொண்டனர்.

இருவரும் கம்பியூட்டர் தொழிலிலுள்ள பிரச்சனைகள் பற்றியும் பேசிக் கொண்டனர். அத்தொழிலில் வேண்டிய பொறுமை, தனிமை தரும் விரக்தி பற்றியெல்லாம் பேசிக்கொண்டனர்.

"கம்பியூட்டருக்கு பொறுமை வேண்டும். அது பெண்களுக்கே உரிய தொழில் என்று நினைக்கிறேன்." – மகாதேவன் பாராட்டுமுகமாகச் சொன்னான்.

"ஏன் சார் அப்படியெல்லாம் சொல்லுறீங்க. இங்கே பாருங்களேன் யூனியனில் கூட ஆண்களே அதிகமாக உள்ளனர்."

"நீங்க சார் என்றெல்லாம் அழைக்க வேண்டியதில்லை. பெயரைச் சொல்லியே அழைக்கலாம். அது உண்மைதான். தவிர்க்கமுடியாமல் பணம் உழைப்பதற்காக இந்தத் தொழிலில் சேர்ந்தோம். நீங்க கம்பியூட்டர் டிசைனிங் செய்கிறீங்க. அதற்கு இன்னும் அதிகமான பொறுமை வேண்டும். உங்களை ஒரு போதும் கம்பெனி விட்டு விடமாட்டார்கள். ஒரு மாதத்தில் ஒரு டிசைனிங்கிலேயே கம்பனி லட்சக்கணக்காக உழைத்து விடுவார்கள்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அது சரி மிஸ்டர் மகாதேவன். பெண்களுக்கு மட்டுமே பொறுமை இயல்பானது என்று மட்டும் சொல்லிவிடாதீர்கள்."

"வீட்டு வேலைகள், சமையல், குழந்தை பெற்று வளர்த்தல், கணவனுக்குப் பணிவிடைகள்.. இவற்றையெல்லாம் ஆண்டாண்டு காலமாக அவர்களே செய்துவருகிறார்கள் இவற்றுக்கெல்லாம் எத்தனை பொறுமை வேண்டும்" – மகாதேவன் விரித்துச் சொன்னான்.

"நீங்கள் எல்லோரும் தவிர்க்க முடியாத கூலி அடிமை முறையில் கம்பியூட்டர் தொழிலில் இறங்கவில்லையா? அதே போலவே அடிமைமுறையிலேயே அவர்கள் இந்த வேலைப் பளு வேலைகளையெல் லாம் பரம்பரை பரம்பரையாகச் செய்துவர நேரிட்டது. அவர்களெல்லாரும் விருப்பத்துடனே இந்த விரக்தியான வேலைகளைச் செய்கிறார்கள் என்று எண்ணுவதுதான் தவறு. நாமெல்லாம் கம்பியூட்டர் அடிமைபோல அவர்கள் வீட்டடிமையாக்கப்பட்டுள்ளனர்."

"வெரிகுட், இப்படியான நியாயங்களை நான் இதுவரை கேட்கவில்லை. தாங்யு. நீங்கள் பெண்ணியம் இயக்கத்தில் இருந்திருப்பீர்கள் என்று தெரிகிறது.."

இடையே மாலைக் கூட்டத்திற்கு அழைப்பு அறிவிக்கப்பட்டது இருவரும் பிரிய நேரிட்டது.

"நீங்க ஃபிறீயாக இருக்கும் வேளை விசிட் பண்ணலாம்தானே. நாம ரொம்பப் பேசலாம்."

"ஆமாம், எப்போதும் வரலாம். டெலிபோன் செய்துவிட்டு வாருங்கள். என்னோடு பாங்கில் பணியாற்றும் சுகன்யா என்ற மதுரைப் பெண்ணும் இருக்கிறாள். அறிமுகப்படுத்தி வைக்கிறேன்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ரொம்ப நல்லது. கூட்டம் முடிந்ததும் உங்களை வீட்டில் விட்டு விட வேண்டுமா.”

“ரொம்ப தாங்ஸ். என்னிடம் கார் இருக்கிறது.”

அலுவலகங்களில் டைப்பிஸ்டாக, பொறுமையுடன் வேலை செய்த பெண்கள் கம்பியூட்டரிலும் பொறுமையுடன் சிறப்பாகப் பணியாற்றமுடியும் என்ற கருத்தும் குமுதினியைக் கண்ட பின்னர் அவன் சிந்தனையில் தோன்றியது.

மகாதேவன் அந்த நட்பை விட்டுவிடவில்லை. இடையிடை போன் செய்து குமுதினியைப் பாராட்டிக் கொண்டிருந்தான்.

“தமிழ்ப் பெண்கள் கம்பியூட்டர் கற்று இங்கெல்லாம் வந்து சிறப்பாக வேலை செய்வதைப் பற்றிப் பெருமைப் படுகிறேன். சிறப்பாக உங்களுக்குப் பாராட்டுகள்”

“இதிலென்ன பாராட்டுகள். அமெரிக்கரின் கம்பனிகளுக்கு பயிற்சிபெற்ற, கூலி குறைந்த உழைப்பாளர்கள் தேவைப்படுகிறார்கள். நாம் வந்து உதவுகிறோம். நான்தான் பெரிய எக்ஸ்பேட் என்று இல்லை. சந்தர்ப்பம் கிடைத்தால் லட்சக்கணக்கான தமிழ்ப்பெண்களே இங்கே வந்து வேலை செய்வார்களே”

“உங்களைப் போல டிசைன் கம்பியூட்டர் திறமை அத்தனை பேருக்கும் இருக்குமா”

“உரிய கல்வியும் பயிற்சியும் பெற்றால் எவராலும் முடியும்”

“உங்களிடம் ரொம்ப தன்னம்பிக்கை இருக்கிறது.”

“தாங்ஸ்”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒரு நாளுக்கு எங்காவது டின்னருக்கு அழைத்துப்போகிறேனே. உங்க தோழியையும் அழைத்து வரலாம்."

"ரொம்ப தாங்ஸ். அழைப்புக்கு நன்றி. அவள் சனி, ஞாயிற்றுக் கிழமைகளிலும் வேலைக்குப் போவாள். அவளுக்கும் வசதியான நாளாகப் போகலாம். நானே போன் செய்து சொல்லுகிறேனே."

"ரொம்ப தாங்ஸ்"

## 2.2

சுகன்யாவின் நேர வசதி கேட்டுவிட்டு குமுதினியே மகாதேவனிடம் போன் செய்தாள்.

"சனிக்கிழமை மாலை. உங்களுக்கும் வசதியானால் உங்க அழைப்பை ஏற்றுக் கொள்வோம்."

"எனக்கும் வசதியே. மாலை ஏழுமணிக்கு நானே வந்து அழைத்துப் போகிறேன்."

சனிக்கிழமை மாலை ஏழுமணிக்கு கார் வந்து நின்றது. சம்மர் காலமானபடியால் சூரியன் இன்னும் ஒதுங்கிவிடவில்லை.

குமுதினி கீழே வந்து மகாதேவனை மேலே வரும்படி அழைத்தாள். அந்த அழைப்பு அவன் எதிர்பாராதது. முதல்மாடியில் அவர்களது அப்பார்ட்மென்டுக்குச் சென்றான்.

"சுகன்யா ஃபறம் மதுரை"

"கிளாட் டு மீட் யு" எனக் கூறி, கை கொடுத்தான். குளிர்ந்த மென்மையான கரம். இருவருமே ஒரே ரக சரிதார் அணிந்திருந்தனர். அது அவனுக்கு வியப்பாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நைஸ் டிரஸ்" என இருவரையும் சுட்டிப் பாராட்டினான்.

"தாங்யு"

"தாங்யு"

இருவரது வார்த்தைகளும் ஒருமித்து வந்தன.

குமுதினியை விட சுகன்யா அழகாகத் தோன்றினாள். பெண்மையின் மென்மையும் உடலமைப்பும் இளமையும் தெரிந்தது.

குமுதினியின் உடற்கட்டும் உறுதியான பேச்சும் சுகன்யாவிடம் இல்லை என ஊகித்தான். சுகன்யாவில் ஒரளவு பெண்மையின் தயக்கம். வயதில் 2,3 வயது வேறுபாடிருக்கலாம்.

குமுதினி தன்னுடைய ரூமையும் ஒழுங்கமைப்பையும் காட்டினாள். சுகன்யா படுக்கையின் மேல் உட்கார்ந்திருந்தாள். படுக்கைவிரிப்பு அழகாகவும் தூய்மையாகவும் இருந்தது. பின்னர் சுகன்யா அழைத்துச் சென்று தன் அறையையும் காட்டினாள்.

"என்னுடைய ரூமுக்கு வந்தால் இத்தனை அழகாக, ஒழுங்காக எதுவும் இருக்காது. இந்த விஷயத்தில் பெண்களே திறமைசாலிகள்."– மகாதேவன் பாராட்டினான்.

"அப்படி ஏன் சொல்ல வேண்டும், ஆண்கள் பொதுவாகவே சோம்பேறியாக்கப்படுகிறார்கள். வீட்டைப் பெருக்குவது, வீட்டைப் பேணி ஒழுங்குபடுத்துவதெல்லாம் பெண்கள் வேலை என்று விட்டு விடுகிறார்கள்."

"தங்களை அழகு படுத்துவதிலும் பெண்கள் தான் முன்நிற்கிறார்கள்"– கேலியாகவே மகாதேவன் விட்டுக் கொடுக்காத பதிலாகச் சிரித்தபடி சொன்னான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆமாம். ஆண்களைவிட அழகுணர்வு கூடியவர்களும் பெண்களே."

"அப்படிச் சொல்ல முடியாது. ஒவ்வொருவரிடமும் ஏஸ்தெற்றிக் சென்ஸ், அழகுணர்வு இயல்பாகவே இருக்கிறது. இயற்கையை, பிறகலைகளை ரசிப்பதோடு தாமும் அழகுணர்வில் புதிதாக, அழகாகப் படைக்க முயலுகிறார்கள். அதில் ஒரு பகுதியே நமது உடல், உடைகளை, ரூமை, வீட்டை, அழகாக வைக்க முயல்வதாகும்."– குமுதினி தன் புதிய கருத்தைக் கூறினாள்.

"என் ரூமை வந்து பார்த்து என்னிடம் அழகுணர்வு இல்லை என்று சொல்லிவிடுவீர்களோ என்று அஞ்சுகிறேன்."

"எவர் சொன்னது. நீங்க எங்க உடையை, ரூமை அழகாக இருக்கிறது என்று பிரக்ஞைபூர்வமின்றிச் சொல்லிவிடுவதே அழகுணர்ச்சியின் உந்தலே. மேலும் உங்க பாண்ட், சேர்ட், டை,ஹேயர்ஸ்டைல் எல்லாம் உங்கள் அழகுணர்வில் தேர்ந்தே உடுத்து வந்திருக்கிறீர்கள். அதனால் ஸ்மாட்டாக, அழகாக இருப்பதை என் அழகுணர்வினாலும் ரசிக்க முடிந்தது."

"தாங்யு"

மூவரும் கீழே வந்து காரில் ஏறினர்.

"என்ன சாப்பாடு, எந்த ஓட்டலில் பிடிக்கும்."

"எங்காவது உங்களுக்குப் பிடித்த பழக்கமான சைனீஸ் ஓட்டலுக்குப் போகலாம்."

சனிக்கிழமை ஓட்டலில் ஒரே கூட்டம். ஒரு மூலையில் டேபிள் கிடைத்தது. ஓட்டலில் உட்கார்ந்ததும் சர்வர் வந்தான்.மேனு கார்டை தந்தான். குமுதினி சுகன்யாவிற்கும் சேர்த்து ஆர்டர் சொன்னாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நூடில்ஸ், பிரைட்டிரைஸ், மிக்ஸ் வெயிட்டெபிள்ஸ்..."

"நொன் வெஜ் சாப்பிடுவதில்லையா ?"

"குறைவு. ஒரு சிக்கன் கறி போதும். உங்களுக்குப் பிடித்தது நீங்க ஆர்டர் செய்யலாம்."

"சூப்..."

"சிக்கன் சூப் இரண்டு. உங்களுக்குப் பிடித்தது நீங்க ஆர்டர் செய்யலாம்."

"டோமாட்டோ சூப் ஒன்று"

ஆர்டர் வரும்வரை வீட்டில் சமைத்துச் சாப்பிடும் உணவு பற்றிப் பேசிக் கொண்டனர். சுகன்யா சனி ஞாயிற்றுக் கிழமைகளில் வேலை செய்யும் ஒட்டல் பற்றி விசாரித்தான்.

"அந்தச் சாப்பாடு உடலில் தெரிகிறதே."

"ஏன் பருத்திருக்கிறேனா ?"

"இல்லையே. நல்ல உடற்கட்டு. ஒட்டலில் டிப்ஸ்"

"ஆமாம். ஒரு நாள் சர்வர் என்றால் மறுநாள் பிளேட் கழுவி துடைக்க வேண்டும். ஒருவாரம் காலையென்றால் மறுவாரம் மாலை"

"சர்வர் வேலையைத்தான் எல்லோரும் விரும்புவார்கள் இல்லையா ?"– மகாதேவன் சொன்னான்.

"ஆமாம் டிப்ஸ் கிடைக்கும்..."

"எங்கே கூலி அதிகமாகக் கிடைக்குமோ, அங்கே எவரும் ஒடிவிடுவார்கள்"– குமுதினி சொன்னாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கம்பியூட்டரிலும் அப்படித்தான். நாம கூலி குறைந்தாலும் ஒரே இடத்திலே தொடர்ந்து நிலைக்கப் பார்க்கிறோம். வெள்ளையர்கள் கூலியைப் பொறுத்து இடம் மாறிக் கொண்டே இருப்பார்கள்."– மகாதேவன் சொன்னான்.

"அதனால்தான் பெரும்பாலும் இந்தியர்களை விரும்புகிறார்கள் போலும்"– சுகன்யா கூறினாள்.

"ஆமாம். இந்தியர்கள் மட்டுமல்ல பாகிஸ்தான், இலங்கை, மலேசியா, இந்தோனிசியாவில் இருந்தெல்லாம் வருகிறார்கள்..."

"இந்தப் புதிய கறுப்பர்களால் தாங்கள் சம்பள உயர்வு பெறமுடியாமல் இருக்கிறதே என்றும் அமெரிக்கர்கள் ஆத்திரப் படுகிறார்கள்"– குமுதினி அங்குள்ள அனுபத்தில் அறிந்ததைச் சொன்னாள்.

"மிஸ் குமுதினி, உங்கவேலைக்கு வேறு இடத்தில் மாதம் ஆயிரம் டாலர் அதிகச் சம்பளம் பெற்றுத் தர முடியும்."

"வேண்டாம் இதுவே போதும். இடையிடை என் வேலையைக் கவனித்து ஒரே தடவையில் இரண்டு இன்கிரிமென்டும் தருகிறார்கள். இன்கம்டாக்ஸ் வேறு."

"ஓவர் டைம் செய்வதில்லையா ?"

"எட்டு மணி நேரத்திலேயே அந்த ஸ்கிறீனைப் பார்த்து அலுத்துவிடுகிறது. நானே விரும்புவதில்லை. அவசரமாக ஏதாவது குறிப்பிட்ட வேலை முடிக்கவேண்டுமென்றால் மட்டுமே செய்வேன்."

"அது உண்மை தான். மொனாட்டனஸ் ஜொப், மிஸ் சுகன்யா உங்கள் வேலை எப்படி ?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வேலை பிடித்ததென்றில்லை. கூலிக்காக வேலை செய்கிறேன். ஃபிறீ லஞ், காபி, டீ, தருகிறார்கள். எங்களுக்குப் பிடித்ததாக வேலை கிடைக்கிறதா ?ஏதோ கூலிக்காக உழைக்கிறோம். ஊரிலே பிளேட் கழுவுகிறேன் என்றால் எங்க ஊர் ஒட்டர் சார்வரோடுதான் ஒப்பிடுவார்கள்..."

"ஆமாம் இங்கே 'டிக்னிற்றி ஒப் லேபர்'இருக்கிறது. அங்கே அது இல்லையே. அது சரி இங்கே நீங்க சேலையே கட்டுவதில்லையா ?"

"கட்டுவோமே. பெரும்பாலும் கலியாணம், ரிசெப்ஸன், இந்தியாடே... நான் கோவிலுக்குப் போகும் போதும் கட்டுவேன்."

"பரவாயில்லையே. இங்கேயுள்ள சிவன் கோவிலுக்கெல்லாம் போவீர்களா ?"

"நான் மட்டுமே போவேன். குமுதினி காரில் கொண்டு வந்து விடுவா, அவ்வளவே."

"ஓ பெரியார் கட்சியா" – குமுதினியைப் பார்த்து மகாதேவன் சிரித்தபடி சொன்னான்.

சூப் வந்தது. அதைச் தொடர்ந்து உணவுகள் வந்தன. சாப்பிட்டபடியே பேச்சாடல் தொடர்ந்தது.

"பெரியார் கட்சி என்று முழுமையாகச் சொல்லிவிட முடியாது. மதத்திற்கு நான் எதிரி. முக்கியமாகப் பெண்களை அடிமையாக்குவதற்கு மதமே முதன்மையாக நிற்கிறது."–குமுதினி கூறினாள்.

"இங்கேயுமா ?"

"ஆமாம் ஞாயிற்றுக்கிழமைகளில் சர்ச்சுகளைப் போய் பாருங்கள். பெண்கள்தான் பெரும்பான்மையாயிருப்பார்கள்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பைபிள் இன்னும் பலமான வேதமாக இங்கே இருக்கிறது என்று சொல்லுகிறீர்களா ?"

"ஆமாம்"

"பண்ட உற்பத்தியில் ஈடுபட, ஈடுபட கடவுள் நம்பிக்கை குறைந்து கொண்டுபோகும் என்று எங்கோ படித்தேன்." – மகாதேவன் தன் அறிவை உயர்த்தினான்.

"ஆமாம், இங்கேயே பாருங்கள் நுகர் பண்டத்திற்குப் பின்னால் ஒடுகிறார்கள். வாழ்க்கையைப் பார்த்தால் நுகர் பண்டத்திற்காகவே வாழ்பவராயிருக்கின்றனர். சர்ச்சுக்குப் போகவே நேரமிருக்காது. ஆனாலும் கிறிஸ்தவ மதத்தின் ஆதிக்கத்திலிருந்து முற்றாக விடுபட்டு விட்டனர் என்று கூற முடியாது."

"உங்கள் கருத்தில் ஏதோ ஓர் முரண்பாடு இருப்பதாகத் தெரிகிறது. பின்னர் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அது பற்றி மற்றொரு தடவை பேசுவோம். தற்போது சாப்பாடு எப்படி இருக்கிறது." – மகாதேவன் கேட்டான்.

"ஓட்டலுக்கு அழைத்துச் செல்வது, விருந்து தருவது, அரசியலுக்குப் பணம் திரட்டுவதாக எல்லாம் இங்கே ஒரு நாகரிகமாக வளர்ந்து வருகிறது. எப்படியானாலும் வீட்டில் எமக்குப் பிடித்தவற்றைச் சமைத்துச் சாப்பிடுவது போல வராது. உடல் நலனைப் பேணவும் அதுவே சீராகும்." –குமுதினி சொன்னாள்.

"வீட்டுக்கு ஒரு சமையல் விரயமில்லையா ?"

"நீங்க கூட்டுக் குடும்பமா ?"

"ஆமாம் . எப்படிக் கண்டுபிடித்தீர்கள்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கூட்டுக் குடும்பத்தில் தான் ஒரே சமையல் சிக்கனமானது என்றும் சொல்லுவார்கள்."

"உங்களுக்குப் பிடிக்காதா?"

"பெண்களெல்லாம் கூலியில்லாமல் நாள்தோறும் சமைப்பார்கள். அதனால் தான் சமையலும் சிக்கனமாகிறது."

"அதுவும் உண்மைதான்."

"எங்க பிளாட்டுக்கு ஒருநாளுக்குச் சாப்பிட வாருங்களேன் ஊர்ச்சாப்பாடு போடுவோம்."

"அழைத்தால் வராமலா விடுவேன். கரும்பு தின்னக் கூலியா?"

"லஞ்சா, டின்னரா வசதியாயிருக்கும்"

"உங்க வசதியைப் பார்த்து அழைக்கலாம். லஞ் என்றால் சனி, ஞாயிறு மட்டுமே வாய்ப்பாயிருக்கும். டின்னர் என்றால் எல்லா நாளும் தயார்."

"சுகன்யாவின் வசதியையும் பார்க்க வேண்டும்."

"பரவாயில்லை. அடுத்த சனி அல்லது ஞாயிற்றுக் கிழமை. நான் ஈவினிங் சிப்ட்டாகப் பார்த்துக் கொள்வேன்."

"சனிக்கிழமையே நல்லது. உங்களுக்கு என்ன பிடிக்கும் என்று சொன்னால் ஸ்பெஷலாகத் தயாரிக்கலாம்."

"ஸ்பெஷலாக எதுவும் எனக்காகச் செய்து தொல்லைப் படுத்துவதை நான் விரும்பவில்லை. வழக்கமாக நீங்கள் சமைப்பதையே சாப்பிடுவேனே..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாப்பாடு முடிந்தது.

"டெசேட்டாக என்ன சாப்பிடுவீங்க ?"

"ஸ்ரோபெரி வித் சொக்லெட் கிறீம்"

"நானும் அதே சாப்பிடுவேனே."

சாப்பாடு முடிய ஒன்பது மணியாகிவிட்டது. பில் வந்ததும் மகாதேவன் தன் பர்ஷ்வை எடுத்தான்

குமுதினி தன் பர்ஷை எடுத்தாள்.

"எங்க பங்கை நான் தருகிறேனே."

"தாங்யு. நான் அழைத்தேன். நானே தர வேண்டும். அமெரிக்க நாகரிகம் வேறு. எங்க முறைப்படி விருந்துக்கு அழைத்தால் ஒருத்தரே பணம் தருவார். அதுவும் பெண்களை அழைத்தால் அது ஆண்களின் பொறுப்பு"

மகாதேவன் இருவரையும் அழைத்து வந்து அவர்களது வீட்டில் இறக்கி விட்டான்.

இருவரும் 'தாங்யு, தாங்யு' என்று பலதடவை கூறினர்.

தொடர்ந்து அடிக்கடி போனில் மூவரும் பேசிக்கொண்டனர்.

"உங்களுக்கு என்ன பிரச்சனையானாலும் எனக்கு எவ்வேளையும் போன் செய்யலாம்"

"தாங்யு. இப்படியான ஒரு தமிழரின் ஆதரவு என்றும் எங்களுக்குக் கிடைத்ததில்லை."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வீட்டு ஓனர் அமெரிக்கனா. அவனால் பிரச்சனை எதுவுமில்லையே."

"ஆமாம் அவனுக்கு வாடகையை ஒழுங்காகக் கொடுத்து விடுகிறோம். அதுமட்டுமே அவனுக்கு வேணும். எங்களை விட்டால் இத்தனை வாடகையோடு அவனுக்கு டெனன்ட் கிடைக்காது."

"எனப்படிச் சொல்லுறீங்க" – மகாதேவன் கேட்டான்.

"நடுவில் ஒரே பாத்ரூம் மட்டுமே. குடும்பத்தவர் தான் வருவார்கள். பிள்ளைகள், குட்டிகள், விசிட்டர்ஸ் என்று பிரச்சனையாகும்."

"ஆமாம் அது நல்ல வீடு. நீங்களும் அழகாகப் பேணி வைத்திருக்கிறீர்கள். உங்களை விட்டு விட மாட்டான்."

## 2.3

**அ**ன்று நண்பகல் உணவிற்கு 12 மணிக்கே மகாதேவன் குமுதினியின் பிளாட்டுக்கு வந்து விட்டான். ஒரு கூடை பழங்கள் பரிசாகக் கொண்டு வந்தான். ஆரஞ்சு, ஆப்பிள், பனானா.

இருவரும் வாயிலில் வந்து வரவேற்றார்கள். ஒரே ரக பிங் கலர் டிஸ்ஸிங் கவுண் அணிந்திருந்தனர்.

"நைஸ் டிரெஸ்" – கூறியபடியே கூடையைத் தந்தான்.

"தாங்யு"

வெள்ளை பாசுமதி ரைஸ் அடுப்பில் இருந்தது. வெஜிட்டபிள் பிரியாணி மேசையில் இருந்தது. பிளேட்டுகள் டிஸ்கள் எல்லாம் பரப்பப்பட்டிருந்தன. கோக் பாட்டில்கள் வேறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பத்து நிமிடம் பேசிக் கொண்டிருங்கள் சாதம் இறக்கியதும் அழைக்கிறேன் "

சுகன்யா கோக் பாட்டில் ஒன்றை உடைத்து ஸ்ரோவுடன் மகாதேவனிடம் தந்தாள்.

"ஒட்டல் சிப்ட் ரேன் என்ன ரைம்."

"இரண்டு மணி"

"லஞ்ச் முடிந்த பிறகு நானே அங்கு விட்டு விடுகிறேனே."

"தாங்ஸ்."

"பாங் வேலை என்ன டைம்"

"அங்கும் சிப்டு தான்.. ஒன்பது மூன்று மணி; இரண்டு எட்டு மணி. வாரம் வாரம் மாறிவரும். "

" ஆறுமணி நேரம் பரவாயில்லையே. நாங்க எட்டு மணிநேரம் ஒரே ஸ்கிரீனைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும்..."

" அதற்கேற்றபடி சம்பளம் .. வேறுபாடு"— சுகன்யா சிரித்தபடி இழுத்தாள்.

"உண்மைதான்"

குமுதினியின் அழைப்பை ஏற்று இருவரும் சென்று உட்கார்ந்தனர்.

"நீங்களும் உட்காருங்கள்"

"ஆமாம் உங்களுக்குப் பிடித்தவற்றை முதலில் பரிமாறுகிறேனே"

"நானே எடுத்துக் கொள்கிறேன். இந்த நாட்டிலிருந்து பல நல்ல விஷயங்களை நாம் கற்றக் கொள்ளுகிறோம். இங்கே நாம் விரும்பியதைத் தேர்ந்து அளவாகச் சாப்பிடுகிறோம். அங்கே பெண்கள் பரிமாறி சாப்பிடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாப்பிடு என வற்புறத்திச் சாப்பிடப் பண்ணுவர் .அளவுக்கு அதிகமாகவும் சாப்பிட நேரும். எக்ஸெஸ் பூட் இஸ் பொய்ஸின் என்பார்கள்"

"சமையல், பரிமாறுவது எல்லாம் பெண்களுடைய வேலை என ஒதுக்கி விடுகின்றனர்."–குமுதினி சொன்னாள்.

"இங்கே பெண்களுக்கு வேலைப் பளு குறைவாக இல்லையா ?"– மகாதேவன் தன் சந்தேகங்களுக்கெல்லாம் குமுதினி முரண்பாடாகப் பதில் கூறுவதை அறிந்தே அவளது பதிலை அறிவதாகக் கேட்டான்.

"அப்படிச் சொல்ல முடியாது. வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதோடு பெண்களின் வேலைப் பளுவையும் கூட்டி விடுகிறார்கள். இங்கே சாப்பிடுவதானால் ஃபோக் அன் ஸ்பூன், பிளேட், டிஷ்கள் என்று பரப்புவார்கள். பின்னர் அவற்றையெல்லலாம் கழுவித் துடைத்து அடுக்க வேண்டும். அங்கு வாழையிலையில் சாப்பிட்டு விட்டுத் தூக்கி வீசி விடலாம். அல்லது ஒரே பிளேட்டில் போட்டு கையால் சாப்பிட்டு விடுவர். இங்கே வேலையாள் வைக்க முடியாது. பெண்களே சமையல், வீட்டை அழகாகப் பராமரித்தல், குழந்தை வளர்த்தல், வீடு பெருக்கல், துணிகளைத் தோய்த்து தேய்த்தல், குப்பையை எடுத்து வெளியே உரிய இடத்தில் கொட்டுதல் எல்லாம் கவனிக்க வேண்டும். வாஷிங் மெஷின், வக்கூம் கிளீனர், டின் பூட்ஸ் இருந்தாலும் பெண்களின் வேலைப் பளு குறைந்ததாக இல்லை. சராசரியாக அமெரிக்கப் பெண்கள் 15,16 மணி நேரம் நாள் தோறும் வேலை செய்கிறார்களாம்."–குமுதினி விரிவாகக் கூறினாள்.

"ஆமாம். இவற்றையெல்லாம் இப்போதே எண்ணிப் பார்க்கிறேன்."

"அரசியலிலும் காங்கிரசிலோ, செனட்டிலோ 20 சதவீதமாகவும் பெண்களில்லை"

"பெரும்பாலான பெண்களும் இங்கே வேலை செய்கிறார்களே."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதுவும் உண்மையே, உற்பத்தியிலில்லை. சேவைகளில்தான் பணிபுரிகின்றனர். வாழ்க்கைத் தரத்தை அப்போதுதான் காப்பாற்ற முடியும். வக்கூம் கிளீனர், வாஷிங் மெஷின், எலக்டிக் காஸ் அடுப்பு இவற்றின் மின்சாரச் செலவு, ரிப்பேர் கணக்கு எல்லாம் சமாளிக்க வேண்டுமல்லவா ? முதலாளித்துவம் ஒரு கையால் கூலி கொடுத்துவிட்டு மறுகையால் நுகர்பண்டம் தந்து பறித்து விடுகிறது என்பார்கள். பெண்களுக்கென நூற்றெட்டு கஸ்மெற்றிக்ஸ் தயாரித்து விற்று விடுகிறார்கள்."

"நல்ல விளக்கமே" – மகாதேவன் சொன்னான்.

டெசேட்டாக தாங்கள் அங்கே தயாரித்த கேக்கும் பழமும் வழங்கினர். அவன் புறப்படும் போது கையில் கேக் பார்சல் ஒன்றும் தந்தனர்.

நன்றி கூறிப் புறப்படும் போது சுகன்யா தன் அறைக்குச் சென்று சில நிமிடங்களில் உடையை மாற்றிக் கொண்டு வந்தாள். பான்ட் அன் சேர்ட்.

காரில் முன் சீட்டில் ஏறுவதற்குத் திறந்து விட்டபோது சொன்னான்:

"இந்த உடை உங்களுக்கு அழகாக இருக்கிறது."

"தாங்யு"

மகாதேவன் தங்கியிருந்த ஃபிளாட் ஐந்து மைல் தூரத்திலிருந்தது. ஒரு தடவை குமுதினி வீட்டுப் பக்கமாக வந்தபோது பஸ்ஸரை அமுத்தி 'வரலாமா' என்று கேட்டான்.

"நீங்களா, எப்போதும் எந்நேரமும் இங்கே வரலாம். தட்டினால் எங்கள் கதவுகள் திறக்கப்படும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தாங்ஸ், அத்தனை வரவேற்பும் நட்புமா ?"– எந்நேரமும் என்ற வார்த்தை அவனைப் பலவிதமாக ஊகிக்க வைத்தது.

அவ்வேளை குமுதினி மட்டுமே இருந்தாள். டிரெஸ்ஸிஸ் கவுன் மட்டும் பிரெஸியர் இல்லாமலே அணிந்திருந்தது தெரிந்தது.

"டீயா, காப்பியா சாப்பிடுவீங்க"

"காப்பி..."

"காப்பியுடன் பிஸ்கெட் பரிமாறினாள்."

"இந்தப் பக்கம் வந்தபோது எவராவது வீட்டில் இருந்தால் பார்த்துப் போகலாம் என்றே வந்தேன். போன் செய்யாமல் வந்ததற்கு மன்னிக்க."

"நீங்க எப்போதும் இங்கே வந்து போகலாம் என்றேனே. பஸ்ஸரை அழுத்தினால் எங்க கதவு திறக்கும்."

"தாங்ஸ்"

சுகன்யாவின் பேத்டேக்கு குமுதினி அழைத்தாள். முதல்நாளே அழைப்பு வந்தது. மறுநாள் புதன் மாலை ஏழுமணிக்கு.

"பரிசு ஒன்றும் வேண்டாம். வந்து ஹப்பி போர்த்டே சொன்னாலே போதும்" என்றாள்.

சுகன்யாவுக்கு என்றுமே மறக்க முடியாத பரிசு ஒன்று தரவேண்டுமென்று பலவாறு சிந்தித்தான். நகைகள் எதுவும் அவர்கள் அணிவதில்லை. உடைகள் சில வேளை பிடிக்காது போகலாம். கடைசியாகத் தமிழ்பாடல்கள் அடங்கிய பத்து சி.டியுடன் சி.டிபிளேயர் ஒன்றையும் வாங்கிச் சென்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகன்யாவுடன் பாங்கில் பணியாற்றும் இரு தோழியரும் நண்பர்களும் குமுதினியின் தோழி ஒருத்தியுமே வந்திருந்தனர். சுகன்யாவும் குமுதினியும் காஞ்சிப் பட்டுச் சேலை கட்டியிருந்தனர். ஒரே ரகம். பார்டர் மட்டும் வேறாக இருந்தது. பின்னிய முடியில் சரம்.

சுகன்யா ஊதி அணைத்த மெழுகுதிரிகளை மகாதேவன் மனதில் எண்ணிக் கொண்டான். இருபத்து நாலு.

"ஹப்பி பேத்டே" பாட, கேக்கை சுகன்யா வெட்டினாள். முதல் துண்டை வெட்டி குமுதினி தன் தோழிக்கு முத்தமிட்டு ஊட்டி விட்டாள்.

வெட்டிய கேக் துண்டுகளைச் சுகன்யாவே வழங்கினாள்.

"முதல் தடவை சாரியில் பார்க்கிறேன். யு லுக் வெரி சுவீட் "

மகாதேவன் வெறும் பாராட்டாக மட்டும் சொல்லவில்லை.

"தாங்யு"

தன் பரிசுப் பெட்டியைத் தந்தான்.

"தாங்யு"

அதை மேசை மேல் வைத்துவிட்டு சோட் ஈட்ஸ்ஸாக கட்லெட், பிஸ் கெட், கஜூ வழங்கினாள்.

"பியரா, சொப்ட்டிங்ஸா எடுத்துக் கொள்ளுங்க"

தட்டிலே குமுதினியே எடுத்து வந்து நீட்டினாள்.

மகாதேவன் எடுக்கத் தயங்கினான்.

"இடையிடை பியர் சாப்பிடுவேன். இன்று வேண்டாம். காப்பி சாப்பிட விரும்புவேன். நானே தயாரிப்பேனே. உங்களுக்கு வீண் சிரமம்" என்று கூறியபடி எழுந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இன்று நீங்க விருந்தாளி. இதோ காபி கொண்டு வருகிறேனே" குமுதினி கூறிவிட்டுச் சென்றாள்.

மற்ற விருந்தினர் பியர் சாப்பிட்டனர். பல்வேறு விஷயங்கள் பற்றி ப் பேச்சுகள் நடந்தன.

சுகன்யா மேசையிலிருந்த பரிசுப் பெட்டியைத் திறந்தாள்.

மகாதேவனிடம் வந்து "வொண்டர்புல் பிரசென்ட். ஆனா நீங்க ரொம்ப பணம் செலவழித்து விட்டீங்க"

"அப்படியெல்லாமில்லை. உங்களுக்கப் பிடித்ததாயிருப்பதே மகிழ்ச்சி. பிரசென்ட் எப்போதும் பயன்படத்தக்கதாகவும் இருக்க வேண்டும். மற்றது..."

"என்னை மறக்காமலும் இருக்க வேண்டும்" என்ற வார்த்தையை விழுங்கி விட்டான்.

"ஏதோ சொல்ல வந்தீர்களே" – சுகன்யாவின் குரல்

"தமிழ் பாட்டுகள் என்றும் மறக்க மாட்டீர்கள்"

குமுதினி காப்பியுடன் வந்தாள். சுகன்யா பரிசைக் காட்டினாள். குமுதினி சொன்னாள் :

"நான் பரிசு வேண்டாம் என்ற போதும் உன் நினைவாகக் கொண்டு வந்தார். இருவருக்குமே பயன்படும். தாங்ஸ்"

"உங்கள் பேத் டேக்கும் எங்களை அழைப்பீர்கள்"

"கட்டாயம் அழைப்பேன். பரிசு வாங்கமாட்டேன்"

"அழைத்தாலே போதும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதற்கு ஒரு கண்டிஷன்"

"என்ன"– தயக்கத்தோடு மகாதேவன் சொன்னான்.

"உங்க பேத்டேக்கும் எங்களை அழைக்க வேண்டும்"

"நான் பேத்டே கொண்டாடுவதில்லையே..."

"நாங்க இங்கேயே கொண்டாடுவோம்"

"நான் பேத்டே நாளைச் சொல்ல மாட்டேனே"

"அதை என்னால் அறிந்து கொள்ள முடியும். நீங்க இங்கே வருவீங்க. நாங்க மூணுபேருமாகக் கொண்டாடுவோம். அது முக்கிய நாளாகவும் இருக்கும்"–குமுதினி சொன்னாள்.

"சரி பார்ப்போமே. இன்றைய அழைப்புக்கு நன்றி. விஷ் யு ஆல் த பெஸ்ட்" – சுகன்யாவைப் பார்த்துக் கடைசி வார்த்தையைச் சொன்னான்.

## 2.4

மகாதேவன் அங்கு வந்து மூன்றரை வருஷமாகியும் குமுதினி, சுகன்யா போன்றவர் நட்பும் தனிமையைப் போக்கும் புத்துணர்வும் முன்னர் என்றும் ஏற்படடதில்லை. இரு பெண்களிலும் தன்னை முற்று முழுதாக நேசிப்பர் எவர், தான் மனதார விரும்புவர் யார் என்பதைத் தெளிவாக, உறுதியாக அவனால் அறிய முடியவில்லை. எவர் மேல்? குமுதினியா? சுகன்யாவா? இருவர் மேலுமா?

இருவரிலும் தனித்தனிச் சிறப்புகளை அவனால் காணமுடிந்தது. குமுதினி உரமான ஆளுமை உள்ள பெண். தன் காலில் நிற்கத் தக்க துணிவுள்ளவள். எதைப் பற்றியும் தனிப்பட்ட கருத்துள்ளவள். அவளது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்ப விபரம் முழுவதையும் அவனால் முற்றாக அறிய முடியவில்லை. அவற்றைப் பற்றி விபரமாகக் கேட்டறியவும் அவன் விரும்பவில்லை. கேட்டால் அவள் தவறாகப் புரிந்து விடலாம் எனவும் எண்ணினான்.

சுகன்யா கிரீன் கார்டு இல்லாத அடக்கமான பெண், அவளது குடும்ப விபரங்களையும் அவனால் கேட்டு அறிய முடியவில்லை. அவற்றைப் பற்றி விசாரித்தால் திருமணத்திற்காக விசாரிக்கிறார் என சந்தேகப்படலாம் எனவும் எண்ணிக் கொண்டான். இடையிடை அவரவர் கூறுவதை மட்டும் கிரகித்துக் கொண்டான்.

கூட்டுக் குடும்பத்தில் வாழ்ந்து கொண்டு தாய், தந்தையர், குடும்பத்தவர் அனுமதி தராத கலியாணத்தைச் செய்வது, ஊருக்கு அழைத்துச் செல்வது ஆகிய பிரச்சனைகளையும் மகாதேவன் கற்பனையாக எண்ணிப் பார்த்தான்.

திருமண விஷயங்களைப் பேசி அவர்களது உறவுகளையும் முறித்துவிட அவன் விரும்பவில்லை.

ஆனாலும் அவர்களை அளவிட்டு அறியத்தக்க சந்தர்ப்பம் ஒன்றை எதிர்ப்பார்த்தான். அவன் எதிர்ப்பார்த்ததை விட வாய்ப்பு விரைவிலேயே ஏற்பட்டது.

ஒரு வார இறுதியில் நயாகரா நீர்வீழ்ச்சி பார்க்க இருவரையும் அழைத்துச்செல்வதாகக் குமுதினியிடம் போனில் தயக்கமாகவே சொன்னான். அங்கிருந்து ஏழு,எட்டு மணி நேர டிரைவ்விங். எப்படியும் சனிகாலையில் புறப்பட்டால் மோட்டல் ஒன்றில் தங்கி மறுநாள் பார்த்துவிட்டு ஞாயிறு இரவே திரும்ப முடியும்.

"அழைப்புக்கு ரொம்ப நன்றி. நானே இதுவரை நாள் நயாகரா பார்த்ததில்லை. ஒரு தடவை போக என்றே எண்ணியிருந்தேன்" – குமுதினியின் பதில் ஆர்வமூட்டுவதாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சுகன்யா ?"

"அவள் எங்கே நயாகரா பார்த்தாள். உங்களுக்கு வசதியான வீக் என்ட் போகலாம். ஆனால் ஒரு கண்டிசன்."

"பரவாயில்லை. சொல்லுங்கள்"

"செலவில் பாதியை நாங்க பொறுப்பெடுத்துக் கொள்ள வேண்டும்"

"அது பிரச்சனையே இல்லை. பிறகு பார்க்கலாம். நீங்களும் வெள்ளையராகி வருகிறீர்கள்."

"என்னுடைய காரில் கூடப் போகலாம் சேவிஸ்ஸுக்குப் போடட்டா" – குமுதினி சொன்னாள்.

"வேணாம் என் காரிலேயே போய் விடலாம். அடுத்த வீக் என்டே எனக்கு வசதியாகும். சுகன்யாவையும் கேட்டுச் சொல்லுங்கள்"

ஒய்வாகப் பேசி பல உள் விஷயங்களையும் அறிந்து விடலாம் என்ற தன் திட்டத்திற்குப் பதிலை ஆவலோடு எதிர்ப்பார்த்துக் கொண்டிருந்தான்.

அரை மணி நேரத்தில் போன் வந்தது.

"சனிக்கிழமை காலையில் புறப்படலாம்"

"காலை ஆறுமணிக்குத் தயாராக இருங்கள். அங்கு வந்து விடுவேன்."

"காப்பி, டிபன், லஞ்செல்லாம் நானே தயாரித்துக் கொண்டு வருகிறேன். நீங்க காரை மட்டும் ஒட்டி வந்தால் போதும்" – குமுதினி கூறினாள்.

"டிரைவராகவா ?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நானே பாதித்தூரம் ஓட்டுகிறேனே ,டிரைவராக"

"தாங்ஸ்"

சனிக்கிழமை காலையில் ஆறுமணிக்கு அவர்கள் வீட்டை அடைந்தான். மேலேயிருந்து பார்த்தாலே காரின் வரவு அவர்கட்குத் தெரியும். அங்கே ஏறிச் சென்று நேரத்தை வீணாக்கவும் மகாதேவன் விரும்பவில்லை.

காரை விட்டு இறங்கி வாசலைப் பார்த்து நின்றான். பான்டும் சேட்டுமாக ஒரு கையில் சிறிய சூட்கேஸ், மறுகையில் ஒரு கூடையுடன் குமுதினி மட்டும் நடந்து வந்தாள்.

மகாதேவன் முன்னே சென்று சூட்கேசை வாங்கியபடியே வியப்போடு குரல் ஒலிக்கச் சொன்னான் :

"சுகன்யா"

" அவளுக்கு உடம்பு சரியில்லை. நாம மட்டும் போகலாம்"

"என்ன உடம்புக்கு"

"வழக்கமாகப் பெண்களுக்கு மாதம் தோறும் வரும் பிரச்சனை தான்"

"வெரி அன்பார்ச்சுநேட்"– கூறியபடி மாடியைப் பார்த்தான். டிரெஸ்ஸிங் கவுனுடன் மேலே நின்று சுகன்யா கைகாட்டினாள்.

சூட்கேசையும் கூடையையும் டிக்கியில் வைத்துவிட்டு காரை ஓட்டினான். முன் சீட்டிலே குமுதினி.

இருவரும் பல விஷயங்கள் பற்றியும் பேசிக் கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரை அந்தத் தெரு டிராக்கில் வேகமாக ஓட்ட நேர்ந்ததால் அதிகமாகப் பேசமுடியவில்லை. வழியிலுள்ள விசித்திரமான விளம்பரங்கள், கட்டிங்களை மட்டும் சுட்டிக் காட்டினான்.

காலை உணவுக்காக தெருக்கரை நீரோடைப் பக்கமாக மகாதேவன் வண்டியை நிறுத்தினான்.

குமுதினி கூடையை எடுத்து வந்து மூடியிருந்த பெட்சீட்டை விரித்துவிட்டு கட்லெட், சான்ட் விச், ரொட்டி, பட்டர், சீஸ், ஜாம், பழம் எல்லாவற்றையும் பரப்பினாள்.

"இத்தனையா ?"

"லஞ்சுக்கும் வேண்டுமல்லவா ?முழுவதையும் சாப்பிட்டு முடிக்க வேண்டாம்."

மகாதேவன், உணவு பரப்பிய சீட்டுடன் குமுதினி உட்கார ஒரு 'சினாப்' எடுத்தான்.

மகாதேவன் சான்விச் இரண்டையும் பனானா ஒன்றையும் எடுத்துக் கொண்டான். குமுதினி பட்டரும் ஜாமும் பூசி ரொட்டி சாப்பிட்டாள். ஒரு கட்லெட்டையும் எடுத்துக் கொண்டாள்.

பிளாஸ்கிலிருந்து மகாதேவனுக்குக் காப்பி ஊற்றி வழங்கினாள்.

"வழியிலே கே அசோஸியேசன் போர்ட் பார்த்தீங்களே அதைப் பற்றி என்ன சொல்லுவீங்க ?"

"கேயைப் பற்றி உங்களுக்குத் தானே அதிகம் தெரிய வேண்டும். நீங்க லெஸ்பியனைப் பற்றி என் கருத்தை அறிவதற்காகவே கேட்பதாகக் கருதுகிறேன்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்படியே இருக்கட்டும். நீங்க சொல்லுங்களேன்." – மகாதேவன் கேட்டான்.

"மனித சமுதாயம் தோன்றிய காலத்திலிருந்து இத்தகைய பாலினப் பழக்கங்கள் இருந்து வந்துள்ளன. நம்ம நாட்டில் இல்லை என்று சொல்லிவிட முடியாது. எயிட்ஸ் விளம்பரம் ஆரம்பித்தபிறகு தெருக்களிலேயே 'ஓரினச் சேர்க்கை எயிட்ஸ்க்கு வழிவகுக்கும் என்று பிரச்சாரம் செய்வதோடு ரேடியோவிலும் 'ஆணுறை அணியுங்கள் எயிட்சைத் தடுங்கள்' என்று பள்ளிப் பிள்ளைகள் அறியும் அளவிற்கெல்லாம் பிரச்சாரம் செய்கிறார்கள். அங்கேயும் பரவலாக இருப்பதாலேயே செய்கிறார்கள். இங்கே முன்னேறியதாகக் கூறப்படும் முதலாளித்துவச் சமூகத்தில் அரசியல், சட்ட, சொத்துரிமைப் பிரச்சனைக்காக, வெளிப்படையாகவே இத்தகைய பாலின்ப உறவுகளையும் குழுக்களையும் கூறுகிறார்கள். அவ்வளவே."

"அங்கே நம்ம ஊரில் உள்ள தலைவர்கள் இதெல்லாம் இந்து கலாசாரத்திற்கு ஏற்க முடியாதவை என்கிறார்கள்."

"அங்கே பார்ப்பவர்களுக்கு இங்கே நடப்பவை அநாகரீகமாகத் தோன்றும். அதே போல இங்கே இருந்து நமது சமூகத்தைப் பார்ப்பவர்களும் அநாகரிக சமூகம் என்றே கூறுகின்றனர்"

"எதை வைத்துச் சொல்லுகிறீர்கள் ?" – மகாதேவன் குமுதினியின் கருத்துகளை அறிய முயன்றான்.

"அங்கே ஜாதகம், ஜாதி பார்த்து சீர், சீதனம் பேசி பெண் பார்த்து, சுப நேரம் கணித்து, ஆடம்பரமாக, பிராமணர் புரியாத மொழியில் மந்திரம் ஓதி பதினாறு பதினெட்டு வயசுப் பெண்ணை இருபத்தைந்து வயசு ஆணுக்கு தாரை வார்த்து, தாலிகட்டிக் கொடுத்து விருந்துண்ணுகின்றனர். ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் இத்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சடங்கின் பின்னர் பாலுறவுக்கா, பாலின்பத்திற்கா அன்றே அனுமதியும் வழங்குகின்றனர். இதுதான் இந்து சமய கலாச்சாரமா? என்று இவர்கள் கேட்கிறார்கள். அது மட்டுமல்ல பெண்ணுக்கு முதலிரவு அன்று பாலுறுப்பிலிருந்து இரத்தம் வரவேண்டும் என்றும் எதிர்ப்பார்க்கிறார்கள். இது ஆணாதிக்கத்தின், ஆணாதிக்க சமூகத்தின் குரூரமான கலாச்சாரப் பிரதிபலிப்பாகாதா?''

''ம்ம்..'' கூட்டியபடியே மகாதேவன் கூடையுடன் காரை நோக்கி நடந்தான் குமுதினி பின் தொடர.

குமுதினி தானே நண்பகல் வரை வண்டியை ஓட்டுவதாக ஸ்டெயரிங்கை எடுத்துக் கொண்டாள்.

மகாதேவன் அவளது கூற்றுகளை மனதில் போட்டு ஆராய்ந்து கொண்டான். மேலும் அவளிடமிருந்து விளக்கம் கேட்க வேண்டும் என எண்ணிக் கொண்டான்.

குமுதினி நிதானமாக, வேகமான முதல் ராக்கில் காரை ஓட்டிக் கொண்டிருந்தாள்.

கனடா பார்டருக்கு வர முன்னரே காஸ் போட்டு லஞ்சையும் முடித்து விடுவோம் என மகாதேவன் நினைவூட்டினான். அவர்களைப்போல சுற்றுலா வந்து ஒய்வெடுக்கும் கார்களோடு 'பார்க்'செய்துவிட்டு குமுதினி பின்புறமாக வந்தாள். மகாதேவன் மீண்டும் கூடையை எடுத்து வந்து ஓரமாக வைத்ததும் முன்போலவே பெட் சீட்டை விரித்து அவள் யாவையும் பரப்பினாள்.

உணவுண்டு பழம் சாப்பிட்டுப் பசியாறியதும் எஞ்சியிருந்த காப்பியை இரண்டு கப்பில் ஊற்றி, ஒன்றை மகாதேவனிடம் தந்தாள். கார் ஓட்டிய களைப்பில் அவ்வேளை அதிகம் பேசமுடியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாதேவன் காரை ஓட்டி, ராங் நிரம்ப காஸ் நிரப்பினான். அவன் வரமுன்னர் குமுதினி காஸ் பில்லைக் கொடுத்துவிட்டாள்.

கனடா பார்டரில் கியூ வரிசையில் கார்களும் பஸ்களும் நின்று போலிஸார்,கஸ்டம்ஸ் ஒவ்வொன்றாகப் பார்வையிட்டு வழியனுப்பினர்.

எல்லையைக் கடந்ததும் வழிகாட்டி அம்புக்குறிகளைப் பார்த்து வண்டியை மகாதேவன் ஓட்டிக் கொண்டிருந்தான். அவனது அலுவலக நண்பன் கூறியபடி ஓரமாக வந்த மோட்டல்களைப் பார்த்தபடி ஓட்டினான். ஓரிடத்தில் "ரூம்ஸ் எவெல்லபிள்" என்ற போர்டைப் பார்த்து அங்கே காரைத் திருப்பினான்.

வாயிலில் டிக்கியிலிருந்து இரண்டு சூட்கேசுகளையும் இறக்கிவிட்டு காரைப் பார்க் பண்ண மோட்டலின் பின்புறமாக மகாதேவன் ஓட்டினான். பார்க் செய்து விட்டுத்திரும்பியபோது அவன் மனதில் குடைந்து கொண்டிருந்த பிரச்சனை ஒன்று தீர்ந்திருந்தது.

மகாதேவன் – குமுதினி இருவருக்குமாகப் பெயர் போட்டு ஒரு ரூமே புக் பண்ணி குமுதினியே முன் பணம் கொடுத்திருந்தாள். சூட்கேஸ் இரண்டும் அறைக்குப் போய் விட்டது. ரூம் சாவியுடன் ஐந்தாவது எண் அறைக்கு மகாதேவனை அழைத்துச் சென்றாள்.

டபிள் பெட் போட்ட ரூம்; குமுதினி சூஸை கழட்டிவிட்டு ஒரு பெட்டில் கண்ணை மூடிக் கொண்டு நிமிர்ந்தபடி படுத்துக்கொண்டாள். பல வர்ண செக்சேர்ட், லையிட் புளூபான்ட்.

ஐந்து மணி வரையில் புறப்பட்டு ஒரு ரவுண்ட் அடித்துவிட்டு டின்னரை முடித்துவிட்டு ரூமுக்கு வரலாம் என்பதே ஏற்பாடு. அதுவரை பிரயாணக் களை தீர ஓய்வு.

மகாதேவன் அசதி எதுவும் காட்டாதவனாக டையை தளர்த்திவிட்டு ரூறிஸ்ட் ஹைடை எடுத்துப் படித்துக் கொண்டிருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
2003-7-26.
LIBRARY.

## 2.5

ஐந்து மணி வரையில் குமுதினியும் மகாதேவனும் காரில் ஏறி சுற்றுலாக் கூட்டத்துடன் நயாகரா வீழ்ச்சியின் ஒரு பகுதிப் பார்த்துப் பிரமித்து நின்றனர். நீர்வீழ்ச்சிக்கு ஒளியேற்றப்பட்ட பின்னர் மேலும் ரம்மியமாக இருந்தது.

சம்மரின் பிற்பகுதி; எட்டு மணி வரையில் அங்கு நின்று ரசித்த பின்னர் திரும்பும் வழியிலுள்ள 'ரெஸ்ரறண்டில்' பவ்வும் ரோல்ஸ்ஸுடும் கோக்கும் லயிட்டாகச் சாப்பிட்டுவிட்டு மோட்டலுக்கு ஒன்பது வரையில் திரும்பினர்.

ரூமைத் திறந்ததும் குமுதினி டவல் சோப்புடன் பாத்ரூமுக்குள் நுழைய முன்னர் மகாதேவனிடம் சொன்னாள் :

"நான் முதலில் ஷவர் எடுக்கிறேன். பிறகு நீங்கள் போகலாம் யு வோண்ட் மையிண்ட்"

பத்து நிமிஷத்தில் ஷவர் முடித்து, முடியில் நீர் படாதபடியான பிளாஸ்டிக் கவருடன் மார்புக்கு மேலாக டவலைக் கட்டிக் கொண்டு வந்தாள்.

மகாதேவனும் டவல் சோப்புடன் பாத்ரூம் உள்ளே நுழைந்தான்.

அவன் நீராடி, இரவு தூங்கும் பியாமா உடை அணிந்து தலையைத் துவட்டியபடி வெளியே வந்தான்.

கைவெட்டிய 'நைட்டிரஸ்ஸுடன்' நிலைக்கண்ணாடி முன் நின்று நறுமண ஆடிக் கோலோனை கழுத்திலும் கமக் கட்டுகளிலும் குமுதினி ஸ்பிரே பண்ணிக் கொண்டிருந்தாள். நறுமணம் வீச எதிர்பாராத தேவதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA 2001-7-26

ஒன்று தன் கண் முன்னே நிற்பதாக, கனவு காண்பது போல மகாதேவன் மயங்கினான்.குமுதினி திரும்பினாள்.

"மிஸ்டர் மகாதேவன் 'என்னைப் பார்க்கும் போது எத்தனை செக்ஸ்' பீலிங் கிளு கிளுப்பு உங்களுக்கு ஏற்படுமோ அதே போலவே எனக்கு மட்டுமல்ல, எந்தப் பெண்ணுக்கும் ஏற்படும். இது உண்மை. இதற்குப் புனிதமான காதல், கீதல் என்ற வார்த்தையெல்லாம் வேணாம். நீங்களும் என்னை விரும்பினால் வீ வில் ஹாவ் சம் செக்ஸ். இதுவும் ஒரு வகை இன்பம் தானே."

மகாதேவன் எதிர்பாராத அனுமதி பெற்றவனாக அவளை நெருங்கி வந்தான். உணர்ச்சிகள் உடலை உறுத்தின.

"ஒரு கண்டிசன் , இன்ரகோஸ் வேண்டுமானால் உறை போட்டுக் கொள்ள வேண்டும். இதோ நீங்கள் எதிர்பாராதிருந்தாலும்,மறந்தாலும் என நானே ஒரு பாக்கெட் வாங்கி வந்தேன். வைத்துக் கொள்ளுங்கள். என்னையும் உங்களைப் போன்ற மனித உருவமாகப் பாருங்கள். செக்ஸ் இன்பமான, மென்மையான உணர்வு. வன்முறை வேண்டாம்"

நெருங்கி வந்த மகாதேவனை குமுதினி அணைத்துக் கொண்டு சென்று படுக்கையின் மேல் உட்கார்ந்தாள்.

சிறிது நேரம் கழித்து குமுதினி எழுந்து கூடையிலிருந்த கோக் பாட்டிலை உடைத்து பாதியை ஒரு கிளாஸில் ஊற்றி மகாதேவனிடம் தந்தாள். மின்விளக்கை அணைத்துவிட்டுப் படுத்துக் கொண்டனர்.

காலையில் மகாதேவன் எழுந்தபோது அதிகாலை ஐந்து மணி. மின் விளக்கைப் போட்டு விட்டு குமுதினியை 'டார்லிங், ஹனி' என்று சொல்லியபடி அணைத்தான்.

சிறிது நேரத்தில் எழுந்து பிரஷ்ஷை எடுத்துப் பற்களைத் தீட்டியபடி பாத்ரூமை நோக்கி நடந்தான். குமுதினி கண்களை மூடியபடி நிமிர்ந்த நிலையில் படுத்திருந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கம் டு த பாத்ரூம் டாலிங்"

பத்து நிமிடம் கழித்து உணர்ச்சிகள் அடங்க, குமுதினியும் எழுந்து, பிரஷ்ஷை எடுத்து பற்களைத் தீட்டி விட்டு ரூமிலேயே இருந்த பைப்பில் வாயை அலசிவிட்டு, திறந்திருந்த பாத்ரூமில் நுழைந்தாள். ஷவர் ஓடிக் கொண்டிருந்தது.

தலையைத் துவட்டியபடி மகாதேவனே முதலில் ரூமுக்குள் வந்து பியாமா உடையை மாட்டிக் கொண்டான். டெலிபோனை எடுத்து காப்பிக்குச் சொல்லிவிட்டு தலையை வாரினான். முடி முற்றாக உலரவில்லை.

குமுதினியும் ரூமுக்குள் வந்து டிரெஷ்ஷிங் கவுண் ஒன்றை அணிந்து கொண்டாள்.

காப்பியுடன் பட்டர் தடவிய ரொட்டியும் வந்தது. சாப்பிட்டபடி பேச்சாடலில் ஈடுபட்டனர்.

"நேற்று லெஸ்பியன் பற்றிப் பேசினீங்க. லெஸ்பியன் உறவு சார்ந்து இந்தியாவில் வெளியிடப்பட்ட சினிமா பற்றி இந்தியப் பத்திரிகைகள் அரசியலாரின் விமர்சனங்களைப் படித்தேன். இந்து மத கலாசாரத்துக்கு ஒவ்வாதது என்று சில தியேட்டர்கள் எரிக்கப்பட்டு சில மாநிலங்களில் அப்படம் தடை செய்யப்பட்டது" – மகாதேவன் சொன்னான்.

"நானும் படித்தேன். ஆணாதிக்கச் சமூகம் மதத்தோடு இணைந்து பெண்ணினத்தை ஒடுக்கும் பல வழிகளில் இதுவும் ஒரு வழியாகும். இங்குள்ள உற்பத்தி உறவு முறை, அதைச் சார்ந்த அமைப்பே லெஸ்பியன் கழகங்களை ஏற்படவும் வழி வகுத்தது. முதலாவது இந்தக் கழகங்கள் கூறும் பெண்ணியம் சார்ந்த கருத்துகளுக்குப் பகுத்தறிவு, மனித உரிமை சார்ந்து தக்க பதில் கூற வேண்டும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எங்கே சில காரணங்களைக் கூறுங்களேன்"

"திருமண உறவு என்பது கணவரோடு மட்டும் பாலுறவு, குழந்தைப்பேறு , சமையல், வீடு பேணல் , துணிதோய்த்தல், கணவனின் பணிகள் எனக் குடும்பத்துக்கு அடிமையாகப் பெண்ணைக் கட்டுப்படுத்துகிறது. அதே வேளை லெஸ்பியன் உறவில் இத்தகைய கட்டுப்பாடுகள் எதுவும் இல்லை. திருமண உறவை விட்டு பெண் வெளியேற வேண்டுமென்றால் மூன்றாவது நபரிடம் சென்று பல பொய்கள், பிணக்குகள் பற்றி சட்ட ரீதியாகப் பேச வேண்டும். இங்கே எவ்வேளையும் பெண் வெளியேறலாம்."– குமுதினி சிறிது காப்பி பருகினாள்.

"இன்னும் இருக்கிறதா ?"– குமுதினி கூறிய காரணங்கள் தனி மனித உரிமை, சுதந்திரம் பேசுவதாக இருந்தது. மேலும் அவளது கருத்தை அறியும் நோக்குடன் கேட்டான்.

"குடும்பத்தில் பெண்களுக்குப் பொறுப்புகள் அதிகம். கூலி மதிப்பிடப்படாத உழைப்பு, கணவனின் அதிகாரம், விரும்பியபடி வெளியே செல்லமுடியாத கட்டுப்பாடு, குடும்பத்துள் அடித்தல், உதைத்தல் போன்ற வன்முறைகள் மட்டுமல்ல கணவன் விரும்பிய வேளையெல்லாம் பாலியல் வன்முறை. இப்படிப் பலவற்றைக் கூறுகிறார்கள். திருப்தியற்ற பாலுறவு; பெண் வெளியேசொல்ல முடியாத நிலை; சொன்னாலும் ஆணால் அவற்றை முற்றாகப் புரிந்து கொள்ள இயலாது."

"ஹெற்றரோ செக்சை விட லெஸ்பியனில் பாலின்பம் அதிகம் என்று கூறுவது போலிருக்கிறது."

"ஆமாம். ஆணுக்கும் பெண்ணுக்கும் பாலின்ப உறுப்புகள் வேறாக உள்ளன. ஆண் ஓரிடத்தில் மட்டும் குவிந்துள்ள இன்ப உறவை முடித்துக் கொண்டு போய்விடுகிறான். ஒரு பெண்ணால்தான் மற்றொரு பெண்ணின் பாலின்ப உறுப்புகளின் தன்மைகளையும் தரக்கூடிய முழுமையான இன்பத்தையும் அறிய முடியும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இன்ரகோஸ்"

"குழந்தை பெறும் பொறுப்பை ஏற்க பெண் தயாரானால்தான் அது தேவைப்படும். உச்சக்கட்டம் தரும் என்று சொல்லிவிட முடியாது. எந்த விரும்பிய ஆணையும் அழைத்து பெண் தன்னைக் கட்டுப்பாடின்றிச் சினைப்படுத்திக் கொள்ள முடியும். அல்லதும் நவீன விஞ்ஞான முறைகள், ஸ்பேம் வங்கிகள் எல்லாம் வந்துவிட்டனவே."

"இந்து மதத்தோடு ஆணாதிக்கம், பாலின்பம் பின்னியிருப்பதாகச் சொன்னீங்க. இங்கேயும் அப்படித்தான் என்று சொல்லமுடியுமா?"– மகாதேவன் கேட்டான்.

"மகாவீரர், புத்தர், யேசுகிறீஸ்து, அல்லா உட்பட வழிபடும் எல்லா மதத்தலைவர்களும் ஆண்களே. அந்த மதக் கட்டுப்பாடுகள், தனிச் சொத்து, குடும்ப அமைப்புகளையும் கட்டுப்படுத்துகின்றன. கத்தோலிக்க மதம் குடும்பக்கட்டுப்பாட்டை எதிர்க்கிறது. இன்றைய பண்ட உற்பத்தி ஏற்படுத்தி வரும் நடைமுறைகளையும் முற்றாகக் கட்டுப்படுத்த முடியாத போதும் மதங்கள் கண்டித்துக் கொண்டிருக்கிறது. போலிக்கும் பொய்மைக்கும் கூட துணை போகிறது."

"போலி,பொய்மை என்று எதைச்சொல்லுறீங்க"– மகாதேவன் கேட்டான்.

"மொனிக்கா கிளின்டன் விவகாரத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அமெரிக்க ஆணாதிக்க நடைமுறையில் இது பெரிய தவறல்ல. கிளின்டன் தகாத பாலுறவு வைத்திருந்தார் என்பதையிட்டு காங்கிரஸ் பிரதிநிதிகள் உட்பட நாடு பூராவும் கூக்குரலிட்டார்கள். அன்று பாபம் செய்யாதவன் முதற்கல்லை எடுத்து வீசட்டும் என்று யேசுநாதரே கூறியதை மறந்து விட்டு கண்டனக் குரல் எழுப்பினர். அமெரிக்க நடைமுறை வாழ்வில் மனைவி இருக்க வேறு பெண்களுடன் பாலுறவு கொள்ளாதவர் மிகக் குறைவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படியிருந்தும் போலியாக, பொய்மையாகவே இந்தப் பிரச்சனையை எழுப்பினர். அதற்கு அடிப்படையாக சட்டங்களுக்கு மேலாக நின்றது 'சோரம் போகாதே' என்ற மதப் பிடிப்பு, ஏழாவது கட்டளை சிந்தனையில் ஊறி நின்றதுவே."

"ஆமாம் மொனிக்கா கிளின்டன் உறவின் அடிப்படையில் இருந்த மத ஆதிக்கத்தை நான் மறந்துவிட்டேன். அமெரிக்கர் பொய்மையைத் தூக்கி பறையடித்துக் கொண்டிருந்தார்கள், உலகமெல்லாம் பார்த்துச் சிரித்த போதும்."

இருவரும் உடைகளை மாற்றிக் கொண்டு புறப்பட்டனர். குமுதினியின் கருத்துகள் அவனது சிந்தனையைத் தூண்டிக் கொண்டிருந்தன.

ஞாயிற்றுக் கிழமையான படியால் சுற்றுலாப் பயணிகளின் கார்களும், பஸ்களும், மோட்டர் சைக்கிள்களும் ஓடிக் கொண்டிருந்தன.

ரூறிஸ்ட் ஹைட்டில் படித்தபடி ஆங்காங்கே நின்று நீர் வீழ்ச்சியைப் பார்த்து ரசித்தனர்.

அந்த ரம்மியமான காட்சியை மகாதேவன் தொடர்ந்து போட்டோ பிடித்தான்.

ரூறிஸ்ட் ஹைடிலிருந்து தான் படித்த விபரங்களை மகாதேவன் விரிவாகக் குமுதினியிடம் விளக்கினான்.

நயாகரா ஆற்றிலிருந்து நீர் வீழ்ச்சி அமெரிக்கப் பகுதியிலும் கனடா பக்கமாகவும் விழுகிறது. கனடா பகுதியிலேயே சுற்றுலாப் பயணிகள் நீர்வீழ்ச்சியைப் பார்த்து, வியப்படைந்து மகிழ்வர். ஹோஸ்சூ நீர் வீழ்ச்சி– குதிரை லாடம் போல அமைந்துள்ள நீர்வீழ்ச்சி– 800 மீட்டர் தூரத்துக்கு விரிந்துள்ளது. நீர் வீழ்ச்சியின் உயரம் 50 மீட்டர்; அமெரிக்கப் பகுதியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

300 மீட்டருக்கே பரந்துள்ளது. இவ்வியற்கை நீர்வீழ்ச்சி மலிவாக மின்சாரம் பெற இரு நாடுகளுக்குமே உதவுவது தனிச்சிறப்பாகும். இது தவிர ஆண்டுதோறும் ஒரு கோடி உல்லாசப் பயணிகளால் கிட்டும் வருமானம் தனிச்சிறப்பானது. அமெரிக்கா, கனடாவிற்கு வரும் பயணிகள், உல்லாசப் பயணிகள் யாவரும் நயாகரா நீர்விழ்ச்சியைக் கண்டுகளிக்கத் தவறுவதில்லை.

வண்டியில் நீர் வீழ்ச்சியின் தூரத்தையும் அளந்தனர், ஒரு மூலையிலிருந்து மறுமுனை வரை.

12,000 ஆண்டுகளின் முன் வரை பனிக்கட்டிப் பாறைகள் வெப்பத்தில் உடைந்து நீர்வீழ்ச்சியாக விழத் தொடங்கியிருக்கலாமாம். செவ்விந்தியர் அப்பகுதியில் வாழ்ந்தனர். ஐரோப்பியர் 17ஆம் நூற்றாண்டிலேயே நீர்வீழ்ச்சியைக் கண்டுபிடித்தனர்.

நீர் வீழ்ச்சியைச் சிறப்பாகப் பார்க்கக் கூடியதாக ரூறிஸ்ட் ஹைடில் கூறப்பட்ட மூன்று முனைகளிலும் நின்று பார்வையிட்டனர்.

பின்னர் 85–150 மீட்டர் உயரங்களில் பார்வைக்காகக் கட்டப்பட்டிருந்த நான்கு உயர் கோபுரங்களில் ஒன்றிலாவது ஏறிப்பார்க்க விரும்பினர். கூட்டம் குறைவாக இருந்த மூன்றாவது கோபுர நுனியில் ஏறி நீர்வீழ்ச்சியைத் தரிசித்தனர். கீழே பார்க்க அதல பாதாளமாகத் தெரிந்தது. அங்கிருந்து பல கோணங்களிலும் போட்டோ எடுத்தனர்.

கீழே இறங்கி நீர் வீழ்ச்சி முனை வரை சென்ற பின்னர், எதிரே இருந்த குயீன் விக்டோரியா பூங்காவையும் சுற்றிப் பார்த்தனர்.

இருவரும் தனித்தனியாக நீர்வீழ்ச்சிக்குப் புறமுதுகு காட்டிப் படமெடுத்தனர். பின்னர் இருவருமாகப் படம் எடுத்துக் கொண்டனர். தங்கள் காரையும் பதிவு செய்வதாகவும போட்டா பிடித்தனர். அதே தெருவில் ஆங்காங்கே நின்றும் நடந்தும் சிரித்தும் பட மெடுத்து மகிழ்ந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பகல் 12 மணி வரையில் அப்பக்கமாக இருந்த உணவு விடுதிக்குச் சென்றனர். களைப்பாற உட்கார்ந்து ஒய்வாக உணவருந்தமுடிந்தது. மகாதேவனே பில்தொகையைச் செலுத்தினான். ஒரு மணிவரை மோட்டலுக்குத் திரும்பி, இரண்டு மணி வரை பொஸ்டன் திரும்புவதாகவே திட்டமிட்டிருந்தனர்.

மோட்டலுக்கு வந்து முகம் கழுவி விட்டு சூட்கேசில் உடைகளை வைத்துவிட்டு சிறிது நேரம் ஓய்வெடுப்பதாகத் தலையணையைக் கட்டிலின் ஓரமாகச் சரித்துவிட்டு குமுதினி கைக்கடிகாரத்தைப் பார்த்து ஒய்வெடுக்க முயன்றாள்.

"இன்னும் அரை மணி நேரத்தில் புறப்படலாமே"

மகாதேவனும் தன் சூட்கேசை ஓரளவு சரி செய்துவிட்டு டவல், சோப்பை வைக்கு முன்னரே குமுதினி அருகே வந்து அவளைக் கட்டி அணைத்து முத்தமிட முயன்றான்.

"பிளீஸ் நோ.. நோ.. வீ ஹாட் இனவ், சாரி..." – அவள் தடுத்துக் கொண்டாள்.

மகாதேவனுக்கு ஒரே ஏமாற்றமாகி விட்டது.

"இத்தனை நெருங்கிப் பழகிய பிறகுமா ?ஐ லவ்யு டாலிங் "

"இதெல்லாம் பாலுறவின் ஆரம்ப வார்த்தைகள். எனக்கு விருப்பமில்லையென்றால் வன்முறையாக எதையும் திணிக்க வேண்டாம்" – குமுதினியின் உறுதியான குரல்.

"அப்போது காலையில் நாங்கள் பழகிய உறவு..."

"அது செக்ஸில் நாம் கண்ட இன்ப அனுபவம், அவ்வளவே. நான் உங்க மனைவியல்ல. அந்த நிலையில் வந்திருந்தால் இதுவரை வன்முறையாக என் உடையைக் களைந்து உங்க தற்காலிக வெறியைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்த்திருப்பீங்க. பெண்கள் ஆணாதிக்கச் சமூகத்தில் அடிமையாய் இருப்பதால் ... இதுவே உலகெங்கும் நடைபெறுகிறது..."

"எங்க நட்பு இன்றோடு முடிவடைகிறதா?" – மகாதேவனின் சோர்வான குரல்

"அப்படியெல்லாம் சொல்லிமுறிக்க வேண்டாம். நமது நட்பு நட்பாகவே நீடிக்கட்டும். இடையிடையே நான் விரும்பி நீங்களும் விரும்பினால் அல்லது நீங்கள் விரும்பி நானும் விரும்பினால் வீ கான் ஹாவ் ஸம் செக்ஸ் வித் பிளெஸர் . தற் இஸ் ஆல்"

இரண்டு மணி வரையில் இருவரும் புறப்பட்டனர். மகாதேவனே முதலில் காரை ஓட்டினான்.

பழங்களும் பிஸ்கெட்டும் 2 கோக் பாட்டில்களும் இருந்த கூடையில் பிளாஸ்கில் காப்பியும் ரோல்ஸ், பவ், சிலவும் வாங்கிப் போட்டிருந்தனர். வழியில் காரை அதிக நேரம் நிறுத்தாமல் தொடர்ந்து ஓட்டுவதற்காகக் கூடையைப் பின் சீட்டில் வைத்திருந்தனர்.

வழியில் மாலை வேளையில் காரை ஓரமாக நிறுத்தி விட்டு கூடையிலிருந்து ரோல்ஸ், பவ், பிஸ்கெட் காப்பி அருந்தினர்.

அவ்வேளை மகாதேவன் குமுதினியைப் பார்த்துக் கேட்டான் :

"மிஸ் குமுதினி..."

"மிஸ் எல்லாம் வேணாம். குமுதினி என்றாலே போதும்."

"நீங்களும் மகாதேவன் அல்லது தேவன் என்று அழைத்தாலே போதும்.."

"தேவன், இப்போது என்ன சொல்ல வந்தீங்க.."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னிலேயும் மேல்சோவினிஷம்... ஆணாதிக்கம் பார்த்தீர்களா"

"ஆமாம் ரொம்பப் பார்த்தேனே. என் வசதி விருப்பம் கேட்காமலே எனக்கு மேலே ஏறிப்படுத்தீங்க. உங்க ஆசை தீர்ந்ததும் என் நிலைமையைச் சிறிதும் கவனிக்காமல் பாத்ரூம் போய் விட்டீங்க..."

"இது மேல் சோவினிஷமா ?"– மகாதேவன் வியப்போடும் குற்ற உணர்வோடும் கேட்டான்.

"பாலியலிலும் ஜனநாயக உரிமை தரத் தயாரில்லை. பெண்கள் கீழே கிடப்பவர்கள் என்ற ஆணாதிக்கம் மூளையின் முன் நிற்கிறது. என் எடை 56 கிலோ. நீங்க 68–70 வரை இருக்கும். நான் மூச்சையடக்கிக் கொண்டு உங்கள் உருவத்தைப் பார்க்க முடியாத நிலையில் கிடக்க வேண்டும்."

"அதுவும் அப்படியா. ஒரு தவறா ? சாரி! சாரி!"

"இது பரம்பரையாகத் தொடர்ந்து வந்து உங்கள் மூளையிலும் நிற்கிறது, பெண் என் அடிமை என்ற நினைப்பு. என்னை மேலே விட் டால் நான் உங்களை முற்றுமுழுதாகப் பார்த்து மகிழலாம். அதே போல நீங்களும் என் உருவத்தைப் பார்க்கலாமே..."

"ஆமாம், நீங்க சொல்வதிலும் உண்மையிருக்கிறது."

"சொல்லுவதிலும் அல்ல. அதுதான் நூற்றுக்கு நூறு உண்மை. பெண்ணை எளிதில் கர்ப்பமாக்குவதற்கே கீழே போட்டுப் படுத்து விடுகிறார்கள். பாலுறவில் கூட ஜனநாயக உரிமை தராத ஆண்கள் தமது வன்முறையால் அடக்கி ஆள்கிறார்கள். ஆற்றாநிலையில் பெண்களும் இந்த அடிமைக் குடும்ப வலையில் விழுந்து அல்லல்படுகிறார்கள்."

குமுதினியின் யதார்த்தமான கருத்துகள் அவனைத் திணற அடித்தன. எதுவும் எதிர்த்துப் பேசமுடியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமுதினி காரை ஓட்டத் தொடங்கினாள். பொழுது கருக ஒரே போக்குவரத்து நெரிசல் ஓட்டம். வாரவிடுமுறை முடிந்து வெளியூர் போனவர்கள் எல்லோரும் மறுநாள் வேலைக்குப் போவதற்காகத் திரும்பிக் கொண்டிருந்தனர். ஏராளமான விபத்துகள் அவ்வேளையே நடைபெறுவதுபற்றி தான் பத்திரிகையில் படித்தது நினைவில் வந்தது.

எட்டு மணி வரையில் மகாதேவனிடம் ஸ்ரேயறிங்கைத் தந்துவிட்டு சீட்டில் சாய்ந்தபடி பிரயாணச் சோர்வு மேலிட கண்களை மூடிக் கொண்டாள். வீடு வந்ததும் மகாதேவன் தட்டி எழுப்பினான். மாடியில் அவள் வரவுக்காக மின் விளக்கு எரிந்து கொண்டிருந்தது.

மகாதேவன் தன் ஃபிளாட்டுக்குச் சென்றதும் ஷவர் எடுத்துவிட்டுப் படுத்துக் கொண்டான். தூக்கம் வரவில்லை. ஒரே நாளில் ஏற்பட்ட புதிய அனுபவங்கள் இன்ப நினைவுகளைத் தந்த போதும் குமுதினியின் கருத்துகள் அவன் நெஞ்சைத் துளைத்துக் கொண்டிருந்தன. அவள் தன் கருத்துகளால் தன்னைச் சிறுமைப்படுத்தி விட்டதாகவும் உணர்ந்தான். அவளது ஒவ்வொரு செயலும் பேச்சும் புதுமையானது மட்டுமல்ல அவனது அறியாமையையும் ஆணாதிக்கத்தையும் புட்டுக் காட்டுவதாகவும் இருந்தது. நாலுகாலிலிருந்த சிம்பன்ஜி, ஹோமோசேப்பியன் இனம் நிமிர்ந்து இரண்டு காலில் நடமாடி பல லட்சம் வருடங்களில் கருவிகள் செய்யும் மனித இனமாகி, கணக் குழுநிலையில் சுதந்திரமாகவே வாழ்ந்தனர். தனிச்சொத்துடமையும் வேலைப் பிரிவினையுமே பெண்ணை அடிமையாக்கி கீழே கிடக்கச் செய்தது. 'மிருகங்களைக் கூடப் பாருங்கள் பாலுறவில் முன் கால்களை உயர்த்திவிடின் பெண்ணினமே மேலே கிடக்கும். ஓய்வுள்ள வேளை யோசித்துப் பாருங்கள்'. குமுதினியின் கூற்று அவன் சிந்தனையைக் குழப்பிக் கொண்டிருந்தது.

அவன் திரும்ப திரும்ப சிந்தித்துப் பார்த்துக் கொண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றொரு குமுதினியின் கூற்று அவன் மூளையைக் குடைந்து கொண்டிருந்தது.

"பெண்களுக்கு ஆண்களுடனான செக்ஸ் உறவில் கிடைப்பது ஷாடிஸ்ட் பிளெஷர் மட்டுமே எனப் படித்திருந்தேன். திருமணமான தோழியர் சொல்லவும் கேட்டிருந்தேன். அதையும் அனுபவத்தில் காணமுடிந்தது."

புரண்டு புரண்டு படுத்தான். உடற்சோர்வு தலையெடுக்க அப்படியே தூங்கிவிட்டான்.

## 2.6

குமுதினியின் நட்பை மகாதேவனால் விட்டுவிட முடியவில்லை. அதேபோலவே குமுதினியும் சுகன்யாவும் நட்பைத் தொடர்ந்தனர். அவ்விருவரைவிட அவனே அதிக ஆர்வம் காட்டினான். அதற்குரிய அடிப்படைக் காரணத்தை அவனால் முற்றுமுழுதாக அறிய முடியவில்லை. அது மானிட நட்பா, பால்கவர்ச்சியா, காதலா, மொழியால் ஏற்பட்ட பிணைப்பா ? பரீட்சார்த்தமா ?

பெரும்பாலும் சனி,ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களில் சுகன்யாவின் சிப்ட்ரேன் பார்த்து குமுதினி போனில் அழைத்தால் மகாதேவன் அங்கு வந்து போவான். அவனே வலிந்து போன் செய்துவிட்டும் போவான்.

இருவருமாக விரும்பியபடி சமைத்தும் உணவுண்டனர். அத்தகைய தமிழக உணவை அங்கு தேடிப் பெறமுடியாது.

குமுதினியின் அழைப்புக்கு அவன் ஒரு போதும் சாட்டுச் சொல்லுவதில்லை. வேறு பணி இருந்தாலும் அவற்றைத் தள்ளிப் போட்டு விடுவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆண்கள் ஒரு போதும் பெண்களின் அழைப்பைத் தட்டிக் கழிப்பதில்லை. அதுதான் பெண்களின் பலம். கௌரவம்." –குமுதினி ஒரு தடவை சொன்னாள்.

"அப்போது ஏன் ஆணாதிக்கம், மேல் சோவினிஷம் என்றெல்லாம் சொல்லுறீங்க..."

"குடும்பம் என்ற அமைப்பைப் பெண் ஏற்றுக் கொண்டதும் அவர்களை அடிமையாக்கிவிடுவார்கள். குடும்ப உறவு ஆணாதிக்க உறவே."

"பெண்கள் விரும்பித்தானே திருமணம் செய்து கொள்கிறார்களே" – மகாதேவன் சொன்னான்.

"ஆமாம். சுதந்திரமாக வாழமுடியாநிலையில் விழிப்படையாத பெண்களைக் குடும்பம் என்ற வன்முறை வடிவத்தில் நுழைத்து விடுகிறார்கள். அதற்கு மதக் கருத்தியல் முதன்மையாகத் துணை புரிகிறது . சமூக அமைப்பும் பாதுகாப்பு, சமூக அந்தஸ்து, பாலுறவு வாய்ப்பு எனக் கூறித் தள்ளி விடுகிறார்கள்"

"மதமும் அத்தனை பலம் வாய்ந்தது என்று கூறுகிறீங்க. அப்படித்தானே."

"ஆமாம் ஒருவரை அல்லது ஒரு சமூகத்தை ஆயுதம் கொண்டும் வன்முறையால் அடக்கலாம். ஆயுதமின்றி கருத்தியல்களாலும் அடக்கலாம். இங்குள்ள கறுத்தவர் தாமாக ஆப்பிரிக்காவிலிருந்து வந்தவர்களா? துப்பாக்கியால் பயமுறுத்தி, வேட்டையாடி, மிருகங்களைப்போல சங்கிலிபோட்டுக் கட்டியே கப்பலில் ஏற்றி இங்கே கொண்டு வந்து ஆடு, மாடுகள் போல ஏலத்தில் அடிமைகளாக விற்றார்கள். இன்றும் இராணுவம், போலீஸ், சிறைச்சாலைகளைக் காட்டி அச்சுறுத்தி கிறிஸ்துவ மதத்தைப் போதித்து உழைப்புக்குக் கூலிமட்டும் தரும் அடிமைகளாக வைத்திருக்கிறார்கள்" – குமுதினி கூறினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாங்களும் கூலிக்காகத்தானே இங்கே வந்திருக்கிறோம்"

"ஆமாம். சட்டரீதியாகச் சமத்துவம் பேசுவார்கள். ஆனால் கறுப்பர்கள் இரண்டாம் தரப் பிரஜையாகவே எங்கும் கணிக்கப் படுகிறார்கள்."

"வன்முறை மனிதரிலுள்ள இயல்பான சுபாவம், மிருகநிலையிலிருந்து வந்தோம் என்பதை ஏற்க முடியாதா ?"—மகாதேவன் தன் சந்தேகத்தை வினாவாக்கினான்.

"வன்முறை உலகளாவியது. அது மனித சுபாவத்தால் ஏற்படுவதல்ல. இயற்கையை அபகரிப்பதில், சூறையாடுவதில் மனிதரிடை ஏற்பட்ட போட்டியில் வன்முறை கையாளப்படுகிறது. இந்த வன்முறையின் உச்சக் கட்டமாக அமெரிக்கா ஏகாதிபத்தியமாக முன்நிற்கிறது. உலகத்தைத் தன் ஆயுத, பண பலத்தால், வன்முறையால் ஆளுகிறது. அதே வேளை இயற்கையை அத்து மீறிச் சுரண்டியதனால் உலக மக்களுக்கே சுற்றாடல் பிரச்சனை வேறு ஏற்பட்டிருக்கிறது."

"வன்முறை எவ்வாறு, ஏன் ஏற்படுகிறத என்பது பற்றிய உங்கள் கூற்று முற்றாகப்புரியவில்லை."

"வன்முறை ஒரு பிரதேசத்தில் மட்டும் உள்ளதோ அல்ல. மனிதர் வாழும் சூழ்நிலைக்கு உட்பட, கட்டுப்பாட்டு நிலைமைகளை ஒட்டி உலகளாவிப் பரந்து நடப்பதைக் காணலாம் என்றே கூறுகிறேன். தேசங்களிலிருந்து சமூக அமைப்பின் சிறு கூறான குடும்பங்கள் வரை வன்முறை இன்று நிகழ்ந்து கொண்டே இருக்கிறது."

"நீங்க குடும்ப வன்முறைக்குத்தான் அதிகம் அஞ்சுவதாகத் தெரிகிறது."—மகாதேவன் கேட்டான்.

"ஆமாம், அங்கே பெண்களுக்கு வன்முறை ஒரு தொடர் நிகழ்ச்சியாகப் பிறப்பில் ஆரம்பித்து வாழ்நாள் பூராவும் தொடர்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள் ஒரிரு தடவை குடும்பத்தலைவனாலோ, கணவனாலோ அடிவாங்குவதல்ல. உலகெங்குமே தொடர்ந்து பெண்கள் நையப் புடைக்கப்படுகிறார்கள்."

"இங்கே அமெரிக்காவிலுமா?"

"இங்கே சட்டமிருக்கிறது என்று சொல்லுவீங்க. பெரும்பாலும் எல்லா நாட்டிலுமே வன்முறைக்கு எதிரான சட்டமிருக்கிறது. ஆண்டு தோறும் அமெரிக்காவிலேயே ஆயிரக்கணக்கான பெண்கள் கற்பழித்தும் வன்முறையாகவும் கொல்லப்படுகிறார்கள். மதப்போர்வையில் பரிசுத்த மானதாகக் கருதப்படும் குடும்ப அமைப்பை உடைத்து வெளியேற முடியாத கருத்தியலான கட்டுப்பாடுகளுடன் சமூகமும் குடும்ப வன்முறையை மூடி மறைக்கிறது."– குமுதினி சொன்னாள்.

"இங்கே விவாகரத்துகள் எளிதாக வழங்கப்படுகின்றன. பிடிக்காவிட்டால் குடும்பத்தை விட்டு பெண்கள் வெளியேறி விடலாம்தானே. மூன்றில் ஒரு பகுதியினர் விவாகரத்து செய்து கொள்கிறார்களே."

"ஆனால் சமூக அந்தஸ்து, மதக் கட்டுப்பாடுகளால் மீண்டும் மீண்டும் குடும்ப அமைப்பில் நுழைகிறார்கள். குடும்பத்தலைவன் ஆண்மகனே. அரசு அதிகாரம் பெற்றவனும் அவனே. மனைவியை அடிக்க உரிமை பெற்றவனாகச் சமூக அங்கீகாரம் பெறுகிறான். இந்த நிலை இன்று குடும்பத்தை நிராகரிக்கும் புதிய வடிவமாக வளர்வதைப் பார்க்கலாம்"

"அடிக்கிற கைதான் அணைக்கும்... என்பார்கள்"– மகாதேவன் சொன்னான்.

"ஆமாம் குடும்பத்தலைவனே அடித்து விட்டு பின்னர் பச்சாத்தாபம் பேசி, சமாதானம், ஒற்றுமையாகியே குடும்பங்கள் பெரும்பாலும் நீடிக்கின்றன. ஆனால் பெண்மேல் வன்முறை என்பது மோசமான சமூகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றம் எனக் கவனிக்கப்படாமல் மூடி மறைத்துக் காட்ட முயல்வது ஜனநாயகமற்ற போலிப் பொய்மையில்லையா ? குடும்பத்துள் வன்முறை அடிப்பது மட்டுமல்லவே. குடும்பத் தலைவனின் பாலியல் வன்முறை, உழைப்பை அபரித்தல், குழந்தை பெற்று வளர்த்தல், விரும்பியபடி வெளியே சென்று வரமுடியாத கட்டுப்பாடுகள் ஆகிய எல்லாம் பெண்ணினத்தை ஒடுக்குகின்றன. இவை யாவும் கருத்தியலாலும் வன்முறையாலுமே கட்டுப்படுத்தப்படுகின்றன."

குமுதினி விரித்துக் கூறினாள். அங்குள்ள பெண்ணியம் சார்ந்த இயக்கங்களில் சேர்ந்து இத்தகைய தார்க்கீகக் கருத்துகளைக் கற்றிருக்க வேண்டும் என மகாதேவன் எண்ணிக் கொண்டான். அவள் சேகரித்து வைத்திருக்கும் நூல்களும் பெரும்பாலும் பெண்ணியம் சார்ந்த நூல்கள் என்பதை அறிவான்.

"இவற்றுக்கெல்லாம் விடிவு என்ன என்று கூறுகிறீர்கள் ?"

"விடிவு அத்தனை சுலபமல்ல. ஆனாலும் இன்றைய உற்பத்தி முறைகளின் மாற்றங்களோடு விடுதலைதேடி, புதிய வழிகளைத் தேடிப் பெண்ணினம் வளர்கிறது. அதுவே குடும்ப அமைப்பை உடைத்தெறியும் வழியாகும். இதன் மூலமே பெண்ணினம் மட்டுமல்ல ஆணினமே விடுதலை பெற முடியும். பெண்ணினத்தைக் காப்பாற்றுகிறோம் என்று கூறி வன்முறையைக் காட்டும் சிறைச்சாலை வார்டனின் பதவியிலிருந்து ஆணினத்திற்கு விடுதலை கிடைக்கும்."

குமுதினியின் பதில் அவனைச் சிந்திக்க வைத்தது.

மகாதேவன் கல்லூரியில் சிறந்த மாணவனாகக் கற்றிருந்தபோதும் குமுதினியின் அறிவு, விவாதங்களின் முன் சிறியவனாகவே இருந்தான். அவள் இத்தனை அறிவை எங்கே பெற்றாள் ? இயக்கத்திலேயா, நூல்களிலேயா ? தன்னுடைய 'இஹோ'வையே மட்டந்தட்டி மேலாதிக்கம் செலுத்துவதையும் அவனால் காணமுடிந்தது. அவள் படிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்களையும் நோட்டம் போட்டிருந்தான். புதியவையே. அங்குள்ள பெண்ணியக் குழுவிலும் அங்கத்தவராக இருப்பதையும் அறிந்திருந்தான்.

நயாகரா பயணத்திலும் அவள் எத்தனை புத்திசாலியாக நடந்து கொண்டாள். தன்னுடைய ஆணாதிக்கத்தையும் அறிவீனத்தையும் பாலியலிலும் எப்படிப் புட்டுக் காட்டினாள் என்பதை எண்ணியபோதும் சிறுமைப்பட்டான். அவளின் பேச்சிலும் செயலிலும் நீதி, நியாயம் இருப்பதையும் அவனால் காண முடிந்தது. எத்தனை தோல்வியிலும் அவளை விட்டு விட முடியாமல் 'விடுபடா விருப்பினன்' ஆனான்.

அதே வேளை சுகன்யாவை முற்று முழுதாக அறிந்து கொள்வதற்குரிய நாட்களையும் மகாதேவன் எதிர்பார்த்திருந்தான். தனக்கும் குமுதினிக்கும் இடையில் ஏற்பட்ட உறவு பற்றி அவள் அறிந்திருப்பாள், ஊகித்திருப்பாள், குமுதினியே சொல்லியிருப்பாளா என்பதை அவனால் முற்றாக உறுதியாக அறிய முடியவில்லை. குமுதினியைக் கேட்டறியவும் அவன் விரும்பவில்லை.

சுகன்யா இல்லாத வேளையே அவன் இடையிடை வந்து போவதை அவள் அறியாமலிருக்க முடியாது. அவன் அங்கு வரும்போதெல்லாம் ஏதாவது பழமோ, கேக்கோ, கட்லெட்டோ வாங்கி வருவான். அவற்றுக்குக் குமுதினி பொய் சொல்ல வேண்டியதில்லை.வழக்கமாகவே அவள் மனதில் பட்ட உண்மையை நேரடியாகக் கூறிவிடுவாள் என்பதே அடிமனதில் இருந்தது. அதை உறுதிப்படுத்துவதற்காக ஒரு சந்தர்ப்பத்தில் மகாதேவனே கேட்டான்.

"சுகன்யா இல்லாத வேளை பார்த்தும் நான் வந்து போவதைப் பற்றி சுகன்யா சந்தேகப் படமாட்டாளா ?"

"சந்தேகப் படுவதென்ன, நானே சொல்லிவிடுவேனே"– குமுதியின் ஒளிவு மறைவற்ற பதில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலின்பம் பற்றி நயாகராவிலிருந்து திரும்பிய வேளை குமுதினி நேரடியாகவே தன் கருத்தைக் கூறியதையும் அடிக்கடி எண்ணிப் பார்ப்பான். விடுதலை பெற்ற பெண்கள் இப்படித்தான் இருப்பார்களா?

அன்று ஞாயிற்றுக் கிழமை. குமுதினியின் அழைப்புப்படி நண்பகல் அங்குவந்திருந்தான். சுகன்யா காலை சிப்டுக்கு ஒட்டலுக்குப்போய் விட்டாள். அங்கு இரண்டரை மணிவரை சுகன்யா வந்துவிடுவாள். அவளைப் பார்த்து விட்டுப் போகும்படி மகாதேவனைத் தடுத்திருந்தாள். இரண்டரை மணி வரையில் சுகன்யா வந்தபோது மகாதேவனை அங்கு கண்டதும் ''ஹலோ வந்து நேரமாச்சா'' என்று சொல்லிக்கொண்டே அவள் வீசிய புன்னகையை மகாதேவனால் மறக்க முடியவில்லை.

'நானில்லாத வேலை பார்த்து செக்ஸூக்காக வந்தீர்களா' என்று கேட்பது போலிருந்தது.

சுகன்யா ஒட்டலிலேயே நண்பகல் உணவை முடித்து விட்டு வந்திருந்தாள். மகாதேவன் வாங்கிவந்த கேக்கில் ஒரு துண்டை வெட்டி அவளிடம் குமுதினி தந்தாள் : "தேவனின் பிறசெண்ட்"

"தாங்யு" என்றவள் "கேக் சுப்பர்" என்றும் பாராட்டினாள்.

"ஒட்டல்களில் வேலை செய்பவர்களுக்குப் பல்வேறு உணவுப் பதார்த்தங்களது சுவை தெரியாது."

"அப்படிச் சொல்ல முடியாது. நாங்க சாப்பிடாவிட்டாலும் கஸ்டமேஸ் முகபாவம், பேச்சிலிருந்தே உணவின் தரம் பற்றி அறிந்து கொள்ள முடியும்."

"சாரி அதுவும் உண்மைதான்."

"அது தவிர, கஸ்டமேர்ஸ் உணவில் ஏதாவது குறை சொன்னால் நாங்களும் கிச்சினில் ரேஸ்ட் பண்ணிப் பார்த்து விட்டு 'சீவ் குக்கோடு'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்டைபோடுவோம். எங்களுக்கும் கிச்சினுக்கும் அடிக்கடி முரண்பாடு ஏற்பட்டுக் கொண்டே இருக்கும்"

"மானேஜ் மென்டுக்குப் போகாதா"

"அதிகமாகப் போகவிடாமல் சமாளிப்போம். ஏனென்றால் மானேஜ்மென்டுக்கு நேரடியாகக் குற்றம் சாட்டுபவரை சீவ்குக் அங்கிருந்தே அகற்றிவிடப்பார்ப்பான். ஒட்டலின் வெற்றிதோல்வியைத் தீர்மானிப்பவன் முதலில் சீவ்குக்கே அடுத்ததே. மானேஜர். இதை ஒட்டல் ஓனேஸ் நன்கு அறிவார்கள்."

"ஓ அதுவும் அப்படியா ?"

ஒட்டல் நிர்வாகத்தைப் பற்றி சுகன்யா மூலம் ஓரளவு அறிந்து கொண்டான். அவளைப் பற்றி மேலும் நெருங்கிப் பழகி அறிந்து கொள்ளக் கூடிய சந்தர்ப்பம் மகாதேவன் எதிர்பாராமலே வந்தது. அது குமுதினியின் திட்டமா அல்லது தவிர்க்கமுடியாது ஏற்பட்டதா என்பதை அவனால் அப்போது கணிக்க முடியவில்லை.

புதன் கிழமையன்று மாலையில் குமுதினி போன் செய்தாள்.

"ஒரு பெரிய உதவி உங்களுக்கும் வீண் சிரமமாகலாம். இந்த வீக் என்ட் பிறீயாயிருப்பீர்களா ?"

"இன்று வரை கொமிட்மென்ட் எதுவுமில்லை. ஒரு பிரென்ட் சனிக்கிழமை டின்னருக்கு வரும்படி வேண்டினான். நான் இன்னும் உறுதிப்படுத்தவில்லை."

"நல்லதுங்க, சுகன்யா ஞாயிற்றுக் கிழமை காலையில் தன் தோழி ஒருத்தியின் கலியாணத்துக்குக் கட்டாயம் நியூயோக் சிட்டிக்குப் போகவேணுமாம். எனக்கு வசதியில்லை. பழக்கமில்லாத சிட்டி வேறு. நீங்க உதவ முடியுமா. அவளாகவே கேட்பதற்குத் தயங்கினாள்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிது நேர மௌனத்தின் பின்னர் மகாதேவன் சொன்னான் :

"சரியுங்க நானே அழைத்துப் போகிறேனே."

"ஞாயிறு காலையில்ஒன்பது மணிக்குத் திருமணம் முடிந்ததும் மத்தியானம் புறப்பட்டு இங்கே வந்து விடலாம். சனிக்கிழமை உங்களுக்கு வசதியான நேரம் புறப்படலாம். சனியும் ஞாயிறும் லீவு போட்டிருக்கிறாள் ?"

"நல்லது டிராபிக் குறைந்த நேரமாகக் காலை ஒன்பது மணி வரை புறப்படலாம்."

"தனக்காக நீங்க வருவதால் செலவு பூராவும் தானே பொறுக்க வேண்டும் என்றும் சொல்லுகிறாள்"– குமுதினி தன் தோழி சார்பாக கண்டிசனையும் சொல்லிவைத்தாள்.

"அது தான் எங்க ஊர் வழக்கப்படி பெண்களை அழைத்துச் செல்லும் போது வேண்டாத பிரச்சனை, அதை நான் பார்த்துக்கொள்வேன். எந்த இடத்தில் திருமணம் என்று கேட்டுச் சொல்லுவீங்களா ?"

"கொஞ்சம் பொறுங்கள். அவள் பாங்குக்கு மாலை சிப்டிற்குப் போய்விட்டாள். பார்த்துச் சொல்லுகிறேன் ?" சிறிது நேர மௌனத்தின் பின் போனில் தொடர்ந்தாள். "அந்த இரண்டு பெண்டாட்டிக்காரன் கண்ணன் கோயிலில்"

"ஆமா இடம் தெரியும். இப்போது கண்ணன் இருந்தால் பிகமிக்கு கைது செய்திருப்பார்கள்."

"தமிழ்நாட்டில் எத்தனை பேர் இரண்டு, மூன்று சின்னவீடு வைத்தே சட்டப்பிடியிலிருந்தும் தப்பிக் கொண்டிருக்கிறார்கள். அரசியல் வாதிகள் உட்பட. ஆணாதிக்கம் எத்தனை பலம் வாய்ந்தது என்று பார்த்தீர்களா ?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அமெரிக்காவில் என்றால் பிரச்சனைதான். வெளியே தெரியாதபடி நடக்க வேண்டும். அல்லது மொனிக்கா –கிளிண்டன் பிரச்சனையாகிவிடும் "– மகாதேவன் சிரித்தபடி சொன்னான்.

"சர்ச்சில் திருமணம் செய்து குடும்ப அமைப்பை ஏற்றுக் கொண்டால்தான் இங்கே இப்பிரச்சனை வரும்" – குமுதினி கூறினாள்.

## 2.7

**ச**னிக்கிழமை காலை ஒன்பது மணியளவில் மகாதேவன் வந்து ஹான் அடித்ததும் மாடியிலிருந்து எட்டிப் பார்த்து விட்டு, குமுதினியைத் தொடர்ந்து சுகன்யா வந்தாள். குமுதினி செந்நிற நீள் கட்டையுடன் கையிலே சிறு சூட்கேஸ், சுகன்யா தங்க நிறத்தில் அச்சிட்ட சுரிதாருடன் கையிலே கூடை.

மகாதேவன் டிக்கியைத் திறந்து அவற்றை வைத்தான். சுகன்யாவை முன் சீட்டில் ஏறச் செய்து கதவைச் சாத்திவிட்டு டிரைவர் சீட்டில் உட்கார்ந்தான்.

காரை ஸ்டாட் பண்ணும் போது அவன் எதிர்பாராத வார்த்தைகள் குமுதினியின் மெல்லிய சிரிப்போடு வெளிவந்தன :

"யு கான் ஹாவ் ஸம் ஃபன் ஆன் தவே. விஷ் யு குட்லக்"

அந்த வார்த்தைகள் அவன் மனதில் எழுந்திருந்த பல சந்தேகங்களுக்கு விடையளித்தன. சுகன்யாவைப் பார்த்தான். வெட்கம் கலந்த புன்னகை. அவ்வார்த்தைகளைப் பொருட் படுத்தியவனாகக் காட்டாதே காரை ஓட்டினான். நகர் கழியும் வரை காரை ஸ்பீட் பண்ண முடியாது என்பதை அறிவான். ஆகவே சுகன்யாவோடு பேச்சாடினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யார் அந்த பிரெண்ட். கட்டாயம் நியூயோர்க் நகரில் கலியாணத்திற்குப் போக வேண்டிய முக்கிய தோழியா?"

"ஆமாம் கன்னியா என்ற திருச்சிப் பெண். அவளோடு நானும் திருச்சியில் தான் படித்தேன். முதல்தடவை அமெரிக்கா வந்தபோது அவளுடனேயே தங்கியிருந்தேன். அவளுடைய உதவியால்தான் மிஷனரிமார் செல்வாக்குடன் இங்கே வந்து படிக்கவும் முடிந்தது."

"ஆமா, அப்படியானால் கட்டாயம் கலியாணத்திற்குப் போக வேண்டியதுதான்"

"பஸ்ஸில் ஆவது போகவேண்டுமென்றிருந்தேன். வீடு தேடி ஏறி இறங்கி, கோவிலுக்குப் போய் திரும்புவதிலுள்ள கஷ்டம் பார்த்துத்தான் குமுதினி அக்கா அழைத்துச் செல்வதாக இருந்தா. பிறகு உங்களில் பொறுப்பித்துவிட்டா. உங்களுக்கு வீண் சிரமம் தரவும் நேர்ந்துவிட்டது."

"அதென்ன, செலவெல்லாம் நீங்களே பொறுக்க வேண்டும் என்றீங்களாம்..."

"ஆமாம், பேத்டேக்கு பெரிய செலவு செய்தீங்க. பிறகும் இதற்கெல்லாம்..."

"இதிலென்ன எனக்கும் ஒரு வீக் என்ட் அவுட்டிங்தானே"

"எனக்காக இத்தனை தூரம் கார் ஓட்டுவது, காஸ்..
அக்கா செலவு செய்தால் பரவாயில்லை..."

"குமுதினி அக்காவா, கன்னிகாவா உங்க பெஸ்ட் பிரண்டு."

"ஐ லவ் போத் ஆவ் தெம். ஐ ஹாவ் நம்பர் ஒவ் தெம். இங்கிஷ் பாஷையிலே லவ் என்ற வார்த்தையைப் பாகுபாடில்லாமல் பரவலாகப் பயன்படுத்தலாம். தோழியரை நெருங்கிய உறவினரை உங்களைக் கூட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசுவலாக ஐ லவ் யு என்று சொல்லலாம். கடிதம் எழுதும் போது 'வித் லவ் ' என்று எவருக்கும் முடிக்கலாம். அதனால் செக்ஸ் தொடர்பு உள்ளதென்று கொள்ளுவதில்லை. ஆனால் தமிழில் 'அன்பான' என்ற சொல்லை 'அன்புள்ள, அன்பு காட்டுகிறேன், அன்பு செலுத்துகிறேன் என்று எவ்விதமாக உடைத்துச் சொன்னாலும் 'லவ்' என்ற சொல்லுக்கு ஈடாகாது என்று நினைக்கிறேன். 'காதலிக்கிறேன்' என்றால் செக்ஸ், திருமணம், குடும்பம் சார்பாகிறது பார்த்தீர்களா ?"

"ஆமாம் அதில் ஒரு சிக்கல் உள்ளதுதான். இன்றேதான் எண்ணிப் பார்க்க முடிகிறது. இதுவரை நாளும் இவ்வார்த்தை வேறுபாடுகள் என் மனதில் படவில்லை"

மகாதேவன் அவ்வார்த்தைச் சிக்கலை மனதில் போட்டபடி நகரைக் கடந்ததும் வேகமாக ஓட்டத் தொடங்கினான்.

பன்னிரண்டு மணியளவில் சாலை ஓரமாக ஓரிடத்தில் காரை நிறுத்தினான்.

டிக்கியைத் திறந்துவிட்டான். குமுதினி போலவே கூடையை எடுத்துச்சென்று சுகன்யா ஓரமாகச் சீட்டை விரித்து உணவுகளைப் பரப்பினாள்.

"நீங்கள் களைத்திருப்பீர்கள். கோக்கா, காப்பியா ?"

"ஏதாவது சாப்பிட்டுவிட்டுக்குடிக்கலாம். அத்தனை களைப் பில்லை. எப்படியும் கொஞ்சம் றிலாக்ஸ் பண்ணி ஓடுவது நல்லது. எங்கே உங்க அழைப்பிதழைத் தாருங்கள் பார்க்கலாம்" –

தன் கைப்பையிலிருந்து எடுத்துக் கொடுத்ததை நோட்டம் போட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் இன்னும் கார் ஓட்டவே பழகவில்லை. எப்படியும் கிறீன் காட் பிரச்சனையை முடித்துவிடவேண்டும். அதன் பின்னர் பார்க்கலாம்."

ஒரு சாண்ட் விச்சை எடுத்துக் கடித்தான்.பின்னர் ஒரு கட்லெட்.

"குமுதினி, நல்ல சமையல் காரி போலிருக்கு"

"ம்ம்... எல்லாமே நல்லாய் பண்ணுவாங்க. எதையாவது பிடித்ததாக எங்காவது சாப்பிட்டிருந்தால் புத்தகத்தைப் பார்த்தென்றாலும் அதைச் செய்துவிடுவா. எங்க ஒட்டலிலிருந்து நான் பார்த்து சிலவற்றைச் செய்திருக்கிறேன். பிரச்சனை என்னவென்றால் எல்லாமே நொன்வெஜ், எனக்கு அத்தனை பிடிக்காது. இங்கே எடுத்து வந்தவை இரவுக்கும் போதும். அக்கா தாராளமாக தயாரித்து தந்துள்ளா. காலையில் கலியாணத்துக்குப் போய் விடலாம்" – சுகன்யா சொன்னாள்.

"நானும் பெரும்பாலும் ஆயில் குறைந்த விஜிட்டபிளையே விரும்புவேன்".

"நானே சமைத்து ஒரு நாளைக்கு விருந்து போட வேண்டும்"

"விருந்து என்று பெண்களுக்கு அதிக வேலை வைப்பதை நான் விரும்புவதில்லை"

"பரவாயில்லையே. ஆனால் உங்க குடும்பம் கூட்டுக் குடும்பம் என்று குமுதினி அக்கா சொன்னா..."

" ஆமாம். ஆனால் அங்கே எவர் போகப்போகிறார்கள்"

"இங்கேயே தங்கிவிடப் பார்க்கிறீர்களா ?"

"பார்க்கலாம். இன்னும் முற்றாக முடிவு செய்யவில்லை"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் வண்டியில் ஏறினர். புறநகர் பகுதியில் முன்னர் அவன் தங்கிய நடுத்தர ஒட்டலுக்கு அழைத்துச் சென்றான். குமுதினி கூறியதையிட்டு மனக்குழப்பமின்றி டபிள் ரூமாக எடுத்துக் கொண்டான். ரிஜிஸ்டரை நிரப்பி அவனே பணம் தந்து ரசீது பெற்றான்.

நாலாம் மாடியில்ரூம். இருவரும் லிப்டில் சென்றனர். பெட்டி தூக்கி வந்தவனுக்கு 'டிப்ஸ்' தந்து விட்டு அறையைத் சாத்தி, சூஸை கழட்டிவிட்டு நிமிர்ந்தபடி படுத்தான்.

"நீங்க முதலில் ஷவர் எடுத்துவிட்டு வாருங்க பின்னர் நான் எடுப்பேன். நான் எதிர்பாராமல் தூங்கிவிட்டால் ஐந்து மணிக்கு எழுப்பிவிடலாம்."

"ஷவரின் பிறகு என்ன டிரெஸ் போடுவது"

"டின்னருக்கும் நாங்க வெளியே போவதில்லையே. நீங்க டிரெஸிங் கவுண் போடலாமே. நாளைக்கு. சேலையா ? சுரிதாரா ?"

"சேலை.. போர்த்டெக்கு உடுத்த பட்டுச் சேலையையே எடுத்து வந்தேன்."

"குட். நைஸ் சாரி. ஐ லவ் இட்"

"தாங்ஸ்.."

சுகன்யா ஷவர் எடுத்துவிட்டு நைட்டியைப் போட்டு ஆடிக்கொலன் ஸ்பிரே பண்ணி, முகத்திற்குப் பவுடர் தடவி நிலைக் கண்ணாடி முன் நின்று தன் முடியைப் பின்னிவிட்டாள். பின்னர் டிரெஸ்ஸிங் கவுணை எடுத்து நைட்டி மேல் மாட்டினாள்.

நேரத்தைப் பார்த்தாள். நாலரை. ஓரளவு பசி எடுத்தது. குமுதினி வீட்டில் தயாரித்து இருவருக்குமாக வைத்த கேக்கில் ஒரு துண்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெட்டிச் சாப்பிட்டாள். பின்னர் ஒரு ரொமாட்டோ சான்விச்சை எடுத்துக் கடித்தபடி காப்பியை ஊற்றிக் குடித்தாள்.

ஐந்து மணியாவதைப் பார்த்து மகாதேவனின் முதுகைத் தட்டினாள். அவன் எங்கே இருக்கிறேன் என்று அறியாத நிலையில் சுகன்யாவைப் பார்த்து உணர்வு பெற்றான். குமுதினியின் உடைகளுடன் புதிய தேவதை நிற்பதாகக் கண்டான்.

"காப்பி, கோக் ஏதாவது சாப்பிடுவீங்களா"

"யு லுக் வொண்டபுல் . ஷவர் எடுத்து விட்டு வருகிறேன்." என்று எழுத்தவன் கூடை அருகே சென்று கோக் ஒன்றை உடைத்து ஒரு மிடறு பருகிவிட்டு டவலை எடுத்துக் கொண்டு பாத்ரூமை நோக்கி வந்தான். உடைகளைக் களைந்து ஹாங்கரில் போட்டுவிட்டு டவலைக் கட்டிக் கொண்டு உள்ளே சென்றான்.

பின்னர் ஷவர் முடித்து அதே டவலுடன் வந்து தன் பாக்ஸைத் திறந்து பியாமாவை எடுத்து மாட்டினான். பாத்ரூமுக்கு அதை எடுத்துச் செல்ல மறந்து விட்டது பின்னரே நினைவு வந்தது.

சுகன்யா மேசை மேல் கூடையை வைத்து உணவைப் பரவியிருந்தாள்.

'அக்கா செய்த கேக் ' என்று பெரிய துண்டு ஒன்றை வெட்டிக் கொடுத்தாள்.

'குட்' என்று சொல்லியபடியே சாப்பிட்டுவிட்டு கட்லெட் ஒன்றை எடுத்தான். சாப்பிட்டபடி கோக்கில் மீதியை குடித்துக் கொண்டான்.

பின்னர் மெத்தைமேல் வந்து உட்கார்ந்தான். சுகன்யாவை அழைத்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வா டார்லிங். நவ் வீ கான் ஹாவ் ஸம் ஃபன். அக்காவே பர்மிஷன் தந்தாளே..."

சுகன்யா எழுந்து அவனை நோக்கி வரும் போது சொன்னாள் :

"அக்கா, கவனமாயிரு எனச் சொல்லி இந்தப் பாக்கெட்டையும் தந்தா"

"ஆமாம் நான் அத்தனை பூல் இல்லை. நானும் வாங்கி வந்தேனே"

அவளிடம் பாக்கெட்டை வாங்கி மெத்தை ஓரமாக வைத்துவிட்டு எதிரே தேவதை போல நின்ற சுகன்யாவின் டிரெஸ்ஸிங் கவுணை அவிழ்த்துவிட்டு கட்டி அணைத்தான். குமுதினியிடம் நடந்து கொண்டது போலல்லாது வன்முறை காட்டாமல் நிதானமாக நடந்து கொண்டான்.

இருவரும் நீண்ட நேரம் பல்வேறு விசயங்கள் பற்றிப் பேசினர். குமுதினியோடு பேசுவது போன்ற முரண்பாடுகள் எதுவும் எழவில்லை. சுகன்யாவின் குடும்ப விஷயங்களைக் கேட்டறிந்தான்.

"எனக்குப் பசியில்லை. உங்களுக்கு வேணுமானால் வெளியே சாப்பிட்டு விட்டு வரலாம்."

"தேவையில்லை. கேக்கும் கோக்கும் இருக்குத்தானே. எட்டரை ஒன்பது மணி வரை சாப்பிடலாம். கிடைத்த நேரத்தை வீணாக்குவதா ? ஏதாவது கதை சொல்லுங்க" – மகாதேவன் அணைத்தபடி கேட்டான்.

ஒன்பது மணி வரையில் இருவருமாக மேசை மேல் இருந்தவற்றுடன் பனானாவையும் சாப்பிட்டனர். பத்து மணியளவில் சுகன்யாவை அணைத்தபடி படுத்துக் கொண்டான்.

காலையில் ஐந்து மணிவரையில் எழுந்து அவளை முத்தமிட்டு எழுப்பினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தரை வரையில் அவளையும் கட்டி அணைத்தபடி ஷவருக்குச் சென்றான்.

ஷவர் முடிந்ததும் சுகன்யாவை டிரெஸ் செய்யும் படி சொல்லிவிட்டு காப்பிக்கு போன் செய்தான்.

ஆறரை மணி வரையில் காப்பியும் பிரெக் டோஸ்டாக பட்டர் தடவிய ரொட்டியும் வந்தது.

முடியைப் பின்னிவிட்டு சுகன்யா சேலையைக் கட்டிக் கொண்டிருந்தாள். மகாதேவன் சூட்டை மாட்டி விட்டுச் சென்று சுகன்யாவின் பின்னே நின்று டையைக் கட்டினான்.

"அவசரம் எதுவுமில்லை. ஏழுமணிக்குப்புறப்பட்டால் போதும். எட்டு மணிக்கே கோவிலுக்குப் போய் விடலாம்"

"தாங்ஸ். நல்லது"

சேலைகட்டி, தாவணியை மடித்து தோள் மேலால் எடுத்துவிட்டு நிலைக்கண்ணாடியில் பார்த்து விட்டு திரும்பினாள்.

"எப்படி சரியாயிருக்கா"

"ம்ம் சுவீட் டாலிங் இப்போதே கட்டி அணைத்து முத்தம் தர ஆசை. சேலை கசங்கக்கூடாது. பிறகு பார்க்கலாம்" – மகாதேவன் சொன்னான்.

இரண்டு துண்டு ரொட்டி சாப்பிட்டு காப்பியைக் குடிக்கச்செய்தான்.

லிப்ஸ்டிக் கைத் தடவ நிலைக்கண்ணாடி முன் சென்றாள். அவள் பூசிய லிப்ஸ்டிக்கை கொஞ்சம் லயிட்டாக்கும் படி கூறினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் கூறியபடியே மென்மையாக்கிவிட்டு 'சரியா ?' என்றாள்.

"குட்..."

"உங்க சூட் கூட அழகாயிருக்கிறது"

பொலிதீனில் சீல் பண்ணியிருந்த மூன்று ரோஸில் ரெட் ரோஸை எடுத்து அவளது பின்னலில் பதித்தான்.

இருவருமாக கீழே இறங்கினர்.

அதிகாலை டிராபிக் இருக்கவில்லை. எட்டு மணிக்கு முன்னரே கோவிலை அடைந்தனர். அங்கே மகாதேவன் அந்நியனாகி விட்டான்.

பெண் வந்தாயிற்று. மாப்பிள்ளை வந்து சேரவில்லை.

சுகன்யா சென்று தன் தோழியைக் கட்டித் தழுவி வாழ்த்தினாள். அவளுக்கு அன்பளிப்பாக வாங்கி வந்த சிமிக்கியை அப்போதே கொடுத்துவிட்டாள். இருவரும் சுகம் விசாரித்துக் கொண்டனர்.

பின்னர் சுகன்யா கையைக் காட்டி மகாதேவனை அழைத்தாள்.

"இவர் இல்லாவிட்டால் இன்று இங்கே நானே வந்திருக்க முடியாது"

"என் பிரெண்டை அழைத்து வந்ததற்கு நன்றி."

"ஒரு கலியாண வீட்டுச் சாப்பாடு நியூயோர்க் நகரில் கிடைக்கப் போகிறது. அப்படிச் சாப்பிட்டு ரொம்பக்காலம்"

"கட்டாயம் சாப்பிட்டுப் போக வேணும். மாப்பிள்ளை வந்ததும் உங்களையும் அறிமுகப்படுத்த வேண்டும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"லவ் மேரீஜா"

"ஆமாம், இவரை எப்படியடி அறிமுகப்படுத்துவது. உன் போய் பிரெண்தானே..."

"இல்லேடி என் ரூம் மேட் தோழியின் போய் பிரெண்ட்"

"ரொம்ப சிமாட்டாயிருக்கிறார் " என்று கூறிவிட்டு சுகன்யாவின் செவியில் 'இவரைப் பிடிக்கமுடியவில்லையாடி' என்றாள்.

கூட்டம் கூடி வந்தது . மேளம் நாதஸ்வரம், ஊர் கலியாணம் போல ஒலித்தன. மாப்பிள்ளை எட்டரைக்கு வந்து விட்டார்.

ஐயர் தன் வேலையை ஆரம்பித்தார்.

கிராமத்து மணவறை போல ஒன்று இருந்தது. அங்கே மாப்பிள்ளையை இருக்கச் செய்து ஐயர் மந்திரம் ஓதி சடங்குகளை ஆரம்பித்தார்.

எழுபது எண்பது பேர் வரை சேர்ந்திருந்தனர். பெண்கள் பதினைந்து இருபது பேர்; சில வெள்ளையர். காமரா, வீடியோக்காரர் வேறு.

பெண்ணை அழைத்து வந்து மாப்பிள்ளை அருகே உட்காரச் செய்தனர். தாலி, கூறைச் சேலை அனைவரது ஆசீர்வாதத்திற்காகவும் அனுப்பப்பட்டது. ஐயர் கூறைச் சேலையை எடுத்து மணப்பெண்ணிடம் உடுத்தி வரச் சொன்னார். கூறை மாற்றி வர அதிக நேரம் எடுக்கவில்லை.

தத்தம் செய்வதற்காக மாப்பிள்ளை வீட்டாருக்கு ஒரு குடும்பத்தவரும் பெண் குடும்பத்தாருக்கு வேறோர் குடும்பத்தவரும் இருந்தனர். அதுவே வேடிக்கையாக இருந்தது.

"எத்தனை மாற்றம் ஏற்பட்டாலும் இந்தியர்கள் சடங்கு முறைகளை விடமாட்டார்கள்"– ஒரு தடவை குமுதினி சொல்லியிருந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்தியர்கள் மட்டுமல்ல உலகத்தவர் எல்லோருமே." – மகாதேவன் பதில் சொன்னான்.

"மதப் பிடிப்பே காரணம். அது அத்தனை இறுக்கமானது. பிறந்த காலத்திலிருந்து திருமணத்தில் குடும்பமாகி, மரண காலம் வரை தொடர்கிறது. கிறிஸ்தவர்களுக்கும் அப்படியே ஞானஸ்நானம், கிறிஸ்தவப் பெயர், சர்ச் திருமணம், இடுகாட்டில் புதைக்கும்போதும் பைபிளைப் படித்து 'டஸ் ரு டஸ்ட் ஆசெஸ்ரு ஆசெஸ்' சொல்லி மண் அள்ளிப் போடும் வரை தொடரும். எங்களைவிட மோசமாக குடும்பப் பெயரைத் தொடர்ந்து பெருமையாக எடுத்துச் சொல்லுகின்றனர். இவ்வாறு குடும்பம் மதத்தோடு பரம்பரை பரம்பரையாக இறுக்கமாகிறது."

குமுதினி அன்று சொன்னது சரியாகவே அவ்வேளையும் அவன் நினைவில் பட்டது.

ஐயர் இருவரதும் கொள்ளுத்தாத்தா, தாத்தா, தந்தை பெயர்களைச் சொல்லியே மாப்பிள்ளையின் பெயருக்கு வந்தார். மாப்பிள்ளை ஏற்கனவே இவற்றை எழுதி ஐயரிடம் தந்திருந்தார். அதைப் பார்த்து மூன்று தடவை படித்தார். டுப்பிளிகேட் பெற்றோரால் ஐயர் கேட்டதும் அப்பெயர்களை நினைவு படுத்திவிட முடியாது. அப்படியே மணப்பெண் கன்னியாவின் குடும்ப வரிசையும் வந்தது. கிறிஸ்தவ மதப் பரம்பரையிலிருந்து வந்து திருமணத்திற்காக இந்துமதம் சார்ந்தது போல இருந்தது.

ஐயர் தாலி கட்டுவதற்குரிய மந்திரம் ஓதி தாலியை எடுத்து மாப்பிள்ளையிடம் தர,கொட்டுமேளம் கொட்ட அனைவருக்கும் வழங்கப்பட்ட மஞ்சள் அரிசியை மணமக்களை நோக்கி வீசினர். மணமாலைகள் மாற்றப்பட்டன.

மணமக்களுக்குப் பரிசு தந்து வாழ்த்த யாவரும் நிரையில் சென்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்கண்டுடன் கூல்டிங்ஸ் வழங்கப்பட்டது.

கலியாணச் சாப்பாட்டுக்கும் கோயிலை ஒட்டிய சிறு மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மகாதேவன் மணமக்களை அரிசிபோட்டு வாழ்த்தச் சென்றபோது தன் தோழி சுகன்யாவை பொஸ்டனிலிருந்து அழைத்து வந்த பிரெண்ட் என மணப்பெண் மாப்பிள்ளைக்கு அறிமுகம் செய்தாள்.

பதினொரு மணி வரையில் எங்கிருந்துதான் வாழையிலை எடுத்தார்களோ தெரியவில்லை. இலைபோட்டு கலியாணச் சாப்பாடு வழங்கப்பட்டது.

ஊரில் கலியாணச் சாப்பாடு போடப்படுவது போல உப்பிலிருந்து கவீட் காரம் காய் கூட்டு பப்படம், ஊறுகாய், ரசம், தயிர் யாவும் வழங்கப்பட்டன. சுகன்யா பெண்கள் வரிசையில் உட்கார்ந்து சாப்பிட்டபடி மகாதேவனைப் பார்த்துப் புன்னகை செய்தாள்.

தனிமையை மறக்க மகாதேவன் அருகே நின்ற நண்பரோடு இந்திய அரசியல் பேசி, அமெரிக்காவில் குடியேறியுள்ள இந்தியர் விபரம் கூறி, இறுதியில் கூட்டு மொத்தமாகத் தன் கருத்தைச் சொன்னார்.

"இந்தியாவை விட வெளிநாடுகளில் குடியேறியவர்கள்தான் இந்துமதத்தையும் சடங்கு முறைகளையும் கலாசாரத்தையும் காப்பாற்றி வருகிறார்கள்."

"இப்படியான காதல் திருமணங்கள்"

"ஆனாலும் சடங்கு முறைகளை இவர்கள் விட்டுவிட வில்லையே" – பெரியவரின் சமாதானம்.

"அமெரிக்க கலாச்சாரம் சினிமா, டி.வி, சட்டிலையிட் கேபிள் டிவி மற்றும் மீடியா மூலம் இந்து கலாச்சாரத்தை அழிப்பதாக அரசியல் கட்சிகளே இந்தியாவில் சொல்லுகின்றனவே."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எப்படிச் சார் இவர்களால் அழிக்க முடியும் ? இவங்க கலாச்சாரம் எப்ப வந்தது ? நானூறு வருமாகவில்லை. இந்து கலாச்சாரம் வேதகாலத்தது. மூவாயிரம் ஆண்டுகளாகத் தொடர்வது. எப்படிச் சார் ஒழிக்க முடியும்" – பெரியவரின் குரலில் சூடு ஏறி யிருந்தது.

"சயன்ஸ், ரெக்னோலோஜி, கம்பியூட்டர், எலெக்டோனிக் கருவிகளெல்லாம் இங்கே இருந்து தானே இந்தியாவுக்குள் நுழைகிறதே..."

"ஆமாம் அவற்றையெல்லாம் ஏற்றுக் கொள்வோம். எங்களிடம் போதிய மூலதனம் இல்லாததால் எங்க சயன்டிஸ்ட், ரெக்னோலியிஸ்ட் தான் இங்கே அமெரிக்கருக்கு உதவுகிறார்கள். பாருங்கள். நீங்களும் ஒரு கம்பியூட்டர் இஞ்சினியர் . இங்கே வந்து அவர்களுக்கு உதவுகிறீர்கள். நாளைக்கு இந்தியர்களை வெறியேற்றினால், உற்பத்தி எல்லாமே வீழ்ச்சியடைந்து அமெரிக்க பொருளாதாரமே சரிந்து விடும்."

பெரியவர் விட்டு விடுவதாயில்லை.

சாப்பிடும் போதும் அவர் அமெரிக்காவைக் குறைவாகவும் இந்தியக் கலாச்சாரத்தை உயர்வாகவும் பேசிக் கொண்டிருந்தார்.

இப்படியான கருத்துகளுமே அமெரிக்காவில் நிலவுவதை அறிந்து உள்ளூறச் சிரித்துக்கொண்டான். அதே வேளை அவற்றோடு குமுதினியின் சமூகவியல் கூற்றுகளையும் ஒப்பிட்டுப் பார்த்தான்.

சாப்பாடு முடிந்தது. சுகன்யா வந்து மகாதேவனைப் பார்த்துச் சொன்னாள் :

"போரடிக்கிறதா"

"இல்லையே ஒருவரோடு தமிழில் கலாசாரம் பற்றி சுவையாகப் பேசிக் கொண்டிருந்தேன். வடை பாயாசத்தோடு நல்ல கலியாணச் சாப்பாடு. இங்கே எங்கும் கிடையாதது. உன் தோழிக்கும் நன்றி சொல்லு."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒரு மணிக்கு இங்கிருந்தே ஹனிமூனுக்கு வெளியூருக்குப் போகிறார்கள். அவளையும் அனுப்பி விட்டு நாம புறப்படலாம்"

"ஆமாம்"

நேரத்தைக் கடத்துவதற்காக அதே நண்பரிடமே சென்று மகாதேவன் பேச்சுக் கொடுத்தான்.

"ஒரு மணிக்கு திருமணத் தம்பதிகள் எங்கோ ஹனிமூன் போகிறார்களாம், அது நம்ம கலாசாரமா?"

"நாமும் அங்கே திருமணம் முடிந்ததும் சாந்தி முகூர்த்தம் என தனி அறையில் விட்டு விடுகிறோம். இங்கே அந்த வசதிகள் இல்லாததால் சாந்தி முகூர்த்தத்திற்கு எங்காவது ஒட்டலுக்குச் செல்வார்கள். அதற்கென்றே இங்கே ஒட்டல்கள், மோட்டல்கள் இருக்கின்றன."

பெரியவர் எக்கருத்தையும் விட்டுவிடத் தயாராயில்லை.

"கே, லெஸ்பியன் கழகங்களெல்லாம் இங்கே தோன்றியது போல அங்கும் பரவினால் இந்துமத கலாசாரத்திற்கு எதிரானது என்று கண்டிக்கிறார்களே"

"இதெல்லாம் அறியாமை. வாத்ஸல்யருடைய காமசூத்திரத்துக்கு நிகரான செக்ஸ் பற்றிய புத்தகம் உலகத்திலேயே இன்றும் எழுதப்படவில்லை. காஜிரா கோவிலிலே அவற்றையெல்லாம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் சிற்பமாகச் செதுக்கி வைத்திருப்பதை இன்றும் பார்க்கலாமே. கே. லெஸ்பியன் சிலைகளையே காணலாம். மொகலாய சாம்ராஜ்ஜம் வந்த பின்னர் தான் கட்டுப்பாடுகளை விரித்து எங்கள் செக்ஸ் வாழ்க்கையை பாவமாக்கி, பாழடித்தார்கள்."

"அப்படியா! எனக்குத் தெரியாது. படித்துப்பார்க்க வேண்டும்" – மகாதேவன் தன் அறியாமையை ஒப்புக் கொண்டான். அதே வேளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது கூற்றைப் பற்றிப் படித்துப் பார்க்க வேண்டும் எனவும் எண்ணிக் கொண்டான்.

"படிப்பது மட்டுமல்ல, ஆராய்ச்சி செய்து எங்கள் பண்டைய கலாச்சாரத்தை வெளிக் கொணர வேண்டும்."

ஒரு மணி வரையில் தேன் நிலவுக்குத் தம்பதிகள் அழகுபடுத்திய காரில் புறப்பட்டனர்.

சுகன்யா வழியனுப்பிவிட்டு வந்தாள்.

சுகன்யா நியூயோர்க் நகரைச் சுற்றிக் காட்டுவதாக முன்னர் பார்க்காத ஸ்ரச்சு ஒவ் லிபர்ட்டி, மான் ஹட்டன் பிரிட்ஜ் மற்றும் சில பெரிய கட்டிடங்களைக் காட்டியபடி ஒட்டலை நோக்கி வண்டியை ஓட்டினான்.

இருவரும் மூன்று மணி வரை ஒட்டலுக்கு வந்து சேர்ந்தனர். ரூமைத் திறந்து சாத்தியதும் 'எத்தனை நேரம் பொறுத்திருந்தேன்.' என்று கூறியபடி சுகன்யாவைக் கட்டி அணைத்து முத்தமிட்டான். தன் சூட்டைக் கழட்டிவிட்டு அவளது உடையைக் களைந்தான்.

"இன்றோடு எங்கள் உறவை மறக்கவேண்டுமா ?"

"இல்லையே. நான் குமுதினி அக்காவிடம் நேற்றும் இன்றும் நடந்ததெல்லாம் சொல்லிவிடுவேன். இடையிடை எனக்கும் உங்களுக்கும் வசதியான வேளை சந்திக்கலாம். அக்கா அதைப்பற்றி எதுவும் சொல்லமாட்டா. பொறாமைப்படவும் மாட்டா."

பொஸ்டன் வீட்டுக்கு வந்து சேர இரவு ஒன்பது மணியாகிவிட்டது. மேலே மின்விளக்கு எரிந்து கொண்டிருந்தது.

சூட்கேசைப் பெற்றுக் கூடையையும் உதவ வேண்டியதில்லை எனக் கூறி தானே எடுத்துக் கொண்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தாங்யு போர் எவ்விரிதிங்... குட்நைட்"

"சுவீட் டீம்ஸ்"

"தாங்யு போர் எவ்விரிதிங்" என்ற சுகன்யாவின் கூற்றை அவன் சிந்தனை ஆராய்ந்தது. தன்னுள்ளே ஏற்பட்ட இன்பநினைவோடு புன்னகையும் வந்தது.

## 2.8

மகாதேவன் என்றுமே எதிர்பாராத இன்ப வாழ்வான இந்தக் காலகட்டத்திலேயே பெரிய பிரச்சனை அவனுக்கு ஏற்பட்டது.

அவனது திருமணம் பற்றி தாயார் கடிதம் மேல் கடிதம் எழுதி வந்தார்.

"சென்னைக்கு ஒரு தடவை வந்து போ. பிடித்த பெண்ணை தேர்ந்து போ. கலியாணத்தை உன் விருப்பம் போல வைத்துவிடலாம்."

"எங்கள் குடும்பத்தின் பெருமையையும் உன்னுடைய வேலையையும் அறிந்து ஜாதகம் தந்து பெண்பார்க்க வரும்படி அழைக்கிறார்கள்."

"உனக்கு ஒரு தங்கையும், தம்பியும் இருக்கிறார்களல்லவா? அவர்களைக் கட்டிக் கொடுக்க வேண்டியதும் உன் பொறுப்பல்லவா? உன் கலியாணம் முடிந்தால் தானே அவர்களது திருமணவிஷயத்தையும் கவனிக்கலாம்."

"இந்துமதியையும் பெண்கேட்டு வருகிறார்கள். எதுவும் முடிவாகச் சொல்லமுடியாமல் இருக்கிறது."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்துவுக்கும் உனக்கும் கூட பெரிய இடத்திலிருந்து மாற்றுக்கு மாறாகக் கேட்கிறார்கள். அந்த மாப்பிளையும் அமெரிக்காவில்தான். உன் முடிவு பற்றி அறிந்தே விபரம் கேட்டு எழுதலாம்."

முடிவு சொல்லும்படி புரோக்கர் நெருக்க தாயார் போன் செய்தாள். "அப்பாவும் கோபப்படுகிறார். என்னைக் கேட்டுக்கொண்டே இருக்கிறார். ஏதாவது பதில் சொல்லேன்."

"கொஞ்சக் காலம் பொறுத்துக் கொள் அம்மா, நான் வேறு இடத்தில் உயர்ந்த வேலைக்கு விண்ணப்பம் அனுப்பினேன். பதில் வரட்டும் பாா்ப்போம்."

"எவ்வளவு காலம்,"

"மூன்று மாதம்"

"அத்தனை காலம் பொறுக்க முடியாதடா"

குமுதினி, சுகன்யாவிடம் இடையிடை சென்றுவந்தபோதும் மனதில் அமைதி ஏற்படவில்லை. தன்னுடைய பிரச்சனையையும் அவன் சொல்லவில்லை.

இத்தனை பழகிய பின்னரும் கலியாணம் பற்றி குமுதினியோ சுகன்யாவோ எதுவும் கேட்கவில்லை. அதுவும் அவனுக்கு விசித்திரமாகவே இருந்தது.

ஒரு தடவை சுகன்யாவிடம் மகாதேவன் மறைமுகமாகக் கேட்டான்.

"ஊருக்கு வரும்படி உங்க அப்பா, அம்மா எழுதுவதில்லையா ?"

"எழுதுவார்கள். கிறீன் கார்டு கிடைத்தபின் பார்க்கலாம் என எழுதிவிடுவேன்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வீட்டில் பணம் கேட்டு எழுதுவதில்லையா?"

"நானாகவே 100 டாலர் மாதம் தோறும் அனுப்பிவிடுவேன். அது அவர்கட்குப் பெரிய தொகை. இது தவிர உறவினர் திருமணம், அம்மா, அப்பா, தம்பி தங்கையர் பிறந்த நாளுக்கும் வாழ்த்துக் கார்டுடன் பணம், பரிசு அனுப்பிவிடுவேன்."

"நல்லது. பணம் ஏதாவது தேவைப்பட்டால் என்னிடமும் கேட்கலாம்"—மகாதேவன் நயமாகவே சொன்னான்.

"ரொம்ப தாங்ஸ். எனக்கு அக்காவோடு இருப்பதால் செலவு குறைவு. அவசர தேவைக்கு எனச் சேர்த்தும் வைத்திருக்கிறேன். நீங்கதானே ஏற்கனவே செலவு செய்துவிட்டீர்கள். நியூயோர்க் சென்றதற்கும் செலவை வாங்கவில்லை. அக்கா திட்டலாம் என காஸ் பில் தந்ததாகச் சொன்னேன்."

மூன்று மாதம் கழித்து மகாதேவனுக்கு நெருக்கடி மீண்டும் முற்றியது.

"இங்கே ஒரு பகுதியினரின் ஜாதகம் பார்த்து நல்ல பொருத்தம். நம்ம ஜாதிக்காரர் தாம். அங்கேயும் உன்னைப் பற்றி விசாரித்து விட்டு நெருக்கிக் கொண்டே இருக்கிறார்கள். எம்.ஏ படித்த பெண்ணு. கம்பனியில் வேலைபார்க்கிறது. வயது 26 நீ தானே, அண்ணாவின் கலியாணத்தின் போது சுமதியின் வயசு குறைவு, இப்படிப் 10,12 வயசு வித்தியாசம் இருக்கக்கூடாது. ஒரே வயசாக இருந்தாலும் பரவாயில்லை. அமெரிக்காவில் இத்தனை வயசு வேறுபாடு என்றால் கேலி பண்ணுவார்கள் என்று சொன்னது நினைவு வந்தது. சீர், சீதனம் உனக்குப் பிடிக்காது என்றும் சொன்னேன். நல்லது. அது நம்ம விருப்பம். நம்ம பெண்ணுக்கு நூறு பவுணாவது போடாமல் விடமாட்டோம். நீங்க பெண்ணை வந்து பாருங்க, பிடிக்காவிட்டால் விட்டுவிடலாம் என்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லுகிறார்கள். உன் அனுமதி இல்லாமல் நாங்கள் எப்படிப் போவது. நீ ஒரு வார லீவிலாவது வந்து போ, பெண் பார்க்க. இது இல்லாவிட்டால் வேறு பார்க்கலாம்."

தாயாரின் நெருக்கடியை அறிந்த போதும் பதில் எழுத முடியவில்லை. தாயாரும் விட்டு விடுவதாக இல்லை.

அம்மாவின் டெலிபோன் வேறு அடிக்கடி வந்தது.

"எதற்கும் அவசரப்படவேண்டாம்" என்று சொல்லிப் பார்த்தேன். அங்கே ஏதாவது பெண் பார்த்து வைத்திருக்கிறானா என்று உன் மகனைக் கேளு" என்று அப்பா கேட்கிறார்."

"அவசரம் வேண்டாமம்மா, நான் எழுதுகிறேன்..."

"இந்தக் கலியாணம் எல்லாம் முடிவெடுத்த மாதிரித்தான்... அப்பா, அண்ணாமார் எல்லோருக்கும் சம்மதம். போட்டோ அனுப்புகிறேன். உன் முடிவைச் சொல்லு. என் பிள்ளை ஒரு போதும் அப்பா சொல்லை, என் சொல்லைத் தட்டமாட்டான் என்றும் அவர்களிடம் சொல்லிவிட்டேன்"

தாயார் உறுதியாகச் சொன்னாள்.

போட்டோ தபாலில் வந்தது.

குமுதினி, சுகன்யாவுடன்தான் போட்டோவை ஒப்பிட்டுப் பார்க்க முடிந்தது. அவர்களை விட அழகான பெண் போலத் தோன்றியது. போட்டாவை நம்ப முடியுமா என்ற சந்தேகம் வேறு. அறியாத பெண். குணம் எப்படியோ என்ற சந்தகம் வேறு.

எப்படியும் அறிந்த பெண் அறியாத பெண்ணை விட நல்லது என்ற பழமொழியும் நினைவில் வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாவின் கடிதம், போன் தொடர்ந்து வந்து கொண்டிருந்தது.

"போட்டோ பார்த்திருப்பாய் பெண்ணைப் பிடிக்கவில்லை என்றால் சொல்லிவிடு. நாங்கள் தட்டிக் கழித்து விடுவோம். ஆனால் இதை விட்டால் இதே போல நல்ல இடமும் பெண்ணும் கிடைக்காது. உன் அண்ணிமாரை விட அழகான பெண் என்று அந்தப் பெண்ணோடு வேலை செய்யும் எங்க தெருப் பெண், வீட்டுக்கு வருபவள் சொன்னாள்."

"அம்மா எனக்கு இங்கே ஒரு பிரச்சனை இருக்கிறது. முற்றுச் சொல்ல இரண்டு மாத அவகாசம் வேண்டும்."

"அதுவரை அவர்களைப் பொறுக்கச் சொல்லுகிறாயா ?"

"அவர்களை வேறு இடம் பார்க்கச் சொல்லு. வேணுமானால் லீவு கிடைத்ததும் தான் வந்து பெண் பார்ப்பதாகச் சொல்லிக் கடத்து. அவர்கள் வேறு பார்க்கட்டுமே. எனக்குக் கவலையில்லை."

இந்தக் கால அவகாசத்திலேயே குமுதினி, சுகன்யாப் பிரச்சனையைத் தீர்த்துவிட முடிவு செய்தான்.

ஒரு தடவை அங்கு பேச என்று சென்று குமுதினியின் விருந்தைச் சாப்பிட்டு வந்ததுதான் மிச்சம்; வாய் திறந்து கேட்க முடியவில்லை.

இரண்டு வாரம் கழித்து குமுதினியைப் போன் செய்தான்.

"குமு டாலிங், ஒரு முக்கியமான விஷயம் பேச வேண்டும், எப்போது வரலாம், ஞாயிறு.."

"ஞாயிற்றுக் கிழமை வாஷிங் செய்ய வேண்டும். சனிக்கிழமையே வரலாம். லஞ்சுக்கே வந்துவிடலாம்"

சனிக்கிழமை கேக், பழங்கள் வாங்கிச் சென்றான். மனம் அமைதியாக இல்லை. டிரெஸ்ஸிங் கவுனுடன் குமுதினி சமையல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலையில் ஈடுபட்டிருந்தாள். பொருட்களை வாங்கி 'தாங்யு' சொல்லிவிட்டு காப்பி தயாரித்து வழங்கினாள்.

சுகன்யா அங்கில்லை. காலை சிப்டுக்குச் சென்று விட்டாள். வருவதற்கு இரண்டரை மூன்று மணியாகும் என்பதை அறிவான்.

"தேவன், என்ன அப்படி அவசரமான பிரச்சனை" – குமுதினி கேட்டாள்

"அது அது அம்மா கலியாணம் என ஆறுமாதமாகவே நெருக்கிக் கொண்டிருக்கிறார்கள்" – குரலில் ஓரளவு நடுக்கம் இருக்கவே செய்தது.

"அப்படித்தான் நினைத்தேன். அதுக்கு இப்போது என்ன ?"

"உங்கள் இரண்டு பேரிடமும் நெருங்கிப் பழகிவிட்டேன். இனி ஒரு முடிவு எடுக்க வேண்டும். நீங்க தான் ஹெல்ப் பண்ண வேண்டும். சாரி, முடிவு சொல்ல வேணும்..."

"இப்போது எங்களிருவரில் எவரை விரும்பிக் கேட்கிறீங்க."

"இருவருடனும் பழகிவிட்டேன். இருவரையுமே ஐ லவ் போத் ஆவ் யு. நீங்கதானே முதலாக முடிவு சொல்ல வேண்டும்."

"இப்போது உங்க கூட்டுக் குடும்பத்திற்கு அம்மா வேண்டியபடி ஒரு பெண் வேண்டும். அவ்வளவு தானே" – குமுதினி குரலில் ஒரு வித கேலி.

"அப்படியும் சொல்லலாம்" – மகாதேவன் இழுத்தான்.

"சுகன்யாவோடும் கலந்து பேசவேண்டும். இது முக்கியமான பிரச்சனை. அவளது குடும்பம் ஊரிலே. 'ரைம்' வேணும்"

"எவ்வளவு காலம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒரு மாதம்.. எனக்குக் கூட வீட்டிலிருந்து இரண்டு வருஷமாகக் கடிதங்கள் வந்து கொண்டே இருக்கின்றன. உங்களை விட இதைப் பற்றி நானும் அதிகம் சிந்தித்திருக்கிறேன். மேலும் சிந்திப்பேன்."

"நல்லது, ஒரு முடிவு எடுத்து விடுவது நல்லது"

"இந்த விஷயத்தைப் பற்றிப் பேசுவதை இத்தோடு நிறுத்திக் கொள்வோம்.வேறு விஷயம் பேசலாம். "– குமுதினி அத்தோடு அந்த விஷயப் பேச்சை நிறுத்தினால்.

"இப்போதும் உங்க துணியை நீங்களே வாஷ் செய்வீர்களா, லாண்டிக்குப் போடுவீர்களா"– குமுதினியே விஷயத்தை மாற்றினாள்.

"நானே வாஷ்செய்வேன்"

"வீட்டுக்குக் கிட்ட வாஷிங் மெஷின் கிடைக்கிறதா ?"

"கிடைக்குமே"

"சனி ஞாயிறு நெருக்கடியாக இருக்காதா ?"

"நெருக்கடி குறைந்த நேரமாகப்பார்த்துக் கொள்வேன்"

"என்ன ரைம் சாப்பிடுவோம்"

"ஒரு மணிக்கு"– சுகன்யா வர முன்னரே புறப்பட்டு விட விரும்பினான்.

வெயிட்டபின் போட்டு பிரட்டிய பிரியாணி ரைஸ் காரமான கத்தரிக்காய் பிரட்டல். அத்துடன் சாதம், தயிர்.

'டெலிஸியஸ் பூட்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவரும் சாப்பிட்டனர்.

ஒன்றறை மணி வரையில் புறப்படும் போது குமுதினியின் தோள்களைப் பிடித்தபடி கண்களால் பேசினான்.

"நானாக அழைக்க வில்லையே. பீரியட் வேறு. யு கான் ஹாவ் எ கிஸ் இவ் யு வான்ட்". அவன் உதட்டைப் பதித்தான்.

படிக்கட்டில் கீழ் நோக்கி இறங்கும் போது குமுதினி சொன்னாள்:

"இப்போதாவது உங்களுக்குப் புரிந்திருக்கும், செக்ஸுக்கும் கலியாணத்திற்கும் தொடர்பில்லை என்று"

கலியாணம் என்பது குடும்பத்தின் முதல்படி என அவள் கருதியிருக்க வேண்டும். அவளது கூற்றில் உண்மையே இருப்பதாக உணர்ந்தான்.

கலியாணம் என்பது குடும்பம் என்ற நிறுவனத்திற்காக என அவனும் எண்ணிக்கொண்டான். அங்கே தானே நிரந்தர செக்ஸ்ஸுக்கு உரிமை இருக்கிறதே. அவள் ஏன் அப்படிச் சொன்னாள். அந்த செக்ஸ் பெண்ணை அடிமைப் படுத்தும் செக்ஸ் எனக் கருதினாளா? அப்போது ஆண்நிலை. அவனும் குடும்பத்திற்கு அடிமையாகிறானா?

குடும்பம் வன்முறை வடிவங் கொண்டது என குமுதினி அடிக்கடி கூறுகிறாளே. ஆதிக்க உறவில் தான் கூட்டுக் குடும்பம், குடும்ப உறவெல்லாம் ஏற்படுகிறது என்று எண்ணுகிறாளா? பாலுறவிற்கும் மனைவியின் அனுமதி வேண்டுமா? இல்லாவிட்டால் வன்முறையா?

தற்போது அவளுடனும் சுகன்யாவிடமும் கொண்ட உறவுதான் சுதந்திரமான, ஜனநாயகமான, பரிசுத்த உணர்வு, உறவு எனக் கருதுகிறாளா?

மகாதேவன் கார் தெருவிலே ஓடிய போதும் இந்த எண்ணங்கள் அவன் மனதில் வேகமாக விளையாடிக்கொண்டிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.9

**தா**யாரிடம் மேலும் ஒரு மாதம் அவகாசம் மகாதேவன் கேட்டிருந்தான்.

"உன் அப்பா மானம் மரியாதை போகிறது என்று திட்டிக் கொண்டிருக்கிறார்"

"அதற்கென்னம்மா, செய்யிறது. என்னுடைய விருப்பு வெறுப்புகளையும்பார்க்க வேண்டாமா. அவர்களை வேறு எங்காவது மாப்பிள்ளை பார்க்கச் சொல்லுங்களேன். நான் நினைத்தவுடன் அங்கே வந்து விடமுடியுமா."

"சரி ஒரு மாதத்தில் முடிவு சொல்லிவிடு. இல்லாவிட்டால் சாந்தியின் மகள் இருக்கிறாளே உன் முறைப்பெண் சூரி. பத்து வயசு வித்தியாசம். உன்னை ஆட்டி வைப்பாள். பொறுத்துப்பார்."

மகாதேவன் போனை வைத்துவிட்டான். கடைசியாகக் குமுதினியைப் பார்த்துப் பேசியபின் அவனும் அவளுக்குப் போன் பண்ணவில்லை. அவளது போனும் வரவில்லை. அதை ஆவலோடு எதிர்ப்பார்த்துக் கொண்டிருந்தான்.

மூன்று வாரம் கழிந்து விட்டது. பொறுமையிழந்த நிலையில் வெள்ளிக்கிழமை மாலையே குமுதினியைப் போனில் அழைத்தான்.

"சுகன்யாவுடன் கலந்து பேசி ஒரு முடிவுக்கு வந்திருப்பீர்கள். அங்கு நாளைக்கு வரலாமா. அம்மாவால் ஒரே தொல்லையாயிருக்கிறது" – மகாதேவன் தன் நிலைமையைத் தெரிவித்தான். எப்படியும் ஒரு முடிவு எடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டதாக உணர்ந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஞாயிற்றுக்கிழமை நாலு நாலரை வரை வரலாம். சுகன்யாவும் இருப்பாள்.'

'அப்பாடா' என பெருமூச்சு. பதட்டம் வேறு.

இரண்டு இரவும் சரியாகத் தூங்க முடியவில்லை. பாலின்பம் என்ற வலையில் வீழ்ந்து சிக்கலில் மாட்டுப்பட்டதாகவும் உணர்ந்தான்.

அவர்களுக்குப் பிடித்த கேக் ரகங்களை அறிந்திருந்தான். அவற்றுடன் பழங்களும் வாங்கிக் கொண்டு ஞாயிறு நாலே காலுக்கே குமுதினியின் ஃபிளாட்டுக்குப் போய்விட்டான். முன்னர் அங்கே செல்லும் போது ஏற்படும் கிளுகிளுப்பும் ஆர்வமும் இன்றி எதிர் கால வாழ்க்கையைத் தீர்மானிக்க வேண்டிய எண்ணத்தால் ஏற்பட்ட பதட்டம் இருந்தது.

பரிசுகளை வாங்கி நன்றி சொல்லி விட்டு 'காப்பியா, டீயா' என்று குமுதினி கேட்டாள்.

இரு தோழியரும் ஒரே ரக டிரெஸ்ஸிங் கவுண்.

குமுதினி டீயுடன் அவன் வாங்கி வந்த கேக்கிலேயே ஒரு துண்டை வெட்டி அத்தோடு பிஸ்கெட்டும் வைத்தாள்.

"தேவன், உங்களது நாணயத்தையும் நேர்மையையும் எங்களால் கண்டு உணர முடிகிறது. மற்றவர்களானால் பெரும்பாலோர் கிடைத்த இன்பம் மிச்சம், புதியது, சீர் சீதனத்துடன் பார்ப்போம் என்று ஒடிவிடுவார்கள். நீங்க இதய சுத்தியோடு கேட்டதற்கு நன்றி சொல்ல வேண்டும்... "—குமுதினி பேச்சை ஆரம்பித்தாள். என்றுமே அவள் துணிச்சல் காரியே.

"தாங்யு. இத்தனை பாராட்டுகள் வேண்டியதில்லை. நீங்க காட்டிய அன்பு, பாசம் காதலுக்கு நானல்லவா நன்றி கூற வேண்டும். அதன் பிரதிபலிப்பாகவே பாட்னராக்க விருப்பம் கேட்டேன்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“கலியாணம், குடும்பம் என்பது நீண்ட காலம் தொடரும் ஒரு நிறுவனம்.”

“அவை எல்லாம் எனக்குத் தெரியும். எங்க குடும்பத்தவரும் அறிவார்கள். நானும் பதில் சொல்லவேண்டிய நிலையில் இன்று உள்ளேன்.”

“எங்களுக்கும் பின்புறமாகக் குடும்பங்கள் இருக்கின்றன. அவர்களுக்கு உங்கள் முடிவைத் தெரிவித்து அனுமதி பெற வேண்டியது உங்கள் கடமை. கலியாணம் என்பது இருவரது தீர்மானமாக இல்லாமல் இரு குடும்பத்தின் முடிவும் ஆக வேண்டும் என்ற நிலைக்கு வருகிறோம். சுருக்கமாகச் சொன்னால் தற்போது சுகன்யா கிறீன் கார்ட் இன்னும் பெறாததாலும் சென்னைக்கு வந்து உங்கள் குடும்பத்துள் இணையத் தயாரில்லை. அதே நிலையே என்னுடையதும்.”

மகாதேவன் குமுதினியின் பதிலைக் கேட்டு அதிர்ச்சியடைந்தவனாகச் சிலநேரம் மௌனமாக இருந்தான்.

“கிறீன் கார்டு பிரச்சனையேயில்லை. இங்கேயே மரிஜ் ரிஜிஸ்ரேசன் செய்து விட்டால் கிடைத்துவிடுமே”

“அதுவே குடும்ப உறவாகிறது. ஊருக்கு அழைத்தால் வந்து உங்களது கூட்டுக்குடும்பத்தில் இணைய வேண்டும். அவளது ஜாதகம், ஜாதி, குலம், குடும்பம் எல்லாம் பார்க்காமல் அவர்கள் ஏற்கத் தயங்கலாம். உங்களுக்கும் அது வேண்டாத பிரச்சனையாகலாம். அதே நிலையில் தான் நானும் இருக்கிறேன்.”– குமுதினி சொன்னாள்.

“என்னுடைய வீட்டுப் பிரச்சனையை நான் பார்த்துக் கொள்வேனே”– மகாதேவன் அழுத்திச் சொன்னான்.

“நாங்கள் எதற்காக உங்களுக்கும் வீண் தொல்லை தந்து உங்கள் குடும்பத்துள் வந்து வீணாக அவமானமும் பட வேண்டும்”– குமுதினி முன்னோக்குச் சிந்தனையுடன் சொன்னாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இருவருமாகவே என்னைக் கைவிடுவதாகத் தெரிகிறது"– மகாதேவனின் குரலில் ஏமாற்றம் தொனித்தது.

"இல்லை தேவன், மற்ற விதமாகவும் சொல்லலாமே. நீங்கதான் எங்கள் இருவரையும் கைவிட்டு விட்டு இது வரை வாழ்ந்த சுதந்திரமான, இன்பமானதுமான உறவை முறித்துவிட்டு அம்மா சொல்லும் பெண்ணை குடும்பத்துள் சேர்க்கப் பார்க்கிறீர்கள் என்றும் நாங்க கூறலாம் தானே"

"என்னுடைய எண்ணத்தில், முடிவில் ஏதோ தவறு இருப்பதாக நீங்க எண்ணுவது போலத் தெரிகிறது."– மகாதேவன் உணர்ச்சியோடு சொன்னான்.

"ஆமாம் தேவன். அப்படித்தான் நான் சொல்லுவேன். குடும்பம் சமூக உறவில் ஒரு கூறு என்று எடுத்துக் கொண்டால் அது நிரந்தர பாலுறவிலேயா தங்கியிருக்கிறது."

"முற்று முழுதாக இல்லை"

"அப்போது இப்போதுள்ள எங்கள் உறவை நீங்கள் தானே அம்மாவிற்காக முறிக்கப் பார்க்கிறீர்கள் என்றும் சொல்ல முடியும். நீங்கள் எங்களைப் பற்றிக் கவலைப்படவேண்டியதில்லை. நீங்க குடும்பத்திற்காக அம்மா சொல்லும் ஒரு பெண்ணைக் கட்டிக் கொள்ளலாமே"– குமுதினி அப்பழுக்கின்றிச் சொன்னாள்.

"உங்களோடு பாலுறவு கொண்டேன். அதற்காகக் கேட்கவேண்டிய கடமையும் இருக்கிறது. சுகன்யா இப்போது நீ என்ன சொல்லுகிறாய்"– அதுவரை மௌனமாக யாவையும் கேட்டுக் கொண்டிருந்த சுகன்யாவைப் பார்த்துக் கேட்டான்.

"அன்று என் தோழியின் கலியாணத்திற்கு நியூயோர்க் நகருக்கு அழைத்துப்போனீர்களே. அவர்கள் இருவரும் காதலிப்பதாகக் கூறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோரை விட்டுவிட்டே திருமணம் செய்து கொண்டார்கள். உங்களுக்கும் தெரியும் தானே. நீங்களும் என்னைக் காதலிப்பதானால் குடும்பத்தாரை விட்டுவிட்டு இங்கேயே இருப்பதானால் நீங்கள் வேண்டினால் உங்களுடன் வந்து இருக்கத் தயாராயிருக்கிறேன். இனிமேல் சடங்கு முறைவைத்துப் பாலுறவுக்கு அனுமதி பெறும் போலித் தேவையும் இல்லையே. அக்காவின் உறவும் அப்படியே இருக்கலாம்'' – சுகன்யா தன் முடிவைச் சொன்னாள்.

''யோசிக்க வேண்டிய விஷயமே'' – கடைசியாக அக்கா உறவு பற்றிக் கூறியதைப் புரியாத நிலையில் சொன்னான். மேலும் தொடர்ந்தான்: ''குமுதினி உங்க முடிவுதான் என்ன ?''

''என்னுடையதும் அதே முடிவுதான். சுதந்திரமான பாலுறவு தான் வாழ்க்கைக்கு முக்கியமானதென்று எண்ணினால் தற்போது நடப்பது போல தொடரலாம். இருவருடனும் பாலுறவு கொள்ளத்தக்க வாய்ப்பையும் ஏற்படுத்தித் தந்தேன். இத்தகைய வாய்ப்பு அம்மா பேசும் திருமணத்தில் ஒரு போதும் கிடையாது. யோனிப் பொருத்தத்தை ஜாதகத்தில்தான் பார்ப்பார்கள். நம் இருவரிலும் பிடித்தவரோடு நீங்க வாழ்வதிலும் தவறில்லை. அமெரிக்காவில் குடும்ப உறவுப் பெயரின்றி அவரவர் தமது பெயருடன் கூட்டாகவும் தனித்தனியாகவும் வாழ்பவர் ஏராளம். சுகன்யாவைப் பிடிக்காவிட்டால் அதே போலவே வாழ்ந்து பார்க்கத் தயாராயிருக்கிறேன். நான் விரும்பாதவேளை வெளியேறிவிடுவேன். அந்த சுதந்திரம் வேண்டும்.'' – குமுதினி குடும்ப உறவிலிருந்து தப்பும் முறையாகச் சொன்னாள்.

''நான் பெரிய சிக்கலில் மாட்டியிருக்கிறேன் போல் தெரிகிறது. என்ன தீர்மானம் எடுப்பது என்றே தெரியவில்லை'' – பேச்சில் மன உறுதியற்ற ஏமாற்றம் தெரிந்தது.

''இல்லை தேவன். உங்களக்கு நான் வழி சொல்லித் தருகிறேனே. உங்களால் அம்மாவை, குடும்பத்தை உடைத்துக் கொண்டு வரமுடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதோ எங்களோடு பாலுறவின்போது ஆசை வார்த்தை பேசியதைக் காதல், கீதல் என்ற மயக்கத்திலோ, நன்றிக் கடன் கூறவோ வந்திருக்கிறீர்கள். நீங்கள் அம்மா சொல்லும் ஒரு குடும்ப அடிமையைக் கட்டிக் கொள்ளுங்கள். எங்களை மறந்து விடுங்கள். பிறகு அந்த அடிமைப் பெண்ணையும் அழைத்து வந்து விட்டு, இங்கே எங்கள் உறவையும் தொடர்ந்து வீண் தொல்லைகளுக்குள் மாட்டிக் கொள்ளாதீர்கள். நடுத்தரவர்க்கத்துக் குடும்பப் பெண்கள் உங்களையும் தன் சொத்தாக எண்ணுவார்கள். மற்றவர் மனதால் பங்கு போடுவதையும் விரும்பாத சந்தேகப் பிராணியாயும் மாறலாம்."

"உங்கள் இருவரதும் எதிர்காலத்தை நினைத்துத்தான் கவலைப்படுகிறேன்."

"அப்படியல்ல. நாங்கள் உங்களுக்காகத்தான் கவலைப்படுகிறோம். நாங்க இருவரும் குடும்பம் என்ற சிறையில் அடைபடாமல் தனிச் சுதந்திரத்துடன், ஜனநாயக உரிமைகளுடன் இன்பமாக வாழ்கிறோம். நீங்க கவலைப்பட எதுவுமில்லை" – குமுதினி அழுத்திக் கூறினாள். மேலும் தொடர்ந்தாள் :

"எங்க கருத்துகளை, முடிவுகளைக் கூறிவிட்டோம் இனி தீர்மானம் எடுக்க வேண்டிய பொறுப்பு உங்களதே. இத்தோடு இந்த விஷயம் பற்றிப் பேசுவதை விட்டு விடுவோம்."

"சரியுங்க, நான் சிந்தித்துப் பார்க்கிறேன்"

"இப்போது என்ன சாப்பிடுவீங்க.டின்னர் சாப்பிட்டுப் போவீர்களா ?" – குமுதினி கேட்டாள்.

"நோ தாங்யு. எட்டுமணிக்கு ஒரு நண்பரைப் பார்ப்பதாகச் சொல்லியிருந்தேன். எக்ஸியூஸ்மி" – மகாதேவன் எழுந்தான். இருவரிடையேயும் ஒரே கருத்து. ஒரே ஒற்றுமை. இது என்ன உறவு. காதலா ? சிந்தனையோடு கீழே இறங்கிய போது சுகன்யா தொடர்ந்து வந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாதேவன் அவளைப் பார்த்தபடி காரில் ஏறும் போது அவனது கரத்தைப் பிடித்தபடி சுகன்யா அவனது ஏமாற்ற நிலையையும் சோர்ந்த முகத்தையும் பார்த்தபடி சொன்னாள் :

"உங்க உறவை மறக்க முடியாது. தற்போது எங்க முடிவு ஏமாற்றமாக இருக்கலாம். ஆயினும் உங்க குடும்ப வாழ்க்கைக்கே நாங்க வழிகாட்டி வாழ்த்துகிறோம். தற்போது கவலை ஏற்பட்டால் மன்னிக்க"

அம்மாவை அப்பாவை, குடும்பத்தவர் யாவரையும் அவர்களிருவரிடமும் அனுபவித்த பாலின்ப நன்றிக்காக விட்டுவிடமுடியுமா என்பதே மகாதேவன் பிரச்சனையாயிருந்தது. அவர்களிருவரும் என்றும், எந்த உச்சக்கட்டத்திலும், தானே வார்த்தைகளில் காதல் மழை பொழிந்தபோதும் திருமணத்தைப் பற்றி கேட்டதோ, வற்புறுத்தியதோ இல்லை. இது அவர்களது உயர்ந்த குணமாக நயாகரா நீர்வீர்ச்சியைப் பார்த்து விட்டுத் திரும்பும் போது, எதிர்பாலார் இன்பத்தில் 'ஜனநாயக உரிமை இல்லை. வெறும் வன்முறையானது' என்று குமுதினி கூறியதும் அவன் நினைவில் வந்தது. அதே உரிமைகளை அவன் சுகன்யாவிடமும் வழங்காததையும் நினைவு கூர்ந்தான். ஆணாதிக்கத்திலிருந்து தான் முற்று முழுதாக விடுபட்டு விட முடியாத நிலையையும் எண்ணிப்பார்த்தான். ஒரே மன உளைச்சல். மண்டை வெடிப்பது போலிருந்தது.

அன்றிரவு முழுவதும் சரியான தீர்மானம் எடுக்க முடியாமல் மனம் அலைச்சலுற்றது. எப்படியும் குமுதினியின் அறிவுரையே அவன் மனதில் சரியாகப்பட்டது.

காலையில் தாயாரைப் போனில் அழைத்தான்.

"அம்மா நீங்களே பெண்ணைப் பார்த்து பிடித்தால் நிட்சயதார்த்தம் செய்யுங்கள். திருமணத் தேதியை அறிவித்தால் ஒரு வாரத்தின் முன் வந்து விடுகிறேன். பின்னரும் இரண்டு வாரம் மட்டுமே தங்க முடியும். வேறு எதுவும் என்னைக் கேட்க வேண்டாம்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்பிள்ளை என் சொல்லைத் தட்டமாட்டான் என்று எல்லோரிடமும் சொல்லியிருந்தேன். இது நல்ல பெண்ணடா, போட்டோ அனுப்பினேனே பின்புறமாகப் பெயர் எழுதினேன் படித்தாயா? மறந்துவிட்டாயா" – தாயாரின் மகிழ்ச்சிக்குரல்.

போட்டோவின் பின்புறத்தைப் பார்க்க, முன்னர் மறந்திருந்தான். தாயார் நினைவூட்டியதும் கவரில் அம்மாவின் கடிதத்துடன் டிராயரில் இருந்த போட்டோவை எடுத்துப் பின்புறத்தைப் பார்த்தான் : 'சகுந்தலா'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
2003-7.26
LIBRARY

# 3.1

"சகுந்தலா, சகுந்தலா"

கிணற்றிலிருந்து எதிரொலிப்பது போன்ற ஒலி; கனவிலே எவரோ அழைப்பது போன்ற குரல்.

சகுந்தலா கண்களை விழித்தாள். எதிரே மரகதம் அத்தோடு மூத்த மகளும் பையனும் அவளது அறையிலேயே தூங்கியவர்கள் எழுந்துவிட்டனர்.

"என்னக்கா, ரொம்ப நேரம் தூங்கிவிட்டேனா ?"– சுறுசுறுப்போடு எழுந்தபடி சகுந்தலா கேட்டாள்.

"சித்தீ சித்தீ எங்களுக்கு ஒரு விசிட்டர். ஆர் சொல்லுங்கோ பார்ப்போம்"– மரகதத்தின் மூத்த பெண் மீனா விடுகதை விட்டாள்.

"நீயே சொல்லேண்டி"– சகுந்தலா படுக்கையைச்சுற்றியபடி சொன்னாள்.

மரகதம் பையனையும் அழைத்துக் கொண்டு போய்விட்டாள்.

"இதோ பாருங்கள் மச்சி..." – சிரித்தபடி சொல்லிக்கொண்டே சுமதியை முன்னே தள்ளிவிட்டாள்.

"அட நீயா. இத்தனை சீக்கிரமா ?"

"ஆமா சொன்னேனே. வேலை கட்டாயம் கிடைக்குமென்று. இதோ கடிதம் அத்தை"– சுமதி தன் சுரிதார் உடையைக் கழட்டாது பிரயாணக் களையை மறந்தவளாகக் கடிதத்தை நீட்டினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமதி எதிர்பார்த்தபடி அரசு வேலை அழைப்பு வந்தது. அவளது திடமான நம்பிக்கை வீண்போகவில்லை. அவளது முற்போக்கான கருத்துகளை இன்ரவியு போர்டு ஏற்றுக்கொண்டதும் பெருமை தந்தது. இன்ரவியூ முடிந்த மூன்றாம்மாதமே அப்போயின்மென்ட் கடிதம் வந்தது. அடுத்த திங்கட் கிழமையே சென்னை தலைமைச் செயலகத்தில் சமூக சேவை அமைச்சக வேலையில் சேரும்படி ஆணையில் கூறப்பட்டிருந்தது.

சுமதி சனிக்கிழமை காலையிலேயே பஸ்ஸில் வந்து சைதாப்பேட்டையில் இறங்கி ஆட்டோவில் பெட்டியுடன் பரம்பரை வீட்டில் வந்து இறங்கினாள். பாட்டி கேட்டாள் :

"ஏன்டி வேலை கிடைத்தது, இங்கே வருவது பற்றியெல்லாம் எழுதப்படாதா. போன் செய்யக் கூடாதா"

"என்ன பாட்டி இது எங்க வீடு போலத்தானே, வருவதற்கு என்ன அறிவிப்பது"

"எந்த ரூமில் தங்கப் போகிறாய் ?"

"சகுந்தலா அத்தை இன்னும் பிளேன் ஏற வில்லைத்தானே. தற்போது அங்கேதான் தங்கப்போகிறேன். பிறகு வேறு ரூம் பார்க்கலாம்"

அவளை வரவேற்க பத்மா முதலில் வந்தாள். சுமதி பெட்டியையும் தூக்கிக்கொண்டு சகுந்தலாவின் அறைக்குள் வந்து சேர்ந்தாள்.

சுமதி குளித்துவிட்டு காலை உணவு முடித்துக்கொண்டாள். பாட்டியிடம் வந்தாள்.

"அம்மா எப்படி இருக்கிறாள், வந்த நெல்லு மூட்டையும் குறைந்து போய்விட்டுது. உன் தாத்தாவோ மாமன்மாரோ ஏன் என்று கேட்பதற்குத் தயாராகவில்லை. அவரவர் தமது வேலையைப் பார்ப்பதோடு சரி. நான் தான் கஷ்டப்படுகிறேன்" – பாட்டியின் குறைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏன் பாட்டி கஷ்டம். நான்தான் இங்கே வந்துவிட்டேன். உங்க வேலையை எல்லாம் பொறுப்பேற்றுப் பார்க்கப்போகிறேனே. அம்மா உங்களைத் திருவிழாவோடு வந்து தங்கி ஓய்வெடுத்து வயலையும் கொஞ்சம் பார்க்கச்சொன்னா. விளைச்சல் குறைஞ்சுபோச்சு. அதற்கு என்ன செய்கிறது. பாட்டி சத்தம் போடப் போகிறா என்று ஏற்கனவே அம்மா சொல்லியிருந்தா"

"ஏதோ நீயும் வந்து விட்டாய். உன் அத்தைமாரோடு சேர்ந்து வீட்டுவேலையும் கொஞ்சம் கவனி. மகளிடமும் ஊருக்குப்போய் பார்த்து வர வேண்டும். ஊர்த்திருவிழாவிற்கும் ரொம்பக் காலம் போகவில்லை."

"இந்தாண்டு கட்டாயம் போய் வாருங்கோ பாட்டி. முருகன் அருளாலே எங்க குடும்பமெல்லாம் சிறக்கும். நல்ல விளைச்சல் வரும்"

"எனக்கு உன்னைத் தெரியாதாடி. எங்கேயடி இப்படியெல்லாம் பொடி வைத்துப் பேசப் பழகிவிட்டாய்"

"பேச்சுமட்டுமல்லப் பாட்டி. நான் இன்னும் எத்தனையோ விஷயங்கள், நீங்கள் செய்ய வேண்டியவையெல்லாம் செய்யப் போகிறேன்" – சுமதியின் கூற்றிலிருந்த அர்த்தங்களைப் பாட்டியால் முற்றாகப் புரிய முடியவில்லை.

சுமதி அடுத்தவாரமே தான் திட்டமிட்ட வேலைகளை ஆரம்பித்துவிட்டாள்.

ஐந்து நாளும் ஒழுங்காகத் தலைமைச் செயலகத்திற்குச் சென்று வந்தாள். அமைச்சகத்திலேயா, டிப்பார்ட்மென்டிலேயா வேலை என்பது தீர்மானிக்கப்படவில்லை.

சனிக்கிழமை காலையில் தாத்தாவிடம் வந்து சொன்னாள் :

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''தாத்தா, ஆபீஸ் பக்கம் போய்விட்டு எங்க கடைக்கு வருகிறேன். எனக்கு கொஞ்சம் பெயிண்ட் வேணும், ரூமுக்கு அடிக்க''

''சரி வாயேன்''

செம்புதாஸ் தெருவில் அந்த இரும்புக் கடையைத் தேடுவதில் அவளுக்கு அத்தனை சிரமமிருக்கவில்லை.

நீண்ட கடை வாயிலிலெல்லாம் இரும்புக்கம்பிகள், தட்டுகள், சீமெந்து. ஒரு பக்கத்தில் பெயின்டுகள்.

சுமதி சுரிதாருடன் உள்ளே நுழைந்தாள்.

''என்னம்மா வேணும்''–வாசல் பக்கமாக பில் எழுதுபவன் வியப்போடு பார்த்துக் கேட்டான்.

''தாத்தாவைப் பார்க்க வந்தேன்''

''தஞ்சாவூர் பேத்தியா''– வியப்போடு வழிவிட்டான்.

தாத்தாவிடம் சென்றதும் பில் எழுதுபவரை அவர் அழைத்துச்சொன்னார் :

''என் பேத்தியடா. செக்கிரிட்டேரியத்தில் வேலைக்குச் சேர்ந்திருக்கிறாள். ஏதோ பெயின்ட் சாமான் வேணுமாம். கொடுங்கடா.''

தாத்தா வேறு வேலைகளில் ஈடுபட்டார்.

பில் எழுதிப் பணம் பெறுபவர் அவளை அழைத்துச் சென்று என்ன பெயிண்ட் எவ்வளவு வேணும் என மரியாதையோடு விபரம் கேட்டார்.

''லையிட் கிறீன், டார்க் யெல்லோ, வெயிற் பெயிண்டும்வேணும் அப்புறம் 3 பிரஷ், தின்னர் எல்லாம் வேணும்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எத்தனை லிட்டர் அம்மா."

"எங்க வீடு பெரிய வீடல்லவா. முதலிரண்டு காலரில் பத்து பத்து கிலோவும் வையிட்டில் ஐந்து கிலோவும் இப்போதுபோதும். அதற்கு வேண்டிய தின்னர் எல்லாம் வேணும். பிறகு தேவையென்றால் தாத்தாவிடம் சொல்லி அனுப்புகிறேனே."

"எப்படியம்மா கொண்டுபோவாய்"

"ஆட்டோவில் ஏற்றிவிடு. நான் கொண்டு போய் விடுவேன்."

ஆட்டோவில் எல்லாவற்றையும் ஏற்றும் போது சொன்னாள் :

"ஒரு பாக்கெட் சீமெந்தும் போட்டுவிடு"

"சரியம்மா, வேறு என்ன வேணும் ?"

"கம்பனி லெட்டர் ஹெட் மூன்று, சீல் போட்டுக் கொடு. தாத்தாவிடம் தேவைக்கு வீட்டிலேயே கையெழுத்து வாங்கிக் கொள்வேன்."

"சரியம்மா"

"என் பேரு சுமதி. உங்க குட்நேம்."

"ஆறுமுகம்"

ஆட்டோக்காரனிடம் வீட்டுவிபரத்தை அந்த மானேஜரே சொல்லிவிட்டான்.

சுமதி எல்லாவற்றையும் ஆட்டோவிலிருந்து இறக்கி பாட்டியின் கண்ணில் படாமல் சகுந்தலா ரூமுக்கு எடுத்ச் சென்றாள். சீமெந்தை மட்டும் தூரம் இருக்கும் ரூமில் போடச்செய்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று மாலையே வீட்டின் எதிரில் இருந்த மளிகைக் கடைக்காரரை விசாரித்து ஒரு கொத்தனாரையும் பெயின்டரையும் அழைத்துவந்தாள். முதலில் தூரம் இருக்கும் பகுதியையும் அதோடு இருந்த கழிவறையையும் திருத்தி பெயிண்ட் அடிக்கப் பேரம் பேசினாள்.

நாளைக்கே கொத்தனார் வேலையை ஆரம்பித்து மூன்று நான்கு நாளில் வேலை முடிக்க வேண்டும் என்று கறார் பேரம் பேசினாள்.

கொத்தனாருக்கு முன் பணமாக ரூபா நூறும் பெயிண்டருக்கு ரூபா ஐம்பதும் தந்தாள். மீதிப் பணம் வேலை முடிந்த பின்னர் என்றாள். அளவுக்கு மணல் வாங்கவும் பணம் தந்தாள்.

மறுநாள் ஞாயிற்றுக் கிழமையே வேலை ஆரம்பமானது.

“என்னடி இதெல்லாம்” – பாட்டி வந்து கேட்டாள்.

“அது பாட்டி என்னையும் மூன்று நாளுக்கு இங்கே சிறைவைப்பாயல்லவா. அது கொஞ்சம் சுத்தமாயிருக்க வேணும் பாட்டி. அதுக்குத்தான். இன்னும் கொஞ்சம் வசதியாய் கட்ட வேணும் பாட்டி”

பாட்டியால் எதிர்ப்புக் கூற முடியவில்லை. பாட்டி மாடியில் ஏறி எவரது ரூமையும் நோண்டிப் பார்ப்பதில்லை. எப்படி எங்கே இந்தப் பெயிண்ட் எல்லாம் வாங்கினாள். எங்கே பணம் பெற்றாள் என்று ஆச்சரியப்பட்டாள். தன் பணம் செலவாகவில்லை என்று உள்ளே மகிழ்ந்தாள். தாத்தா பாட்டியிடம் எதுவும் சொல்லிவிடமாட்டார் என்பதையும் சுமதி அறிவாள்.

அடுத்த வெள்ளிக்கிழமை மாலையில் பரிவாரங்களை அழைத்துக்கொண்டு கோவிலுக்குப் பாட்டி போவாள் என்பது சுமதிக்குத் தெரியும். சகுந்தலாவிடம் ஏதாவதுசாட்டுச் சொல்லி அன்று வீட்டில் நின்று விடும்படி சொல்லிவிட்டே தலைமைச் செயலகம் சென்றிருந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று சுமதி ஐந்து மணிக்கே வீட்டுக்கு வந்து விட்டாள்.

டீ சாப்பிட்டதும் சகுந்தலாவை அழைத்துக் கொண்டு பாட்டியின் ரூமுக்குள் போனாள். அது சாத்தியே இருந்தது. தாத்தா வர ஏழுமணியாகும் என்பது தெரியும். டிராயரிலிருந்து டெலிபோன் சாவியை எடுத்து மகாதேவனின் எண்ணை டயல்செய்தாள். அந்த நேரம் அமெரிக்காவில் காலை வேளை. அவர் வீட்டில் இருப்பார் என்பது அவளது கணிப்பு, சரியாகவே இருந்தது.

"மாமா சுமதி பேசுகிறேன். செக்கிரிரேரியேட்டில் வேலை கிடைத்துவிட்டது. நான் மற்றாஸ் வீட்டுக்கே வந்து விட்டேன்"

"கொன்கிராஜூலேசன்ஸ்"

"சகுந்தலா அத்தையின் ரூமில் தான் தங்கியிருக்கிறேன். பாவம் கஷ்டப்படுகிறா. பாட்டிக்கு எதுவும் புரியாது. அடிமை மாட்டுப்பெண். அதுக்கெல்லாம் ஒரு வழி பண்ணப்போகிறேன். அந்த விசா அலுவலை சீக்கிரம பாருங்கோ. மற்றதுமாமா இந்துவிடம் கலர் டிவி வாங்க ஏற்பாடு செய்வதாகச் சொன்னீர்களாம்"

"ஆமாடி, மறந்தே போய்விட்டேன்"

"பரவாயில்லை, சகுந்தலா அத்தையின் சேவிங் கணக்கில் பணம் வாங்கி கலர் டிவியை வாங்கி விடுகிறேன். நீங்க அவங்க பாங் கணக்குக்குப்பணம் அனுப்பிவிடுங்க, அக்கவுண்ட் நம்பர் உங்களிடம் இருக்காமே."

"எவ்வளவு அனுப்ப வேணும்"

"ஐநூறு டாலர்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இன்றைக்கே அனுப்பிவிடுகிறேனே. நீங்க இருவருமாகப் பார்த்து நல்ல டிவியாக வாங்கலாம்"

"இருபத்தொரு இஞ்சே போதும்"

"சரி வாங்கி விடுங்கோ"

"இதோ அத்தை பக்கத்தில் நிற்கிறா. நீங்க எவ்வளவு நேரமும் பேசலாம். பாட்டி கோவிலுக்குப் போய்விட்டா."

டெலிபோனை சகுந்தலாவிடம் தந்து விட்டு சுமதி வெளியே வந்தாள். பேசி முடிந்ததும் டெலிபோனைப் பூட்டி விட்டு சாவியை முன்னர் இருந்த இடத்தில் வைத்து விட்டாள்.

போன் பேசியதில் சகுந்தலா முகத்தில் ஏற்பட்ட மாறுதலைப் பா ர்க்க முடிந்தது.

## 3.2

**ம**றுநாட் காலைப் பேப்பரைப் பார்த்து 500 டாலருக்கு கணக்குப் போட்டாள். சகுந்தலாவிடம் ஒருசெக் வாங்கிக் கொண்டாள்.

காலை உணவு முடிந்ததும் இந்துவையும் அழைத்துக் கொண்டு பாங்குக்குப் போய் செக்கை மாற்றினாள். அங்கிருந்து நேரடியாக விவேக் கம்பனிக்குப் போனாள். ஏற்கனவே என்ன டிவி வாங்குவதைப் பற்றி சகுந்தலாவின் ஆலோசனையையும் கேட்டு, பத்திரிகை விளம்பரங் களையும் படித்து, விலைகளையும் ஒப்பிட்டுப் பார்த்து தீர்மானித்திருந்தனர்.

சோனி 21 க்கு காஷ் டிஸ்கவுண்ட் பேரம் பேசினாள் சுமதி. வாயாடிப் பெண்ணாக இருக்கிறாளே என 5% கழிவு தருவதாக ஒப்புக் கொண்டனர். பணத்தைக் கொடுத்து ரசீதை வாங்கிக் கொண்டு அன்று மாலையே பொருத்திவிட வேண்டும் என்று கூறி விட்டு வீட்டுக்குத் திரும்பினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டிலே பாட்டி அறியாத குசுகுசுப் பேச்சும் சிரிப்பும் ஆரவாரமும்.

டிவி வாங்கியது போக மீதிப்பணத்தைச் சுமதியே வைத்துக் கொண்டாள்.

மாலையில் டிவி வந்து மாட்ட ஆரம்பித்ததும் இந்துமதியைப் பாட்டியிடம் தள்ளி விட்டாள் சுமதி.

"அம்மா, தேவன் அண்ணா வாங்கித் தருவதாகச் சொன்ன கலர் டிவி வந்து விட்டது வந்து விட்டது." என்று ஆர்ப்பாட்டத்துடன் சொன்னாள். மேலும் தொடர்ந்தாள். ""உங்க பிளாக் அன் வயிட் டிவி உங்க ரூமிலேயே மாட்டிவிடுகிறோம்."

பாட்டியால் எதுவும் பேசமுடியவில்லை. எதையும் தடுக்கவும் முடியவில்லை.

பாட்டியைத் திருவிழாவிற்கு ஊருக்கு அனுப்புவதற்கேற்ற ஒழுங்குகளில் சுமதி ஈடுபட்டிருந்தாள். அடுத்த புதன் கிழமை திருவிழா ஆரம்பிப்பதாக ஊரிலிருந்து அம்மாவின் கடிதமும் வந்திருந்தது.

பாட்டியை அழைத்துச் செல்ல அங்கே எவரும் தயாராயில்லை. அவ்வேளை எதிர்பாராத நபர் ஒருவர் சனிக்கிழமை காலையில் அங்கு சுமதியைப் பார்க்க என வீட்டுக்கு வந்திருந்தார். காலையில் சுமதியும் குளித்து சாப்பாடு முடித்த பின்னரே, எவரோ அவளைத் தேடி வந்திருப்பதாக இந்து வந்து சொன்னாள். அப்படியே முழுநீளச்சட்டையுடன் முன்புறம் வந்தாள்.வெள்ளை வேஷ்டி, சேர்ட். தோளில் துண்டு. சுமதி வந்து பார்த்தபோது ரவி !ஒரே வியப்பு!

அங்கே குழந்தைத் தொழிலாளர் கருத்தரங்குக்கு வந்திருப்பதாகவும் திங்களிரவு ஊருக்குப் புறப்படுவதாகவும் சொன்னார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிது நேரம் புதியவேலை, பிரயாணம், உணவு பற்றிப் பேசினர். தஞ்சாவூர் பிரச்சனைகள், செய்திகள் பற்றி ஆர்வத்தோடு விசாரித்தாள்.

சகுந்தலாவை குரல் கொடுத்து அழைத்தாள்.

"ஊரிலிருந்து வந்தவர், என்னைப் பார்க்க இங்கே வந்திருக்கிறார். மிஸ்டர் ரவிந்திரன், ரவி" எனக் கூறி விட்டுச்சொன்னாள். "சகுந்தலா அத்தை அமெரிக்காவிற்குப் போகப் போகிறாள். கிளின்ரனிடமிருந்து அனுமதியைப் பார்த்துக் கொண்டிருக்கிறாள். பேசிக் கொண்டிருங்கள். காப்பி கொண்டு வருகிறேன்."

சகுந்தலாவை அறிமுகப்படுத்திவிட்டு சுமதி உள்ளே சென்றதும் ரவி பேச்சைத் தொடங்குவதாகக் கேட்டான்.

"எப்போது பயணம்"

"அதுதான் விசாவைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். உங்களுக்கெல்லாம் அமெரிக்காவைப் பிடிக்காது, அமெரிக்க ஏகாதிபத்தியம் என்று பழிப்பீர்களாம்"

"அமெரிக்க மக்கள், தொழிலாளர்களையெல்லாம்நாங்கள் பாராட்டி நேசிக்கிறோம். அவர்களது விஞ்ஞானம், தொழில் நுட்ப வளர்ச்சியில் கம்பியூட்டர் போன்ற முன்னேறிய பண்டங்களை உருவாக்கியதற்காகப் பாராட்டுகிறோம். அதேவேளை அமெரிக்க அரசும், அங்குள்ள சர்வதேசக் கம்பனிகளும் தமது மூலதனத்தால் இந்தியா போன்ற ஏழ்மை நாட்டு மக்களின் உழைப்பைச் சுரண்டி, அடிமைப்படுத்த முயல்வதையே எதிர்க்கிறோம்"– ரவி சாதாரண மொழியில் விளக்க முயன்றான்.

ரவியின் பதில் தெளிவுபடுத்தியதைச் சகுந்தலாவின் முகமும் புன்னகையும் காட்டியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சுமதி உங்களைப் பற்றி எல்லாம் ரொம்பச் சொல்லியிருந்தாள். உங்களிடம் என்ன கேள்வியும் கேட்டறியலாம் என முன்னரே சொல்லியிருந்தாள். தஞ்சாவூரை ஒட்டி இராமநாதபுரம் மாவட்டப் பக்கமாக அண்மையில் சாதிக்கலவரமெல்லாம் நடைபெறுகிறதே. இந்த பேதத்தை முற்றாக ஒழித்துவிட முடியாதா ?"

"அது அத்தனை எளிதல்ல. மூவாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக வர்ண பேதம் நீடித்து வந்துள்ளது. எத்தனை மதத்தலைவர்கள், மன்னர்கள், சுல்தான்கள், சர்வாதிகாரிகள், இந்தியாவை அடிமைப்படுத்தி ஜனநாயகம் போதித்த வெள்ளையர் ஆட்சியாளர், காந்தி, நேரு போன்ற தேசியத் தலைவர்களாலும் சாதி பேதத்தை ஒழித்துவிடமுடியவில்லை."

"சாதி பேதம் எப்படி வேரூன்றியது. நான்கு வர்ண பேதங்கள் ஆரம்பிக்க முன்னரே இருந்ததா ?"– சகுந்தலா அவனது கருத்தை அறியும் விருப்புடன் கேட்டாள்.

"ஆரியர் மத்திய ஆசியாவிலிருந்து வந்த பின்னரே வர்ண பேதத்தை ஆக்கினர். அவர்களுக்கு விவசாயம் பற்றி தெரியவில்லை. மொகன்யோதரா, ஹரப்பா முன்னேறிய விவசாய சமூகங்களே. தமது ஆயுத பலம், விவேகத்துடன் ஆரியர் இங்கு வாழ்ந்த கறுத்தவர்களை நாலாவது வர்ணமாக சூத்திரர் ஆக்கினர். வர்ணம் என்பது நிறமே. அதுவே சாதி அமைப்பின் அடித்தளமாகியது. இவர்களே உற்பத்தியில் ஈடுபட்ட உழைப்பாளர்; இவர்களும் காலப்போக்கில் வேலைப் பிரிவினையை ஒட்டி பல்வேறு சாதியினராகப் பிரிக்கப்பட்டனர்."

"சாதியால் ஏற்பட்ட வேலைப் பிரிவினை சமூக உற்பத்தியையும் சமூக வளர்ச்சியையும பாதித்தது என்பீர்களா ?"

"ஆமாம், சாதியால் சமூகம் துண்டாடப்பட்டதாலேயே இந்திய பொருளாதாரமே மூவாயிரம் ஆண்டுகளாக பெரிய வளர்ச்சியின்றி தேக்கமடைந்தது. சாதி அமைப்பு உழைப்பை மறைக்கிறது. வர்ணமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதியும் ஒரு பொய்த் தோற்றமாக மூட நம்பிக்கையை வளர்த்தது. படைப்பாற்றலை மழுங்கடித்து வந்தது. உற்பத்தியில் ஜனநாயகத்தன்மை இல்லாமல் போய்விட்டது."

"தற்போது அரசியலில் சாதி பேதமற்ற வாக்குரிமை, ஜனநாயகம் வழங்கப்பட்டிருக்கிறதே. இதன் மூலம் சாதிபேதம் ஒழியாது என்றும் சொல்லுவீர்களா ?"

"சாதி அமைப்புச் சமூகம் ஏற்றத் தாழ்வுள்ள சமூகம், சாதியும் ஜனநாயகமும் அடிப்படையில் முரணானவை.."–ரவியின் கூற்றை இடைமறித்து சகுந்தலா கேட்டாள்.

"கல்வி, வேலைவாய்ப்புகள், நடுத்தர விவசாயிகளின் வளர்ச்சி சாதிப் பிரிவான சமூகங்களை ஒன்று படுத்தவில்லையா ? எல்லோருக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டுள்ளதே ?"

"நீங்கள் கூறுவது ஓரளவு உண்மையே. ஆயினும் சாதி அடிப்படையிலேயே தேர்தலும் நடைபெறுகிறது. ஒவ்வொரு தொகுதியிலும் ஆதிக்கமுள்ள சாதியினரையே வேட்பாளராக எல்லாக் கட்சிகளும் நிறுத்துகின்றன. ஒடுக்கப்பட்ட சாதியினர் நாடாளுமன்றம். சட்ட சபைகளிலும் சிறுபான்மையினராகவே உள்ளனர். அதனாலும் அரசியல் பொருளாதார, சமூக வாழ்வில் ஒடுக்கப்பட்டு ஒதுக்கப்பட்டே வருகிறார்கள்."

"பெண்களும் சட்டமன்றங்களில் சிறுபான்மையினராகவே உள்ளனர்."

"ஆமாம், அங்கும் அரசியலாதிக்கத்திலும் சமத்துவம் பெற அவர்கள் போராட வேண்டியுள்ளது. அரசியல், பொருளாதார, சமூக வாழ்வில் சமத்துவமின்றியே பெண்களும் ஒடுக்கப்பட்டுள்ளார்கள். அவற்றுக்காகப் போராட வேண்டியுள்ளது"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவர்களும் சாதி வேறுபாடுபோலவே ஜனநாயக உரிமை அற்றவர் என்று சொல்லுவீர்களா ?"

"ஆமாம் ஆணாதிக்க சமூக அமைப்பு, குடும்பத்தலைவனாக ஆண்களே நிலைக்கும் சமூக அமைப்பு நிலவும் வரை பெண்களும் இரண்டாந்தரப் பிரஜை ஆக, ஜனநாயக உரிமைகள் அற்றவராகவே இருப்பர்."

"ஜாதி அமைப்பா, பெண்ணடிமைத்தனமா மோசமானது, குரூரமானது என்று நீங்க கருதுகிறீர்கள்" – சகுந்தலா திடீரென தன் சந்தேகத்தைக் கேட்டாள்.

"பெண்ணடிமைத்தனமே சமூக அமைப்பில் மிகக் குரூரமானது. காலப்போக்கில் சாதி அமைப்பை உடைத்துவிடலாம். அப்போதும் பெண்ணடிமைத்தனமே பின்னரும் நீடிக்கும்"

"எக்காலம் வரை"

"குடும்பம் என்ற ஜனநாயகமற்ற, சமூக வன்முறை வடிவம் நீடிக்கும் வரை"

"பெண்ணியத்திற்கு ஒரு ஆண்மகனின் ஆதரவு பாராட்டுக்குரியதே. ஆனாலும் குடும்பம் என்ற நீண்டகால நிறுவனத்தை உடைப்பது என்பதைத் தான் எண்ணிப் பார்க்க முடியாதிருக்கிறது." – சகுந்தலா கூறினாள்.

சகுந்தலாவை ரவியுடன் பேசவிட்டு உள்ளே சென்ற சுமதி ரவிக்குத் தர பலகாரம் தேடினாள்.

பாலைச்சூடாக்கி காபி தயாரித்தாள். முதல்நாள் மாலை தயாரித்த மைசூர் பாகும் முறுக்கும் டின்னில் இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தங்க ஊர்க்காரர் என்றதும் குதூகலம் தான்"– மரகதம் சொன்னாள்.

"சுமதியின் சுறுசுறுப்பைப் பார்த்தால் எவரோ முக்கியமானவராக இருக்கவேண்டும்" பத்மா அவளது அவசரத்தைப் பார்த்துச் சிரித்தபடி சொன்னாள்.

"ஆமாம் ரவீந்திரன் என்று அங்கே கல்லூரியில் லெக்ஷரராயிருக்கிறார். நீங்களும் வந்து பார்க்கலாம்"

"மச்சியின் போய் பிரெண்டாயிருக்கலாம், நானும் பார்த்துவிட்டு வருகிறேனே" என மரகதத்தின் மூத்தவள் ஓடினாள். ஒரு நோட்டம் போட்டு விட்டு சிரித்தபடி வந்தாள்.

"அப்படி இருக்காது சித்தி, வேஷ்டியும் சேட்டும் துண்டும். மச்சீன்ரை போய் பிரெண்ட் என்றால் நிட்சயம் பான்ரோடு தான் இருப்பார்" என பத்மாவைப் பார்த்துச் சொன்னாள்/ சுமதி உள்ளூரச் சிரித்துக் கொண்டாள்.

வெளியார் முன்பாக வீட்டில் அணிந்த முழுநீளச் சட்டையுடன் சுமதி நடமாடுவது மரகதத்திற்கும் அத்தனை பிடிக்கவில்லை. இந்துவையும் அதே போன்று வசதியாக உடையணிய சுமதி தூண்டிக்கொண்டிருந்தாள். சகுந்தலா மட்டுமே இரவில் அப்படியான சட்டை அறைக்குள் அணிவாள். மற்றவர் சேலையுடனேயே தூங்குவர்.

ரவியிடம் சிற்றுண்டி காப்பியை ஒரு தட்டோடு வழங்கிவிட்டு, சுமதி பாட்டியை அழைத்து வந்து ரவியை உயர்வாக அறிமுகப்படுத்தினாள். திங்கட்கிழமை இரவு ஊருக்கு அழைத்துப்போய் வீட்டில் சேர்ப்பார் என்றும் சொன்னாள். ரவி பாட்டிக்கு வணக்கம் தெரிவித்தார்.

"ஏதோ உங்க ஊர்க்காரர், தெரிந்தவர் என்றால் சரிதான். கிழவியாகிவிட்டேன். இங்கேயிருந்து அழைத்துச் செல்ல ஒருவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயாரில்லை. எப்படியும் இந்தவருஷம் திருவிழா பார்த்து மகளோடும் இருந்துவிட்டு வரவேணும் என்று தீர்மானித்தேன். சரி அப்படியே திங்கட்கிழமையே போவோம்''

காலையிலேயே எழும்பூர் நிலையத்திற்குச் சென்று இரவு புறப்படும் திருச்சிப் பாசேஞ்சருக்கு இரண்டு பர்த் வாங்கிக் கொண்டாள். அந்த வண்டிக்கு எப்பொழுதும் பர்த் கிடைக்கும் என்பதை சுமதி அறிவாள்.

ஞாயிற்றுக் கிழமை மியூசியம் தியேட்டரில் நடைபெற்ற கருத்தரங்கிற்குச் சுமதியும் சென்றாள். ரவியிடம் அவரது டிக்கெட்டைத் தந்தாள்.

''பிறகு மறந்தாலும் ஊருக்குப் போனதும் சமையல்காரர் சண்முகத்தை உடனே அனுப்பி விடவும். நான் ஏற்கனவே சொல்லி ஏற்பாடு செய்திருந்தேன்.பஸ் அல்லது ரெயின் டிக்கெட்டை வாங்கிக் கொடுத்துவிடவும். கையில் செலவுக்கு மட்டும் பணம் கொடுக்கவும்.''

கருத்தரங்கில் ரவியும் பேசினார். பேச்சு மற்றவர்களைவிட புதுமையாகவே இருந்தது.

''நாட்டில் வறுமை ஒழியும் வரை சிறார் தொழிலாளர் பிரச்சனையை நிறுத்திவிட முடியாது. ஏற்கெனவே சில சட்டங்கள் இருக்கின்றன. பிரச்சனை பரவலாக நாடு தழுவியிருப்பதால் முற்றாக அமுல் படுத்தவும் முடியாது. அதற்காக நாம் கண்ணை மூடிக் கொண்டும் இருக்க முடியாது. நாட்டில் விழிப்புணர்வை ஏற்படுத்தி சிறுவர்க்கும் கல்வியளிக்கும் கடமையையாவது செய்து கொண்டிருக்க வேண்டும்.''

நண்பகல் உணவு அங்கே வழங்கப்பட்டது. மாலையில் கருத்தரங்கு முடிந்ததும் இருவரும் ஒட்டலில் சிற்றுண்டி சாப்பிட்டனர். சுமதி வீட்டுக்கு வர ஏழுமணியாகிவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன ரவியோடு சுற்றித் திரிந்தாயா?"– மெல்லிய சிரிப்போடு சகுந்தலா கேட்டாள்.

"கருத்தரங்கிற்கே சென்றேன். கடற்கரை வரை சுற்ற விருப்பந்தான். நேரம் கிடைக்கவில்லை"– சுமதி அடக்கமாகப் பதில் சொன்னாள்.

மறுநாட் காலையில் பாட்டியிடம் பேசி, வீட்டுச் செலவுக்கு வேண்டிய பணத்தைப் பெற்றுக் கொண்டாள்.

மளிகைக் கடையில் வாங்கும் கணக்கைப் பாட்டி தான் வந்து செலுத்துவதாகச் சொன்னாள்.

திங்கட்கிழமை இரவு பாட்டியை எழும்பூர் நிலையத்திற்கு அழைத்துச் சென்று ரவியுடன் ரெயில் ஏற்றிவிட்டு விட்டாள்.

வண்டி புறப்படும் முன் பாட்டி சொன்னாள்.

"உன் சுட்டித்தனங்களைக் காட்டி அமைதியாக இருக்கும் வீட்டை சீரழித்துவிட்டதே. இந்து நீயும் பார்த்துக் கொள்ளடி."

"பாட்டி உங்க பேத்தியின் நிர்வாகத் திறமையைப் பிறகு வந்து பாரேன். அவசரப்படாமல் மகளோடு சண்டை போடாமல் வயல்களையும் பார்த்து நாத்து நடுவதையும் முடித்துவிட்டு வா பாட்டீ, சிரியோ பாட்டீ"– பாட்டிக்கு கை காட்டிவிட்டு ரவியுடன் கண்ணால் பேசி சிரிப்பால் தன் காதலைத் தெரிவித்தாள்.

வீடு சேர்ந்ததும் சுமதி சத்தமிட்டாள் :

"பாட்டி கிழவி போய்விட்டது. இனி எல்லோருக்கும் விடுதலை, விடுதலை"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரகதத்தின் பிள்ளைகளும் வந்து அவளுடன் சேர்ந்து கொண்டனர்.

## 3.3

மறுநாள் கொத்தனாரையும் பெயிண்டரையும் சுமதி அழைத்து வந்தாள்.

வீட்டிலே உடைந்திருந்த இடங்களையெல்லாம் ஒரு வாரத்தில் திருத்திவிடவேண்டும் எனச்சொல்லி அவர்கள் வேண்டிய பொருட்களைக் குறித்துக் கொண்டாள்.

பெயிண்டரிடம் ரிப்பேர் செய்யும் இடங்களை உடனேயே வர்ணமடிக்க வேண்டிய விபரங்களையும் சொன்னாள். ஒரு பிளம்பரையும் அழைத்து பைப் பிற்றிங்ஸ் மாற்ற வேண்டிய விபரத்தையும் குறித்துக் கொண்டாள்.

சனிக்கிழமை இரும்புக் கடையிலிருந்து எடுத்து வரக்கூடிய பொருட்களை எல்லாம் ஏற்றி வந்து இறக்கிவிட்டாள், – சிமெண்ட், பெயிண்ட், பைப் பிட்டிங் வகையறாக்கள்.

அன்று மாலையில் சமையல்கார சண்முகம் வந்து இறங்கினான்.

அவன் அங்கே தங்குவதற்குரிய ஏற்பாடுகளைச் சுமதி செய்தாள். அவனைச் சாப்பிடப் பண்ணினாள்.

"சமையற் கட்டு வேலையெல்லாம் இனி உன் பொறுப்புத்தான். ஆரம்பத்தில் மூணு அத்தை மாரும் உனக்கு பொருட்கள் இருக்கும் இடமெல்லாம் காட்டித்தருவர். தெருவுக்கு எதிரே உள்ள மளிகைக் கடைக்கு கடிதம் என்னிடம் அல்லது அத்தையிடம் பெற்று வாங்கிவரலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரளவு கை உதவியும் இங்கே கிடைக்கும். தாத்தாவுக்கு சுகர் இருக்கு தனிச்சாப்பாடு. இனிமேல் உன் கைவரிசையைக் காட்டலாம்."

அந்த வீட்டின் அமைப்பே விசித்திரமானது. பெரிய மாமா புடவைக்கடை, அடுத்தமாமா பார்மஸி, காலையில் சாப்பிட்டு விட்டு புறப்பட்டால் வீடு திரும்ப இரவு ஏழுமணிக்கு மேலாகிவிடும். பின்னர் இரவுச்சாப்பாட்டுக்கு எல்லோரும் அழைக்கப்படுவர். வீட்டு விஷயங்கள் எதிலும் தலையிடமாட்டார். சுமதியின் சுறுசுறுப்பான வேலைகளைப் பார்த்து உள்ளூரச் சிரித்துக் கொண்டனர். அவளும் பாட்டியும் 'பட்ட பாடு' எனப் பேசாமல் விட்டனர். மற்றவர் நடப்பதை வேடிக்கையாகப் பார்த்தனர்.

உணவு பரிமாறும் பணியை மரகதத்திடம் சுமதி ஒப்படைத்தாள். மரகதம் இல்லாத வேலை பத்மா அல்லது சகுந்தலா.

பின்னர் மற்றவர் சாப்பிடும் வேளை சண்முகத்தையே பரிமாறச் செய்தாள்.

பாட்டி இருந்தவேளை இருந்த கட்டுப்பாடும், குறைகாணும் பேச்சுகளும் மறைந்ததால் சுமதியின் ஏற்பாடுகளை எவரும் எதிர்க்கவில்லை.

"பாட்டி வந்தபின் அவளே திட்டு வாங்கட்டும்" என மரகதம் சொல்லிவிட்டாள்.

"இந்த வீட்டில் எனக்கும் பங்கிருக்கிறது. அதை நான் கேட்கவில்லையே. வீட்டைத்திருத்தும் வேலைதானே செய்கிறேன்" என்று சுமதி சொல்லிவிடுவாள்.

இந்துமதிக்கு தன் காதல் பிரச்சனையை எப்படித் தீர்ப்பது என்பதே ஒரே சிந்தனை. பாட்டியை எதிர்க்கக்கூடிய பலமுள்ளவள் சுமதி ஒருத்தியே என்று அவளைச் சார்ந்து நின்றாள்.

சகுந்தலாவை ஒரு நாள் அவளது தாயார் வீட்டிற்கு சுமதி அழைத்துச் சென்றாள். அவர்கள் வீட்டாரோடு பழகினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இன்னும் இரண்டு மாதத்தில் சித்திக்கு விசா வந்து விடும் என்று மாமா போனில் என்னிடம் சொன்னார்"

"நீயும் பேசினியாடி"– தாயார் சகுந்தலாவை கேட்டாள்.

"ஆமம்மா. அப்படித்தான் சொன்னார். உங்க சுகம் எல்லாம் விசாரித்தார்."

தி. நகரிலிருந்த மூத்தமாமாவின் புடவைக்கடைக்கு ஆபிஸி லிருந்து நேரடியாக ஒரு மாலை சென்றாள்.

மாமா மகிழ்ச்சியோடு வரவழைத்துச் சொன்னார் :

"நீ சும்மா வந்திருக்கமட்டாயே. ஏதாவது திட்டத்துடன் தான் வந்திருப்பாய்"

"ரூமுக்கு கேட்டின் துணி வேணும்"

அவர் மானேஜரை அழைத்து "என் மருமகளடா தலைமைச் செயலகத்தில் வேலை செய்கிறாள். ஏதோ துணி வேண்டுமாம் கேட்பதைக் கொடு."

மானேஜர் அவளை அழைத்துச் சென்றார்.

"என்னம்மா வேணும்"

"கேட்டின் துணி"

அங்குள்ள அச்சிட்ட துணியெல்லாவற்றையும் எடுத்துப் போட்டான். மூன்று ரகத்தைத் தேர்ந்து 5 மீட்டர் படி தரும்படி கேட்டாள்.

"என்னம்மா முதல் தடவை கடைக்கு வந்தீங்க. முதலாளி 'கேட்பதைக் கொடு" என்று விட்டார். ஏதாவது சேலைகள் எடுப்பீர்கள் என்றால் இதையா வாங்க வந்தீங்க"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் சேலை அதிகமாகக் கட்டுவதில்லையே"

"அப்போது சுரிதார் துணி தருகிறேனே.."

"ஒரு சுரிதார், இரண்டு பான்ட் தைக்க மட்டும் தந்தால் போதும்."

எடுத்துப் போட்டதில் உடனேயே தனக்குப் பிடித்தவற்றைத் தேர்ந்து எடுத்துக் கொண்டாள்.

"மாமா, ரொம்ப தாங்ஸ்" என்று சொல்லிவிட்டுத் துணிகளுடன் புறப்பட்டாள்.

வீட்டிக்கு அண்மையிலிருந்த ரெயிலரிடம் நேரடியாகச் சென்று ஆறு கேட்டினுடன் தனக்கு வேண்டியவற்றுக்கு அளவு எடுக்கச் சொல்லி சுரிதார், பான்ட் துணியையும் கொடுத்துவிட்டு வீட்டுக்குச் சென்றாள்.

வீட்டு ரிப்பேர், பெயிண்டிங், பைப் பிட்டிங் வேலைகள் துரிதமாக முடிந்தன. ஆங்காங்கே கதவுகளைத் திரைச் சீலைகள் வேறு அலங்கரித்தன. சகுந்தலாவின் பணத்தில் கலர் டி.வி வாங்கிய பணம் போக மீதியையும் தன் முதல் மாதச் சம்பளத்தையும் ஆங்காங்கே கூலி தரப் பயன்படுத்தினாள்.

சகுந்தலா அவளது தேவைக்குப் பணம் தரலாம் என்றும் கூறினாள்.
"அத்தை அறியாமலிருந்தால் சரி"

"ரொம்ப தாங்ஸ். தேவை ஏற்படின் பார்க்கலாம்".

செலவான பொருட்கள் எல்லாம் தங்கள் கடைகளிலிருந்தே பெற முடிந்ததால் பெரும்பாலும் கூலி தரும் பணங்களே தேவைப்பட்டன.

இருட்டாக இருந்த பழைய வீடு பொலிவு பெற்று அழகடைந்து வருவதைப் பார்த்து தாத்தா தன் பேத்தியை மனதுள் பாராட்டிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டார். முன்பைவிட பார்க்க உணவின் தரம் உயர்ந்து. வசதிகளும் வாய்ப்பாக உள்ளதைக் கண்டும் பேத்தியை நினைத்து பெருமிதம் கொண்டார்.

ஹோல், கிச்சின் மற்றும் முக்கிய இடங்களுக்கெல்லாம் ரியூப்லையிட் போட்டு பிரகாசமாக வீடு முழுவதுமே ஒளிமயமானது.

அன்று திங்கட்கிழமை. காலைப் பூஜை முடித்து சாப்பாட்டுக்குத் தாத்தா தயாராகியிருந்தார். அவரது அறையிலேயே இட்லியையும் சட்னி, சாம்பாரையும் சுமதியே எடுத்துச் சென்றாள்.

"ஏன்டி மரகதம் இல்லையா ?"

"அத்தை கொஞ்சம் பிஸியாயிருக்கிறா. அது தான் நான் எடுத்து வந்தேன்"

"சும்மா இருக்காது, ஏதோ திட்டத்தோடு தான் வந்திருப்பாய்"

"தாத்தா இன்னும் ஒரு சின்ன உதவிதான். இந்தக் கடிதத்தில் கையெழுத்து மட்டும் போட்டுவிடுங்கள். வெய்யில் வெப்பம் தொடங்கிவிட்டது. ஃபான் வேணும் தாத்தா, உங்க ஃபான் கூட பழைசு. சத்தம் கூட அங்கே கேட்கும் வரை ஒலிக்குது. துணி தோய்ப்பதால் வேறு பிரச்சனை. சகுந்தலா அத்தை பணம் தருவதாகச் சொன்னா. சேவிங் கணக்கில் ரொம்பப் பணம் வைத்திருக்கிறா. அதில் பணம் பெற்று வாங்குவது வெட்கம் இல்லையா. அதுதான்."–கெஞ்சலாகக் கேட்டபடி தாத்தாவின் வெற்று மேனி முதுகையும் தடவிவிட்டாள்.

வேகா கம்பனிக்கு நாலு ஒரியெண்ட் 24 இஞ் ஃபானும் வீடியோகொன் வாஷிங் மெஷினுக்கும் ஃபிரிட்யுக்குமான லெட்டர் ரைப் செய்யப்பட்டிருந்தது. கீழே கம்பனி ரப்பர் ஸ்டாம்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இதெல்லாம் எங்கேடி திருடினாய்"

"கடை மானேஜரிடம் தான் வாங்கினேன்"

தாத்தா சிரித்துவிட்டு கையெழுத்திட்டார்.

"நல்ல தாத்தா. தாத்தாவுக்கு ஒரு கிஸ்" என்று இரு பக்கக் கன்னத்திலும் முத்தமிட்டாள். பின்னரும் தொடர்ந்தாள் :

"ராத்திரிக்கு வந்து தாத்தாவுக்குக் கால் பிடித்து விடுவேனே."

சுமதி அன்று காசுவல் லீவு போட்டுவிட்டு வேகா கம்பனிக்கு லெட்டருடன் போனாள்.

கடிதத்தைத் தந்து பொருட்களைச் சரி பார்த்து வீட்டுக்கு அனுப்பிவிடச் சொன்னாள். மறுநாள் மாலையே பொருட்கள் வந்தன. வாஷிங் மெஷின் கொண்டு வந்தவனையே அத்தைமாருக்குத் துணிபோட்டு ஓட்டிக் காட்டும்படிச் சொல்லிச் செய்வித்தாள்.

தாத்தா வரும் முன்னர் அவரது ஃபானை சமையல் கட்டுக்கு மாற்றச் செய்து புதியதைப் போடச் செய்தாள். ஹோலுக்கு ஒரு ஃபானும் , தூரம் இருக்கும் பகுதிக்கு ஒன்றும் முன் வராந்தாவுக்கு மற்றதுமாக மாட்டச் செய்தாள்.

மறுநாளே தன் பெட்டி படுக்கையைத் தூர இருப்பதற்கு ஒதுக்கப்பட்ட புது அறையாக்கப்பட்ட பகுதிக்கு மாற்றிக் கொண்டாள்.

மரகதம், பத்மா இருவரும் சுமதியின் துணிச்சலான வேலைகளைப் பார்த்து வியப்படைந்து பார்த்தனர்.

"என் அறைக்கு இனிமேல் எவரும் வரமுடியாது. உங்கள் ரூமுகளிலேயே இருக்கலாம்.எனக்கு மென்ஸிஸ் சென்ற வாரம் வந்ததாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவருக்காவது தெரியுமா ? நான் ஆபிஸ் சென்று வந்தேனே. நீங்களும் சௌகரியமாக இருக்க வேணுமென்றால் டிவியில்தானே நாள்தோறும் பத்துத்தடவை விளம்பரம் வருகிறதே. ஸ்ரேபிறீ வாங்கிக் கொள்ளுங்கள். இல்லாவிட்டால் என்னிடம் வந்தால் தருவேன்''—சுமதி அத்தை மாருக்கும் சித்திக்கும் அ றிவித்தல் கொடுத்தாள்.

மரகதத்தின் மூத்த பெண் மீனா சொன்னாள் :

''இனிமேல் நான் ஸ்கூல் கட் பண்ண மாட்டேன். பக்கத்துப் பெண்ணிடம் எனக்கு மென்ஸிஸ் வந்தது பாட்டி ஸ்கூலுக்கு வரவிடவில்லை என்றால் 'பட்டிக்காட்டுப் பாட்டி' என்று சொல்லிச் சிரிக்கிறார்கள். இனிமேல் மச்சியிடம் கெயர் பிறீ வாங்கிப் போடுவேனே''

சிறிய பெண் துள்ளிக் குதித்தாள். இந்துவும் வந்து அவளோடு சேர்ந்து கொண்டாள்.

''எல்லாம் சரி சுமதி. இரண்டு விஷயத்தில் தான் பாட்டியோடு பெரிய யுத்தம் வரப்போகிறது. தயாராயிரு''— இந்துமதி சொன்னாள்.

''என்ன சொல்லேன் பார்ப்போமே''— சுமதி கேட்டாள்.

''ஒன்று சமையல்காரர் ஏன் ?''

''எனக்குச் சமைக்க ஊரிலிருந்து வரவழைத்தேன். நானே கூலி கொடுப்பேன். உங்களுக்கும் சேர்த்து சமையல் செய்து தரலாம். உங்களுக்கு வேண்டுமானால் கூலியில்லாத அடிமை மருமகள் சமையற்காரிகளைக் கொண்டு நீங்க சமைத்துச் சாப்பிடுவதில் ஆட்சேபனையில்லை என்பேன்''— சுமதி சொன்னாள்.

'' ஆமா கெட்டிக்காரி தான், நல்ல பதில்''— இந்து பாராட்டினாள்.

''சரி அடுத்தது என்ன ?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்த தூரம் இருக்கும் பகுதியை நீ பிடித்துக் கொண்டது."

"அங்கேதான் பாட்டியின் மூட நம்பிக்கைகளுக்கெல்லாம் ஒரே டைனமயிட் வைத்துள்ளேன்"

"ஆமாண்டி அது உண்மைதான். பாட்டிக்கு என்ன பதில் சொல்லப்போகிறாய்?" – இந்துமதி கேட்டாள்.

"இதற்குத்தான் ஏற்கனவே பதில் தேடி வைத்துக் கொண்டே இத்தனை வேலையெல்லாம் செய்தேனே. ஏற்கனவே பாதிப் பதிலைப் பாட்டியிடம் சொன்னேன். பாட்டி புரிந்துக் கொள்ளவில்லை."

"எங்களுக்குச் சொல்லேன் சுமதி"

"நான் இதுவரை இந்த வீட்டுக்குச் செய்ததெல்லாம் நன்மையா தீமையா?"

"நன்மைதான்"

"இங்கே உள்ளவர் எல்லோரும் இப்போது என் பக்கமா, பாட்டி பக்கமா"

"அப்பா கூட உன் பக்கமே"

"அதுதான் என் வெற்றி" சுமதி சொன்னாள்.

"தூரம் பகுதி பற்றி என்ன பதில் சொல்லுவாய் என்று கேட்டேன். அதற்கு இன்னும் பதில் கூறவில்லையே" – இந்துமதி அழுத்திக் கேட்டாள்.

சுமதி உதார நடிப்போடு அழுத்திய குரலில் சொன்னாள் :

"பாட்டி பாட்டி இந்த வீட்டில் எனக்குப் பங்குரிமை, தங்க உரிமை இருக்கிறது. இந்தப் பகுதிதான் காலியாக இருந்தது. திருத்தி எடுத்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிமேல் எவரும் என்ரூமில் தங்க அனுமதிக்கப்படமாட்டார்கள்.''

''இன்னும் ஏதோ எல்லாம் செய்ய இருக்கிறது. இத்தோடு நிறுத்துகிறேன் என்றாயே அது என்ன மச்சி''

''அந்த வேலையைத்தானே நீயே செய்யப்போகிறாய். நீயே செய்துவிடு...'' – சுமதியின் மனச் சிரிப்பு உதட்டிலும் பிரதிபலித்தது.

''என்ன அது ... என்ன அது .. எனக்குப் புரியவில்லை''

''நீதானே இந்தக் கூட்டுக் குடும்பத்தையே உடைக்கப் போகிறாயே'' – சுமதி சிரித்தபடி கூறிய வேளை டெலிபோன் மணி அ டித்தது.

சுமதியே ஓடிச்சென்று எடுத்தாள்.

''ஹலோ''

''சகுந்தலா மகாதேவன் வீடுதானே''

''ஆமாம், என்ன வேணும்''

''இது ஏர் இந்தியா ஆபீஸ். அவங்களுக்கு சென்னை – நியூயார்க் பயணத்திற்கு டிக்கெட் வந்திருக்கிறது. பாஸ்போட்டுடன் வரச்சொல்லுங்கோ''

''நாங்களாகவே பணம் தந்து டிக்கெட் வாங்க இருந்தோமே.எவர் டிக்கெட் அனுப்பினாங்க''

''மிஸ்டர் மகாதேவன்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.1

"மகாதேவன்"

"ம்ம்" – டெலிபோனில் நண்பனுக்கு பதிலளித்தான்.

"இன்னும் நியூயோர்க் புறப்படவில்லையா? நீ பிந்தினால் உன் காதலி சங்கடப்படப் போகிறாளே"

"இதோ புறப்பட்டுக்கொண்டிருக்கிறேன்."

நியூயோர்க் நகர விமான நிலையத்தில் வந்து சகுந்தலாவை அழைத்துச் செல்வதாக மகாதேவன் போனில் சொல்லியிருந்தான். நண்பனும் நேரத்துக்கு நினைவூட்டினான். ஞாயிறு ரிஸெப்ஷன் ஏற்பாடுகளை அவனே ஏற்பாடு செய்திருந்தான்.

சகுந்தலாவைப் பயணம் அனுப்ப ஒரு கூட்டமே விமான நிலையத்திற்கு வந்திருந்தது. உறவினரைப் பிரியும் கலக்கத்தோடு விடைபெற்றாள். பெற்றோரைப் பிரிவதைவிட சுமதியிடம் விடைபெறுவதே கண்களைக் கலக்கியது. விமானத்தில் ஏறியபிறகு மகாதேவன் நினைவுடன் 'யார் அந்தப் பெண் குமுதினி' என்பதை அறிய வேண்டும் எனவும் மனம் எண்ணியது. அறிந்து எழுதும்படி மைதிலியும் சொல்லியிருந்தாள். விசா கிடைத்து விட்டது என்று தெரிவித்ததும் தன் வாழ்த்துக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தாள்.

எத்தனை பேர் தோழியர், உறவினர் இருந்தபோதும் சுமதியை அவளால் மறக்க முடியவில்லை. வெறும் வார்த்தையில் பேசுபவளல்ல. செயலாற்றல் மிக்கவளாகவும் இருந்ததே வியப்பளித்தது. அது ரவீந்திரனுடன் ஏற்பட்ட தொடர்பாலா அல்லது கல்லூரிக் கல்வியாலா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டுக் குடும்பத்தை உடைத்துக் காட்டுகிறேன் என்று சுமதி ஆரம்பத்தில் சொன்னபோது வெற்றுப்பேச்சு என்றே கருதியிருந்தாள். ஆனால் ஒரு மாதத்திலேயே பாட்டி கட்டிவைத்திருந்த பொய்மைகளை யெல்லாம் உடைத்து விட்டாள். எத்தனை துணிச்சல், தன் நம்பிக்கை.

கூட்டுக்குடும்ப அமைப்பை உடைக்க முயன்று எல்லோருக்கும் ஒரளவு விடுதலையும் தேடித்தந்தாள். பாட்டியின் கோட்டையை ஒரிரு மாதத்திலேயே உடைத்து விட்டாள்.

கூட்டுக் குடும்பச் சிறை என்று அவள் சொன்னது மட்டுமல்ல, குடும்ப நிறுவனமே ஒரு சிறு சிறை என்றும் ரவியின் கொள்கையைக் குறிப்பிட்டு வந்தாள். அத்தோடு அங்கே பெண்ணே அடிமை ஆகிறாள் எனவும் கூறினாள். எத்தனை உண்மை. சொந்த அனுபவமே புட்டுக் காட்டியது.

குமுதினி என்ற பெண் திருமண வாழ்த்துடன் குறிப்பிட்டு எழுதியதும் அதுதானா. அல்லது வேறு அர்த்தம் கொண்டதா ? என்னையும் ஒரு அடிமையாகவே மகாதேவன் இந்தியாவிலிருந்து தனக்குச் சேவை செய்வதற்காக இறக்குமதி செய்கிறாரா ? அதற்கா நான் செல்கிறேன். அவரது குடும்ப அமைப்பைப் பேணவா ? இதுவும் சுமதியின் கூற்றிலிருந்து தான் இவ்வாறு எண்ணவும் தோன்றியது.

யார் அந்தக் குமுதினி. அவளை ஒரு தடவை பார்க்க வேண்டும். அவளது வாழ்த்திதழைப் பார்க்காமல் அனுப்பியதாகவே ஒட்டி இன்னொரு கவரில் போட்டு மகாதேவனுக்கு அனுப்பினாள். அவரைக் கேட்காமலே அந்தப் பெண்ணை ஒரு நாள் காண வேண்டும். விபரம் கேட்க வேண்டும். அங்கே என்ன செய்கிறாள். என்னிலும் கவர்ச்சியாயிருப்பாளா ? ஒரு வேளை துணிச்சல்காறியா ? அப்போது இவரை ஏன் கைவிட்டாள்.

குமுதினி அவர் காதலித்து கைவிட்ட பெண்ணா ? திருமண அழைப்பின்றியே வாழ்த்து அனுப்பினாளா ? அவளிலே என்ன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்பிருந்திருக்கும். என்னைவிட பார்க்க அழகாயிருப்பாளா? இவர் அவளுடன் பழகி எத்தகைய உறவு வைத்திருந்திருப்பார். பாலுறவுமா. மைதிலி சொன்னாள் கற்புடைய ஆணைப் பார்க்க முடியாது. எல்லோருமே 16 வயதுக்கு மேல் செக்கண்ட் ஹாண்ட், தேர்ட் ஹாண்ட் மனிதர்கள் தான், பெண்கள் மட்டுமே மூட நம்பிக்கையில் கற்பு என்ற பொய்மையைக் காப்பாற்றிக் கொள்ள முயல்கிறார்களா?

சென்னையை விட்டு சிந்தனையாவும் மகாதேவனைச் சுற்றி ஓடியது. மகாதேவன் நிட்சயமாகப் பாலுறவில் அனுபவம் கொண்டவர். அதில் சந்தேகமேயில்லை. அந்தப் பெண்கள் யார்? எப்படியிருப்பினும் என்னுடைய விருப்பு வெறுப்புகளையும் கேட்டு ஓரளவு ஜனநாயக உரிமைகள் தர முயன்றார். அமெரிக்காவில் கற்றதா? மைதிலியே அதைத் தனிச் சிறப்பாகக் கூறினாள். பெரும்பாலான ஆண்கள் பெண்களின் விருப்பு வெறுப்புகளைக் கேட்பதே இல்லை என அவள் கூறினாள். பணியாற்றிய கம்பனியிலும் திருமணமான ஒரு பெண் சொல்லியிருந்தாள்.

ஏர் இந்தியா விமானம் சென்னையிலிருந்து லண்டன் வழியாக நியூயோர்க் நக்ருக்குப் பறப்பது வாய்ப்பாகவே இருந்தது. இரண்டு மூன்று இடங்களில் இறங்கி, மாறுவதிலுள்ள அனுபவம் இல்லாத கஷ்டங்களில், சிரமங்களில் அகப்பட நேரலாம் என்றும் ஓரிருவர் சொல்லியிருந்தனர்.

விமானத்தில் அருகே இருந்தவருடன் பேசிப் பழகியிருந்தாள். அவரும் தமிழரே. அவராகவே அவளது அச்சத்தை உணர்ந்து கேட்டார்:

“இது முதற் பயணமா?”

“ஆமாம்”

“பயமிருக்கத்தான் இருக்கும். அந்நியநாடு. அறியாத மக்கள். என்னுடன் தொடருங்கள். நானே வெளியே கொண்டு போய் சேர்க்கிறேனே.”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ரொம்ப தாங்ஸ்"

விமான நிலையச் சடங்குகள் முடிந்து அவரையே பின் தொடர்ந்து வெளியே வந்ததும் எதிரே மகாதேவன்; மகிழ்ச்சியும் பூரிப்பும் கட்டி அணைத்தார். கன்னத்தில் உதட்டைப் பதித்தார். வெள்ளையர் போல உதட்டில் பதிக்க அங்கும் துணிவு ஏற்படவில்லை. கலாச்சாரக் கட்டுப்பாடு.

அழைத்து வந்தவருக்கு கணவரை அறிமுகப்படுத்தி நன்றி கூறினாள். அவரும் தாங்யு சொன்னார். மாலை 5 மணியாகி விட்டது.

சகுந்தலாவின் முதற் பயணம். நியூயார்க் நகரையும் சுற்றிப் பார்க்க வேண்டும். அங்கு இரவு தங்கி மறுநாள் பகல் சுற்றிக் காட்டிவிட்டுப் பொஸ்டனுக்குச் செல்வதாகத் தீர்மானித்தான்.

நியூயார்க் நகரில் தங்குவதற்கு முன்னரே தங்கிப் பழகிய ஒட்டலையே விரும்பினான். சிக்கனமானது என்பதையும் அறிவான். அங்கு ஒட்டலுக்கு ஒட்டல் இரண்டு மூன்று மடங்கு செலவானது.

முன்னர் பழகிய ஒட்டலுக்கே சென்றான். பெரிய நகர்களில் எவர் வந்தார், போனார் என்று எவரும் கவலைப்படுவதேயில்லை. முன்னர் அந்தப் பெண், பின்னர் யார் இந்தப் புது அழகி என்றெல்லாம் எண்ணுவதே இல்லை. அவர்களைப் பொறுத்தவரை வாடகைப் பணம். அதற்கேற்றபடி பணிவு, சேவை.

சகுந்தலா காஞ்சிப் பட்டுச் சேலையே கட்டிவந்திருந்தாள். அதன் விலை வேறுபாடுகளை அவர்கள் அறியார். பின்னிய முடியில் காய்ந்த சரம். கழுத்தில் தாலி, சங்கிலி. கையில் தங்க வளையல். நெற்றியில் குங்குமப்பொட்டு. அவசர நகரில் ஒருவருடைய உடையைப் பற்றியே கவலைப்படாமல் ஓடிக்கொண்டிருப்பர். பெண்ணொருத்தி கச்சையின்றி மார்பைக் காட்டிச் சென்றாலும், ஆணொருவன் கோவணத்துடன் போனாலும விசித்திரமாகத் திரும்பிப் பார்க்க எவருமில்லை. நேரமும் கிடையாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகுந்தலாவின் காஞ்சிப் பட்டுப் பற்றி அவன் கவலைப்படவில்லை. அங்கு குடியேறிப் பழகிய பின்னர், வேலை பெற்று உழைக்கச் செல்லும் போது ஆடம்பரத்தை விட்டு, தானே வசதியான உடையைத் தேடிக் கொள்வாள் என்பதை அறிவான்.

''உன் சேலை நல்லாயிருக்கிறது.''

''தாங்யு '' என்று பதில் சொல்ல சகுந்தலாவுக்குத் தெரியவில்லை. 'அப்படியா ?' என்று உள்ளூரப் பெருமைப்பட்டாள்.

ஐந்தாவது மாடியிலிருந்த ரூமுக்கு சூட்கேசுகளுடன் சென்றனர். மகாதேவன் கொண்டு வந்த கூடையும் தொடர்ந்தது.

தன் சூட்கேசைத் திறந்து மாற்றுடுப்பாக டிரெஸ்ஸிங் கவுணையும் டவல் சோப்பையும் எடுத்தபோது தாயார் அவனுக்காகத் தந்துவிட்ட லட்டு, அல்வா, மிக்ஸரையும் எடுத்துத் தந்தாள். அவளது பிரயாணக் களைப்பு நீங்க, ஷவர் எடுக்கும்படி சொன்னான்.

சகுந்தலாவை பாத்ரூமுக்கு இட்டுச் சென்று ஷவரைக்காட்டிவிட்டு வந்து தாயாரின் சுவீட், மிக்ஸரைச் சாப்பிடத் தொடங்கினான்.

நினைவில் அதே ஓட்டலில் ஒருநாள் சுகன்யாவுடன் கழித்த இன்ப நினைவு ஓடியது. நெஞ்சை வாட்டியது. பரவாயில்லை. சுகன்யா இடத்தில் என் மனைவி. என் சொத்து. எனக்குரிய உடல், உரிமையுடன் உறவாடலாம். எதற்கும் அவசரப்படவேண்டியதில்லை எனவும் மனம் கூறியது.

சகுந்தலா டவலை மார்பில் கட்டி வரவில்லை. பட்டுச் சேலையைக் களைந்து பாவாடை சட்டையுடன் சென்றவள். முழுநீளச் சட்டையுடன் வெளியே வந்தாள். மாமி வீட்டில் இரவில் ரூமில் மட்டுமே தூங்கும் போது அணிவாள்.

''ஏதாவது சாப்பிடுவாயா ?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பிளேனிலேயே சாப்பிட்டேன்.பொறுத்துச் சாப்பிடலாம்''

''பசி எடுத்தால் கூடையில் கட்லெட் சான்விச், பழம், கோக் எல்லாமிருக்கிறது''

பொஸ்டனிலிருந்து காரை ஓட்டியபடி நேரடியாகவே விமான நிலையம் சென்றிருந்தான். தற்போது ஷவர் எடுத்துக் களை தீர்க்க பாத்ரூம் சென்றான்.

டவலைக் கட்டிக் கொண்டு வெளியே வந்து பெட்டியைத் திறந்து பியாமாவுக்கு மாற்றிக் கொண்டான். தாயார் அனுப்பிய மிக்ஸரை சாப்பிட்டபடி காப்பியை ஊற்றி சகுந்தலாவிற்கு ஒரு பிளாஸ்டிக் கப்பில் கொடுத்துவிட்டு தானும் ஒரு கப்பில் ஊற்றிக் கொண்டான். காப்பி சுவையாயிருந்தபோதும் சூடு குறைந்திருந்தது.

சுகன்யாவுடன் ஏற்பட்ட கவர்ச்சிபோல சகுந்தலாமேல் உடன் ஏற்படவில்லை. இவள் மனைவி, அவள் புதிய பெண்; நினைத்த வேளையெல்லாம் எட்டாதவள்.

சகுந்தலாவிடம் அவளது வீட்டார், தங்கள் வீட்டுச் சுக நலம் விசாரித்தான்.

சுமதி அந்த வீட்டுக்குள் நுழைந்து நாலு, ஐந்து வாரத்திலேயே செய்து விட்ட மாற்றங்களையே முதலில் சொன்னாள். மகாதேவனும் ஆர்வத்தோடு ரசித்துக் கேட்டான்.

''சுட்டிப்பெண், கெட்டிக்காரிதான்''

''உங்க முறைப்பெண்ணாம். உங்க அக்கா வந்து அம்மாவோடு சண்டைபோட்டா. கலியாணத்துக்கே வரவில்லையாமே''– சகுந்தலா அவன் முகத்தைப் பார்க்காது சொன்னாள்.

''கலியாணம் குடும்பமெல்லாம் அவரவர் நினைத்தபடியே அமைவதில்லையே''– அவனது தோல்வியும் அவனையறியாது பிரதிபலித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தற்போது உங்க தம்பியார் இந்திரனை உரிமையோடு கேட்க என அக்கா எண்ணியிருக்கிறா. ஆனால் அவளுக்கு விருப்பமில்லை"

"ஏன்"

"அவள் கல்லூரி ஆசிரியரான கம்யூனிஸ்டு ஒருவனைக் காதலிக்கிறாளாம்"

"அப்பாடி, அம்மாவும் அக்காவும் ஒரு போதும் கலியாணம் கட்டி வைக்கச் சம்மதிக்கமாட்டார்களே"

"அது அவளுக்கே தெரியும்"

"அப்போது என்ன செய்யப் போகிறாள் ?" – அவன் குரலில் கவலை.

"வேலை கிடைத்துவிட்டது. இனிமேல் என் காலிலேயே என்னால் நிற்க முடியும் என்றாள். ஊர்ப்பக்கமாக மாறுதல் பெறப்போகிறாளாம்."

"பிறகு"

"அவர் வீட்டுக்குப் போய் அவரோடு வாழப்போகிறாளாம்"

"கலியாணமில்லாமலா"

"கலியாணம் பெண்களைக் குடும்பம் என்ற அமைப்பில் சிறைப்படுத்தி அடிமையாக்கிவிடும் என்று சொன்னாள்."

"ஆச்சர்யமாயிருக்கே. இதையெல்லாம் அவள் எங்கே கற்றாள் ?"

"ரவி, ரவீந்திரன் என்ற அந்த ஆசிரியரிடம் தான். அவரே அந்தக் கொள்கைஉடையவராம்."

மகாதேவனால் நம்ப முடியவில்லை. அந்தக் கருத்துகள் தன்னையே தாக்குவதாக உணர்ந்தான். சிறிது நேரம் அவனால் எதுவுமே பேசமுடியவில்லை. எழுந்து சென்று கூடையிலிருந்து ஒரு பனானாவை உரித்து சாப்பிட்டபடி சிறிது நேரம் உலாவிவிட்டு வந்து உட்கார்ந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன சுமதியின் பேச்சை கேட்டு அதிர்ந்து போனீர்களா ?"

"பேச்சிலே சரி. இது செயலிலே நடைபெறும் என்று நினைக்கிறாயா ?"– மகாதேவன் தன் சந்தேகத்தை வினாவாக்கினான்.

"ஆரம்பத்தில் நானும் அப்படித்தான் நினைத்திருந்தேன். அந்த வீட்டில் நுழைந்து பாட்டியை ஒடுக்கி அங்கு அடிமைப் பட்டிருக்கும் பெண்களுக்கெல்லாம் கூட்டுக்குடும்பத்திலிருந்து ஓரளவு விடுதலை தேடித்தருவதாகச் சொல்லியிருந்தாள். வேடிக்கைக் கதை என்றிருந்தேன். அப்படியே அங்கு அரசு வேலையோடு வந்து, பாட்டியை ஒதுக்கிவிட்டு சில வாரங்களிலேயே என்னவெல்லாம் செய்து விட்டாள். இவற்றோடு ஒப்பிடும்போது ரவீந்திரனோடு போய் வாழ்வது என்பது அவளுக்கு சின்ன விஷயம்"– சகுந்தலா தன் முழு நம்பிக்கையைத் தெரிவித்தாள்.

"யார் இந்த ரவீந்திரன். ஆசிரியனா ? கற்பனைப்பெயரா ?"– மீண்டும் சந்தேகக் குரல்.

"வேஷ்டியோடும் சர்ட்டோடும் எங்க வீட்டுக்கே வந்திருந்தாரே. அவளே அறிமுகப்படுத்தி அவரோடு சுமதி பாட்டியை ஊருக்கு அனுப்பிவிட்டே இந்தப் புரட்சியெல்லாம் வீட்டிலே செய்தாள். ரவீந்திரன் தன் காதலன் என்பதை எனக்கு மட்டுமே ஏற்கனவே சொல்லியிருந்தாள்."

அதன் மேல் அந்த விஷயம் பற்றி மகாதேவன் எதுவும் பேசவில்லை. சகுந்தலா தவறினால் ' அந்தச் சுட்டிப் பெண்ணைத்தான் உனக்குக் கட்டி வைக்க நேரும்' என்று தாயார் ஒருதடவை போனில் சொன்னது அவன் நினைவில் வந்தது.

சுமதியின் பேச்சுகள், செயல்கள் அவனது சிந்தனையைக் குழப்பி இருந்த இன்ப 'மூடை'யும் மாற்றிவிட்டது.

சகுந்தலாவை ஏதாவது சாப்பிடும்படி வற்புறுத்தினான். ஒரு சான்விச் உடன் பனானா ஒன்றையும் தந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“நீயும் களைத்திருப்பாய். தூங்கலாம்”

“உங்களைப் பார்த்ததும் களைப்பெல்லாம் போய் விட்டது.”

“அரசுகளின் சட்ட விதிகள், கெடுபிடிகள் இத்தனை காலம் காத்திருக்க வேண்டி வந்துவிட்டது. கவலையே”

“பரவாயில்லை, இனிப் பிரிய வேண்டி வராது..”

சகுந்தலா கூறியபடியே உடையைக் களைந்து ஒரு நைட்டியை எடுத்துப் போட்டுக் கொண்டாள்.

மனைவியிடம் அவ்வேளை ஜனநாயக உரிமை பேசவோ, காட்டவோ வேண்டியதில்லை என அவனது ஆணாதிக்கம் தலை எடுத்தது.

காலையில் மகாதேவன் அருண்டதும் அவளது தூக்கத்தைக் கலைத்தான். இருவரும் காலைக்கடன் முடித்து, நீராடி, காப்பி வரவழைத்துச் சாப்பிட்டு விட்டுப் புறப்பட்டனர்.

“என்ன உடை...” – சகுந்தலா கேட்டாள்

“சுரிதார் சுகமாக இருக்கும். இங்கே அம்மாவைப் போலக் கட்டுப்பாடு எதுவும் இல்லையே. நீ விரும்பியபடி, வசதிப்படி எதையும் உடுத்துக் கொள்ளலாம்.”

மகாதேவனுக்கு இரண்டை எடுத்துக் காட்டிவிட்டு அவன் தேர்ந்தெடுத்த சுரிதாரை அணிந்து கொண்டாள்.

காரில் புறப்பட்டு சுதந்திரச்சிலை, ஐ.நா.சபை கட்டிடம், மான் ஹட்டன் நகர், கறுப்பர் பெரும்பான்மையாக வாழும் ஹாலம், மற்றும் வானளாவிய கட்டிடங்களையும் “இடப்புறம்பார் வலப்புறம் பார்” எனச் சொல்லி அவற்றின் பெயர்களையும் கூறிக் காட்டியபடி பொஸ்டன் நகர் நோக்கிக் காரை வேகமாக ஓட்டினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏன் வேகமாக ஓட்டுகிறீங்க"

"அதோ பார் நீளக்கோடுகள் போட்ட டிராக்குகள் இருக்கின்றனவே ஒவ்வொன்றுக்கும் தனி ஸ்பீடில் ஓட வேண்டும்."

"அது என்ன ஜெலோ லைன்"

"லாரிகள் ஓட"

வழியில் காஸ்போடும் போது அருகே இருந்த ஸ்ரோறில் ரோல்ஸ், விஜிடபிள் பவ் வாங்கிக் கொடுத்தான். சாப்பிட்ட படியே போகலாம். ஃபிளாட்டுக்குச் சென்றதும் சாதம் வடித்துத் தருவதாகவும் சொன்னான்.

"எனக்கு என்ன வேலை, உங்களுக்குச் சமைப்பதுதானே"

"ஃபிளாட்டில் பகல் வேளை டிவியைப் பார்த்துக் கொண்டிருக்கும் தனிமை சில காலம் போரடிக்கவே செய்யும். பிறகு பழகிவிடும்"

"நாளை ஞாயிற்றக் கிழமை முழு நேரமும் இருப்பீர்கள்தானே"

"ஆமாம். ஆனால் நண்பகல் உன்னை அறிமுகப்படுத்த இங்கே உள்ள சில பிரென்ஸை அழைத்திருக்கிறேன்"

"ஃபிளாட்டிலேயா ?"

"இல்லை ஒரு ரெஸ்ரடன்றில், லஞ்சுக்கு"

"ஓ அதுவும் வேறையா. நல்லது உங்ள நண்பர்களையும் அறிந்து கொள்ளலாம் தானே"

'பிரென்ஸ்' என்பதில் பெண்களும் இருப்பார்களா.குமுதினி... சகுந்தலாவின் மனம் பேதலித்தது. எப்படியும் குமுதினி வரலாம் அவளைப் பற்றிய உண்மைகளை அறிந்துவிடலாம் என எண்ணிக் கொண்டாள்.

ஃபிளாட்டை சேர ஐந்து மணியாகிவிட்டது. மேலே ஏறி ரூமை அடைந்ததும் பெட்டி வைக்கக் கூடிய இடம், படுக்கை அறை, சமையற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதி , கழிவறை, முன்புற சிறு ஹால் யாவையும் காட்டி 'இது ஒரு சிங்கிள் ரூம் யுனிட்' என்றான்.

"ரொம்ப வாடகையாகுமா ?"

"ஐநூற்று ஐம்பது டாலர்"

சகுந்தலா இந்திய ரூவாவில் கணக்கிட்டுச் சொன்னாள் :

"அப்பாடா இத்தனை தொகையா ?"

உடனேயே சமையலுக்குத் தொடங்கினான். அரிசியை ஒரு பிரெஸ்ஸர் குக்கரில் போட்டுவிட்டு மறு அடுப்பில் தக்காளியை வெட்டி பொடி போட்டு கொதிக்க வைத்து உப்புப் போட்டும் இறக்கினான். தயிர் ஊறுகாய் இருந்தது. திடீர் சாப்பாரையும் இறக்கிவிட்டு கொதிநீர் வைத்து ரசப்பொடியைப் போட்டான்.

"நான் என்ன உதவி செய்யலாம் ?"– அவனது திடீர் சமையலைப் பார்த்துவிட்டு சகுந்தலா கேட்டாள்.

"நாளை முதல் எல்லாமே செய்யலாம். இப்போது வா சாதம் சாப்பிடலாம்.இங்கே டின்னிலே எல்லாம் கிடைக்கும் பிடித்தவற்றை வாங்கிச் சுலபமாகச் சமைத்துவிடலாம். அதே வேளை விரும்பிய காய்கள் எல்லாமே கிடைக்கும். உன் விருப்பப்டி சமைத்துச் சாப்பிடலாம். ரொட்டி, பட்டர், சீஸ் எதுக்குமே குறைவில்லை."

## 4.2

**ம**றுநாள் நண்பகல், 12 மணிக்கே லஞ் ஏற்பாடு செய்த ரெஸ் ரண்டுக்கு சகுந்தலாவை அழைத்துச் சென்றான். காஞ்சிப்பட்டுடுத்து, குங்குமப்பொட்டிட்டு, பின்னிய முடியில் ரோசாமலர் செருகியே அழைத்துச் சென்றான். தாலி, சங்கிலி, இரண்டு ஜோடி தங்க வளையல், வைரக்கம்மல் ஆபரணங்கள். இந்தியப் பெண் என்ற கலாச்சாரப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரம்பரியத்தைக் காட்ட வேண்டும் என்ற கருத்துடனேயே மகாதேவன் யாவற்றையும் கவனித்தான்.

சகுந்தலா நெஞ்சில் குமுதினி வருவாளா இவர் பெயர் சொல்லி அறிமுகப்படுத்துவாரா என்பதே மனதைக் குடைந்து கொண்டிருந்தது.

அரை மணி நேரத்தில் அழைப்பாளர் ஒவ்வொருவராக வரத் தொடங்கினர். அவர்களை வரவேற்று சகுந்தலாவுக்கு அறிமுகப் படுத்தினான். சில வெள்ளையர், கறுப்பர், இந்தியர், அமெரிக்கப் பெண்கள் அவனோடு பணியாற்றுபவர், ஆங்காங்கே பழகியவர், யூனியன் சேர்ந்தவர் பலரக உடையுடன்; இருவரும் கை குலுக்கினர்; வரவேற்றனர்.

ஒரே ரக காஞ்சிப் பட்டுச் சேலையுடன் இருவர்.

"மீட் மிஸ் சுகன்யா. மிஸ் குமுதினி பிரெண்ஸ்"

"நைஸ் சாறி" – சுகன்யா கைகுலுக்கினாள்.

சகுந்தலா உடல் ஒரு கணம் பதறியது. சமாளித்துக் கொண்டாள்.

"யு ஆர் பியூட்டி புல்" – குமுதினி கூறினாள்.

பதட்டத்தில் 'தாங்ஸ்' கூறவரவில்லை. உடலில் நடுக்கம் வேறு. சிலர் அவர்களைத் தொடார்ந்தனர். கைகுலுக்க நேர்ந்தது.

புவே சாப்பாடே. இந்திய; அமெரிக்க வகைகள்; வெஜ், நான் வெஜ் கோக், பியர்.

டின்னர் ஆனால் விஸ்கி, பிராண்டிப் பிரச்சனை வரலாம், சகுந்தலாவும் விரும்ப மாட்டாள் என்றே லஞ்சுக்கு ஏற்பாடு செய்தான்.

சிலர் கையில் பிளேட்டுடன் நின்று கொண்டும் வேறு பலர் ஆங்காங்கே உட்கார்ந்தும் தேர்ந்தெடுத்தவற்றைச் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்கப்பெண்கள் இருவர் வந்து அவளுடைய சேலை, நகைகள் பற்றிய விபரங்களையும் விலையையும் கேட்டனர்.

"டைமன்ட் இயறிங்ஸ், பியூட்டிபுல்"

சகுந்தலா கழுத்தில் அணிந்து மார்பில் தொங்கிய பென்டனின் வேலைப்பாடும் அவர்களைக் கவர்ந்தது. ஆனால் அவள் மனதில் அமைதியில்லை. ஒருவிதப் பதட்டம்.

கையில்பிளேட்டுடன் சுகன்யாவும் குமுதினியும் அவளை நோக்கி வந்தனர். மனப் பதட்டத்தை சமாளிக்க முயன்றாள்.

"ஹௌ ஆர் யு மிஸிஸ் மகாதேவன்.. சொறி மிஸிஸ் சகுந்தலா மகாதேவன். பிளைட் எல்லாம் எப்படி"

"நைஸ், நீங்க இருவரும் சிஸ்ரேஸா"– சகுந்தலா கேட்டாள்.

"இல்லை பிரெண்ஸ். ஒரே ஃபிளாட்டில் வசிக்கிறோம்."

காலேஜில் ஒரே உடையுடனான ஃபிரென்ஸை பார்த்த நினைவு வந்தது.

"நீங்க தான் அந்த வெடிங் கார்டில் ' ஆபிரிக்காவிலிருந்து முன்னர் அடிமைகள் இறக்குமதி செய்யப்பட்டனர்' என எழுதியிருந்தீர்களா. அது எனக்குப் புரியவில்லை"– குமுதினியைப் பார்த்துக் கேட்டாள்.

" அதை சீரியஸாக எடுத்துவிட்டீர்களா. மிஸ்டர் தேவனை.. சாரி மகாதேவனைக் கிண்டல் பண்ணுவதற்காக எழுதினேன். இப்போது நீங்கள் இந்தியாவிலிருந்து தான் வந்திருக்கிறீர்களே. மனைவியாக, அவரது குடும்பப் பெண்ணாக..." "சகுந்தலாவுக்கு முற்றும் புரியாத மொழியில் நாசுக்காகச் சொல்ல முனைந்தாள்.

ஓரளவு புரிந்து கொண்ட சுகன்யா உள்ளூரச் சிரித்துக் கொண்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அடிமையாக வந்திருக்கிறேன் என்று மறைமுகமாகச் சொல்லுகிறீர்கள். அப்படித்தானே"– சகுந்தலாவின் கேரிய குரல். "மனைவியாக, குடும்பப் பெண்ணாக வந்திருக்கிறீர்கள் என்றே சொன்னேனே"– குமுதினி அவளைச் சாந்தப்படுத்த முயன்றாள்.

குமுதினியும் சுகன்யாவும் பேசுவதைப் பார்த்து தூரமாக நண்பருடன் உரையாடி நின்ற மகாதேவன் கையில் பிளேட்டுடன் அங்கே வந்தான்.

"குமுதினி, ஏதாவது பிரச்சனையா ?"

"இல்லை உங்க மனைவியாக, குடும்பப் பெண்ணாக வந்தீர்கள் என்று சொன்னேன். அடிமையாக என நான் கூறுவதாக விளங்கிக் கொண்டாங்க, வேறொன்றுமில்லை"– குமுதினி சிரித்தபடியே சொன்னாள்.

"அவ்வளவு தானே, நான் வேறு ஏதாவது பிரச்சனையா என்று எண்ணி விட்டேன் சொறி..."

உள் மனதில் ஏற்பட்ட அச்சசத்திலிருந்து விடுபட்ட குரல்.

"மிஸ்ஸிஸ் சகுந்தலா, நீங்க லஞ் அல்லது டின்னருக்கு எங்கள் ஃபிளாட்டுக்கு முதலில் வரவேணும்"– குமுதினி நயமாக அழைத்தாள்

"அவர் அழைத்தால் வருவேனே"– சகுந்தலாவின் குரலில் பதட்டம் தணிந்திருந்தது.

"நிட்சயம் வருவோமே. இங்கே உள்ள நடைமுறைகள், ஷொப்பிங் யாவையும் நீங்க தான் பழக்கிவிட வேண்டும்"–மகாதேவன் கூறினான்.

"புதன் கிழமை டின்னருக்கு. ஏழுமணி வரையில்"– குமுதினி உரிமையுடன் சொன்னாள்.

"ம்... வருகிறோம்"– ஒரு கணம் யோசித்து விட்டுச் சொன்னான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மிஸிஸ் சகுந்தலாவின் சந்தேகங்களையும் அங்கே பேசித் தீர்த்துக் கொள்ளலாம்"– குமுதினியின் கூற்றில் அழுத்தம் இருந்தது.

"புதன் கிழமை பார்த்து ஒய்வாகப் பேசலாம்"– சுகன்யாவும் சிரித்தபடி சொன்னாள்.

பின்னர் வந்த வேறும் சிலரை அறிமுகப்படுத்தச் சகுந்தலாவை அங்கிருந்து மகாதேவன் வலது கரத்தைப் பிடித்து அழைத்துச் சென்றான்.

கை குலுக்கி அலுவலக நண்பர்கள் இருவரை மகாதேவன் சகுந்தலாவிற்கு அறிமுகப்படுத்தினான். சிந்தனை எங்கோ இருந்தபோதும் சகுந்தலா சிரித்து நடித்துச் சமாளித்தாள்.

"ஏனுங்க இவர்களும் குடும்பம், அடிமைத்தனம் என்றெல்லாம் பேசுகிறார்களே"– ஆற்றாநிலையில் குமுதினியின் பேச்சை நினைவுபடுத்தி சகுந்தலா கேட்டாள்.

"அங்கே சுமதியும் ரவீந்திரனும் தான் குடும்பம், அடிமைத்தனம் என்று பேசுவதாகச் சொன்னாயே, இங்கே அந்தக் கொள்கையுடன் ஒரு பெரிய இயக்கமே பெண்களிடையேயும் வளர்ந்து வருகிறது. பின்னர் நீ விபரமாகத் தெரிந்து கொள்வாய்"

மகாதேவன் கூறியதும் திடீரென ஓரளவு தெளிவு பெற்றவளாகச் சகுந்தலா சொன்னாள் :

"ஓ.... இவர்களும் அந்த குரூப்பைச் சேர்ந்தவர்களா ?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியரின் பிற நூல்கள்

### நாவல்கள்

ஈனத் தொழில்
நகரமும் சொர்க்கமும்
ஒரு மண்ணின் கதை
நீ, ஒரு பெண்
வன்முறை வடுக்கள்
மரணத்தின் நிழலில்
ஒரு குடும்பத்தின் கதை
இரண்டாவது சாதி
உலகச் சந்தையில் ஒரு பெண்
ஒரு பெண்ணின் கதை
விலங்கில்லா அடிமைகள்
சூரியன் கிழக்கில் உதிப்பதில்லை!
பொய்மையின் நிழலில்...
அயலவர்கள்
புதிய சந்தையில்
இளமையின் கீதம்
அந்நிய மனிதர்கள்
வதையின் கதை
மண்ணும் மக்களும்
போர்க்கோலம்
தரையும் தாரகையும்
செவ்வானம்
சடங்கு
நீண்ட பயணம்
ஓர் அரசியலின் கதை
கவர்ச்சிக் கலையின் மறுபக்கம்

### சிறுகதைத் தொகுப்புகள்

சிறுவர்க்கான சிந்தனைக் கதைகள்
கொடுமைகள் தாமே அழிவதில்லை
சங்கமம்
ஒரே இனம்
நல்லவன்

### கட்டுரைகள்

அறிவுக் கடிதங்கள்
பெண்ணடிமை தீர
கலையும் சமுதாயமும்
குந்தவிக்குக் கடிதங்கள்
குமரனுக்குக் கடிதங்கள்
மானவிழிக்குக் கடிதங்கள்
மு.வ. நினைவுகள்
கவர்ச்சிக்கலையின் மறுபக்கம்
அடைப்புகள்
திரும்பிப் பார்க்கிறேன்

**பாரி நிலையம்**
184 பிராட்வே : : சென்னை 600 108.

UNIVERSITY OF PERADENIYA
2003-7-26
LIBRARY

545985

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
2003-7-26
LIBRARY.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பச் சிறையில்

**த**ன் கல்லூரித் தோழி **சகுந்தலாவின்** திருமணத்தின் போது சமூகமளிக்க முடியாத **மைதிலி,** மன்னிப்பும் வாழ்த்தும் தெரிவிக்க அவளது புகுந்தகத்திற்கு வருகிறாள். அமெரிக்காவில் கம்பியூட்டர் எஞ்சினியராக வேலை செய்யும் **மகாதேவன்** மூன்று வார விடுமுறையில் வந்து திருமணம் முடித்துச் சென்று விட்டான். அமெரிக்க விசாவிற்காகக் காத்திருக்கும் **சகுந்தலா** மூன்றாவது மாட்டுப் பெண்ணாக மற்றப் பெண்களுடன் சிறைக் கைதிபோல வாழ்ந்து வீட்டு வேலைகள் செய்வதாக தன் தோழியிடமும் சொல்லுகிறாள்.

முறைப் பெண்ணைக் கைவிட்டு வெளியே பெண் எடுத்ததாக திருமணத்திற்கு வராத மகாதேவனின் அக்கா தன் மகள் சுமதியுடன் கிராமத்திலிருந்து அவ்வீட்டிற்கு வருகிறாள். எதிர்பார்த்ததற்கு மாற்றாக **சுமதியும் சகுந்தலாவும்** நெருங்கிப் பழகுகின்றனர். சுமதியின் கொள்கையும் பேச்சும் நடைமுறையும் **சகுந்தலா**வை வியப்பில் ஆழ்த்துகிறது.

இரண்டாவது தடவை அவ்வீட்டுக்கு வந்த தோழி **மைதிலி**யிடம் **சகுந்தலா** தன் குறுகிய கால திருமண அனுபவங்களைக் கூறுகிறாள். அத்துடன் அமெரிக்காவிலிருந்து வந்த **குமுதினி** என்ற பெண்ணின் திருமண வாழ்த்திதழையும் அதன் கீழ் தமிழில் எழுதப்பட்டிருந்த குறிப்பையும் தோழியிடம் காட்டி மன ஆறுதலும் அறிவுரையும் பெற முயலுகிறாள் ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org